உ

திருச்சிற்றம்பலம்

சுந்தர மூர்த்தி சுவாமிகள்

தேவாரம்

(ஏழாம் திருமுறை)

*

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடு

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு

உ

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
அருளிச்செய்த

தேவாரம்

(ஏழாம் திருமுறை)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
திருவுள்ளப்படி

'கலைமகள்' ஆசிரியர்
கி. வா. ஜகந்நாதன்
எழுதிய குறிப்புரையுடன்
வெளியிடப் பெற்றது.

விரோதி வருஷம் ஆடி மாதம் சுவாதி

1949

(உரிமை பதிவு)

நேஷனல் ஆர்ட் பிரஸ்
தேனாம்பேட்டை, சென்னை—18.

செந்திலாண்டவன் துணை

முன்னுரை

சமய உணர்ச்சி பலவகையில் நிலைகுலைந்திருக்கும் இக் காலத்தில் மக்களுடைய உள்ளத்தில் மீட்டும் அவ்வுணர்ச்சியை நிலைகொள்ளும்படிச் செய்யவேண்டியது சமயத்துறையில் தலைமை பூண்டாருடைய கடமை. சமய அறிவு பரவவேண்டுமானால் சமய நூல்கள் மக்களுக்கு எளிதிலே கிடைக்கும்படிச் செய்வதே தக்கவழி. மேல் நாட்டுச் சமய போதகர் இவ்வகையில் செய்துவரும் தொண்டு பிறரும் கண்டு மேற்கொள்வதற்குரியது.

சைவமும் தமிழும் பரவி ஓங்கவேண்டும் என்னும் ஆர்வம் கொண்டு பலவகையிலும் பேருபகாரச் செயல்கள் புரிந்து வருபவர்களும், ஸ்ரீ குமர குருபர முனிவருடைய அருளாட்சியைத் தொடர்ந்து நடத்தும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்களும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சைவத் திருமுறைகளை யாவரும் எளிதிலே பெறும்படி செய்யவேண்டும் என்ற திருவுள்ளக் கருத்தை ஒரு முறை தெரிவித்தார்கள். அவர்களுடைய குறிப்பின் படியே முதலில் திருவாசகம் வெளியாயிற்று. இப்போது ஏழாந் திருமுறையாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் அப்பெருமானுடைய திருநாளாகிய ஆடிச் சோதியில் மலர்கிறது. மிகச் சுருக்கமான குறிப்புரை யொன்று இப் பதிப்பில் சேர்க்கப் பெற்றிருக்கிறது.

காசிவாசி சுவாமிகளவர்கள் செய்துவரும் வள்ளன்மைச் செயல்கள் பல. அவற்றைத் தமிழ் நாடு நன்கு பயன்படுத்திக் கொண்டு நன்றி பாராட்டும் என்பதில் ஐயம் இல்லை. சுவாமிகள் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து இத்தகைய அரும் பெருஞ்செயல்களைச் செய்து கொண்டு விளங்கவேண்டுமென்று அன்பர்களின் உள்ளம் வாழ்த்தும் என்பதும் உறுதி.

மயிலாப்பூர்
1—8—49

இங்ஙனம்
கி. வா. ஜகந்நாதன்

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு

ஸ்ரீ கைலாசத்தில் சிவபிரானுடைய பிரதிபிம்பத்தினின்று தோன்றி அப்பெருமானுடைய திருத்தொண்டு புரிந்துவரும் ஆலாலசுந்தரர் என்பவர் ஒருநாள் அருச்சனைக்காக மலர்கொய்யும் பொருட்டு நந்தவனத்துக்குச் சென்றார். அங்கே உமாதேவியாருடைய திருத்தொண்டில் ஈடுபட்ட அனிந்திதை, கமலினி என்னும் இரண்டு மகளிர் முன்பே மலர் கொய்திருந்தனர். அவர்களைக் கண்டபோது ஆலால சுந்தரர் உள்ளத்தில் காதல் அரும்பியது. அம்மகளிருக்கும் அவர்பால் அன்பு பூத்தது. இதனை உணர்ந்த எம்பெருமான், "உங்கள் அன்பு கனிவதற்குப் பூவுலகில் மக்களாகப் பிறத்தலே தகுதி. ஆதலின் நீங்கள் மூவரும் தமிழ்நாட்டில் தோன்றி ஒன்றுபட்டுக் காதல் புரிந்து நம் தொண்டும் செய்து விட்டு வாருங்கள்" என்றருளி அனுப்பினர்.

இறைவன் திருவுள்ளப்படியே ஆலால சுந்தரர் தமிழ் நாட்டில் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர் என்னும் தலத்தில் ஆதி சைவ அந்தணராக அவதரித்தார். அவர் தந்தையார் சடையனார், தாயார் இசைஞானியார். நம்பி ஆரூரர் என்ற திருநாமத்தோடு அவர் வளர்ந்து வருகையில், திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட சிற்றரசராகிய நரசிங்க முனையர் என்பவர் அவர்பால் அன்பு மிக்கவராகித் தம் வளர்ப்புப் பிள்ளையாக ஏற்றுப் போற்றி வளர்த்து வந்தார்.

முறை கூறியும் மீட்டும் மீட்டும் தலையிற் கால்வைத்த அவர் சிவபெருமானே என்பதை உணர்ந்த ஆரூரர், "**தம்மானை அறியாத சாதியார் உளரோ**" என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

அப்பால் பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு சொற்றமிழ் பாடிச் சிதம்பரம் சென்று பணிந்தார். அங்கே இறைவர், "திருவாரூருக்கு வா" என்று அசரீரியாகப் பணித்தமையால் அத்தலத்தை நோக்கிப் புறப்பட்டார். சீகாழிக்குப் பக்கத்தில் வந்ததும் ஞானசம்பந்தசுவாமிகள் அவதரித்த தலமாதலின் மிதிக்க வொண்ணாதென்று புறம்பே நிற்கச் சிவபெருமான் காட்சி கொடுத்தருளினார். "**சாதலும் பிறத்தலும் தவிர்த்து**" என்னும் பதிகம் பாடிப் பணிந்து மேற்சென்றனர் ஆரூரர்.

திருக்கோலக்கா முதலிய தலங்களுக்கு எழுந்தருளி இறைவரைப் பணிந்து பதிகம்பாடித் திருவாரூரை அணுகுகையில் சிவபிரான் ஏவலால் அத்தலத்திலுள்ளார் நம்பியாரூரை எதிர்கொண்டு திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். திருக்கோயில் சென்று வன்மீகநாதரை வழிபட்டனர். அப்பெருமான், "நீ எனக்குத் தோழன். என்றும் நீ மணக்கோலத்தோடு இருப்பாயாக" என்று கட்டளையிட்டருளினார். அது முதல் தம்பிரான் தோழர் என்ற திருநாமம் நம்பியாரூரருக்கு அமைந்தது.

தம்பிரான் தோழர் திருவாரூரிலே தங்கி நாள்தோறும் திருக்கோயில் சென்று வழிபட்டுவந்தார். திருக்கைலையில் கமலினியாக இருந்தவர் அத்தலத்தில் உருத்திர கணிகையர் குலத்தில் தோன்றிப் பரவையார் என்ற திருநாமத்தோடு வளர்ந்து, திருக்கோயிற் பணிபூண்டு ஒழுகி

வந்தார். தம்பிரான் தோழரும் பரவையாரும் இறைவர் சந்நிதானத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதலுற்றுச் சிவபெருமான் ஆணைவழியே திருமணம் செய்துகொண்டு ஒருங்கு வாழலாயினர்.

ஒருநாள் தம்பிரான் தோழர் திருக்கோயிலுக்குச் செல்கையில் அங்கே முன்னிருக்கும் தேவாசிரயன் என்னும் மண்டபத்தில் சிவனடியார்கள் இருந்ததைக் கண்டு, அவர்களைப் பாட எண்ணியபோது இறைவரே, "**தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்**" என்று அடியெடுத்துக் கொடுக்க, அதனையே முதலாகக் கொண்டு திருத் தொண்டத்தொகை பாடியருளினார். குண்டையூர் கிழார் என்பவர் சிவபிரான் அருளால் வன்றொண்டருக்கு வழங்கும்பொருட்டு மிகுதியான நெல்லைப் பெற்று வைத்திருக்க, அதனைத் திருவாரூருக்கு எடுத்துச்செல்ல ஆட்கள் வேண்டுமே என்று நம்பியாரூரர் எண்ணினார். "**நீள நினைந்தடியேன்**" என்ற பதிகம் பாடவே சிவபெருமான் ஏவலால் பூதங்கள் நெல்முழுவதையும் திருவாரூருக்குக் கொண்டு சேர்த்தன.

திருநாட்டியத்தான்குடியில் வாழ்ந்த கோட்புலி நாயனார் ஒருமுறை தம்பிரான்தோழரை அழைத்துச்சென்று உபசரித்துத் தம் பெண்களாகிய சிங்கடியார், வனப்பகையார் என்னும் இருவரையும் ஆட்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பம் செய்ய, அவர்களைத் தம் மக்களாக ஆரூரர் ஏற்றுக்கொண்டார். பங்குனி உத்தரத் திருநாளுக்குப் பொன் வேண்டுமென்று பரவையார் கூற, வன்றொண்டர் திருப்புகலூருக்குச் சென்று திருக்கோயிலுக்குள் இருந்த செங்கற்களைத் தலையணையாக வைத்துச் சிறிது

துயின்று எழுந்துபார்க்க அச் செங்கற்களெல்லாம் பொன்னாக இருத்தலைக் கண்டார். இது சிவபிரான் அருளென்று வியந்து, **"தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்"** என்ற பதிகத்தைப் பாடிப் பொன்னைப் பரவையாரிடம் கொணர்ந்து கொடுத்தார்.

திருமுதுகுன்றத்துக்குச் சென்று முதுகுன்றர் அருளால் பன்னீராயிரம் பொன்கிடைக்க, அதனைத் திருமணிமுத்தா நதியிலிட்டு அப்பால் திருவாரூர் சென்று அங்குள்ள கமலாலயத்திலிருந்து அப்பொன்னை எடுத்துப் பரவையாருக்கு வழங்கினார். திருக்குருகாவூரில் சிவபெருமான் அளித்த பொதிசோற்றை உண்டு, **"இத்தனையாமாற்றை அறிந்திலேன்"** என்ற பதிகம் பாடினார். தொண்டைநாட்டுத் தலங்களைத் தரிசிக்கையில் திருக்கச்சூரில் சிவபெருமான் பிச்சையெடுத்து வந்து தந்த உணவை உண்டு, **"முதுவாய் ஓரி கதற"** என்ற பதிகம் பாடினார்.

பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு வந்த நம்பியாரூரர் திருவொற்றியூர் வந்தடைந்தார். திருக்கைலையில் இருந்த அநிந்திதையார் ஞாயிறு என்ற ஊரில் இருந்த வேளாளச் செல்வர் ஒருவருக்குத் திருப்புதல்வியாராகத் தோன்றிச் சங்கிலியார் என்ற திருப்பெயரோடு வாழ்ந்துவந்தார். மணப்பருவம் எய்தியும் யாரையும் மணக்க விரும்பாமல் அவர் திருவொற்றியூரில் கன்னிகா மாடம் அமைக்கச் செய்து அங்கே தங்கி, திருவொற்றியூர்ப் பெருமானுடைய திருத்தொண்டில் ஈடுபட்டிருந்தார். சங்கிலியாரைக்கண்டு உள்ளம் பிணிப்புண்ட நம்பியாரூரர் இறைவர்பால் விண்ணப்பித்து அவரைத் தமக்கு மணம் செய்விக்கும்படி வேண்டினர். "உன்னைப் பிரியேன்" என்ற உறுதி மொழியை மகிழடிக்கீழ்ப் பெற்றுக் கொள்ளும்படி சங்கிலி

யாருக்குச் சிவபிரான் உணர்த்தி, அவ்வாறே அவர்பெற, அடியவர்களைக் கொண்டு திருமணம் நிறைவேறச் செய்தருளினார். சங்கிலியாரோடு வாழ்ந்து வந்த வன்றொண்டர் ஆரூர்ப்பெருமானைப் பிரிந்திருத்தலை ஆற்றாதவராகித் திருவொற்றியூரை விட்டுப் புறப்பட்டார்.

சங்கிலியாருக்கு அளித்த உறுதி மொழியினின்றும் தவறியமையால் நம்பியாரூரர் தம் கண்ணை இழந்துவருந்தி மேற்செல்வாராய்த் திருமுல்லை வாயில் சென்று வணங்கி அப்பால் திருவெண்பாக்கம் சென்று, "பெருமானே, திருக்கோயிலில் உள்ளீரா?" என்று கேட்கவே, "உளோம் போகீர்" என்று பெருமான் அருளி ஓர் ஊன்றுகோல் உதவினார். அங்கிருந்து பல தலங்களுக்குச் சென்று காஞ்சீபுரம் நண்ணி இறைவர் அருளால் ஆரூரர் இடக்கண் பெற்றனர். அப்பால் இடையிலுள்ள தலங்களை வழிபட்டுப் பாடித் திருவாரூரை அடைந்தார். அங்கே இறைவரைப் பாடி வலக்கண்ணையும் பெற்றார்.

நம்பியாரூரர் சங்கிலியாரை மணந்த செய்தியை அறிந்த பரவையார் அவரை ஏற்றுக்கொள்ளாமல் ஊடியிருந்தார். வன்றொண்டர் வேண்ட, ஆரூர் இறைவர் இருகால் பரவையாரிடம் தூது சென்று ஊடலை நீக்கி மீட்டும் இருவரும் இணைந்து வாழ அருள்புரிந்தார். இறைவரை ஏவல் கொண்டமைக்கு ஆற்றாத ஏயர்கோன்கலிக்காம நாயனார் நம்பியாரூரர்மேல் சினங்கொண்டிருக்க, அவ்விருவரையும் நட்புக் கொள்ளச் செய்ய எண்ணிய இறைவர் கலிக்காமருக்குச் சூலைநோய் வரச்செய்து, அதனைத் தீர்க்கும்படி நம்பியாரூரரை அனுப்பினர். இவரால் நோய் தீர்வதினும் இறப்பதே மேலென்று கருதிய ஏயர்கோன் உடைவாளாற் தம் வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறந்தனர். அதுகண்டு

நம்பியாரூரர் வருந்தித் தாமும் உயிர்நீக்கத் துணிகையில் இறைவர் கலிக்காமரை உயிர்பெய்து எழுப்பி அவ்விரண்டு பெரியார்களையும் நண்பராக்கியருளினார்.

சேர அரசராகிய சேரமான் பெருமாள் நாயனார் நம்பியாரூரரை வந்து கண்டு நட்புப் பூண்டனர். அவ்விருவரும் பல தலங்களைத் தரிசித்து வணங்கினர். ஆரூரர் சேர நாட்டுக்குச் சென்று சிலகாலம் தங்கி, அப்பால் திருவாரூர் வந்தார். பிறகு கொங்குநாட்டில் உள்ள திருப்புக்கொளியூர் அவிநாசியில் முதலைவிழுங்கிய பிள்ளையைப் பதிகம் பாடி வருவித்தார். மீட்டும் திருவஞ்சைக்களத்திலிருந்த சேரமான் பெருமாள் நாயனார்பால் சென்று தங்கியிருந்தனர்.

ஒருநாள் திருவஞ்சைக்களத்துத் திருக்கோயிலுள் சென்று உலக வாழ்க்கையில் தமக்கு இருந்த வெறுப்பைப் பதிகம் பாடித் தெரிவித்தார். சிவபெருமான் தேவர்களோடு வெள்ளையானையை அனுப்பி நம்பியாரூரரைக் கைலாயத்திற்கு அழைத்துவரச் செய்தார். இதனை உணர்ந்த சேர வேந்தர் தாமும் குதிரையில் ஏறித் திருக்கைலாயம் சென்றார். பரவையாரும் சங்கிலியாரும் கைலை சென்று பண்டைநிலையில் தொண்டு பூண்டொழுகினர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைலாயம் அடைந்த நாள் ஆடி மாதம் சுவாதித்திருநாள் என்பர். பதினெட்டு ஆண்டுகள் சுவாமிகள் பூவுலகில் வாழ்ந்தனர் என்று ஒரு பழம்பாடல் தெரிவிக்கிறது. ஆராய்ச்சியாளர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 9-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்தவர் என்று கூறுவர்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரம்

1. பண் - இந்தளம்

திருவெண்ணெய்நல்லூர்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடீபெரு மானேஅரு ளாளா, எத்தால் மறவாதேநினைக் கின்றேன்மனத் துன்னை, வைத்தாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருட் டுறையுள், அத்தாஉனக் காளாய்இனி அல்லேனெனல் ஆமே. 1

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப், பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாஅருள் பெற்றேன், வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள், ஆயாஉனக் காளாய்இனி அல்லேனெனல் ஆமே. 2

---

1. எத்தால் - எதனாலும். அருட்டுறை: திருவெண்ணெய் நல்லூர்த் திருக்கோயில்.

2. எய்த்தேன் - இளைத்தேன். வேய் - மூங்கில்.

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப், பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி, மின்னார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள், அன்னேஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே. 3

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ, கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ, செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள், அடிகேள்உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே. 4

பாதம்பணி வார்கள்பெறும் பண்டம்அது பணியாய், ஆதன்பொருள் ஆனேன்அறி வில்லேன்அரு ளாளா, தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள், ஆதீஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே. 5

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ, எண்ணார்புரம் மூன்றும்எரி உண்ணநகை செய்தாய், மண்ணார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள், அண்ணாஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே. 6

ஊனாய்உயிர் ஆனாய்உடல் ஆனாய்உல கானாய், வானாய்நிலன் ஆனாய்கடல் ஆனாய்மலை ஆனாய், தேனார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள், ஆனாய்உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே. 7

ஏற்றார்புரம் மூன்றும்எரி உண்ணச்சிலை தொட்டாய், தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர், ஏற்றாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள், ஆற்றாய்உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே. 8

---

4. மூவேன் - மூப்பை அடையேன். பெற்றம் - இடபம்.
5. ஆதன் - அறிவில்லாதவன்; நகையாடுவதற்குரியவன்.
6. எண்ணார் - பகைவர்.
7. ஆனாய் - இடபவாகனக் கடவுளே.
8. ஏற்றார் - எதிர்த்தவர்.

மழுவாள்வலன் ஏந்திமறை ஓதிமங்கை பங்கா, தொழு வார்அவர் துயர்ஆயின தீர்த்தல்உன தொழிலே, செழுவார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறை யுள், அழகாஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே. 9

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால், பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச், சீரூர்பெண் ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்அருட் டுறையுள், ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன்எனல் ஆமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : நடுநாடு

சுவாமி : தடுத்தாட்கொண்ட நாதர்

அம்பிகை : வேற்கண்மங்கையம்மை

வரலாறு : சிவபெருமான் தம்மைத் தடுத்தாட்கொண்ட போது அவர் கட்டளைப்படியே "பித்தா" எனத் தொடங்கிச் சொற்றமிழ் பாடப் புகுந்தார் ஆளுடைய நம்பி. இது, முதல் திருப்பதிகம் (பெரிய புராணம், தடுத்தாட் கொண்ட. 74.)

திருப்பரங்குன்றம்

திருச்சிற்றம்பலம்

கோத்திட்டையும் கோவலும் கோயில்கொண்டீர் உமைக்கொண்டுழல் கின்றதோர் கொல்லைச்சில்லைச், சேத்திட்டுக்குத் தித்தெரு வேதிரியும் சில்பூதமும் நீரும் திசைதிசையன, சோத்திட்டுவிண் ணோர்பலரும் தொழநும்அரைக் கோவணத் தோடொரு தோல்புடை சூழ்ந், தார்த்திட்டதும் பாம்புகைக் கொண்டதும்பாம் படிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 1

---

1. கோவல் - திருக்கோவலூர். கொல்லை - முல்லைநிலம். சில் ஐ சே - சிறிய அழகிய இடபமானது. திட்டுக்குத்தி - மண் மேட்டைக் குத்தி ; இது இடபத்துக்கு இயல்பு. சோத்து - தோத்திரம். ஆர்த்திட்டதும் பாம்பு, கைக்கொண்டதும் பாம்பு என்க. அடிகேள் - சுவாமீ.

முண்டம்தரித் தீர்முது காடுறைவீர் முழுநீறுமெய்பூ
சுதிர் மூக்கப்பாம்பைக், கண்டத்திலும் தோளிலும் கட்டி
வைத்தீர் கடலைக்கடைந் திட்டதோர் நஞ்சைஉண்டீர்,
பிண்டம்சுமந் தும்மொடும் கூடமாட்டோம் பெரியா
ரோடு நட்பினி தென்றிருத்தும், அண்டம்கடந் தப்
புறத் தும்இருந்தீர் அடிகேள்உமக் காட்செய அஞ்
சுதுமே. 2

மூடாய முயலகன் மூக்கப்பாம்பு முடைநாறிய வெண்
டலை மொய்த்தபல்பேய், பாடாவரு பூதங்கள் பாய்
புலித்தோல் பரிசொன்றறி யாதன பாரிடங்கள், தோடார்
மலர்க் கொன்றையும் துன்னெருக்கும் துணைமாமணி நா
கம் அரைக்கசைத்தொன், றூடாதன வேசெய்தீர் எம்
பெருமான் அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 3

மஞ்சுண்ட மாலைமதி சூடுசென்னி மலையான்
மடந் தைமணவாளநம்பி, பஞ்சுண்ட அல்குற்பணை மென்
முலையா ளொடுநீரும் ஒன்றாய் இருத் தல்ஒழியீர், நஞ்சுண்
டு தேவர்க்கமு தம்கொடுத்த நலம்ஒன்றறி யோம்உங்கை
நாகமதற், கஞ்சுண்டுப டம்அது போகவிடீர் , அடிகேள்
உமக் காட்செய அஞ்சுதுமே. 4

பொல்லாப்புறங் காட்டகத் தாட்டொழியீர் புலால்வா
யன பேயொடு பூச்சொழியீர், எல்லாம்அறி வீர்இது வே
அறியீர் என்றிரங்குவேன் எல்லியும் நண்பகலும், கல்லால்
நிழற் கீழ்ஒரு நாட்கண்டதும் கடம்பூர்க்கரக் கோ
யிலின் முன்கண்டதும், அல்லால்விர கொன்றிலம் எம்
பெருமான் அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 5

---

2. முண்டம் - திரிபுண்டரம். மூக்கம் - மூர்க்கம்.

3. மூடு - மூடன். முடை - புலால் நாற்றம். பாரிடம் - பூதம். அசைத்து - கட்டி.

4. படம் அஞ்சு உண்டு.

5. புறங்காடு - மயானம். எல்லி - இரவு. விரகு - தந்திரம்.

தென்னாத் தெனாத்தெத் தெனாஎன் றுபாடிச் சில்பூ தமும்நீ ரும்திசை திசையன, பன்னான் மறைபா டுதிர்பா சூர்உளீர் படம்பக் கம்கொட்டும் திருவொற்றி யூரீர், பண்ணார் மொழியா ளைஓர் பங்குடையீர் படுகாட் டகத்தென் றும்ஓர் பற்றொழியீர், அண்ணா மலையேன் என்றீர் ஆரூருளீர் அடிகேள் உமக்காட்செய அஞ்சுதுமே.

சிங்கத் துரிமூ டுதிர்தே வர்கணம் தொழுநிற் றீர்பெற் றம் உகந்தே றிடுதிர், பங்கம் பலபே சிடப்பா டும்தொண்டர் தமைப்பற் றிக்கொண்டாண்டு விடவுங் கில்லீர், கங்கைச் சடையீர் உம்கருத் தறியோம் கண்ணும் மூன் றுடையீர் கண்ணே யாயிருந்தால், அங்கத் துறுநோய் களைந் தாளகில்லீர் அடிகேள் உமக்காட்செய அஞ் சுதுமே. 7

பிணிவண் ணத்தவல் வினைதீர்த் தருளீர் பெருங்காட் டகத்திற் பெரும்பே யும்நீரும், துணிவண் ணத்தின்மே லும்ஓர் தோல்உடுத்துச் சுற்றும்நா கத்தராய்ச் சுண்ணநீ றுபூசி, மணிவண் ணத்தின்மே லும்ஓர்வண் ணத்தராய் மற்றுமற் றும்பல் பலவண் ணத்தராய், அணிவண் ணத்தராய் நிற்றல்எம் பெருமான் அடிகேள் உமக்காட் செய அஞ்சுதுமே. 8

கோளா ளியகுஞ் சரங்கோள் இழைத்தீர் மலையின் றலைஅல்லது கோயில்கொள்ளீர், வேளா ளியகா மனைவெந் தழிய அழித்தீர் அதுவன் றியும்வேய் புரையும், தோளாள் உமைநங் கைஓர்பங் குடையீர் உடுகூ றையும்சோ றும்தந் தாளகில்லீர், ஆளா ளியவே கிற்றீர்எம் பெருமான் அடிகேள் உமக்காட்செய அஞ்சுதுமே. 9

---

6. படம்பக்கம் - ஒரு வகைப் பறை.

7. பெற்றம் - இடபம். கில்லீர் - மாட்டீர்.

9. கோள் - கொலை. வேய் - மூங்கில். கூறை - ஆடை. ஆள் ஆளியவே கிற்றீர் - ஆளாக ஆளுவதே வல்லீர்.

பாரோடு விண்ணும் பகலும் ஆகிப் பனிமால் வரைஆ கிப்பர வைஆகி, நீரோ டேதீயும் நெடுங்காற் றும்ஆகி நெடு வெள்ளிடை யாகி நிலனு மாகித், தேர்ஓட வரை எடுத்த அரக்கன் சிரம்பத் திறுத்தீர் உமசெய்கை எல்லாம், ஆரோ டுங்கூடா அடிகேள் இதுவென் அடியோம் உமக் காட்செய அஞ்சுதுமே. 10

அடிகேள் உமக்காட் செயஅஞ் சுதும்என் றமரர் பெருமா னைஆரூ ரன்அஞ்சி, முடியால் உலகாண்ட மூவேந் தர்முன்னே மொழிந்தா றும்ஓர்நான் கும்ஓரொன் றினையும், படியா இவைகற் றுவல்ல அடியார் பரங்குன் றம்மேய பரமன் அடிக்கே, குடியா கிவானோர்க் கும்ஓர்கோ வும்ஆகிக் குலவேந் தராய்விண் முழுதாள் பவரே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : பாண்டி நாடு

சுவாமி : பரங்கிரிநாதர் ; அம்பிகை : ஆவுடைநாயகி.

வரலாறு : சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமா னோடும் பாண்டியனோடும் சோழ மன்னனோடும் திருப்பரங் குன்றம் சென்று தரிசித்துப் பாடிய பதிகம் இது (பெரிய புரா ணம், சேரமான் பெருமாள். 102–103.)

திருநெல்வாயில்அரத்துறை

திருச்சிற்றம்பலம்

கல்வாய்அகி லும்கதிர் மாமணியும் கலந்துந்தி வரும் நிவ வின்கரைமேல், நெல்வாயில் அரத்துறை நீடுறையும் நிலவெண்மதி சூடிய நின்மலனே, நல்வா யில்செய்தார் நடந்தார் உடுத்தார் நரைத்தார் இறந்தார்என்று நா

---

10. வெள்ளிடை - பரந்த வெளி; ஆகாசம்.

11. மூவேந்தர் - சேர சோழ பாண்டியர். ஆறும்...ஒன் றினையும் - பதினொரு பாடல்களையும்.

னிலத்தில், சொல்லாய்க் கழிகின் றதறிந் தடியேன்
தொடர்ந்தேன் உய்யப்போ வதோர்சூ ழல்சொல்லே. 1

கறிமாமிளகும் மிகுவன் மரமும் மிகஉந்திவருந்
நிவவின்கரைமேல், நெறிவார்குழலா ரவர்காண நடஞ்செய்
நெல்வாயில்அரத்துறை நின்மலனே, வறிதேநிலை யாதஇம்
மண்ணுலகில் நரனாக வகுத்தனை நானிலையேன், பொறிவா
யில் இவ்வைந் தினையும்அவியப் பொருதுன் அடியே
புகுஞ் சூழல்சொல்லே. 2

புற்றாடரவம் அரைஆர்த் துகந்தாய் புனிதாபொரு
வெள்விடை ஊர்தியினாய், எற்றே ஒருகண் இலன்நின்னை
யல்லால் நெல்வாயில்அரத் துறைநின் மலனே, மற்றேல்
ஒரு பற்றிலன்எம்பெருமான் வண்டார்குழலாள் மங்கைபங்
கினனே, அற்றார் பிறவிக் கடல்நீந்திஏறி அடியேன்
உய்யப் போவதோர் சூழல்சொல்லே. 3

கோடுயர் கோங்கலர் வேங்கைஅலர் மிகஉந்தி வருந்
நிவ வின்கரைமேல், நீடுயர்சோலை நெல்வாயில்அரத் துறை
நின்மல னேநினைவார்மனத்தாய், ஓடு புனற்கரை யாம்இளமை
உறங் கிவிழி த்தால்ஒக் கும்இப்பிறவி, வாடிஇருந்து
வருந்தல் செய்யா தடியேன்உய் யப்போ வதோர்சூ
ழல்சொல்லே. 4

---

1. கல்வாய்–மலையில் உள்ள. நிவவு–நிவா என்னும் ஆறு. நெல்வாயில்: தலத்தின் பெயர்; அரத்துறை: கோயிலின் பெயர். சூழல்–இடம்.

2. வன்மரம்–ஒருவகை மரம். பொறிவாயில் இவ்வைந்து: "பொறிவாயி லைந்தவித்தான்" (குறள்.)

3. புற்றாடு அரவம்: சாதி விசேடம். ஒரு கண் இலன்: சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியைப் பிரியேனென்றுரைத்துப் பின் பிரிந்தமையின், இரண்டு கண்ணும் இழந்து, கச்சிஏகம்பனைப் பாடி இடக்கண் மாத்திரம் பெற்றுத் திருவாரூரை நோக்கிச் செல்கையில் இத்தலத்துக்கு வந்தார்; அப்போது ஒரு கண் இல்லாமையை இது குறித்தது.

4. கோடு - கொம்பு. உறங்கி விழித்தால் ஒக்கும் இப்பிறவி: "உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" (குறள்.)

உலவும்முகி லிற்றலை கற்பொழிய உயர்வேயொடி ழிநிவவின்கரைமேல், நிலவும்மயி லாரவர் தாம்பயிலும் நெல்வாயில்அரத்துறை நின்மலனே, புலன்ஐந்தும் மயங்கி அகங்குழையப் பொருவேலொர் நமன்தமர் தாம்நலிய, அலமந்து மயங்கி அயர்வதன்முன் அடியேன்உய்யப் போவதோர் சூழல்சொல்லே. 5

ஏலம் இலவங் கம்எழிற் கனகம் மிகஉந்தி வருந்நிவவின்கரைமேல், நீலம்மலர்ப் பொய்கையில் அன்னம்மலி நெல்வாயில் அரத்துறை யாய்ஒருநேல், வால்ஊன்ற வருந்தும்உடம்பிதனை மகிழாதழகா அலந்தேன் இனியான், ஆலந்நிழலில் அமர்ந்தாய் அமரா அடியேன் உய்யப்போவதோர் சூழல்சொல்லே. 6

சிகரம் முகத்தில் திரளார் அகிலும் மிகஉந்தி வருந்நிவவின் கரைமேல், நிகரில்மயிலா ரவர்தாம்பயிலும் நெல்வாயில் அரத்துறை நின்மலனே, மகரக்குழையாய் மணக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவிஇதுதான், அகரம் முதலின்எழுத் தாகிநின்றாய் அடியேன் உய்யப் போவதோர் சூழல்சொல்லே. 7

திண்டேர் நெடுவீதி இலங்கையர்கோன் திரள்தோள் இருபஃதும் நெரித்தருளி, ஞெண்டாடு நெடுவயல் சூழ்புறவின் நெல்வாயில் அரத்துறை நின்மலனே, பண்டேமிக நான்செய்த பாக்கியத்தாற் பரஞ்சோதி நின்நாமம் பயிலப்பெற்றேன், அண்டாஅமரர்க் கமரர்பெருமான் அடியேன் உய்யப் போவதோர் சூழல்சொல்லே. 8

---

5. கல் பொழிய - மலையின்மேல் மழை பொழிய. மயிலார் - மயில்போன்ற மகளிர்.

6. கனகம் - பொன். வால் - முனை.

7. அகரம்......நின்றாய் - அகரத்தை முதலாக உடைய எழுத்துக்களாகி நின்றவனே.

8. இலங்கையர் கோன் - இராவணன்.

மாணு உருவாகிஓர் மண்அளந்தான் மலர்மேலவன்நே டியும் காண்பரியாய், நீணீள்முடி வானவர் வந்திறைஞ்சும் நெல்வாயில் அரத்துறை நின்மலனே, வாணார்நுத லார் வலைப் பட்டடியேன் பலவின்கனி வீந்தது போல்வதன் முன், ஆணோடு பெண்ணும்உரு வாகிநின்றாய் அடியேன் உய்யப் போவதோர் சூழல்சொல்லே. 9

நீரூரும் நெடுவயல் சூழ்புறவின் நெல்வாயில் அரத் துறை நின்மலனைத், தேரூர்நெடு வீதிநன் மாடமலி தென்னு வலர் கோன்அடித் தொண்டன்அணி, ஆரூரன் உரைத்தன நற்றமிழின் மிகுமாலைஓர் பத்திவை கற்றுவல்லார், காரூர் களி வண்டறை யானைமன்ன ரவராகிஓர் விண்முழு தாள் பவரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: நடுநாடு.

சுவாமி: அரத்துறை நாதர்; அம்பிகை: ஆனந்த நாயகி.

திருஅஞ்சைக்களம்

திருச்சிற்றம்பலம்

தலைக்குத்தலை மாலை அணிந்ததென்னே சடைமேற் கங்கை வெள்ளம் தரித்ததென்னே, அலைக்கும்புலித் தோல் கொண் டசைத்ததென்னே அதன்மேற்கத நாகக்கச் சார்த் ததென்னே, மலைக்குநிகர் ஒப்பன வன்திரைகள் வலித் தெற்றி முழங்கி வலம்புரிகொண், டலைக்குங்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத் தப்பனே. 1

---

9. மாணு உருவாகி - பிரமசாரியாக உருவம் எடுத்து; மாண் - பிரமசாரி. நேடியும் - தேடியும். வாண் - வாள்; ஒளி. வீந்தது - யாருக்கும் பயன்படாமல் அழிந்தது.

1. மகோதை - கொடுங்கோளூர். அஞ்சைக் களம் - அங் குள்ள திருக்கோயில்.

பிடித்தாட்டிஓர் நாகத்தைப் பூண்டதென்னே பிறங் குஞ்சடை மேற்பிறை சூடிற்றென்னே, பொடித்தான் கொண்டு மெய்ம்முற்றும் பூசிற்றென்னே புகரேறுகந்தேறல் புரிந்ததென்னே, மடித்தோட்டந்து வன்றிரை எற்றியிட வளர் சங்கம்அங் காந்துமுத் தஞ்சொரிய, அடித்தார்கட லங் கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத் தப்பனே. 2

சிந்தித்தெழு வார்க்குநெல் லிக்கனியே சிறியார்பெரி யார்மனத் தேறல்உற்றால்; முந்தித்தொழு வார்இற வார் பிறவார் முனிகள்முனி யேஅமரர்க்கமரா, சந்தித்தட மால் வரை போல்திரைகள் தணியாதிட றுங்கடலங்கரைமேல், அந்தித்தலைச் செக்கர்வா னேஒத்தியால் அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 3

இழைக்கும்எழுத் துக்குயி ரேஒத்தியால் இலையே ஒத்தி யால்உன்னை யேஒத்தியால், குழைக்கும்பயிர்க் கோர் புய லேஒத்தியால் அடியார்தமக் கோர்குடி யேஒத்தியால், மழைக்குநிகர் ஒப்பன வன்திரைகள் வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண், டழைக்குங்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில்அஞ்சைக் களத்தப்பனே. 4

வீடின்பயனென் பிறப்பின்பயனென் விடையேறுவ தென் மதயானை நிற்கக், கூடும்மலை மங்கை ஒருத்தியுடன் சடைமேற்கங்கை யாளைநீ சூடிற்றென்னே, பாடும் புலவர்க்

---

2. பொடி - திருநீறு. மடித்து ஓட்டந்து - திரும்பிஓடி. எற்றியிட - மோத. அடித்து ஆர் - மோதி ஒலிக்கின்ற.

3. மனத்தேறல் உற்றால் சிறியார் பெரியார் - உன்னைத் தம் மனத்தின் கண்ணே தெளிவடைதலைப் பெற்றால் சிறி யவர் பெரியவராவர். முந்தி - முற்பட்டு. தொழுபவர்கள் இறப்பையும் பிறப்பையும் கடந்து முத்தியடைவர்.

4. இழைக்கும் - எழுதும். எழுத்துக்கு - மெய்யெழுத் துக்கு. உயிரே - அதனை இயக்கும் உயிர் எழுத்தை. இலை - இல்லை; வீட்டை. குழைக்கும் - தழைக்கும். வலித்து - பலம் பெற்று. அழைக்கும் - முழங்கும்.

கருளும் பொருளென் நிதியம்பல செய்த கலச்செலவில்,
ஆடுங்கடலங் கரைமேல் மகோதை அணியார்பொழில்
அஞ்சைக் களத்தப்பனே. 5

இரவத்திடு காட்டெரி யாடிற்றென்னே இறந்தார்
தலை யிற்பலி கோடல்என்னே, பரவித்தொழு வார்பெறு
பண்டம்என்னே பரமாபர மேட்டி பணித்தருளாய், உரவத்
தொடு சங்கமொ டிப்பிமுத்தம் கொணர்ந்தெற்றி முழங்கி
வலம்புரிகொண், டரவக்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 6

ஆக்கும்அழி வும்ஐய நீஎன்பன்நான் சொல்லுவார்
சொற் பொருளவை நீஎன்பன்நான், நாக்கும்செவி யுங்
கண்ணும் நீஎன்பன்நான் நலனேஇனி நான்உனை நன்
குணர்ந்தேன், நோக்கும்நிதி யம்பல எத்தனையும் கலத்திற்
புகப் பெய்துகொண் டேறநுந்தி, ஆர்க்குங்கட லங்கரை
மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத்
தப்பனே. 7

வெறுத்தேன்மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்
விளங்குங்குழைக் காதுடை வேதியனே, இறுத்தாய்இலங்
கைக்கிறை யாயவனைத் தலைபத்தொடு தோள்பல அற்று
விழக், கறுத்தாய்கடல் நஞ்சமு துண்டுகண்டம் கடுகப்
பிர மன்தலை யைந்திலும்ஒன், றறுத்தாய்கட லங்கரை மேல்
மகோதை அணியார்பொழில்அஞ்சைக் களத்தப்பனே. 8

---

5. யானை நிற்க விடை ஏறுவது என்? நிதியம் பல செய்த கலச் செலவில் ஆடும் - பலவிதப் பொருள்களை ஈட்டித் தொகுத்துவரும் கப்பல்களின் போக்குவரவினால் அசையும்.

6. உரவம் - வலிமை.

7. ஆக்கும் - ஆக்குதலும். சொல்லும் பொருளும் ஆகிய அவை. கலம் - கப்பல். நுந்தி - செலுத்தி.

8. இறுத்தாய் - இறும்படி செய்தாய்.

பிடிக்குக்களி றேஒத்தி யால்எம்பிரான் பிரமற்கும் பிரான் மற்றை மாற்கும்பிரான், நொடிக்கும்மளவு விற்புரம் மூன்றெரியச் சிலைதொட்டவ னேஉனை நான்மறவேன், வடிக்கின்றன போற்சில வன்திரைகள் வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண், டடிக்குங்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 9

எந்தம்அடி களிமை யோர்பெருமான் எனக்கென்றும் அளிக்கும் மணிமிடற்றன், அந்தண்கட லங்கரை மேல்மகோதை அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனை, மந்தம்முழ வுங்குழ லும்இயம்பும் வளர்நாவலர் கோன்நம்பி யூரன்சொன்ன, சந்தம்மிகு தண்டமிழ் மாலைகள்கொண் டடிவீழவல் லார்தடு மாற்றிலரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : மலைநாடு.

சுவாமி : அஞ்சைக்களத்தப்பர் ; அம்பிகை-உமையம்மை.

வரலாறு : சுந்தரமூர்த்தி நாயனார் திருவஞ்சைக்களம் சென்று பாசம் ஒழியும் வேட்கையால் இப்பதிகத்தைப் பாட, சிவபெருமான் நாயனாரைக் கைலைக்கு அழைத்து வரும்படி வெள்ளை யானையுடன் தேவர்களை விடுத்தருளினார் (பெரிய. வெள்ளையானைச். 28-31.)

திருஓணகாந்தன் தளி

திருச்சிற்றம்பலம்

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு நித்தல் பூசனை செய்ய லுற்றார், கையில் ஒன்றும் காணம்இல்லைக் கழலடி தொழு துய்யின்அல்லால், ஐவர்கொண்டிங் காட்டஆடி ஆழ்குழிப்பட் டழுந்துவேனுக், குய்யுமாறொன் றருளிச் செய்யீர் ஓணகாந்தன் தளியுளீரே. 1

1\. காணம் - பொன். பொன் வேண்டிப் பாடிய பாடல் ஆதலின், இங்கே தம் கையில் காணம் இல்லை என்று குறிப்பிடுகிறார். ஐவர் - ஐம்பொறிகள். ஆட்ட - அலைக்க.

திங்கள்தங்கு சடைக்கண்மேலோர் திரைகள்வந்து புரளவீசும், கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறுதாரி, அங்கைவேலோன் குமரன்பிள்ளை தேவியார் கொற் றட்டியாளார், உங்களுக்காட் செய்யமாட்டோம் ஓணகாந்தன் தளியுளீரே. 2

பெற்றபோழ்தும் பெறுதபோழ்தும் பேணிஉம்கழல் ஏத்துவார்கள், மற்றோர்பற்றிலர் என்றிரங்கி மதியுடையவர் செய்கைசெய்வீர், அற்றபோழ்தும் அலந்தபோழ்தும் ஆபற்காலத் தடிகேள்உம்மை, ஒற்றிவைத்திங் குண்ணலா மோ ஓணகாந்தன் தளியுளீரே. 3

வல்லதெல்லாம் சொல்லிஉம்மை வாழ்த்தினாலும் வாய்திறந்தொன், றில்லைஎன்னீர் உண்டும்என்னீர் எம்மை ஆள்வான் இருப்பதென்னீர், பல்லைஉக்க படுதலையிற் பகல்எலாம்போய்ப் பலிதிரிந்திங், கொல்லைவாழ்க்கை ஒழிய மாட்டீர் ஓணகாந்தன் தளியுளீரே. 4

கூடிக்கூடித் தொண்டர்தங்கள் கொண்டபாணி குறை படாமே, ஆடிப்பாடி அழுதுநெக்கங் கன்புடையவர்க் கின் பம் ஓரீர், தேடித்தேடித் திரிந்தெய்த்தாலும் சித்தம்என் பால் வைக்கமாட்டீர், ஓடிப்போகீர் பற்றுந்தாரீர் ஓணகாந் தன் தளியுளீரே. 5

வாரிருங்குழல் வாள்நெடுங்கண் மலைமகள்மது விம்மு கொன்றைத், தாரிருந்தட மார்புநீங்காத் தையலாள்உல குய்யவைத்த, காரிரும்பொழிற் கச்சிமூதூர்க் காமக்கோட்

---

2. வயிறு உதாரி - வயிற்றுக்கு உண்ணும் திறத்தில் உதார குணம் உடையவன். கொற்று அட்டி ஆளார் - கூலி கொடுத்து ஆட்கொள்ளமாட்டார்.

4. படுதலை - இறந்துபட்ட தலை; கபாலம்.

5. எய்த்தாலும் - இளைப்புற்றாலும்.

டம்உண் டாகநீர்போய், ஊரிடும்பிச்சை கொள்வதென்னே ஓணகாந்தன் தளியுளீரே. 6

பொய்ம்மையாலே போதுபோக்கிப் புறத்தும்இல்லை அகத்தும்இல்லை, மெய்ம்மைசொல்லி ஆளமாட்டீர் மேலை நாள்ஒன் றிடவுங்கில்லீர், எம்மைப்பெற்றால் ஏதும்வேண் டீர் ஏதுந்தாரீர் ஏதும்ஒத்தீர், உம்மைஎன்றே எம்பெரு மான் ஓணகாந்தன் தளியுளீரே. 7

வலையம்வைத்த கூற்றமீவான் வந்துநின்ற வார்த்தை கேட்டுச், சிலைஅமைத்த சிந்தையாலே திருவடிதொழு துய்யின்அல்லால், கலைஅமைத்த காமச்செற்றக் குரோத லோப மதவருடை, உலைஅமைத்திங் கொன்றமாட்டேன் ஓணகாந்தன் தளியுளீரே. 8

வாரமாகித் திருவடிக்குப் பணிசெய்தொண்டர் பெறு வதென்னே, ஆரம்பாம்பு வாழ்வதாரூர் ஒற்றியூரேல் உம்ம தன்று, தாரமாகக் கங்கையாளைச் சடையில்வைத்த அடி கேள் உந்தம், ஊரும்காடு உடையும்தோலே ஓணகாந்தன் தளியுளீரே. 9

ஓவணமேல் எருதொன்றேறும் ஓணகாந்தன் தளி யுளார்தாம், ஆவணஞ்செய் தாளுங்கொண்டு வரைதுகி லொடு பட்டுவீக்கிக், கோவணமேற் கொண்டவேடம்

---

6. காமக்கோட்டம் உண்டாக என்றது முப்பத்திரண் டறமும் வளர்த்து அம்பிகை உறைவதை நினைத்தபடி.

7. பொய்ம்மையாலே போது போக்கி: "பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைக் கடையனேன்" (திருவாசகம்.)

8. வலையம் - பூமி. 9. வாரம் - அன்பு.

கோவையாகஆ ரூரன்சொன்ன, பாவணத்தமிழ் பத்தும் வல்லார் பறையுந் தாஞ்செய்த பாவந்தானே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: தொண்டை நாடு

சுவாமி: ஓணகாந்தீசுவரர்; அம்பிகை: காமாட்சியம்மை.

வரலாறு: காஞ்சீபுரத்தில் உள்ள திருக்கோயில்களைத் தரிசித்துப் பின் சுந்தரர் ஓணகாந்தன்தளி வந்து தரிசித்து இப்பதிகம் பாடி, சிவபெருமான் பொன் முதலியன அருளப் பெற்றார் (பெரிய. ஏயர்கோன். 191.)

திருவெண்காடு

திருச்சிற்றம்பலம்

படங்கொள்நாகம் சென்னிசேர்த்திப் பாய்புலித்தோல் அரையில்வீக்கி, அடங்கலார்ஊர் எரியச்சீறி அன்றுமூவர்க் கருள்புரிந்தீர், மடங்கலானைச் செற்றுகந்தீர் மனைகள்தோறும் தலைகையேந்தி, விடங்கராகித் திரிவதென்னே வேலை சூழ்வெண் காடனீரே. 1

10: ஓவணம் ஏல் - ஓங்காரத்தின் உருவத்தைப் பெற்ற. ஆவணம் செய்து – முறியோலை எழுதிப் பெற்று. பறையும் - தேயும்.

1. வீக்கி-இறுக்கிக்கட்டி. அடங்கலார்-பகைவர். மூவர்க்கு-திரிபுரத்தின் தலைவர்களாகிய அசுரர்கள் மூவருக்கு; அருள் புரிதலாவது, திரிபுரங்களை மாத்திரம் அழித்து, அங்கிருந்த மூவரையும் வாயில் காவலராகவும் முழவுவாசிப்பவனாகவும் அமைத்தருளியது. விடங்கர் - பேரழகை உடையவர். வெண்காடனார் என்பதன் விளி, வெண்காடனீரே என்பது.

இழித்துகந்தீர் முன்னைவேடம் இமையவர்க்கும் உரைகள்பேணு, தொழித்துகந்தீர் நீர்முன்கொண்ட உயர் தவத்தை அமரர்வேண்ட, அழிக்கவந்த காமவேளை அவனு டைய தாதைகாண, விழித்துகந்த வெற்றிஎன்னே வேலை சூழ்வெண் காடனீரே. 2

படைகள்ஏந்திப் பாரிடமும் பாதம்போற்ற மாதும் நீரும், உடையோர்கோவ ணத்தராகி உண்மைசொல்லீர் உம்மையன்றே, சடைகள்தாழக் கரணம்இட்டுத் தன்மை பேசி இல்பலிக்கு, விடையதேறித் திரிவதென்னே வேலை சூழ்வெண் காடனீரே. 3

பண்ணுளீராய்ப் பாட்டும் ஆனீர் பத்தர்சித்தம் பரவிக் கொண்டீர், கண்ணுளீராய்க் கருத்தில்உம்மைக் கருதுவார் கள் காணும்வண்ணம், மண்ணுளீராய் மதியம்வைத்தீர் வானநாடர் மருவிஏத்த, விண்ணுளீராய் நிற்பதென்னே வேலைசூழ்வெண் காடனீரே. 4

குடம்எடுத்து நீரும்பூவும் கொண்டுதொண்டர் ஏவல் செய்ய, நடம்எடுத்தொன் றூடிப்பாடி நல்குவீர்நீர் புல்கும் வண்ணம், வடம்எடுத்த கொங்கைமாதோர் பாகமாக வார் கடல்வாய், விடம்மிடற்றில் வைத்ததென்னே வேலைசூழ் வெண் காடனீரே. 5

மாறுபட்ட வனத்தகத்தில் மருவவந்த வன்களிற் றைப், பீறிஇட்ட மாகப்போர்த்தீர் பெய்பலிக்கென் றில்லந் தோறும், கூறுபட்ட கொடியும்நீருங் குலாவிஏற்றை அடர ஏறி, வேறுபட்டுத் திரிவதென்னே வேலைசூழ்வெண் காடனீரே. 6

காதலாலே கருதுந்தொண்டர் காரணத்த ராகிநின்றே, பூதம்பாடப் புரிந்துநட்டம் புவனிஏத்த ஆடவல்லீர், நீதியாக ஏழில்ஓசை நித்தராகிச் சித்தர்சூழ, வேதம்ஓதித் திரிவதென்னே வேலைசூழ்வெண் காடனீரே. 7

---

2. தாதை : திருமால்.
3. இல்பலிக்கு - வீடுகளில் பெறும் பிச்சைக்கு.
கொடி - அம்பிகை.

குரவுகொன்றை மதியம்மத்தம் கொங்கைமாதர் கங்கைநாகம், விரவுகின்ற சடைஉடையீர் விருத்தர்ஆனீர் கருத்தில்உம்மைப், பரவும்என்மேற் பழிகள்போக்கீர் பாக மாய மங்கைஅஞ்சி, வெருவவேழம் செற்றதென்னே வேலைசூழ்வெண் காடனீரே. 8

மாடங்காட்டும் கச்சியுள்ளீர் நிச்சயத்தால் நினைப் புளார்பாற், பாடுங்காட்டில் ஆடல்உள்ளீர் பரவும்வண்ணம் எங்ஙனேதான், நாடுங்காட்டில் அயனும்மாலும் நணுகா வண்ணம் அனலும்ஆய, வேடங்காட்டித் திரிவதென்னே வேலைசூழ்வெண் காடனீரே. 9

விரித்தவேதம் ஓதவல்லார் வேலைசூழ்வெண் காடு மேய, விருத்தனாய வேதன்றன்னை விரிபொழில்திரு நாவ லூரன், அருத்தியால்ஆ ரூரன்தொண்டன் அடியன்கேட்ட மாலைபத்தும், தெரித்தவண்ணம் மொழியவல்லார் செம்மை யாளர் வானுளாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு
சுவாமி: சுவேதாரணியேசுவரர்
அம்பிகை: பிரமவித்தியா நாயகி

திருஎதிர்கொள்பாடி

திருச்சிற்றம்பலம்

மத்தயானை ஏறிமன்னர் சூழவரு வீர்காள், செத்த போதில் ஆரும்இல்லை சிந்தையுள் வைம்மின்கள், வைத்த உள்ளம் மாற்றவேண்டா வம்மின் மனத்தீரே, அத்தர் கோயில் எதிர்கொள்பாடி என்பதடை வோமே. 1

---

8. மத்தம் - ஊமத்தை.

1. ஆரும் இல்லை - துணையாவார் யாரும் இல்லை.

தோற்றம்உண்டேல் மரணம்உண்டு துயரம்மனை வாழ்க்கை, மாற்றம்உண்டேல் வஞ்சம்உண்டு நெஞ்ச மனத்தீரே, நீற்றர்ஏற்றர் நீலகண்டர் நிறைபுனல்நீள் சடைமேல், ஏற்றர்கோயில் எதிர்கொள்பாடி என்பதடை வோமே. 2

செடிகொள்ஆக்கை சென்றுசென்று தேய்ந்தொல்லை விழாமுன், வடிகொள்கண்ணார் வஞ்சனையுட் பட்டுமயங் காதே, கொடிகொள்ஏற்றர் வெள்ளைநீற்றர் கோவணஆ டையுடை, அடிகள்கோயில் எதிர்கொள்பாடி என்பதடை வோமே. 3

வாழ்வர்கண்டீர் நம்முள்ஐவர் வஞ்சமனத் தீரே, யாவராலும் இகழப்பட்டிங் கல்லலில்வீ ழாதே, மூவராயும் இருவராயும் முதல்வன்அவ னேயாம், தேவர்கோயில் எதிர்கொள்பாடி என்பதடை வோமே. 4

அரித்துநம்மேல் ஐவர்வந்திங் காறலைப்பான் பொருட் டால், சிரித்தபல்வாய் வெண்டலைபோய் ஊர்ப்புறஞ்சே ராமுன், * வரிக்கொடுத்திவ் வாள்அரக்கர் வஞ்சமதில் மூன்றும், எரித்தவில்லி எதிர்கொள்பாடி என்பதடை வோமே. 5

பொய்யர்கண்டீர் வாழ்க்கையாளர் பொத்தடைப் பான் பொருட்டால், ₂ மையல்கொண்டீர் எம்மோடாடி நீரும்மனத் தீரே, நையவேண்டா இம்மைஏத்த அம்மை நமக்கருளும், ஐயர்கோயில் எதிர்கொள்பாடி என்பதடை வோமே. 6

---

2. தோற்றம் – பிறவி. மாற்றம் – மாறுபாடு ; சொல்லுமாம்.

3. செடி – நாற்றம். ஒல்லை - விரைவில். வடி - கூர்மை.

5. அரித்து - பகைத்து. ஊர்ப்புறம் - மயானம்.

6. பொத்து அடைப்பான் பொருட்டால் - வயிற்றுக் குழியை நிரப்பும்பொருட்டு.

கூசம்நீக்கிக் குற்றம்நீக்கிச் செற்றமனம் நீக்கி, வாசம் மல்கு குழலினார்கள் வஞ்சமனை வாழ்க்கை, ஆசைநீக்கி அன்புசேர்த்தி என்பணிந்தே றேறும், ஈசர்கோயில் எதிர் கொள்பாடி என்பதடை வோமே. 7

இன்பம்உண்டேல் துன்பம்உண்டு ஏழைமனை வாழ்க்கை, முன்புசொன்ன மோழைமையான் முட்டை மனத் தீரே, அன்பர்அல்லால் அணிகொள்கொன்றை அடிகள்அடி சேரார், என்பர்கோயில் எதிர்கொள்பாடி என்பதடை வோமே. 8

தந்தையாருந் தவ்வையாரும் எட்டனைச்சார் வாகார், வந்துநம்மோ டுள்அளாவி வானநெறி காட்டும், சிந்தையீரே நெஞ்சினீரே திங்கள்மதியஞ் சூடும், எந்தைகோயில் எதிர் கொள்பாடி என்பதடை வோமே. 9

குருதிசோர ஆனையின்தோல் கொண்டகுழற் சடை யன், மருதுகீறி ஊடுபோன மாலயனும் அறியாச், சுருதி யார்க்குஞ் சொல்லஒண்ணாச் சோதிஎம் ஆதியான், கருது கோயில் எதிர்கொள்பாடி என்பதடை வோமே. 10

முத்துநீற்றுப் பவளமேனிச் செஞ்சடையான் உறை யும்,பத்தர்பந்தத் தெதிர்கொள்பாடிப் பரமனையே பணியச், சித்தம்வைத்த தொண்டர்தொண்டன் சடையனவன் சிறு வன், பத்தன்ஊரன் பாடல்வல்லார் பாதம்பணி வாரே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு

சுவாமி : அயிராவத நாதர்; அம்பிகை : மலர்க்குழல்நாயகி.

---

7. கூசம் - கூச்சம்.

8. மோழைமை - அறியாமை. முட்டை மனத்தீர் – பாழ் பட்ட மனம் ; அறியாமையையுடைய மனம்.

9. தவ்வையார் - தாயார். எள் தனை–எள்ளளவேனும்.

11. சடையன் : சுந்தரமூர்த்தி சுவாமிகள் தந்தையார்.

திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

இறைகளோ டிசைந்த இன்பம் இன்பத்தோ டிசைந்த வாழ்வு, பறைகிழித் தனைய போர்வை பற்றியான் நோக்கி னேற்குத், திறைகொணர்ந் தீண்டித் தேவர் செம்பொனும் மணியும் தூவி, அறைகழல் இறைஞ்சும் ஆரூர் அப்பனே அஞ்சி னேனே. 1

ஊன்மிசை உதிரக் குப்பை ஒருபொருள் இலாத மாயம், மான்மறித் தனைய நோக்கி மடந்தைமார் மதிக்கும் இந்த, மானுடப் பிறவி வாழ்வு வாழ்வதோர் வாழ்வு வேண்டேன், ஆனல்வெள் ளேற்ற ஆரூர் அப்பனே அஞ்சி னேனே. 2

அறுபதும் பத்தும் எட்டும் ஆறினோ டஞ்சும் நான் கும், துறுபறித் தனைய நோக்கிச் சொல்லிற்றொன் றாகச் சொல்லார், நறுமலர்ப் பூவும் நீரும் நாடோறும் வணங்கு வார்க்கு, அறிவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே அஞ்சி னேனே. 3

சொல்லிடில் எல்லை இல்லை சுவையிலாப் பேதை வாழ்வு, நல்லதோர் கூரை புக்கு நலமிக அறிந்தே னல்லேன்,

---

1. இறைகளோடு இசைந்த இன்பம் – சிவபெருமானோடு ஒன்றிய பேரின்பம். பறை கிழித்தனைய போர்வை – பறை கிழிந்தால் அதன் தோல் பயன்படாதவாறு போல இறந்து பட்டால் பயன்படாத உடம்பு.

2. ஆன் நல் வேள்ளேற்ற - நல்ல வெள்ளையான ஆனேற்றையுடைய.

3. அறுபதும் பத்தும் எட்டும் ஆறினோடு அஞ்சு நான்கும் – தொண்ணூற்றாறு தத்துவமும்; எட்டும் – எட்டுவதற்குரிய.

4. கூரை என்றது இங்கே உடம்பை.

மல்லிகை மாடம் நீடு மருங்கொடு நெருங்கி எங்கும், அல்லிவண் டியங்கும் ஆரூர் அப்பனே அஞ்சி னேனே. 4

நரம்பினோ டெலும்பு கட்டி நசையினோ டிசைவொன் றில்லாக், குரம்பைவாய்க் குடியி ருந்து குலத்தினால் வாழ மாட்டேன், விரும்பிய கமழும் புன்னை மாதவித் தொகுதி என்றும், அரும்புவாய் மலரும் ஆரூர் அப்பனே அஞ்சி னேனே. 5

மணம்என மகிழ்வர் முன்னே மக்கள்தாய் தந்தை சுற்றம், பிணம்எனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண் டேன் நாயேன், பணையிடைச் சோலை தோறும் பைம் பொழில் விளாகத் தெங்கள், அணைவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே அஞ்சி னேனே. 6

தாழ்வெனுந் தன்மை விட்டுத் தனத்தையே மனத்தில் வைத்து, வாழ்வதே கருதித் தொண்டர் மறுமைக்கொன் றீய கில்லார், ஆழ்குழிப் பட்ட போது வலக்கணில் ஒரு வர்க் காவர், யாழ்முயன் றிருக்கும் ஆரூர் அப்பனே அஞ்சி னேனே. 7

உதிரநீர் இறைச்சிக் குப்பை எடுத்தது மலக்கு கைம் மேல், வருவதோர் மாயக் கூரை வாழ்வதோர் வாழ்வு வேண்டேன், கரியமால் அயனுந் தேடிக் கழலடி காண மாட்டா, அரியனாய் நின்ற ஆரூர் அப்பனே அஞ்சி னேனே. 8

பொய்த்தன்மைத் தாய மாயப் போர்வையை மெய் யென் றெண்ணும், வித்தகத் தாய வாழ்வு வேண்டிநான் விரும்ப கில்லேன், முத்தினைத் தொழுது நாளும் முடிக ளால் வணங்கு வார்க்கு, அத்தன்மைத் தாகும் ஆரூர் அப் பனே அஞ்சி னேனே. 9

---

5. குரம்பை – குடிசை. மாதவி – குருக்கத்தி.
6. பணை – கிளை. விளாகம் – பரப்பு.

தஞ்சொலார் அருள்ப யக்குந் தமியனேன் தடமு லைக்கண்
அஞ்சொலார் பயிலும் ஆரூர் அப்பனை ஊரன் அஞ்சிச்
செஞ்சொலார் நயந்த பாடல் சிந்தியா ஏத்த வல்லார்
நஞ்சுலாம் கண்டத் தெங்கள் நாதனை நணுகு வாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : வன்மீக நாதர்

அம்பிகை : அல்லியங்கோதையம்மை

திருஅரிசிற்கரைப்புத்தூர்

திருச்சிற்றம்பலம்

மலைக்கும்மகள் அஞ்ச மதகரியை உரித்தீர்எரித் தீர்வரு முப்புரங்கள், சிலைக்குங்கொலைச் சேவுகந் தேற்றெழிியீர், சில்பலிக் கில்கள்தொ றுஞ்செல வொழியீர், கலைக்கொம்புங் கரிமருப் பும்இடறிக் கலவம்மயிற் பீலியுங் காரகிலும், அலைக்கும்புனல் சேர்அரி சிற்றென்கரை அழகார்திருப் புத்தூர் அழகனீரே. 1

அருமல ரோன்சிரம் ஒன்றறுத் தீர்செறுத் தீர்அழற் சூலத்தில் அந்தகனைத், திருமகள் கோன்நெடு மால்பல நாள்சிறப் பாகிய பூசனை செய்பொழுதில், ஒருமலர் ஆயிரத் திற்குறை வாநிறை வாகஓர் கண்மலர் சூட்டலுமே, பொருவிறல் ஆழி புரிந்தளித் தீர்பொழில் ஆர்திருப் புத்தூர்ப் புனிதனீரே. 2

---

1. சிலைக்கும் – முழங்கும். சே – இடபம்.
2. புரிந்து - விரும்பி.

தரிக்குந் தரைநீர் தழல்காற் றந்தரம் சந்திரன் சவிதா இயமானன் ஆனீர், சரிக்கும் பலிக்குத் தலைஅங்கை ஏந்தித் தையலார் பெய்யக்கொள் வதுதக்க தன்றால், முரிக்குந் தளிர்ச்சந் தனத்தொடு வேயும் முழங்குந் திரைக்கைக ளால்வாரி மோதி, அரிக்கும் புனல்சேர் அரிசிற் றென்கரை அழகார் திருப்புத்தூர் அழகனீரே. 3

கொடியுடை மும்மதில் வெந்தழி யக்குன்றம் வில்லா நாணி யிற்கோல் ஒன்றினால், இடிபட எய்தெரித் தீர்இமைக் கும்அள வில்உமக் கார்எதிர் எம்பெருமான், கடிபடு பூங்கணை யான்கருப் புச்சிலைக் காமனை வேவக் கடைக்கண்ணினால், பொடிபட நோக்கிய தென்னை கொல்லோ பொழிலார் திருப்புத் தூர்ப்புனித னீரே. 4

வணங்கித் தொழுவா ரவர்மால் பிரமன் மற்றும் வானவர்தா னவர்மா முனிவர், உணங்கற் றலையிற் பலிகொண் டல்என்னே உலகங்கள் எல்லாம் உடையீர் உரையீர், இணங்கிக் கயல்சேல் இளவா ளைபாய இனக்கெண் டைதுள்ளக் கண்டிருந் தஅன்னம், அணங்கிக் குணங்கொள் அரிசிற் றென்கரை அழகார் திருப்புத் தூர் அழகனீரே. 5

அகத்த டிமைசெய்யும் அந்தணன்றான்அரி சிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான், மிகத்த ளர்வெய்திக் குடத்தையும் நம்முடி மேல்விழுத் திட்டு நடுங்குதலும், வகுத்தவ னுக்கு நித்தற் படியும் வருமென் றொருகா

---

3. அந்தரம் – ஆகாசம். சவிதா – சூரியன். அட்டமூர்த்தி யென்றபடி. சரிக்கும் – உலவும். முரிக்கும் – தளிர்க்கும்.

4. கோல் – அம்பு. இமைக்கும் அளவில் எரித்தீர். கடி – வாசனை.

5. உணங்கல் தலை – ஊன் உலர்ந்த கபாலம். கொண் டல் – கொள்ளுதல்.

சினைநின் றநன்றிப், புகழ்த்துணை கைப்புகச் செய் துகந்தீர் பொழிலார் திருப்புத் தூர்ப்புனித னீரே. 6

பழிக்கும் பெருந்தக் கன்எச்சம் அழியப் பகலோன் முதலாப் பலதே வரையும், தெழித்திட்ட அரங் கஞ் சிதைத்தருளும் செய்கைஎன் னைகொலோ மைகொள் செம் மிடற்றீர், விழிக்குந் தழைப்பீ லியொ டேலம்உந்தி விளங்கும்மணி முத்தொடு பொன்வரன்றி, அழிக்கும் புனல்சேர் அரிசிற் றென்கரை அழகார் திருப்புத் தூர்அழக னீரே. 7

பறைக்கண்நெடும் பேய்க்கணம் பாடல்செய்யக் குறட்பா ரிடங்கள் பறைதாம் முழக்கப், பிறைக்கொள் சடைதா ழப்பெயர்ந் தாநட்டம் பெருங்கா டரங்கா கநின்று டல்என்னே, கறைக்கொள் மணிகண் டமுந்திண் டோள்களும் கரங்கள் சிரந்தன்னிலுங் கச்சுமாகப், பொறிக்கொள் அரவம் புனைந்தீர் பலவும் பொழிலார் திருப்புத் தூர்ப்புனித னீரே. 8

மழைக்கண்மட வாளைஓர் பாகம்வைத்தீர் வளர்புன் சடைக் கங்கையை வைத்துகந்தீர், முழைக்கொள் அரவோ டென்பணி கலனா முழுநீறு மெய்பூசுதல் என்

---

6. அந்தணன் – புகழ்த்துணை நாயனார். ஆதிசைவ ராகிய இவர் சிவபெருமானை வழிபடுபவர், பஞ்சம் வந்தபோது பட்டினி கிடந்து இறைவருக்கு அபிடேகம் செய்கையில் தளர்ச்சியடைந்து திருமஞ்சனக் குடத்தை இறைவர் முடிமேல் போட்டு விழுந்தார். இறைவர் அவருக்குத் தினமும் ஒரு படிக் காசு அருளினார்.

7. எச்சம் – யஞ்ஞம்; வேள்வி. பகலோன் – சூரியன். தெழித்திட்ட – முழங்கிய. இயல்பாகச் சிவந்த மிடறு நீல நிறம் பெற்றதாதலின், 'மைகொள் செம்மிடற்றீர்' என்றார்; அருள் நிரம்பிய செம்மையை உடையதென்பதும் ஆம். வரன்றி – அரித்து.

8. குறள் பாரிடங்கள் – குட்டையான பூதங்கள். கரத் திலும் சிரத்திலும் (ஆபரணமாகவும்), (இடையிலே) கச்சாக வும் அரவம் புனைந்தீர்.

னைகொலோ, கழைக்கொள் கரும்புங் கதலிக் கனியும்
கமுகின் பழுக்கா யுங்கவர்ந் துகொண்டிட், டழைக்கும்
புனல்சேர் அரிசிற் றென்கரை அழகார் திருப்புத்
தூர்அழக னீரே. 9

கடிக்கும் அரவால் மலையால் அமரர் கடலைக் கடைய
எழுகா ளகூடம், ஒடிக்கும் உலகங் களைஎன் றதனை
உமக்கே அமுதாக உண்டீர் உமிழீர், இடிக்கும்
மழைவீழ்த் திழுத்திட் டருவி இருபா லும்ஓடி இரைக்குந்
திரைக்கை, அடிக்கும் புனல்சேர் அரிசிற் றென்கரை
அழகார் திருப்புத் தூர்அழக னீரே. 10

காரூர் மழைபெய் துபொழி அருவிக் கழையோ
டகிலுந் திட்டிரு கரையும், போரூர் புனல்சேர் அரிசிற்
றென்கரைப் பொழிலார் திருப்புத் தூர்ப்புனிதர் தம்மை,
ஆரூ ரன்அருந் தமிழைந் தினொடைந் தழகால் உரைப்பார்
களுங் கேட்பவரும், சீரூர் தருதே வர்கணங் களொடும்
இணங்கிச் சிவலோகம தெய் துவரே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : படிக்காசு வைத்த பரமர்

அம்பிகை : அழகம்மை

வரலாறு : திருநறையூர்ச் சித்தீச்சரத்தைப் பணிந்து, தொண்டர்கள் ஆர்வத்தோடு வரவேற்க, அரிசிற்கரைப்புத்தூர் வந்து இப்பதிகம் பாடினார் ஆளுடைய நம்பியார் (பெரிய. ஏயர்கோன். 61-62.)

---

9. புன்சடை – சிவந்த சடை. அழைக்கும் – ஒலிக்கும்.
10. ஒடிக்கும் – அழிக்கும். இரைக்கும் – ஒலிக்கும்.
11. கழை – மூங்கில்.

திருக்கச்சி அனேகதங்காவதம்

திருச்சிற்றம்பலம்

தேனெய்புரிந்துழல் செஞ்சடைஎம்பெரு மானதி டம்திகழ் ஐங்கணையக், கோனைஎரித்தெரி யாடிஇடங் குல வானதிடம்குறை யாமறையாம், யானைஇடத்ததொர் கையன்இடம்மதம் மாறுபடப்பொழி யும்மலைபோல்,யானை உரித்தபி ரானதிடங்கலிக் கச்சிஅனேகதங் காவதமே. 1

கூறுநடைக்குழி கட்பகுவாயன பேய்உகந் தாடநின் றோரியிட, வேறுபடக்குட கத்திலையம்பல வாணன்நின் றுடல், விரும்பும்இடம், ஏறுவிடைக்கொடி எம்பெரு மான்இமை யோர்பெருமான்உமை யாள்கணவன், ஆறுசடைக்குடை அப்பன்இடங்கலிக் கச்சிஅனேகதங் காவதமே. 2

கொடிகளிடைக்குயில் கூவும்இடம்மயில் ஆலும்இ டம்மழு வாளுடைய, கடிகொள்புனற்சடை கொண்டநு தற்கறைக் கண்டன்இடம்பிறைத் துண்டமுடிச்,செடிகொள் வினைப்பகை தீரும்இடந்திரு வாகும்இடம்திரு மார்பகலத், தடிகள்இடம்அழல் வண்ணன்இடங்கலிக் கச்சிஅனேகதங் காவதமே. 3

கொங்குநுழைத்தன வண்டறை கொன்றையும் கங்கையுந் திங்களுஞ் சூடுசடை, மங்குல் நுழைமலை மங்கையைநங்கையைப் பங்கினில்தங்க உவந்தருள்செய், சங்குகுழைச்செவி கொண்டருவித்திரள் பாயவியர்த்தழல் போலுடைத்தம், அங்கைமழுத்திகழ் கையன்இடம்கலிக் கச்சிஅனேகதங் காவதமே. 4

---

1. தேனெய் புரிந்து – தேனையும் நெய்யையும் விரும்பி ; தேனெய் – தேனும் ஆம். ஐங்கணை அக்கோன் – காமன்.

2. கூறுநடை – குறுகக் குறுக அடியிடும் நடை. ஓரி – நரி.

3. திரு – அம்பிகை. 4. மங்குல் – மேகம்.

வைத்தபடத்தலை ஆடரவம்பயில் கின்றஇடம்பயி லப்புகுவார், சித்தம்ஒருநெறி வைத்தஇடம்திகழ் கின்றஇ டந்திரு வானடிக்கே, வைத்தமனத்தவர் பத்தர்ம னங்கொள வைத்தஇடம்மழு வாளுடைய, அத்தன்இ டம்அழல் வண்ணன்இ டம்கலிக் கச்சிஅ னேகதங் காவதமே. 5

தண்டமுடைத்தரு மன்தமர்என்தம ரைச்செயும் வன்துயர் தீர்க்குமிடம், பிண்டமுடைப்பிற வித்தலை நின்று நினைப்பவர்ஆக்கையை நீக்கும்இடம், கண்டமு டைக்கரு நஞ்சைநுகர்ந்த பிரானதிடங்கடல் ஏழுகடந், தண்டமுடைப்பெரு மானதிடங்கலிக் கச்சிஅனேகதங் காவதமே. 6

கட்டுமயக்கம் அறுத்தவர்கைதொழு தேத்தும்இ டம்கதி ரோன்ஒளியால், விட்டும்இடம்விடை ஊர்திஇ டம்குயிற் பேடைதன் சேவலொ டாடும்இடம், மட்டும யங்கிஅ விழ்ந்தமலர்ஒரு மாதவியோடு மணம்புணரும், அட்டபு யங்கப் பிரான திடங்கலிக் கச்சிஅனேகதங் காவதமே. 7

புல்லிஇடந்தொழு துய்தும்என்றவர் தம்புர மூன்றும் பொடிபடுத்த, வில்லிஇடம்விர வார்துயிர் உண்ணும்வெங் காலனைக்கால்கொடு வீந்தவியக், கொல்லிஇ டங்குளிர் மாதவிமவ்வல் குராவகுளங்குருக் கத்திபுன்னை, அல்லியிடைப்பெடை வண்டுறங்கும்கலிக் கச்சிஅனேகதங் காவதமே. 8

சங்கையவர்புணர் தற்கரியான்தள வேனகையாட விராமிகுசீர், மங்கையவள்மகி ழச்சுடுகாட்டிடை நட்டம்

---

6. தருமன் – யமன்.

7. கட்டு மயக்கம் – பாசத்தினால் வந்த அறியாமையை.

9. சங்கையவர் - ஐயப்பாடுடையவர். தளவு ஏல் நகை – முல்லையைப்போன்ற பற்களையுடைய.

நின்றாடிய சங்கரன்எம், அங்கையினல்லனல் ஏந்துமவன் கனல் சேரொளிஅன்னதொர் பேரகலத், தங்கையவன் உறைகின்றஇடங்கலிக் கச்சிஅனேகதங் காவதமே. 9

வீடுபெறப்பல ஊழிகள்நின்று நினைக்கும்இடம்வினை தீரும்இடம், பீடுபெ றப்பெரி யோரதி டங்கொண்டு மேவினர் தங்களைக் காக்கும்இடம், பாடும்இடத்தடி யான்புகழ் ஊரன் உரைத்தஇம்மாலைகள் பத்தும்வல்லார், கூடும்இடம்சிவ லோகன்இடங்கலிக் கச்சிஅனேகதங் காவதமே. 10

திருச்சிற்றம்பலம்.

நாடு : தொண்டை நாடு

சுவாமி : காவதேசுவரர்; அம்பிகை : காமாட்சியம்மை.

வரலாறு : காஞ்சீபுரத்திலே சில நாள் தங்கியிருந்த போது; சுந்தரர் அனேகதங்காவதம் வந்து தரிசித்து இப்பதிகம் பாடியருளினர் (பெரிய. ஏயர்கோன். 192.)

திருப்பூவணம்

திருச்சிற்றம்பலம்

திருவுடை யார்திரு மால்அய னாலும்
உருவுடை யார்உமை யாளைஓர் பாகம்
பரிவுடை யார்அடை வார்வினை தீர்க்கும்
புரிவுடை யார்உறை பூவணம் ஈதோ. 1

எண்ணி இருந்தும் கிடந்தும் நடந்தும்
அண்ணல்எ னநினை வார்வினை தீர்ப்பார்
பண்ணிசை யார்மொழி யார்பலர் பாடப்
புண்ணிய னார்உறை பூவணம் ஈதோ. 2

---

1. புரிவு – விருப்பம்.

தெள்ளிய பேய்பல பூதம வற்றொடு
நள்ளிருள் நட்டம தாடல்ந வின்றோர்
புள்ளுவ ராகும் அவர்க்கவர் தாமும்
புள்ளுவ ஞர்உறை பூவணம் ஈதோ. 3

நிலனுடை மான்மறி கையது தெய்வக்
கனலுடை மாமழு ஏந்தியோர் கையில்
அனலுடை யார்அழ கார்தரு சென்னிப்
புனலுடை யார்உறை பூவணம் ஈதோ. 4

நடையுடை நல்லெரு தேறுவர் நல்லார்
கடைகடை தோறிடு மின்பலி என்பார்
துடியிடை நன்மட வாளொடு மார்பில்
பொடியணி வார்உறை பூவணம் ஈதோ. 5

மின்னனை யாள்திரு மேனி விளங்கவோர்
தன்னமர் பாகம தாகிய சங்கரன்
முன்னினை யார்புரம் மூன்றெரி ஊட்டிய
பொன்னனை யான்உறை பூவணம் ஈதோ. 6

மிக்கிறை யேயவன் துன்மதி யாலிட
நக்கிறை யேவிர லால்இற ஊன்றி
நெக்கிறை யேநினை வார்தனி நெஞ்சம்
புக்குறை வான்உறை பூவணம் ஈதோ. 7

* * * * 8

* * * * 9

---

3. புள்ளுவர் – பொய்யர்.
5. கடை–வாயில். 6. மின்னனையாள்; தலத்து அம்பிகை.
7. மிக்கு – வாழ்பு கடந்து. இறை ஏயவன் – அரக்கருக்கு இறைமை பொருந்திய இராவணன். இறையே – சிறிதளவு. ஊன்றி – ஊன்றினவன்.

சீரின் மிகப்பொலி யுந்திருப் பூவணம்
ஆர இருப்பிட மாஉறை வான்றனை
ஊரன் உரைத்தசொல் மாலைகள் பத்திவை
பாரில் உரைப்பவர் பாவம் அறுப்பரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : பாண்டி நாடு

சுவாமி : பூவணநாதர்; அம்பிகை : மின்னம்மை.

வரலாறு : மதுரையில் சேரமான் பெருமாளோடு தங்கியிருந்த சுந்தரர், சேர சோழ பாண்டியரோடு திருப்பூவணத்தைத் தரிசிக்கச் செல்கையில், தொண்டர்கள் அத்தலத்தைச் சுட்டிக் காட்ட, அப்போது பாடியது இப்பதிகம் (பெரிய. சேரமான். 98.)

திருநாட்டுத்தொகை

திருச்சிற்றம்பலம்

வீழக் காலனைக் கால்கொடு பாய்ந்த விலங்கலான்
கூழைஏறுகந் தான்இடங் கொண்டதுங் கோவலூர்
தாழை யூர்தகடூர் தக்களூர் தருமபுரம்
வாழைகாய்க் கும்வளர் மருகல் நாட்டு மருகலே. 1

அண்டத்தண் டத்தின்அப் புறத்தாடும் அமுதனூர்
தண்டந்தோட் டந்தண்டங் குறைதண்டலை யாலங்காடு
கண்டல்முண் டல்கள்சூழ்கழிப் பாலை கடற்கரை [யே.
கொண்டல்நாட் டுக்கொண்டல் குறுக்கைநாட்டுக் குறுக்கை

மூலனூர்முத லாயமுக் கண்ணன் முதல்வன்ஊர்
நாலனூர்நரை யேறுகந் தேறிய நம்பன்ஊர்
கோலநீற்றன் குற்றாலங் குரங்கணின் முட்டமும்
வேலனூர்வெற் றியூர்வெண் ணிக்கூற்றத்து வெண்ணியே. 3

---

2. கண்டல் – முள்ளி.

தேங்கூருந் திருச்சிற் றம்பலமுஞ் சிராப்பள்ளி
பாங்கூர் எங்கள்பி ரான்உறையுங் கடம்பந்துறை
பூங்கூ ரும்பரமன் பரஞ்சோதி பயிலும்ஊர்
நாங்கூர் நாட்டு நாங்கூர் நறையூர் நாட்டு நறையூரே. 4

குழலைவென் றமொழி மடவாளையோர் கூறனும்
மழலைஏற் றுமணாளன் இடந்தட மால்வரைக்
கிழவன் கீழைவழிப் பழையாறு கிழையமும்
மிழலைநாட்டு மிழலை வெண்ணி நாட்டு மிழலையே. 5

தென்னூர்கைம் மைத்திருச் சுழியல்திருக் கானப்பேர்
பன்னூர் புக்குறையும் பரமர்க்கிடம் பாய்நலம்
என்னூர் எங்கள்பிரான் உறையுந்திருத் தேவனூர்
பொன்னூர் நாட்டுப்பொன்னூர் புரிசைநாட்டுப் புரிசையே.

ஈழநாட்டு மாதோட்டந் தென்னாட் டிராமேச்சுரம்
சோழநாட் டுத்துருத்தி நெய்த்தானந் திருமலை
ஆழியூ ரனநாட் டுக்கெல்லாம் அணியாகிய
கீழையில் லரனார்க் கிடங்கிள்ளி குடியதே. 7

நாளும்நன்னி லந்தென்பனை யூர்வட கஞ்சனூர்
நீள்நீள் சடையான்நெல் லிக்காவும் நெடுங்களம்
காளகண் டன்உறையுங் கடைமுடி கண்டியூர்
வேளார் நாட்டு வேளூர் விளத்தூர் நாட்டு விளத்தூரே. 8

தழலும் மேனியன் தையலோர் பாகம் அமர்ந்தவன்
தொழலுந் தொல்வினை தீர்க்கின்ற சோதி சோற்றுத்துறை
கழலுங் கோவை உடையவன் காதலிக் கும்மிடம்
பழனம்பாம் பணிபாம்புரந் தஞ்சைதஞ் சாக்கையே. 9

மைகொள்கண் டன்எண்டோளன் முக்கண்ணன் வலஞ்சுழி
பைகொள்வாள் அரவாட்டித் திரியும் பரமனூர்
செய்யில்வா ளைகள்பாய்ந் துகளுந்திருப் புன்கூர்நன்
றையன்மேய பொழிலணி ஆவடு துறையதே. 10

---

5. மழலை - இளமை.
7. ஈழநாடு - இலங்கை.

பேணிநா டதனில் திரியும்பெரு மான்றனை
ஆணையா அடியார்கள் தொழப்படும் ஆதியை
நாணிஊரன் வனப்பகை அப்பன்வன் றொண்டன்சொல்
பாணியால்இவை ஏத்துவார் சேர்பர லோகமே. 11

திருச்சிற்றம்பலம்

---

2. பண் - தக்கராகம்

திருத்துறையூர்

திருச்சிற்றம்பலம்

மலையார் அருவித் திரள்மா மணியுந்திக், குலையாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால், கலையார் அல்குற்கன் னியர்ஆடும் துறையூர்த், தலைவா உனைவேண் டிக்கொள்வேன் தவநெறியே. 1

மத்தம் மதயானை யின்வெண் மருப்புந்தி, முத்தங் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால், பத்தர் பயின்றேத்திப் பரவும் துறையூர், அத்தா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 2

கந்தங் கமழ்கா ரகில்சந் தனமுந்திச், செந்தண் புனல்வந் திழிபெண்ணை வடபால், மந்தி பலமா நடமா டுந் துறையூர், எந்தாய் உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 3

---

11. வனப்பகை - கோட்புலி நாயனார் திருமகளார்; இவரைச் சுந்தரமூர்த்தி நாயனார் தம் திருமகளாராக ஏற்றுக் கொண்டார். பாணியால் - செவ்வியோடு; தாளத்தோடு எனலும் ஆம்.

1. குலை - கரை.

அரும்பார்ந் தனமல் லிகைசண் பகஞ்சாடிச், சரும் பாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால், கரும் பார் மொழிக்கன் னியர்ஆடுந் துறையூர், விரும்பா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 4

பாடார்ந் தனமாவும் பலாக்க ளும்சாடி, நாடா வந்தெற்றி யோர்பெண்ணை வடபால், மாடார்ந் தனமா ளிகைசூழுந் துறையூர், வேடா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 5

மட்டார் மலர்க்கொன் றையும்வன் னி யுஞ்சாடி, மொட்டாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால், கோட்டாட் டொடுபாட் டொலிஓவாத் துறையூர்ச், சிட்டா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 6

மாதார் மயிற்பீ லியும்வெண் ணுரைஉந்தித், தாதாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால், போதார்ந் தனபொய்கை கள்சூழுந் துறையூர், நாதா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 7

கொய்யா மலர்க்கோங் கொடுவேங்கை யுஞ்சாடிச், செய்யாரக் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால், மையார் தடங்கண் ணியர்ஆடும் துறையூர், ஐயா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 8

விண்ணார்ந் தனமேகங் கள்நின் றுபொழிய, மண்ணாரக் கொணர்ந்தெற்றி ஓர்பெண்ணை வடபால், பண்ணார் மொழிப்பா வையர்ஆடும் துறையூர், அண்ணா உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே. 9

---

4. விரும்பா - விரும்பப்படுபவனே.

5. மாடு - செல்வம்.

6. கொட்டு ஆட்டொடு பாட்டு - வாத்திய நிருத்த கீதம். கொட்டு என்பது உபலட்சணத்தால் கருவியிசை பலவற்றை யும் குறித்தது. சிட்டா - உத்தமனே.

8. செய் ஆர - வயல்கள் நிரம்ப.

மாவாய் பிளந்தானும் மலர்மிசை யானும், ஆவா அவர்தேடித் திரிந்தல மந்தார், பூவார்ந் தனபொய் கைகள் சூழுந் துறையூர்த், தேவா உனைவேண்டிக் கொள்வேன் தவ நெறியே. 10

செய்யார் கமலம் மலர்நாவ லூர்மன்னன், கையால் தொழுதேத்தப் படுந்துறை யூர்மேல், பொய்யாத் தமிழ் ஊரன் உரைத்தன வல்லார், மெய்யே பெறுவார்கள் தவ நெறி தானே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : நடுநாடு

சுவாமி : துறையூர்நாதர்; அம்பிகை : பூங்கோதைநாயகி.

வரலாறு : இறைவரால் ஆட்கொள்ளப்பெற்ற சுந்தரர் திருவெண்ணெய்நல்லூரைப் பாடிப் பின் திருநாவலூர் தரிசித்துப் பாடி, அப்பால் திருத்துறையூரைத் தரிசித்துப் 'பவ நெறிக்கு விலக்காகும்' இப்பதிகத்தைப் பாடியருளினர் (பெரிய. தடுத்தாட்கொண்ட. 79.)

திருப்பாச்சிலாச்சிராமம்

திருச்சிற்றம்பலம்

வைத்தனன் தனக்கே தலையும்என் னாவும் நெஞ்சமும் வஞ்சம்ஒன் றின்றி, உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை உரைத்தக்கால் உவமனே ஒக்கும், பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு பாச்சிலாச் சிராமத்தெம் பரமர், பித்தரே ஒத்தோர் நச்சில ராகில் இவரலா தில்லையோ பிரானார். 1

---

10. மாவாய் பிளந்தானும் - குதிரையின் வாயைப் பிளந்த திருமாலும். ஆவா – அந்தோ.

1. பைத்த – படத்தை உடைய.

அன்னையே என்னேன் அத்தனே என்னேன் அடிகளே அமையுமென் றிருந்தேன், என்னையும் ஒருவன் உளன்என்று கருதி இறைஇறை திருவருள் காட்டாய், அன்னமாம் பொய்கை சூழ்தரு பாச்சி லாச்சிரா மத்துறை அடிகள்,பின்னையே அடியார்க் கருள்செய்வ தாகில் இவரலா தில்லையோ பிரானுர். 2

உற்றபோ தல்லால் உறுதியை உணரேன் உள்ளமே அமையும்என் றிருந்தேன், செற்றவர் புரமூன் றெரிஎழச் செற்ற செஞ்சடை நஞ்சடை கண்டர், அற்றவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத் தடிகள்தா மியாதுசொன் ஞலும், பெற்றபோ துகந்து பெறுவிடில் இகழில் இவரலா தில்லையோ பிரானுர். 3

நாச்சில பேசி நமர்பிறர் என்று நன்றுதீ தென்கிலர் மற்ருேர்,பூச்சிலை நெஞ்சே பொன்விளை கழனிப் புள்ளினஞ் சிலம்புமாம் பொய்கைப், பாச்சிலாச் சிராமத் தடிகளென் றிவர்தாம் பலரையும் ஆட்கொள்வர் பரிந்தோர், பேச்சிலர் ஒன்றைத் தரவில ராகில் இவரலா தில்லையோ பிரானுர். 4

வரிந்தவெஞ் சிலையால் அந்தரத் தெயிலை வாட்டிய வகையினரேனும், புரிந்தஅந் நாளே புகழ்தக்க அடிமை போகுநாள் வீழுநா ளாகிப், பரிந்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத் தடிகள்தா மியாதுசொன் ஞலும், பிரிந்திறைப் போதிற் பேர்வதே ஆகில் இவரலா தில்லையோ பிரானுர். 5

செடித்தவஞ் செய்வார் சென்றுழிச் செல்லேன் தீவினை செற்றிடும் என்று, அடித்தவம் அல்லால் ஆரையும் அறியேன் ஆவதும் அறிவர்எம் அடிகள், படைத்தலைச் சூலம் பற்றிய கையர் பாச்சிலாச் சிராமத்தெம் பரமர், பிடித்தவெண் ணீறே பூசுவ தாஞல் இவரலா தில்லையோ பிரானுர். 6

---

4. பரிந்து – இரங்கி.

5. அடிமை போகுநாள் வீழுநாள் ஆகி – தொண்டு பூணும் நிலை நீங்குநாள் இறந்துபடும் நாளாகி.

கையது கபாலம் காடுறை வாழ்க்கை கட்டங்கம் ஏந்திய கையர், மெய்யது புரிநூல் மிளிரும்புன் சடைமேல் வெண்திங்கள் சூடிய விகிர்தர், பையர வல்குற் பாவையர் ஆடும் பாச்சிலாச் சிராமத்தெம் பரமர், மெய்யரே ஒத்தோர் பொய்செய்வ தாகில் இவரலா தில்லையோ பிரானார். 7

திணம்படும் உடலை நிலைமையென் றோரேன் நெஞ்சமே தஞ்சமென் றிருந்தேன், கணம்படிந் தேத்திக் கங்குலும் பகலும் கருத்தினாற் கைதொழு தெழுவேன், பணம்படும் அரவம் பற்றிய கையர் பாச்சிலாச் சிராமத்தெம் பரமர், பிணம்படு காட்டில் ஆடுவ தாகில் இவரலா தில்லையோ பிரானார். 8

குழைத்துவந் தோடிக் கூடுதி நெஞ்சே குற்றேவல் நாள்தொறுஞ் செய்வான், இழைத்தநாள் கடவார் அன்பில ரேனும் எம்பெரு மானென்றெப் போதும், அழைத்தவர்க் கருள்செய் பாச்சிலாச் சிராமத் தடிகள்தா மியாதுசொன் னாலும், பிழைத்தது பொறுத்தோன் றீகில ராகில் இவரலா தில்லையோ பிரானார். 9

துணிப்படும் உடையுஞ் சுண்ணவெண் ணீறும் தோற்றமுஞ் சிந்தித்துக் காணில், மணிப்படு கண்டனை வாயினாற் கூறி மனத்தினால் தொண்டனேன் நினைவேன், பணிப்படும் அரவம் பற்றிய கையர் பாச்சிலாச் சிராமத் தெம் பரமர், பிணிப்பட ஆண்டு பணிப்பில ராகில் இவரலா தில்லையோ பிரானார். 10

---

7. கட்டங்கம் – கட்வாங்கம்.

8. பணம் – படம்.

9. குழைத்து – உருகி.

10. துணிப்படும் உடை – துண்டமாக்கிய ஆடை. பிணிப்பட - கட்டுப்படும்படி.

ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன் அடிய வர்க் கடியனும் ஆனேன், உரிமையால் உரியேன் உள்ள மும் உருகும் ஒண்மலர்ச் சேவடி காட்டாய், அருமையாம் புகழார்க் கருள்செயும் பாச்சி லாச்சிரா மத்தெம் அடி கள், பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில் இவரலா தில்லையோ பிரானார். 11

ஏசின அல்ல இகழ்ந்தன அல்ல எம்பெரு மானென் றெப் போதும், பாயின புகழான் பாச்சிலாச் சிராமத் தடி களை அடிதொழப் பன்னாள், வாயினாற் கூறி மனத்தினால் நினைவான் வளவயல் நாவல் ஆரூரன், பேசின பேச்சைப் பொறுக்கில ராகில் இவரலா தில்லையோ பிரானார். 12

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : மாற்றறி வரதர்; அம்பிகை - பாலசுந்தரி.

வரலாறு : சுந்தரர் திருவானைக்காவைத் தரிசித்து அதன் அருகில் உள்ள தலங்களுக்குச் சென்று வழிபடுவாராகிப் பாச் சிலாச்சிராமம் அடைந்து, சிவபெருமானை வழிபட்டுப் பொருளை வேட்டு நின்றார். அதனை இறைவர் அருளாதொழியவும், தோழமை யுறவினால் முறையிடுவார்போல இப்பதிகம் பாடி னார்; சிவபிரான் விழுநிதிக்குவை அளித்தருளினார்.

---

11. ஒருமையே அல்லேன் - ஒரு பிறவியில் மாத்திரம் (அடிமை) அல்லேன்.
12. பாயின - பரவிய

திருநாட்டியத்தான்குடி

திருச்சிற்றம்பலம்

பூணாண் ஆவதோர் அரவங்கண் டஞ்சேன் புறங்காட் டாடல்கண் டிகழேன், பேணீ ராகிலும் பெருமையை உணர் வேன் பிறவே ளாகிலும் மறவேன், காணீ ராகிலுங் காண்ப னென் மனத்தால் கருதீ ராகிலுங் கருதி, நானே லும்மடி பாடுதல் ஒழியேன் நாட்டியத் தான்குடி நம்பீ. 1

கச்சேர் பாம்பொன்று கட்டிநின் றிடுகாட் டெல்லியில் ஆடலைக் கவர்வன், துச்சேன் என்மனம் புகுந்திருக் கின்றமை சொல்லாய் திப்பிய மூர்த்தீ, வைச்சேஇடர்களைக் களைந்திட வல்ல மணியே மாணிக்க வண்ணா, நச்சேன்ஒரு வரை நான்உமை அல்லால் நாட்டியத் தான்குடி நம்பீ. 2

அஞ்சா தேஉமக் காட்செய வல்லேன் யாதினுக் காசைப் படுகேன், பஞ்சேர் மெல்லடி மாமலை மங்கை பங்கா எம்பர மேட்டீ, பூஞ்சேர் வெண்மதி செஞ்சடை வைத்த மணியே மாணிக்க வண்ணா, நஞ்சேர் கண்டா வெண்டலை ஏந்தீ நாட்டியத் தான்குடி நம்பீ. 3

கல்லே னல்லேன் நின்புகழ் அடிமை கல்லா தேபல கற்றேன், நில்லே னல்லேன் நின்வழி நின்றார் தம்முடை நீதியை நினைய, வல்லே னல்லேன் பொன்னடி பரவ மாட்டேன் மறுமையை நினைய, நல்லே னல்லேன் நானுமக் கல்லால் நாட்டியத் தான்குடி நம்பீ. 4

மட்டார்பூங்குழல் மலைமகள்கணவனைக் கருதா தார் தமைக் கருதேன், ஒட்டீ ராகிலும் ஒட்டுவன் அடியேன்

---

1. பூணும் நாணும் ஆவது ஓர் அரவம்.

2. எல்லியில் - இரவில். துச்சேன் - இழிந்தவனாகிய எனது. இடர்களை வைத்துப் பின் களைந்திட வல்லவன்.

உம்அடி அடைந்தவர்க் கடிமை, பட்டேனாகிலும் பாடுதல் ஒழியேன் பாடியும்நாடியும் அறிய, நட்டேன் ஆதலால் நான்மறக் கில்லேன் நாட்டியத்தான்குடி நம்பீ. 5

படப்பாற்றன்மையில் நான்பட்டதெல்லாம் படுத்தாய் என்றல்லல் பறையேன், குடப்பாச்சில்லுறை கோக்குளிர் வானே கோனே கூற்றுதைத் தானே, மடப்பாற் றயிரொடு நெய்மகிழ்ந் தாடும் மறையோ ரிமங்கை பங்கா, நடப்பீராகி லும் நடப்பன்உம் அடிக்கே நாட்டியத்தான்குடி நம்பீ. 6

ஐவாய்அரவினை மதியுடன் வைத்த அழகா அமரர்கள் தலைவா, எய்வான் வைத்ததோர் இலக்கினை அணைதா நினைந் தேன் உள்ளமுள் ளளவும், உய்வான் எண்ணிவந் தும்மடி அடைந்தேன் உகவீராகிலும் உகப்பன், நைவானன் றுமக் காட்பட்ட தடியேன் நாட்டியத்தான்குடி நம்பீ. 7

கலியேன் மானுட வாழ்க்கையொன் றாகக் கருதிடிற் கண்கணீர் பில்கும், பலிதேர்ந் துண்பதோர் பண்புகண் டிகழேன் பசுவே ஏறிலும் பழியேன், வலியே யாகிலும் வணங்குதல்ஒழியேன் மாட்டேன் மறுமையை நினையேன், நலியேன் ஒருவரை நானுமைஅல்லால் நாட்டியத் தான்குடி நம்பீ. 8

குண்டா டிச்சமண் சாக்கியப் பேய்கள் கொண்டா ராகிலுங் கொள்ளக், கண்டா லுங்கரு தேன்எரு தேறும் கண்ணா நின்னல தறியேன், தொண்டா டித்தொழு வார் தொழக் கண்டு தொழுதேன்என்வினை போக, நண்டா டும்வயல் தண்டலை வேலி நாட்டியத்தான்குடி நம்பீ. 9

---

5. மட்டு - நறுமணம், நட்டேன் - தோழமை பூண்டேன்.
6. பறையேன் - பேசமாட்டேன். நடப்பீர் ஆகிலும் - என்னை அகன்று போவீரானாலும்.
8. கலியேன் - ஆரவாரத்தைச் செய்யேன்.
9. குண்டு ஆடி - கீழ்மை பேசி.

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி சென்னி, நாடார் தொல்புகழ் நாட்டியத்தான் குடி நம்பியை நாளும் மறவாச், சேடார் பூங்குழற் சிங்கடியப்பன் திருவாரூரன் உரைத்த, பாடலாகிலும் பாடுமின் தொண்டீர் பாடநும் பாவம்பற் றறுமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு.

சுவாமி: இரத்தினகிரி நாதர்

அம்பிகை: மலர்மங்கைநாயகி

வரலாறு: சுந்தரமூர்த்தி நாயனார் பல தலங்களையும் தரிசித்துவரும் முறையில் நாட்டியத்தான்குடி நண்ணினார்: சோழ மன்னனுடைய உரிமைச் சேனாதிபதியாக இருந்தவரும் அவ்வூரினருமாகிய கோட்புலி நாயனார், சுந்தரரை வரவேற்று உபசாரம் செய்து வழிபட்டு, தம் புதல்விமாராகிய சிங்கடியார், வனப்பகையார் என்னும் இருவரையும் வணங்கச் செய்தார். பிறகு, "அடியேன் பெற்ற மக்கள் இவர். இவர்களை அடிமையாகக் கொண்டருள வேண்டும்" என்று பணிய, நம்பியாரூரர், "இவர் எனக்குத் தூய மக்கள்" என்று ஏற்றுக் கொண்டார். பிறகு இறைவரைத் தரிசித்து இந்தப் பதிகம் பாடிக் கோட்புலியாரைச் சிறப்பித்ததோடு தம்மைச் சிங்கடியப்பனென்று ஒரு பாட்டில் வைத்தருளினார் (பெரிய. ஏயர்கோன். 33 - 42.)

---

10. கூடாமன்னர் - பகையரசர். கொடிறன் - திண்ணியன். சிங்கடி: கோட்புலி நாயனார் திருமகளார்; இவரைத் தம் மகளாக ஏற்றுக்கொண்டார் சுந்தரர்.

திருக்கலயநல்லூர்

திருச்சிற்றம்பலம்

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து, விரும்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியஊர் வினவில், அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட அணி மயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின், கரும் பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக் கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே. 1

செருமேவு சலந்தரனைப் பிளந்தசுடர் ஆழி செங்கண் மலர் பங்கயமாச் சிறந்தானுக் கருளி, இருள்மேவும் அந்தகன்மேல் திரிசூலம் பாய்ச்சி இந்திரனைத் தோள் முரித்த இறையவன்ஊர் வினவில், பெருமேதை மறை யொலியும் பேரிமுழ வொலியும் பிள்ளையினந் துள்ளிவிளை யாட்டொலியும் பெருகக், கருமேதி புனல்மண்டக் கயல் மண்டக் கமலம் களிவண்டின் கணம்இரியும் கலயநல்லூர் காணே. 2

இண்டைமலர் கொண்டுமணல் இலிங்கமது இயற்றி இனத்தாவின் பாலாட்ட இடறியதா தையைத்தாள், துண்டமிடு சண்டியடி அண்டர்தொழ தேத்தத் தொடர்ந் தவனைப் பணிகொண்ட விடங்கனதூர் வினவில், மண்டப மும் கோபுரமும் மாளிகைசூ ளிகையும் மறைஒலியும் விழவொலியும் மறுகுநிறை வெய்திக், கண்டவர்கள் மனங்கவரும் புண்டரிகப் பொய்கைக் காரிகையார் குடைந்தாடுங் கலயநல்லூர் காணே. 3

---

1. பார்வதிதேவியார் தவஞ்செய்து இறைவரை மணந்ததைக் குறித்தபடி. அருவ - அணைய. அறுபதம் - வண்டு.

2. கண்மலர் தாமரையாகத் தோன்றிச் சிறக்கும் திரு மாலுக்கு. 3. சண்டி - சண்டீச நாயனார்.

மலைமடந்தை விளையாடி வளையாடு கரத்தால் மகிழ்ந்தவள்கண் புதைத்தலுமே வல்லிருளாய் எல்லா, உலகுடன்ருன் மூடவிருள் ஓடும்வகை நெற்றி ஒற்றைக்கண் படைந்துகந்த உத்தமனூர் வினவில், அலைஅடைந்த புனல் பெருகி யானைமருப் பிடறி அகிலொடுசந் துந்திவரும் அரிசிலின்தென் கரைமேல், கலையடைந்து கலிகடியந் தணர்ஓமப் புகையால் கணமுகில்போன் றணிகிளருங் கலயநல்லூர் காணே. 4

நிற்பானும் கமலத்தில் இருப்பானும் முதலா நிறைந்தமரர் குறைந்திரப்ப நினைந்தருளி யவர்க்காய்,வெற்பார்வில் அரவுநாண் எரிஅம்பால் விரவார் புரமூன்றும் எரிவித்த விகிர்தனூர் வினவில், சொற்பால பொருட்பால சுருதிஒரு நான்கும் தோத்திரமும் பலசொல்லித் துதித்திறைதன் திறத்தே, கற்பாருங் கேட்பாரு மாயெங்கும் நன்கார் கலைபயில்அந் தணர்வாழுங் கலயநல்லூர் காணே. 5

பெற்றிமையொன் றறியாத தக்கனது வேள்விப் பெருந்தேவர் சிரந்தோள்பல் கரங்கள்பீ டழியச், செற்றுமதிக் கலைசிதையத் திருவிரலால் தேய்வித் தருள்பெருகு சிவபெருமான் சேர்தரும்ஊர் வினவில், தெற்றுகொடி முல்லையொடு மல்லிகைசெண் பகமும் திரைபொருது வருபுனல்சேர் அரிசிலின்தென் கரைமேல், கற்றினம்நல் கரும்பின்முளை கறிகற்கக் கறவை கமழ்கழுநீர் கவர்கழனிக் கலயநல்லூர் காணே. 6

---

4. சந்து - சந்தனம். கலை - சாத்திரம்.

5. நிற்பான் — உலகை அளக்க நிமிர்ந்து நின்ற திருமால். விரவார் - பகைவர். சொற்பால சுருதி ஒருநான்கும், பொருட்பால சுருதித் தோத்திரமும் எனக்கூட்டி, சொல்லமைதியால் சுருதியான நான்கு வேதமும், பொருள் வகையால் சுருதியோடொத்த தோத்திரங்களாகிய திருஞானசம்பந்தர் தேவாரம் முதலியனவும் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

6. கன்று இனம் - பசுவின் கன்றுகள். கறி கற்க - கறித்தலைக் கற்க. கறவை - கறக்கும் பசு.

இலங்கையர்கோன் சிரம்பத்தோ டிருபதுதிண்
தோளும் இற்றலற ஒற்றைவிரல் வெற்பதன்மேல் ஊன்றி,
நிலங்கிளர்நீர் நெருப்பொடுகாற் றாகாசம் ஆகி நிற்பனவும்
நடப்பனவாம் நின்மலன்ஊர் வினவில், பலங்கள்பல
திரைஉந்திப் பருமணிபொன் கொழித்துப் பாதிரிசந்
தகிலொடு கேதகையும் பருகிக், கலங்குபுனல் அலம்பி
வரும் அரிசிலின்தென் கரைமேல் கயல்உகளும்வயல்புடை
சூழ் கலயநல்லூர் காணே. 7

மாலயனுங் காண்பரிய மால்எரியாய் நிமிர்ந்தோன்
வன்னிமதி சென்னிமிசை வைத்தவன்மொய்த் தெழுந்த,
வேலைவிடம் உண்டமணி கண்டன்விடை ஊரும் விமலன்
உமை யவளோடு மேவியஊர் வினவில், சோலைமலி
குயில்கூவக் கோலமயில் ஆலச் சுரும்பொடுவண் டிசை
முரலப் பசுங்கிளிசொல் துதிக்கக், காலையிலும் மாலையிலும்
கடவுள்அடி பணிந்து கசிந்தமனத் தவர்பயிலுங் கலய
நல்லூர் காணே. 8

பொரும்பலம துடையசுரன் தாரகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினைமுன் படைத்துகந்த புனிதன்,
கரும்புவிலின் மலர்வாளிக் காமன்உடல் வேவக் கனல்
விழித்த கண்ணுதலோன் கருதும்ஊர் வினவில், இரும்
புனல்வெண் திரைபெருகி ஏலம்இலவங்கம் இருகரையும்
பொருதலைக்கும் அரிசிலின்தென் கரைமேல், கரும்புனை
வெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக் கவின்காட்
டுங் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே. 9

---

7. பலங்கள் - பழங்கள். கேதகை - தாழை; அலம்பி - ஒலித்து. உகளும் - துள்ளும்.

8. சுரும்பு, வண்டு - வெவ்வேறு வகை வண்டினம்.

9. பொருள் - பிள்ளை;' இங்கே முருகன். கரும்புன்னை. முத்தென்றது அரும்பை; பொன் என்றது பூந்தாதை; பவளம் என்றது மலரின் உட்பகுதியை.

தண்கமலப் பொய்கைபுடை சூழ்ந்தழகார் தலத்தில் தடங்கொள்பெருங் கோயில்தனில் தக்கவகை யாலே, வண்கமலத் தயன்முன்னாள் வழிபாடு செய்ய மகிழ்ந்தருளி இருந்தபரன் மருவியஊர் வினவில், வெண்கவரி கரும்பீலி வேங்கையொடு கோங்கின் விரைமலரும் விரவுபுனல் அரிசிலின்தென் கரைமேல், கண்கமுகின் பூம்பாளை மதுவாசங் கலந்த கமழ்தென்றல் புகுந்துலவு கலயநல்லூர் காணே. 10

தண்புனலும் வெண்மதியும் தாங்கியசெஞ் சடையன் தாமரையோன் தலைகலனாக் காமரமுன் பாடி, உண்பலிகொண் டுழல்பரமன் உறையுமூர் நிறைநீர் ஒழுகுபுனல் அரிசிலின்தென் கலயநல்லூர் அதனை, நண்புடைய நன்சடையன் இசைஞானி சிறுவன் நாவலர்கோன் ஆரூரன் நாவின்நயந் துரைசெய், பண்பயிலும் பத்துமிவை பத்திசெய்து பாட வல்லவர்கள் அல்லலொடு பாவமிலர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : அமிர்தகலாநாதர்; அம்பிகை : அமிர்தவல்லி.

---

11 காமரம் - ஒரு பண். சடையன் - சுந்தரமூர்த்திசுவாமிகளுடைய தந்தையார். இசைஞானி - சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய அன்னையார்.

3. பண் - நட்டராகம்

திருநாவலூர்

திருச்சிற்றம்பலம்

கோவலன் நான்முகன் வானவர் கோனுங்குற் றேவல் செய்ய, மேவலர் முப்புரம் தீயெழு வித்தவன் ஓரம்பினால், ஏவலனார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங் கொண்ட, நாவலனார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 1

தன்மையினால்அடி யேனைத்தாம் ஆட்கொண்ட நாட்சபைமுன், வன்மைகள் பேசிட வன்றொண்டன் என்பதோர் வாழ்வுதந்தார், புன்மைகள் பேசவும் பொன்னைத்தந் தென்னைப்போ கம்புணர்த்த, நன்மையினார்க் கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 2

வேகங்கொண் டோடிய வெள்விடை ஏறியோர் மெல்லியலை, ஆகங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்டார், போகங்கொண் டார்கடற் கோடியின் மோடியைப் பூண்பதாக, நாகங்கொண் டார்க் கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 3

அஞ்சுங்கொண் டாடுவர் ஆவினிற் சேவினை ஆட்சி கொண்டார், தஞ்சங்கொண் டார்அடிச் சண்டியைத் தாமென வைத்துகந்தார், நெஞ்சங்கொண் டார்வெண் ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்டு, நஞ்சங் கொண் டார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 4

---

1. கோவலன் - திருமால், மேவலர் - பகைவர்.

3. கடற்கோடி - கோடிக்கரை. மோடி - துர்க்கை. மோடியைப் போகங்கொண்டார்.

4. அஞ்சு - ஆனைந்தாகிய பஞ்ச கவ்வியம். சண்டி - சண்டேச நாயனார்.

உம்பரார் கோனைத்திண் தோள்முரித் தார்உரித் தார்களிற்றைச், செம்பொனார் தீவண்ணர் தூவண்ண நீற்றர்ஓர் ஆவணத்தால், எம்பிரா னார்வெண்ணெய் நல்லூ ரில் வைத்தெனை ஆளுங்கொண்ட, நம்பிரா னார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 5

கோட்டங்கொண் டார்குட மூக்கிலுங் கோவலுங் கோத்திட்டையும், வேட்டங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்டார், ஆட்டங்கொண் டார்தில்லைச் சிற்றம் பலத்தே அருக்கனைமுன், நாட்டங் கொண் டார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 6

தாயவ ளாய்த்தந்தை ஆகிச் சாதல் பிறத்தலின்றிப், போயக லாமைத்தன் பொன்னடிக் கென்னைப் பொருந்த வைத்த, வேயவ னார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்ட, நாயக னார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 7

வாயாடி மாமறை ஓதிஓர் வேதியன் ஆகிவந்து, நீயாடி யார்னெக் கேழலின் பின்சென்றோர் வேடுவனாய், வேயாடி யார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்ட, நாயாடி யார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 8

படமாடு பாம்பணை யானுக்கும் பாவைநல் லாள்தனக் கும், வடமாடு மால்விடை ஏற்றுக்கும் பாகனாய் வந்தொருநாள், இடமாடி யார்வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளுங்கொண்ட, நடமாடி யார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 9

---

5. தோள் முரித்தது தக்கனது யாகத்தில்.

6. கோட்டம் - கோயில். முன் - தக்க யாக சங்காரம் செய்தபோது.

9. பாகன் - கணவன், ஊர்பவன்.

மிடுக்குண்டென் றோடிஓர் வெற்பெடுத் தான்வலி யைநெரித்தார், அடக்கங்கொண் டாவணங் காட்டிநல் வெண்ணெயூர் ஆளுங்கொண்டார், தடுக்கலொண் ணாததோர் வேழத்தி னைஉரித் திட்டுமையை, நடுக்கங்கண் டார்க்கிடம் ஆவது நந்திரு நாவலூரே. 10

நாதனுக் கூர்நமக் கூர்நர சிங்க முனையரையன், ஆதரித் தீசனுக் காட்செயும் ஊர்அணி நாவலூரென், றோதநற் றக்கவன் றொண்டன் ஆரூரன் உரைத்ததமிழ், காதலித் துங்கற்றுங் கேட்பவர் தம்வினைக் கட்டறுமே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : நடுநாடு

சுவாமி : நாவலீசுவரர் ; அம்பிகை : சுந்தராம்பிகை.

வரலாறு: இறைவரால் ஆட்கொள்ளப் பெற்றவுடன் ''பித்தாபிறை சூடி'' என்ற திருப்பதிகம் பாடி, அப்பால் திருநாவலூர் சென்று தரிசித்துப் பாடிய பதிகம் இது (பெரிய. தடுத்தாட்கொண்ட. 78.)

மூப்பதும் இல்லை

திருச்சிற்றம்பலம்

மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பதில்லை, சேர்ப்பது காட்டகத் தூரினு மாகச்சிந் திக்கினல்லால், காப்பது வேள்விக் குடிதண் துருத்திஎங் கோன்அரை மேல், ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல் நாம்இவர்க் காட்படோமே. 1

11. நரசிங்கமுனையரையன் - சுந்தரமூர்த்தி சுவாமிகளை வளர்த்த மன்னர்.

1. ஆர்ப்பது - இறுக்கிக் கட்டுவது.

கட்டக்காட் டில்நடம் ஆடுவ ரியாவர்க்குங் காட்சி யொண்ணார், சுட்டவெண் ணீறணிந் தாடுவர் பாடுவர் தூயநெய்யால், வட்டக்குண் டத்தில் எரிவளர்த் தோம்பி மறைபயில்வார், அட்டக்கொண் டுண்ப தறிந்தோமேல் நாம்இவர்க் காட்படோமே. 2

பேருமோர் ஆயிரம் பேருடை யார்பெண்ணோ டாணும்அல்லர், ஊரும தொற்றியூர் மற்றையூர் பெற்றவர் நாம்அறியோம், காருங் கருங்கடல் நஞ்சமு துண்டுகண் டங்கறுத்தார்க், காரம்பாம் பாவ தறிந்தோமேல் நாம்இவர்க் காட்படோமே. 3

ஏனக்கொம் பும்மிள ஆமையும் பூண்டங்கோர் ஏறும் ஏறிக், கானக்காட் டிற்றொண்டர் கண்டன சொல்லியுங் காமுறவே, மானைத் தோல்ஒன்றை உடுத்துப் புலித்தோல் பியற்கும்இட்டு, யானைத்தோல் போர்ப்ப தறிந்தோமேல் நாம்இவர்க் காட்படோமே. 4

ஊட்டிக்கொண் டுண்பதோர் ஊணிலர் ஊரிடு பிச்சைஅல்லால், பூட்டிக்கொண் டேற்றினை ஏறுவர் ஏறியோர் பூதந்தம்பால், பாட்டிக்கொண் டுண்பவர் பாழி தொறும்பல பாம்புபற்றி, ஆட்டிக்கொண் டுண்ப தறிந்தோமேல் நாம்இவர்க் காட்படோமே. 5

குறவனார் தம்மகள் தம்மக னார்மண வாட்டிகொல்லை, மறவனா ராய்அங்கோர் பன்றிப்பின் போவது மாயங் கண்டீர், இறைவனார் ஆதியார் சோதிய ராயங்கோர் சோர்வுபடா, அறவனார் ஆவ தறிந்தோமேல் நாம்இவர்க் காட்படோமே. 6

---

2. அட்டக்கொண்டு - பிச்சையிட அதனைக் கொண்டு.

4. பியற்கு – பின்பக்கத்தில்; பியல் – பிடரி.

5. பிச்சை அல்லால் ஊண் இலர். பாட்டிக்கொண்டு – பாடச்செய்துகொண்டு. பாழி - குகை.

6. குறவர் மகள் சிவபிரானுடைய குமாரராகிய முருகவேளுக்கு மனைவி.

பித்தரை ஒத்தொரு பெற்றியர் நற்றவை என்னைப் பெற்ற, முற்றவை தம்மனை தந்தைக்குந் தவ்வைக்குந் தம்பிரானூர், செத்தவர் தந்தலை யிற்பலி கொள்வதே செல்வமாகில், அத்தவம் ஆவ தறிந்தோமேல் நாம்இவர்க் காட்படோமே. 7

உம்பரான் ஊழியான் ஆழியான் ஓங்கி மலர் உறைவான், தம்பரம் அல்லவர் சிந்திப் பவர்தடு மாற் றறுப்பார், எம்பரம் அல்லவர் என்னெஞ்சத் துள்ளும் இருப்பதாகில், அம்பரம் ஆவ தறிந்தோமேல் நாம்இவர்க் காட்படோமே. 8

இந்திர னுக்கும் இராவண னுக்கும் அருள்புரிந்தார், மந்திரம் ஓதுவர் மாமறை பாடுவர் மான்மறியர், சிந்துரக் கண்ணனும் நான்முக னும்முட னாய்த்தனியே, அந்தரஞ் செல்வ தறிந்தோமேல் நாம்இவர்க் காட்படோமே. 9

கூடலர் மன்னன் குலநாவ லூர்க்கோன் நலத் தமிழைப், பாடவல் லபர மன்அடி யார்க்கடி மைவழுவா, நாடவல் லதொண்டன் ஆரூரன் ஆட்படு மாறுசொல்லிப், பாடவல் லார்பர லோகத் திருப்பது பண்டமன்றே. 10

திருச்சிற்றம்பலம்

திருநின்றியூர்

திருச்சிற்றம்பலம்

அற்றவ னார்அடி யார்தமக் காயிழை பங்கினராம், பற்றவ னார்எம் பராபரர் என்று பலர்விரும்பும், கொற்றவ னார்குறு காதவர் ஊர்நெடு வெஞ்சரத்தால், செற்றவ னார்க்கிடம் ஆவது நந்திரு நின்றியூரே. 1

---

7. நற்றவை – நல்ல அன்னை. தவ்வை - தாய்.
9. சிந்துரக் கண்ணன் – திருமால்.

வாசத்தி ஞர்மலர்க் கொன்றையுள் ளார்வடி வார்ந்த நீறு, பூசத்தி ஞர்புக லிந்நகர் போற்றும்எம் புண்ணி யத்தார், நேசத்தி ஞல்என்னை ஆண்டுகொண் டார்நெடு மாகடல்சூழ், தேசத்தி ஞர்க்கிடம் ஆவது நந்திரு நின்றி யூரே. 2

அங்கையின் மூவிலை வேலர் அமரர் அடிபரவச், சங்கையை நீங்க அருளித் தடங்கடல் நஞ்சம்உண்டார், மங்கையொர் பாகர் மகிழ்ந்த இடம்வளம் மல்குபுனற், செங் கயல் பாயும் வயல்பொலி யுந்திரு நின்றியூரே. 3

ஆறுகந் தார்அங்கம் நான்மறை யார்எங்கும் ஆகி அடல், ஏறுகந் தார்இசை ஏழுகந் தார்முடிக் கங்கைதன்னை, வேறுகந் தார்விரி நூல்உகந் தார்பரி சாந்தமதா, நீறுகந் தார்உறை யும்மிட மாம்திரு நின்றியூரே. 4

வஞ்சங்கொண் டார்மனஞ் சேரகில் லார்நறு நெய் தயிர்பால், அஞ்சுங்கொண் டாடிய வேட்கையி ஞல்அதி கைப்பதியே, தஞ்சங்கொண் டார்தமக் கென்றும் இருக்கை சரண்அடைந்தார், நெஞ்சங்கொண் டார்க்கிடம் ஆவது நந்திரு நின்றியூரே. 5

ஆர்த்தவர் ஆடர வம்அரை மேற்புலி ஈர்உரிவை, போர்த்தவர் ஆனையின் தோல்உடல் வெம்புலால் கையகலப், பார்த்தவர் இன்னுயிர் பார்படைத் தான்சிரம் அஞ்சில்ஒன்றைச், சேர்த்தவ ருக்குறை யும்மிட மாந்திரு நின்றியூரே. 6

---

2. பூசத்திஞர் – பூசுதலை உடையவர்.

3. மூவிலை வேல் - திரிசூலம்.

4. இசைஏழு – சப்தஸ்வரம். சாந்தமதா - பூசுகின்ற சந்தனமாக.

6. புலி ஈர் உரிவை – புலியை உரித்த தோலை.

தலையிடை யார்பலி சென்றகந் தோறுந் திரிந்தசெல்
வர், மலையுடை யாள்ஒரு பாகம்வைத் தார்கற் றுதைந்த
நன்னீர், அலையுடையார்சடை எட்டுஞ் சுழல அருநடஞ்
செய், நிலையுடை யார்உறை யும்மிட மாந்திரு நின்றியூரே.

எட்டுகந் தார்திசை ஏழுகந் தார்எழுத் தாறும்அன்
பர், இட்டுகந் தார்மலர்ப் பூசைஇச் சிக்கும் இறைவர்
முன்னாள், பட்டுகும் பாரிடைக் காலனைக் காய்ந்து பலி
யிரந்தூண், சிட்டுகந் தார்க்கிடம் ஆவது நந்திரு நின்றியூரே.

காலமும் ஞாயிறும் ஆகிநின் றார்கழல் பேணவல்லார்,
சீலமுஞ் செய்கையுங் கண்டுகப் பார்அடி போற்றிசைப்ப,
மாலொடு நான்முகன் இந்திரன் மந்திரத் தால்வணங்க,
நீலநஞ் சுண்டவ ருக்கிட மாந்திரு நின்றியூரே. 9

வாயார் மனத்தால் நினைக்கும் அவருக் கருந்தவத்
தில், தூயார் சுடுபொடி ஆடிய மேனியர் வானில்என்றும்,
மேயார் விடைஉகந் தேறிய வித்தகர் பேர்ந்தவர்க்குச்,
சேயார் அடியார்க் கணியவர் ஊர்திரு நின்றியூரே. 10

சேரும் புகழ்த்தொண்டர் செய்கை அறாத்திரு நின்றி
யூரிற், சீருஞ் சிவகதி யாயிருந் தானைத் திருநாவலா,
ரூரன் உரைத்த உறுதமிழ் பத்தும்வல் லார்வினைபோய்ப்,
பாரும் விசும்புந் தொழப்பர மன்னடி கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி: மகாலட்சுமிநாதர்; அம்பிகை: உலகநாயகி.

---

8. எழுத்து ஏழு உகந்தார் - ஏழிசைக்குரிய எழுத்துக்கள் ஏழை விரும்பினார். அன்பர் பூசை ஆறும் இச்சிக்கும் - அன்பர்களது ஆறுகால பூசையையும் விரும்பும்; "பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து" (திருவிளையாடல்.)

10. பேர்ந்தவர்க்கு - தம்மை நினையாமல் அகன்றவருக்கு. சேயார் - தூரத்தில் நிற்பவர்.

திருக்கோளிலி

திருச்சிற்றம்பலம்

நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன், வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே, கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன், ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே. 1

வண்டம ருங்குழலாள் உமை நங்கையோர் பங்குடையாய் விண்டவர் தம்புரமூன் றெரி செய்தஎம் வேதியனே தெண்திரை நீர்வயல்சூழ் திருக் கோளிலி எம்பெருமான் அண்டம தாயவனே அவை அட்டித் தரப்பணியே. 2

பாதியோர் பெண்ணைவைத்தாய் படருஞ்சடைக் கங்கைவைத்தாய், மாதர்நல் லார்வருத்தம் அது நீயும் அறிதியன்றே, கோதில் பொழில்புடைசூழ் குண்டை யூர்ச் சில நெல்லுப் பெற்றேன், ஆதியே அற்புதனே அவை அட்டித் தரப்பணியே. 3

சொல்லுவ தென்னுனைநான் தொண்டை வாயுமை நங்கையைநீ, புல்கி இடத்தில்வைத்தாய்க் கொரு பூசல் செய் தார்உளரோ, கொல்லை வளம்புறவிற் குண்டை யூர்ச் சில நெல்லுப்பெற்றேன்; அல்லல் களைந்தடியேற் கவை அட்டித் தரப்பணியே. 4

முல்லை முறுவல்உமை ஒரு பங்குடை முக்கணனே பல்உயர் வெண்டலையிற் பலி கொண்டுழல் பாசுபதா கொல்லை வளம்புறவில் திருக் கோளிலி எம்பெருமான் அல்லல் களைந்தடியேற் கவை அட்டித் தரப்பணியே. 5

---

1. அவள் என்றது பரவை நாச்சியாரை. அட்டித்தர - கொண்டுவந்து சேர்க்க.

குரவமரும்குழலாள் உமை நங்கையோர் பங்குடையாய், பரவை பசிவருத்தம் அது நீயும் அறிதியன்றே, குரவமரும்பொழில்சூழ் குண்டையூர்ச்சில நெல்லுப் பெற்றேன், அரவம் அசைத்தவனே அவை அட்டித் தரப் பணியே. 6

எம்பெருமான்நினையே நினைந்தேத்துவன் எப்பொழுதும், வம்பமரும்குழலாள் ஒரு பாகம் அமர்ந்தவனே, செம்பொனின் மாளிகைசூழ் திருக் கோளிலி எம்பெருமான், அன்பது வாயடியேற்கவை அட்டித் தரப் பணியே. 7

அரக்கன் முடிகரங்கள் அடர்த் திட்டஎம் ஆதிப்பிரான், பரக்கும் அரவல்குலாள் பரவையவள் வாடுகின்றாள், குரக்கினங் கள்குதிகொள் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன், இரக்கமதாயடியேற் கவை அட்டித் தரப் பணியே. 8

பண்டைய மால்பிரமன் பறந் தும்இடந் தும் அயர்ந்தும், கண்டில ராமவர்கள் கழல் காண்பரிதாயபிரான், தெண்திரை நீர்வயல்சூழ் திருக் கோளிலி எம்பெருமான், அண்டமதாயவனே அவை அட்டித் தரப்பணியே. 9

கொல்லை வளம்புறவில் திருக் கோளிலி மேயவனை, நல்லவர் தாம்பரவுந் திரு நாவலவூரனவன், நெல்லிட

---

6. குரவு – ஒரு மலர், வாசனை.

7. வம்பு – நறுமணம்.

9. மால் இடந்தும் பிரமன் பறந்தும் என எதிர்நிரல் நிறையாகக் கூட்டுக.

10. கொல்லை வளம் புறவில் - முல்லை நிலமாகிய வளப்பமுடைய காட்டையுடைய.

ஆட்கள்வேண்டி நினைந் தேத்திய பத்தும்வல்லார், அல்லல் களைந்துலகின் அண்டர் வானுலக காள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு

சுவாமி: கோளிலிநாதர்; அம்பிகை: வண்டமர்பூங்குழலி.

வரலாறு: குண்டையூரிலிருந்த வேளாண் செல்வராகிய குண்டையூர் கிழார் ஆளுடைய நம்பியாரிடம் அளவற்ற அன்புடையாராய் அவருக்கு வேண்டிய செந்நெல் பருப்பு முதலியவற்றை அனுப்பி வந்தார் மழையின்றி வளம் பொய்த்துப் பஞ்சம் வரவே, அவ்வாறு செய்ய முடியாமல் அவர் வருந்த, சிவபெருமான் குவியல் குவியலாக அவர்பால் நெல் நிரம்பும்படி அருள் செய்தார். குண்டையூர் கிழார், பெருமானது திருவருளை வியந்து தொழுது சுந்தரருக்குச் செய்தியைக் கூறி, அந்நெல்லை எடுத்துச் செல்லப் பலபல ஆட்கள் வேண்டுமே என்றார் உடனே நம்பியாரூரர் திருக்கோளிலிக்கு வந்து இத் திருப்பதிகத்தைப் பாடவே, சிவபெருமான் ஓர் இரவில் தம் பூத கணங்களைக் கொண்டு அத்தனை நெல்லையும் பரவையார் திருமாளிகையில் சேர்க்கச் செய்தருளினார் (பெரிய. ஏயர் கோன். 10–22.)

திருக்கச்சிமேற்றளி

திருச்சிற்றம்பலம்

நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன், வந்தாய் போயறியாய் மனமே புகுந்துநின்ற, சிந்தாய் எந்தைபிரான் திருமேற் றளிஉறையும், எந்தாய் உன்னைஅல்லால் இனிஏத்த மாட்டேனே. 1

ஆட்டான் பட்டமையால் அடியார்க்குத் தொண்டுபட்டுக், கேட்டேன் கேட்பதெல்லாம் பிறவாமை கேட்டொழிந்தேன், சேட்டார் மாளிகைசூழ் திருமேற் றளியுறையும், மாட்டே உன்னையல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. 2

---

1. நொந்தா - தூண்டாத. நுனையே - உன்னையே. சிந்தாய் - சிந்தையாகியிருப்பவனே. 2. சேடு - பெருமை.

மோறாந் தோரொருகால் நினையா திருந்தாலும், வேறா
வந்தென்னுள்ளம் புகவல்ல மெய்ப்பொருளே, சேறார் தண்
கழனித் திருமேற் றளிஉறையும், ஏறே உன்னையல்லால்
இனியேத்த மாட்டேனே. 3

உற்றார் சுற்றமெனும் அதுவிட்டு நுன் அடைந்தேன்,
எற்றால் என்குறைவென் இடரைத் துறந்தொழிந்தேன்,
செற்றாய் மும்மதிலுந் திருமேற் றளிஉறையும், பற்றே
நுன்னை அல்லால் பணிந்தேத்த மாட்டேனே. 4

எம்மான் எம்மனையென் றவரிட் டிறந்தொழிந்தார்,
மெய்ம்மால் ஆயினதீர்த் தருள்செய்யும் மெய்ப்பொருளே,
கைம்மா வீருரியாய் கனமேற் றளியுறையும், பெம்மான்
உன்னையல்லால் பெரிதேத்த மாட்டேனே. 5

நானேல் உன்னடியே நினைந்தேன் நினைதலுமே,
ஊனேர் இவ்வுடலம் புகுந்தாயென் ஒண்சுடரே, தேனே
இன்னமுதே திருமேற் றளியுறையும், கோனே உன்னை
யல்லால் குளிர்ந்தேத்த மாட்டேனே. 6

கையார் வெஞ்சிலைநா ணதன்மேற் சரங்கோத்தே,
எய்தாய் மும்மதிலும் எரிஉண்ண எம்பெருமான், செய்
தாய் பைங்கமலத் திருமேற் றளியுறையும், ஐயா உன்னை
யல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 7

விரையார் கொன்றையினாய் விமலாஇனி உன்னையல்
லால், உரையேன் ஆவதனால் உடலில்லுயிர் உள்ளளவும்,
திரையார் தண்கழனித் திருமேற் றளியுறையும், அரையா
உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 8

நிலையாய் நின்னடியே நினைந்தேன் நினைதலுமே,
தலைவா நின்நினையப் பணித்தாய் சலமொழிந்தேன், சிலை
யார் மாமதில்சூழ் திருமேற் றளியுறையும், மலையே உன்னை
யல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. 9

---

3. மோறாந்து - செருக்குற்று.
5. எம்மான் - எம் தந்தை. எம் அனை - எம் தாய். இட்டு -
என்னை இவ்வுலகில் விட்டு. மால் - மயக்கம்.
9. சலம் - தீய செயல்.

பாரூர் பல்லவனூர் மதிற்காஞ்சி மாநகர்வாய்ச், சீரூ ரும்புறவில் திருமேற் றளிச்சிவனை, ஆரூ ரன்னடியான் அடித்தொண்டன்ஆ ரூரன்சொன்ன; சீரூர் பாடல்வல்லார் சிவலோகஞ் சேர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: தொண்டை நாடு

சுவாமி : திருமேற்றளி நாயகர்

அம்பிகை : காமாட்சி அம்மை

திருப்பழமண்ணிப்படிக்கரை

திருச்சிற்றம்பலம்

முன்னவன் எங்கள்பிரான் முதல் காண்பரி தாய பிரான், சென்னியில் எங்கள்பிரான் திரு நீல மிடற்றெம்பி ரான், மன்னிய எங்கள்பிரான் மறை நான்குங்கல் லால்கீழ்ப், பன்னிய எங்கள்பிரான் பழ மண்ணிப் படிக்கரையே. 1

அண்டக பாலஞ்சென்னி அடி மேல்அலர் இட்டுநல்ல, தொண்டங் கடிபரவித் தொழு தேத்திநின் றாடும்இடம், வெண்டிங்கள் வெண்மழுவன் விரை யார்கதிர் மூவிலைய, பண்டங்கன் மேயவிடம் பழ மண்ணிப் படிக்கரையே. 2

ஆடுமின் அன்புடையீர் அடிக் காட்பட்ட தூளி கொண்டு, சூடுமின் தொண்டருள்ளீர் உம ரோடெமர் சூழவந்து, வாடும்இவ் வாழ்க்கைதன்னை வருந் தாமல் திருந்தச்சென்று, பாடுமின் பத்தருள்ளீர் பழ மண்ணிப் படிக்கரையே. 3

---

2. தொண்டு - தொண்டர்.

அடுதலை யேபுரிந்தான் அவை அந்தர மூவெயிலும்,
கெடுதலை யேபுரிந்தான் கிள ருஞ்சிலை நாணியிற்கோல்,
நடுதலை யேபுரிந்தான் நரி கான்றிட்ட எச்சில்வெள்ளைப்,
படுதலை யேபுரிந்தான் பழ மண்ணிப் படிக்கரையே. 4

உங்கைக ளாற்கூப்பி உகந் தேத்தித் தொழுமின்
தொண்டர், மங்கையொர் கூறுடையான் வா னோர்முத
லாயபிரான், அங்கையில் வெண்மழுவன் அலை யார்கதிர்
மூவிலைய, பங்கய பாதனிடம் பழ மண்ணிப் படிக்
கரையே. 5

செடிபடத் தீவிளைத்தான் சிலை யார்மதிற் செம்
புனஞ்சேர், கொடிபடு மூரிவெள்ளை எரு தேற்றையும்
ஏறக்கொண்டான், கடியவன் காலன்தனைக் கறுத்
தான்கழற் செம்பவளப், படியவன் பாசுபதன் பழ மண்
ணிப் படிக்கரையே. 6

கடுத்தவன் தேர்கொண்டோடிக் கயி லாயநன்
மாமலையை, எடுத்தவன் ஈரைந்துவாய் அரக் கன்முடி
பத்தலற, விடுத்தவன் கைநரம்பால் வேத கீதங்கள் பாட
லுறப், படுத்தவன் பால்வெண்ணீற்றன் பழ மண்ணிப்
படிக்கரையே. 7

திரிவன மும்மதிலும் எரித் தான்இமை யோர்
பெருமான், அரியவன் அட்டபுட்பம் அவை கொண்டடி
போற்றிநல்ல, கரியவன் நான்முகனும் அடி யும்முடி
காண்பரிய, பரியவன் பாசுபதன் பழ மண்ணிப் படிக்
கரையே. 8

---

4. கோல் - அம்பு. நரியும் உண்ண இயலாதென்று ஒதுக்கிய தசையொழிந்த வெண்டலையை.

6. செடிபட - பரவ. கொடிபடும் - கொடியிலே அமைந்த. மூரி - வலிமை. கறுத்தான் - கோபித்தான். படி - உருவம்.

7. கடுத்த - வேகமாகச் சென்ற. பாடலுற விடுத்தவன்.

வெற்றரைக் கற்றமணும் விரை யாதுவிண் டாலம் உண்ணும், துற்றரைத் துற்றறுப்பான் துன்ன ஆடைத் தொழிலுடையீர், பெற்றரைப் பித்தரென்று கருதேன் மின் படிக்கரையுள், பற்றரைப் பற்றிநின்று பழி பாவங்கள் தீர்மின்களே. 9

பல்லுயிர் வாழுந்தெண்ணீர்ப் பழமண்ணிப் படிக் கரையை, அல்லியந் தாமரைத்தார் ஆரூரன் உரைத்த தமிழ், சொல்லுதல் கேட்டல்வல்லார் அவர்க் குந்தமர்க் குங்கிளைக்கும், எல்லியும் நன்பகலும் இடர் கூருதல் இல்லையன்றே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : நீலகண்டர் ; அம்பிகை : அமிர்தகரவல்லி.

திருக்கழிப்பாலை

திருச்சிற்றம்பலம்

செடியேன் தீவினையில் தடுமாறக் கண்டாலும்
அடியான் ஆவஎன்று தொழிதல் தகவாமே
முடிமேல் மாமதியும் அரவும் உடன்துயிலும்
படிவே தாம்உடையார் மகிழுங்கழிப் பாலையதே. 1

எங்கே னும்இருந்துன் அடியேன் உனைநினைந்தால்
அங்கே வந்தென்னொடும் உடனாகி நின்றருளி
இங்கே என்வினையை அறுத்திட் டெனையாளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே. 2

---

9. வெறு அரை - ஆடையற்ற இடையையுடைய. கன்று அமணும் - கன்றைப்போல அநுபவம் அற்ற அமணர் கூட்டம். விரையாது - இறைவரைத் தொழ விரைந்து செல் லாது. துற்றரை - உணவாக உள்ளவரை. துன்ன ஆடை - தையலையுடைய உடை. பெற்றரை - இடபவாகனம் உடை யவரை ; பெற்றம் - இடபம்.

10. தாமரைத் தார் அந்தணருக்குரியது. எல்லி - இரவு.

ஒறுத்தாய் நின்னருளில் அடியேன் பிழைத்தனகள்
பொறுத்தாய் எத்தனையும் நாயேனைப் பொருட்படுத்துச்
செறுத்தாய் வேலைவிடம் மறியாமல் உண்டுகண்டம்
கறுத்தாய் தண்கழனிக் கழிப்பாலை மேயானே. 3

சுரும்பார் விண்டமலர் அவைதூவித் தூங்குகண்ணீர்
அரும்பா நிற்குமனத் தடியாரொடும் அன்புசெய்வன்
விரும்பேன் உன்னையல்லால் ஒருதெய்வம் என்மனத்தால்
கரும்பா ருங்கழனிக் கழிப்பாலை மேயானே. 4

ஒழிப்பாய் என்வினையை உகப்பாய் முனிந்தருளித்
தெழிப்பாய் மோதுவிப்பாய் விலையா வணம்உடையாய்
கழிப்பால் கண்டடங்கச் சுழியேந்து மாமறுகிற்
கழிப்பா லைமருவுங் கனல்ஏந்து கையானே. 5

ஆர்த்தாய் ஆடரவை அரையார் புலிஅதள்மேற்
போர்த்தாய் ஆனையின்தோல் உரிவை புலால்நாறக்
காத்தாய் தொண்டுசெய்வார் வினைகள் அவைபோகப்
பார்த்தா னுக்கிடமாம் பழியில்கழிப் பாலையதே. 6

பருத்தாள் வன்பகட்டைப் படமாகமுன் பற்றிஅதள்
உரித்தாய் ஆனையின்தோல் உலகந்தொழும் உத்தமனே
எரித்தாய் முப்புரமும் இமையோர்கள் இடர்கடியும்
கருத்தா தண்கழனிக் கழிப்பாலை மேயானே. 7

படைத்தாய் ஞாலமெலாம் படர்புன்சடை எம்பரமா
உடைத்தாய் வேள்விதனை உமையாளையோர் கூறுடையாய்
அடர்த்தாய் வல்லரக்கன் தலைபத்தொடு தோள்நெரியக்
கடற்சா ருங்கழனிக் கழிப்பாலை மேயானே. 8

---

3. பிழைத்தனகள் - செய்த குற்றங்களை. மறியாமல் - மாட்டேன் என்று மறுக்காமல்.
4. விண்ட - மலரச் செய்த.
6. புலி அதள் - புலித்தோல்.
7. பருதாள் - பருமையான தாளை உடைய. பகட்டை - யானையை. படம் ஆக – ஆடை ஆகும்படி ; படம் . துணி.
8. உடைத்தாய் - அழித்தாய்.

பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெரியும் விளக்கேயொத்த தேவர்பிரான்
செய்யா னுங்கரிய நிறத்தானுந் தெரிவரியான்
மையார் கண்ணியொடு மகிழ்வான்கழிப் பாலையதே. 9

பழிசே ரில்புகழான் பரமன் பரமேட்டி
கழியார் செல்வமல்குங் கழிப்பாலை மேயானைத்
தொழுவான் நாவலர்கோன் ஆரூரன் உரைத்ததமிழ்
வழுவா மாலைவல்லார் வானோருல காள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : பால்வண்ணநாதர் ; அம்பிகை : வேதநாயகி.

திருமழபாடி

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து, மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே, மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே, அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 1

கீளார் கோவணமுந் திருநீறுமெய் பூசியுன்றன், தாளே வந்தடைந்தேன் தலைவாவெனை ஏன்றுகொள்நீ, வாளார் கண்ணிபங்கா மழபாடியுள் மாணிக்கமே, ஆளாய் நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 2

எம்மான் எம்மனையென் றனக்கெட்டனைச் சார்வாகார், இம்மா யப்பிறவி பிறந் தேஇறந் தெய்த்

---

10. சேரில் – சேர்தல் இல்லாத.

1. அரைக்கு அசைத்து – இடையிலே கட்டி. நினைக்கேன் – நினைப்பேன்.

2. கீள் – கிழித்த துணி.

தொழிந்தேன், மைம்மாம் பூம்பொழில்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே, அம்மான் நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 3

பண்டே நின்னடியேன் அடி யாரடி யார்கட்கெல்லாம், தொண்டே பூண்டொழிந்தேன் தொட ராமைத் துரிசறுத்தேன், வண்டார் பூம்பொழில்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே, அண்டா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 4

கண்ணாய் ஏழுலகுங் கருத் தாய அருத்தமுமாய்ப், பண்ணார் இன்றமிழாய்ப் பர மாய பரஞ்சுடரே, மண்ணார் பூம்பொழில்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே, அண்ணா நின்னை யல்லால் இனி யாரை நினைக்கேனே. 5

நாளார் வந்தணுகி நலி யாமுனம் நின்றனக்கே, ஆளா வந்தடைந்தேன் அடி யேனையும் என்றுகொள்நீ, மாளா நாளருளும் மழ பாடியுள் மாணிக்கமே, ஆளா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 6

சந்தா ருங்குழையாய் சடை மேற்பிறை தாங்கிநல்ல, வெந்தார் வெண்பொடியாய் விடை ஏறிய வித்தகனே, மைந்தார் சோலைகள்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே, எந்தாய் நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 7

வெய்ய விரிசுடரோன் மிகு தேவர் கணங்களெல்லாம், செய்ய மலர்கள்இட மிகு செம்மையுள் நின்றவனே, மையார் பூம்பொழில்சூழ் மழ பாடியுள் மாணிக்கமே, ஐயா நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே. 8

நெறியே நின்மலனே நெடு மால்அயன் போற்றி செய்யும், குறியே நீர்மையனே கொடி யேரிடை

---

3. எம்மான் எம் அனை — எம் தந்தை தாய். எள்தனை — எள்ளளவும். சார்வு — பற்றுக்கோடு.

4. துரிசு தொடராமல் அறுத்தேன்.

6. நாளார் — நாளைப் பார்த்து நிற்கும் காலன்.

யாள் தலைவா, மறிசேர் அங்கையனே மழ பாடியுள் மாணிக்கமே, அறிவே நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே. 9

ஏரார் முப்புரமும் எரி யச்சிலை தொட்டவனை, வாரார் கொங்கையுடன் மழ பாடியுள் மேயவனைச், சீரார் நாவலர் கோன் ஆ ரூரன் உரைத்ததமிழ், பாரோர் ஏத்தவல்லார் பர லோகத் திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : வச்சிரத்தம்பநாதர் ; அம்பிகை : அழகம்மை.

வரலாறு : சுந்தரமூர்த்தி சுவாமிகள் பல தலங்களையும் தரிசிப்பாராகித் திருவாலம்பொழிலுக்கு வந்து தரிசித்துத் தங்கி இரவில் துயில் கொள்கையில், சிவபிரான் கனவில் எழுந்தருளி, "மழபாடியினில் வருவதற்கு நினைக்க மறந்தாயோ" என்று அருள, எழுந்து திருமழபாடி அடைந்து தரிசித்து இப்பதிகத்தைப் பாடியருளினார் (பெரிய. ஏயர் கோன். 71-74.)

திருமுதுகுன்றம்

திருச்சிற்றம்பலம்

பொன்செய்த மேனியினீர் புலித் தோலை அரைக் கசைத்தீர், முன்செய்த மூவெயிலும் எரித் தீர்முது குன்றமர்ந்தீர், மின்செய்த நுண்ணிடையாள் பர வையிவள் தன்முகப்பே, என்செய்த வாறடிகேள் அடி யேன்இட் டளங்கெடவே. 1

உம்பரும் வானவரும் உட னேநிற்க வேஎனக்குச், செம்பொனைத் தந்தருளித் திக ழும்முது குன்றமர்ந்தீர், வம்பம ருங்குழலாள் பர வைஇவள் வாடுகின்றாள், எம் பெரு மான்அருளீர் அடி யேன்இட் டளங்கெடவே. 2

---

9. கொடி ஏர் இடையாள் - கொடியைப் போன்ற இடையையுடைய அம்பிகை. மறி - மான்.

1. முகப்பு - முன்னிலையில். இட்டளம் - வருத்தம்.

2. வம்பு - நறுமணம்.

பத்தா பத்தர்களுக் கருள் செய்யும் பரம்பரனே,
முத்தா முக்கணனே முது குன்றம் அமர்ந்தவனே,
மைத்தா ருந்தடங்கண் பர வைஇவள் வாடாமே, அத்தா
தந்தருளாய் அடி யேன்இட் டளங்கெடவே. 3

மங்கையோர் கூறமர்ந்தீர் மறை நான்கும் விரித்துகந்
தீர், திங்கள் சடைக்கணிந்தீர் திக ழும்முது குன்றமர்ந்தீர்,
கொங்கைநல் லாள்பரவை குணங் கொண்டிருந் தாள்
முகப்பே, அங்கண னேயருளாய் அடி யேன்இட் டளங்
கெடவே. 4

மையா ரும்மிடற்றாய் மரு வார்புரம் மூன்றெரித்த,
செய்யார் மேனியனே திக ழும்முது குன்றமர்ந்தாய்,
பையா ரும்அரவே ரல்கு லாள்இவள் வாடுகின்றாள், ஐயா
தந்தருளாய் அடி யேன்இட் டளங்கெடவே. 5

நெடியான் நான்முகனும் இர வியொடும் இந்திரனும்,
முடியால் வந்திறைஞ்ச முது குன்றம் அமர்ந்தவனே,
படியா ரும்மியலாள் பர வைஇவள் தன்முகப்பே, அடி
கேள் தந்தருளீர் அடி யேன்இட் டளங்கெடவே. 6

கொந்தண வும்பொழில்சூழ் குளிர் மாமதில் மாளிகை
மேல், வந்தண வும்மதிசேர் சடை மாமுது குன்றுடை
யாய், பந்தண வும்விரலாள் பர வைஇவள் தன்முகப்பே,
அந்தண னேயருளாய் அடி யேன்இட் டளங்கெடவே. 7

பரசா ருங்கரவா பதி னெண்கண முஞ்சூழ, முரசார்
வந்ததிர முது குன்றம் அமர்ந்தவனே, விரைசே ருங்குழ
லாள் பர வைஇவள் தன்முகப்பே, அரசே தந்தருளாய்
அடி யேன்இட் டளங்கெடவே. 8

---

6 படி ஆரும் இயலாள் - பூமியைப்போன்ற பொறையுடையாள்; அழகுடையாருக்கெல்லாம் உவமமாக நிற்கும் இயல்புடையாள் எனலும் ஆம். 7. கொந்து — பூங்கொத்து.

8. பரசு ஆரும் கரவா - மழுவைக்கொண்ட திருக்கரத்தை உடையவனே.

ஏத்தா திருந்தறியேன் இமையோர்தனி நாயகனே, மூத்தாய் உலகுக்கெல்லாம் முதுகுன்றம் அமர்ந்தவனே, பூத்தாருங்குழலாள் பரவைஇவள் தன்முகப்பே, கூத்தா தந்தருளாய் கொடியேன்இட் டளங்கெடவே. 9

பிறையாருஞ்சடைஎம் பெருமான்அரு ளாய்என்று முறையால் வந்தமரர் வணங்கும்முது குன்றர்தம்மை மறையார் தங்குரிசில் வயல் நாவலா ரூரன் சொன்ன இறையார் பாடல்வல்லார்க் கெளி தாஞ்சிவ லோகமதே.

திருச்சிற்றம்பலம்

நாடு: நடுநாடு.

சுவாமி : பழமலைநாதர்; அம்பிகை : பெரியநாயகி.

வரலாறு : திருமுதுகுன்றில் இறைவர் திருவருளால்பெற்ற பொன்னை அத்தலத்தில் திருமணி முத்தாற்றில் இட்டு, அப்பால் திருவாரூருக்கு வந்து பரவையாருடன் சென்று திருக்குளத்தில் தேடும்போது, அப்பொன் முதலில் கிடைக்கவில்லை. முன்னே முதுகுன்றில் வேண்டிக்கொண்டபடி கிடைக்கவில்லையே என்ற வருத்தத்தோடு இந்தப் பதிகத்தைத் தொடங்கி எட்டுப் பாடல் பாடியருளவும், பொன் கிடைக்கவில்லை. அப்பால் மிக வருந்தி, "ஏத்தா திருந்தறியேன்" என்ற திருப்பாடலை அருளவும், சிவபெருமான் திருவருளால் பொன் திரள் கிடைத்தது (பெரிய. ஏயர்கோன். 127-135.)

திருக்காளத்தி

திருச்சிற்றம்பலம்

செண்டா டும்விடையாய் சிவ னேஎன் செழுஞ்சுடரே, வண்டாருங்குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே, கண்டார் காதலிக்குங் கண நாதன் எங் காளத்தியாய், அண்டா உன்னை அல்லால் அறிந் தேத்த மாட்டேனே. 1

---

10. இறை – தலைமை.

1. செண்டு – பந்து. குதிரையின்மேல் ஏறிப் பந்தாடுதல் பண்டை விளையாட்டுள் ஒன்று. கணநாதன் – திருக்காளத்தியப்பருடைய திருநாமங்களுள் ஒன்று.

இமையோர் நாயகனே இறை வாவென் இடர்த் துணையே, கமையார் கருணையினாய் கரு மாமுகில் போல் மிடற்றாய், உமையோர் கூறுடையாய் உரு வேதிருக் காளத்தியுள், அமைவே உன்னையல்லால் அறிந் தேத்த மாட்டேனே. 2

படையார் வெண்மழுவா பக லோன்பல் உகுத்த வனே, விடையார் வேதியனே விளங் குங்குழைக் காது டையாய், கடையார் மாளிகைசூழ் கண நாதன்எங் காளத் தியாய், உடையாய் உன்னையல்லால் உகந் தேத்த மாட் டேனே. 3

மறிசேர் கையினனே மத மாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குரு வேஉன்குற் றேவல்செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக் குந்திருக் காளத்தியுள்
அறிவே உன்னையல்லால் அறிந் தேத்த மாட்டேனே. 4

செஞ்சேல் அன்னகண்ணார் திறத் தேகிடந் துற்றலறி
நஞ்சேன் நான்அடியேன் நலம் ஒன்றறி யாமையினால்
துஞ்சேன் நான்ஒருகால் தொழு தேன்திருக் காளத்தியாய்
அஞ்சா துன்னையல்லால் அறிந் தேத்த மாட்டேனே. 5

பொய்யவன் நாயடியேன் புக வேநெறி ஒன்றறியேன்
செய்யவ னாகிவந்திங் கிடர் ஆனவை தீர்த்தவனே
மெய்யவ னேதிருவே விளங் குந்திருக் காளத்திஎன்
ஐயநுன் றன்னையல்லால் அறிந் தேத்த மாட்டேனே. 6

கடியேன் காதன்மையாற் கழற் போதறி யாதஎன் னுள், குடியாக் கோயில்கொண்ட குளிர் வார்சடை எம்

---

2. கமை – பொறுமை.

3. பகலோன் – சூரியனது. கடை ஆர் – அழகிய திரு வாயில்களை உடைய.

5. நஞ்சேன் – நைந்தேன்; துயருற்றேன்.

குழகா, முடியால் வானவர்கள் முயங் குந்திருக் காளத்தி யாய், அடியேன் உன்னையல்லால் அறி யேன்மற் றொருவரையே. 7

நீறூர் மேனியனே நிம லாநினை அன்றிமற் றுக்
கூறேன் ஆவதனாற் கொழுந் தேஎன் குணக்கடலே
பாறூர்வெண் டலையிற் பலி கொண்டுழல் காளத்தியாய்
ஏறே உன்னையல்லால் இனி ஏத்த மாட்டேனே. 8

தளிர்போல் மெல்லடியாள் தனை ஆகத் தமர்ந்தருளி
எளிவாய் வந்தென்னுள்ளம் புகு தவல்ல எம்பெருமான்
களியார் வண்டறையுந் திருக் காளத்தி யுள்ளிருந்த
ஒளியே உன்னையல்லால் இனி ஒன்றும் உணரேனே. 9

காரூ ரும்பொழில்சூழ் கண நாதன்எங் காளத்தியுள், ஆரா இன்னமுதை அணி நாவலா ரூரன்சொன்ன, சீரூர் செந்தமிழ்கள் செப்பு வார்வினை யாயினபோய்ப், பேரா விண்ணுலகம் பெறு வார்பிழைப் பொன்றிலரே. 10

திருச்சிற்றம்பலம்.

நாடு: தொண்டை நாடு

சுவாமி: காளத்திநாதர்; அம்பிகை: ஞானப்பூங்கோதை.

திருக்கற்குடி

திருச்சிற்றம்பலம்

விடையா ருங்கொடியாய் வெறி யார்மலர்க் கொன்றையினாய், படையார் வெண்மழுவா பர மாய பரம்பரனே, கடியார் பூம்பொழில்சூழ் திருக் கற்குடி மன்னிநின்ற, அடிகேள் எம்பெருமான் அடி யேனையும் அஞ்சலென்னே.

---

7. கடியேன் – கொடியவன்.

8. பாறு – பருந்து. 9. எளிவாய் – எளிமையை உடையவனாகி

1. வெறி – வாசனை. பரம் – மேலான பொருள். அஞ்சல் என்னே – அஞ்சாதே என்று திருவாய்மலர்ந்தருள்வா

மறையோர் வானவருந் தொழு தேத்தி வணங்கநின்ற
இறைவா எம்பெருமான் எனக் கின்னமு தாயவனே
கறையார் சோலைகள்சூழ் திருக் கற்குடி மன்னிநின்ற
அறவா அங்கணனே அடியேனையும் அஞ்சலென்னே. 2

சிலையால் முப்புரங்கள் பொடி யாகச் சிதைத்தவனே,
மலைமேல் மாமருந்தே மட மாதிடங் கொண்டவனே, கலை
சேர் கையினனே திருக் கற்குடி மன்னிநின்ற, அலைசேர்
செஞ்சடையாய் அடி யேனையும் அஞ்சலென்னே. 3

செய்யார் மேனியனே திரு நீல மிடற்றினனே, மை
யார் கண்ணிபங்கா மத யானை உரித்தவனே, கையார் சூலத்
தினாய் திருக் கற்குடி மன்னிநின்ற, ஐயா எம்பெருமான்
அடி யேனையும் அஞ்சலென்னே. 4

சந்தார் வெண்குழையாய் சரி கோவண ஆடையனே,
பந்தா ரும்விரலாள் ஒரு பாகம் அமர்ந்தவனே, கந்தார்
சோலைகள்சூழ் திருக் கற்குடி மன்னிநின்ற, எந்தாய் எம்
பெருமான் அடி யேனையும் என்றுகொள்ளே. 5

அரையார் கீளொடு கோவணமும் அரைக்கசைத்து,
விரையார் கொன்றையுடன் விளங் கும்பிறை மேலுடை
யாய், கரையா ரும்வயல்சூழ் திருக் கற்குடி மன்னிநின்ற,
அரையா எம்பெருமான் அடி யேனையும் அஞ்சலென்னே.

பாரார் விண்ணவரும் பர விப்பணிந் தேத்தநின்ற,
சீரார் மேனியனே திகழ் நீல மிடற்றினனே, காரார் பூம்
பொழில்சூழ் திருக் கற்குடி மன்னிநின்ற, ஆரா இன்னமு
முதே அடி யேனையும் அஞ்சலென்னே. 7

யாக ; என் – என்று சொல்.

2. கறைஆர் – செறிவினால் கறுப்புநிறம் பெற்ற.

3. கலை – மான்.

5. சந்து – மூட்டுவாய். கந்து – கந்தம்; வாசனை.

நிலனே நீர்வளிதீ நெடு வானகம் ஆகிநின்ற, புலனே புண்டரிகத் தயன் மாலவன் போற்றிசெய்யும், கனலே கற்பகமே திருக் கற்குடி மன்னிநின்ற, அனல்சேர் கையினனே அடி யேனையும் அஞ்சலென்னே. 8

வருங்கா லன்னுயிரை மடி யத்திரு மெல்விரலால், பெரும்பா லன்றனக்காய்ப் பிரி வித்த பெருந்தகையே, கரும்பா ரும்வயல்சூழ் திருக் கற்குடி மன்னிநின்ற, விரும்பா எம்பெருமான் அடியேனையும் வேண்டுதியே. 9

அலையார் தண்புனல்சூழ்ந் தழ காகி விழவமரும், கலையார் மாதவர்சேர் திருக் கற்குடிக் கற்பகத்தைச், சிலையார் வாள்நுதலாள் நல்ல சிங்கடி யப்பனுரை, விலையார் மாலைவல்லார் வியன் மூவுல காள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு

சுவாமி: உஜ்ஜீவனநாதர்; அம்பிகை: அஞ்சனாட்சி.

திருக்கடவூர்வீரட்டம்

திருச்சிற்றம்பலம்

பொடியார் மேனியனே புரி நூல்ஒரு பாற்பொருந்த வடியார் மூவிலைவேல் வளர் கங்கையின் மங்கையொடும் கடியார் கொன்றையனே கட வூர்தனுள் வீரட்டத்தெம் அடிகேள் என்அமுதே எனக் கார்துணை நீயலதே. 1

பிறையா ருஞ்சடையாய் பிர மன்தலை யிற்பலிகொள் மறையார் வானவனே மறை யின்பொருள் ஆனவனே

---

8. புலன் – பொறிகளால் நுகரும் பொருள்.

9. பெரும்பாலன் – புகழாற் பெரிய சிறுவராகிய மார்க்கண்டேயர். உயிரைப் பிரிவித்த. விரும்பா – விருப்பம் உடையவனே.

10. கலை – சாத்திரம்.

1. பொடி – திருநீறு. புரிநூல் – பூணூல். வடி – கூர்மை. கடி – நறுமணம்.

கறையா ரும்மிடற்றாய் கட ஊர்தனுள் வீரட்டத்தெம்
இறைவா என்அமுதே எனக் கார்துணை நீயலதே. 2

அன்றா லின்நிழற்கீழ் அறம் நால்வர்க் கருள்புரிந்து,
கொன்றாய் காலன்உயிர் கொடுத் தாய்மறை யோனுக்கு
மான், கன்றா ருங்கரவா கட ஊர்த்திரு வீரட்டத்துள்,
என்தா தைபெருமான் எனக் கார்துணை நீயலதே. 3

போரா ருங்கரியின் உரி போர்த்துப்பொன் மேனி
யின்மேல், வாரா ரும்முலையாள் ஒரு பாகம் மகிழ்ந்தவனே,
காரா ரும்மிடற்றாய் கட ஊர்தனுள் வீரட்டானத், தாரா
என்அமுதே எனக் கார்துணை நீயலதே. 4

மையார் கண்டத்தினாய் மத மாவுரி போர்த்தவனே
பொய்யா தென்உயிருட் புகுந் தாயின்னம் போந்தறியாய்
கையார் ஆடரவா கட ஊர்தனுள் வீரட்டத்தெம்
ஐயா என்அமுதே எனக் கார்துணை நீயலதே. 5

மண்ணீர் தீவெளிகால் வரு பூதங்கள் ஆகிமற்றும்
பெண்ணோ டாணலியாய்ப் பிற வாஉரு ஆனவனே
கண்ணா ரும்மணியே கட ஊர்தனுள் வீரட்டத்தெம்
அண்ணா என்அமுதே எனக் கார்துணை நீயலதே. 6

எரியார் புன்சடைமேல் இள நாகம் அணிந்தவனே
நரியா ருஞ்சுடலை நகு வெண்டலை கொண்டவனே
கரியார் ஈருரியாய் கட ஊர்தனுள் வீரட்டத்தெம்
அரியாய் என்அமுதே எனக் கார்துணை நீயலதே. 7

வேறா உன்னடியேன் விளங் குங்குழைக் காதுடை
யாய், தேறேன் உன்னையல்லாற் சிவ னேஎன் செழுஞ்
சுடரே, காறார் வெண்மருப்பா கட ஊர்த்திரு வீரட்டத்
துள், ஆறார் செஞ்சடையாய் எனக் கார்துணை நீயலதே.

---

3. காலன் உயிர் கொன்றாய், மறையோனுக்கு உயிர் கொடுத்தாய் என்று கூட்டுக ; உயிர் : இடைநிலைத் தீவகம்.

8. வேறா – தனியான சிறப்புடையவனே. காறு ஆர் – கொழுவைப் போன்றுள்ள.

அயனோ டன்றரியும் அடியும்முடி காண்பரிய, பயனே எம்பரனே பர மாய பரஞ்சுடரே, கயமா ருஞ்சடையாய் கட வூர்த்திரு வீரட்டத்துள், அயனே என் அமுதே எனக் கார்துணை நீயலதே. 9

காரா ரும்பொழில்சூழ் கட வூர்த்திரு வீரட்டத்துள், ஏரா ரும்இறையைத் துணை யாஎழில் நாவலர்கோன், ஆரூ ரன்னடியான் அடித் தொண்டன் உரைத்ததமிழ், பாரோர் ஏத்தவல்லார் பர லோகத் திருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : அமிர்தகடேசுவரர் ; அம்பிகை : அபிராமியம்மை.

திருக்குருகாவூர் வெள்ளடை

திருச்சிற்றம்பலம்

இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான், பித்தரே என்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம், முத்தினை மணிதன்னை மாணிக்கம் முளைத்தெழுந்த, வித்தனே குரு காவூர் வெள்ளடை நீயன்றே. 1

ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை ஆட்கொண் டாய், வாவியிற் கயல்பாயக் குளத்திடை மடைதோறும், காவியுங் குவளையுங் கமலஞ்செங் கழுநீரும், மேவிய குரு காவூர் வெள்ளடை நீயன்றே. 2

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய், ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே, காடுநின் இடமா கக் கடுவிருள் நடமாடும், வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 3

---

9. கயம் ஆரும் - கங்கை தங்குதற்குரிய பள்ளமாக உள்ள. அயனே - ஐயனே.

1. வித்தன் – செல்வன்.

3. பாடுவார் பசியைத் தீர்ப்பாய் : இங்கே இறைவர் சுந்தரர் பசியைத் தீர்த்தார். கலன் – பிச்சைப் பாத்திரம். கடு இருள் - நள்ளிருள்.

வெப்பொடு பிணியெல்லாம் தவிர்த்தென்னை ஆட்கொண்டாய், ஒப்புடை ஒளிநீலம் ஓங்கிய மலர்ப்பொய்கை, அப்படி அழகாய அணிநடை மடஅன்னம், மெய்ப்படு குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 4

வரும்பழி வாராமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய், சுரும்புடை மலர்க்கொன்றைச் சுண்ணவெண் ணீற்றனே, அரும்புடை மலர்ப்பொய்கை அல்லியும் மல்லிகையும், விரும்பிய குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 5

பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய், கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய், மண்ணிடை அடியார்கள் மனத்திடர் வாராமே, விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 6

போந்தனை தரியாமே நமன்தமர் புகுந்தென்னை, நோந்தனை செய்தாலும் நன்னலந் தறியேன்நான், சாந்தனை வருமேலுந் தவிர்த்தென்னை ஆட்கொண்ட, வேந்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 7

மலக்கில்நின் அடியார்கள் மனத்திடை மால்தீர்ப்பாய், சலச்சல மிடுக்குடைய தருமனார் தமரென்னைக், கலக்குவான் வந்தாலுங் கடுந்துயர் வாராமே, விலக்குவாய் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 8

படுவிப்பாய் உனக்கேஆள் பலரையும் பணியாமே தொடுவிப்பாய் துகிலொடுபொன் தோலுடுத் துழல்வானே

---

4. நீலம் - கருங்குவளை மலர்.

6. நள்ளிரவில் தோன்றும் சோதியை ஒப்பாய்.

7. போந்தனை தரியாமே - என்பாலுள்ள கருணையால் என் துன்பத்தைத் தாங்காமல் என்னை ஆட்கொள்ள எழுந்தருளினாய். சாந்தனை - சாகும் அளவுக்கு.

8. மலக்கு இல் - கலக்கம் இல்லாத. மால் - அறியாமை. சலச்சலம் - மிக்க வஞ்சனை.

கெடுவிப்பாய் அல்லாதார் கேடிலாப் பொன்னடிக்கே விடுவிப்பாய் குருகாவூர் வெள்ளடை நீயன்றே. 9

வளங்கனி பொழில்மல்கு வயலணிந் தழகாய, விளங்கொளி குருகாவூர் வெள்ளடை உறைவானை, இளங்கிளை ஆரூரன் வனப்பகை யவளப்பன், உளங்குளிர் தமிழ்மாலை பத்தர்கட் குரையாமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி: வெள்ளடையப்பர்

அம்பிகை : காவியங்கண்ணியம்மை

வரலாறு : சுந்தரமூர்த்தி சுவாமிகள் சீகாழியைத் தரிசித்துக்கொண்டு திருக்குருகாவூரைத் தரிசிப்பதற்காகத் தம் பரிவாரங்களுடன் போய்க்கொண்டிருந்தார். அப்போது சுவாமிகளுக்குத் தாகமும் பசியும் அதிகமாயின. சிவபெருமான் நடுவழியில் ஒரு பந்தரை அமைத்து அதன்கண் தண்ணீரும் பொதிசோறும் வைத்துக்கொண்டிருந்து, சுந்தரர் வந்தவுடன் யாவருக்கும் வழங்கியருளினார். உண்டு சற்றே அவர்கள் உறங்கி, பின் விழித்துப் பார்க்கையில் யாவையும் மறைந்ததைக் கண்டனர். எம்பெருமான் திருவருளென்றறிந்த சுந்தரர் இப்பதிகத்தைப் பாடியருளினார் (பெரிய. ஏயர்கோன் 155-163.)

திருக்கருப்பறியலூர்

திருச்சிற்றம்பலம்

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில் வைத்துகந்து திறம்பா வண்ணம், கைம்மாவின் உரிவைபோர்த் துமை

---

9. உனக்கே ஆள் படுவிப்பாய் – அடியேனை உன் ஒருவனுக்கே ஆளாகச் செய்வாய். துகிலொடு பொன்னை எனக்குத் தொடுவிப்பாய்.

10. இளங்கிளை - வயசில் இளைய சுற்றத்தான். உரை ஆம் - அடிக்கடி சொல்லும் உரையாகவே அமையும்.

வெருவக் கண்டானைக் கருப்ப றியலூர்க், கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட மயில்ஆடுங் கொகுடிக் கோயில், எம்மானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 1

நீற்றானும் மேனியராய் நினைவார்தம் உள்ளத்தே நிறைந்து தோன்றும், காற்றானைத் தீயானைக் கதிரானை மதியானைக் கருப்ப றியலூர்க், கூற்றானைக் கூற்றுதைத்துக் கோல்வளையாள் அவளோடுங் கொகுடிக் கோயில், ஏற்றானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 2

முட்டாமே நாள்தோறும் நீர்மூழ்கிப் பூப்பறித்து மூன்று போதும், கட்டார்ந்த இண்டைகொண் டடிச்சேர்த்தும் அந்தணர்தங் கருப்ப றியலூர்க், கோட்டாட்டுப் பாட்டாகி நின்றானைக் குழகனைக் கொகுடிக் கோயில், எட்டான மூர்த்தியை நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 3

விருந்தாய சொல்மாலை கொண்டேத்தி வினைபோக வேலி தோறும், கருந்தாள வாழைமேற் செங்கனிகள் தேன்சொரியும் கருப்ப றியலூர்க், குருந்தாய முள்ளெயிற்றுக் கோல்வளையாள் அவளோடுங் கொகுடிக் கோயில், இருந்தானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 4

---

1. சிம்மாந்து – செம்மாந்து; பெருமிதங்கொண்டு. சிம்புளித்து – கண்ணை மூடி. கொகுடி – ஒருவகை முல்லை.

2. கோல்வளையாள் : தலத்து அம்பிகை.

3. முட்டாமே – தடைப்படாமல். இண்டை – ஒருவகை மாலை.

4. விருந்து – புதுமை. கருந்தாள - கரிய அடிமரத்தை உடைய. குருந்து – மயிலிறகின் அடிக்குருத்து.

பொடியேறு திருமேனிப் பெருமானைப் பொங்கரவக் கச்சை யானைக், கடிநாறும் பூம்பொய்கைக் கயல்வாளை குதிகொள்ளுங் கருப்ப றியலூர்க், கொடியேறி வண்டினமுந் தண்டேனும் பண்செய்யுங் கொகுடிக் கோயில், அடியேறு கழலானை நினைந்தபோ தவர்நமக் கினியவாறே.

பொய்யாத வாய்மையாற் பொடிபூசிப் போற்றிசைத் துப் பூசை செய்து, கையினால் எரிஓம்பி மறைவளர்க்கும் அந்தணர்தங் கருப்ப றியலூர்க், கொய்யுலாம் மலர்ச் சோலைக் குயில்கூவ மயில்ஆலுங் கொகுடிக் கோயில், ஐயனைஎன் மனத்தினால் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 6

செடிகொள்நோய் உள்ளளவுந் தீவினையுந் தீர்ந்தொழி யச் சிந்தை செய்ம்மின், கடிகொள்பூந் தடமண்டிக் கருமேதி கண்படுக்குங் கருப்ப றியலூர்க், கொடிகொள்பூ நுண்இடையாள் கோல்வளையாள் அவளோடுங் கொகுடிக் கோயில், அடிகளைஎன் மனத்தினால் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 7

பறையாத வல்வினைகள் பறைந்தொழியப் பன்னாளும் பாடி ஆடிக், கறைஆர்ந்த கண்டத்தன் எண்தோளன் முக்கண்ணன் கருப்ப றியலூர்க், குறையாத மறைநாவர் குற்றேவல் ஒழியாத கொகுடிக் கோயில், உறைவானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 8

சங்கேந்து கையானுந் தாமரையின் மேலானுந் தன்மை காணாக், கங்கார்ந்த வார்சடைகள் உடையானை விடையானைக் கருப்ப றியலூர்க், கொங்கார்ந்த பொழிற் சோலை சூழ்கனிகள் பலவுதிர்க்குங் கொகுடிக் கோயில்,

---

6. வாய்மையால் - மந்திரத்தைக் கூறுவதோடு. கொய்தல் விரவிய மலரையுடைய சோலை.

7. செடி – தீமை; வருத்தம். 8. பறையாத – தேயாத.

9. கங்கு – கங்கை; ஓரமுமாம்.

எங்கோனை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக் கினிய
வாறே. 9

பண்டாழின் இசைமுரலப் பன்னாளும் பாவித்துப்
பாடி ஆடிக், கண்டார்தங் கண்குளிருங் களிக்கமுகம்
பூஞ்சோலைக் கருப்ப றியலூர்க், குண்டாடுஞ் சமணருஞ்
சாக்கியரும் புறங்கூறுங் கொகுடிக் கோயில், எண்டோள்
எம் பெருமானை நினைந்தபோ தவர்நமக் கினிய வாறே. 10

கலைமலிந்த தென்புலவர் கற்றோர்தம் இடர்தீர்க்குங்
கருப்ப றியலூர்க், குலைமலிந்த கோட்டெங்கு மட்டொழு
கும் பூஞ்சோலைக் கொகுடிக் கோயில், இலைமலிந்த
மழுவாளை மனத்தினால் அன்புசெய் தின்பம் எய்தி,
மலைமலிந்த தோள்ஊரன் வனப்பகையப் பனுரைத்த
வண்டமிழ்களே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : குற்றம்பொறுத்த ஈசுவரர்

அம்பிகை : கோல்வளை நாயகி

திருஇடையாறு

4. பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

முந்தையூர் முதுகுன்றங் குரங்கணின் முட்டம்
சிந்தையூர் நன்றுசென் றடைவான் திருவாரூர்

---

10. பண் தாழ் இன்இசை — பண் தங்கிய இனிய இசை. குண்டு ஆடும் — கீழ்மையிலே உழலும்.

11. தென் புலவர் — தமிழ்ப்புலவர். வண்டமிழ்களே என்றது, திருவருளை வியந்து, வண்டமிழ் இருந்தவாறென்னே என்னும் குறிப்பை உடையது.

பந்தையூர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி
எந்தையூர் எய்தமான் இடையா றிடைமருதே. 1

சுற்றமூர் சுழியல் திருச்சோ புரந்தொண்டர்
ஒற்றமூர் ஒற்றியூர் திருவூறல் ஒழியாப்
பெற்றம் ஏறிபெண் பாதிஇடம் பெண்ணைத்தெண்ணீர்
எற்றும்ஊர் எய்தமான் இடையா றிடைமருதே. 2

கடங்களூர் திருக்காரிக் கரைகயி லாயம்
விடங்களூர் திருவெண்ணி அண்ணா மலைவெய்ய
படங்களூர் கின்றபாம் பரையான் பரஞ்சோதி
இடங்கொளூர் எய்தமான் இடையா றிடைமருதே. 3

கச்சையூர் காவங் கழுக்குன்றங் காரோணம்
பிச்சையூர் திரிவான் கடவூர் வடபேறூர்
கச்சியூர் கச்சிக் கல்நெய்த்தா னம்பிழலை
இச்சையூர் எய்தமான் இடையா றிடைமருதே. 4

நிறையனூர் நின்றியூர் கொடுங்குன்றம் அமர்ந்த
பிறையனூர் பெருமூர் பெரும்பற்றப் புலியூர்
மறையனூர் மறைக்காடு வலஞ்சுழி வாய்த்த
இறையனூர் எய்தமான் இடையா றிடைமருதே. 5

திங்களூர் திருவா திரையான் பட்டினமூர்
நங்களூர் நறையூர் நனிநா லிசைநாலூர்
தங்களூர் தமிழான் என்றுபா விக்கவல்ல
எங்களூர் எய்தமான் இடையா றிடைமருதே. 6

கருக்கநஞ் சமுதுண்ட கல்லாலன் கொல்லேற்றன்
தருக்கருக் கனைச்செற் றுகந்தான்தன் முடிமேல்
எருக்கநாண் மலரிண் டையும்மத்த முஞ்சூடி
இருக்குமூர் எய்தமான் இடையா றிடைமருதே. 7

---

2. பெற்றம் ஏறி, பெண்பாதி : பெயர்.
6. திருவாதிரையான் – சிவபெருமான்.
7. தருக்கு அருக்கனை – கர்வமடைந்த சூரியனை. மத்தம் – ஊமத்தை.

தேசனார் வினைதேய நின்றான் திருவாக்கூர்
பாசனார் பரமேட்டி பவித்திர பாவ
நாசனார் நனிபள்ளி நள்ளாற்றை அமர்ந்த
ஈசனார் எய்தமான் இடையா றிடைமருதே. 8

பேறனார் பிறைச்சென் னியினான் பெருவேளூர்
தேறனார் திருமா மகள்கோன் திருமாலோர்
கூறனார் குரங்காடு துறைதிருக் கோவல்
ஏறனார் எய்தமான் இடையா றிடைமருதே. 9

ஊறிவா யினநாடிய வன்றொண் டன்ஊரன்
தேறுவார் சிந்தை தேறுமிடஞ் சிந்தைவெள்ளே
றேறுவார் எய்தமான் இடையா றிடைமருதைக்
கூறுவார் வினைஎவ் விடமெய் குளிர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : நடுநாடு

சுவாமி : இடையாற்று நாதர்; அம்பிகை : சிற்றிடைநாயகி.

திருக்கோடிக்குழகர்

திருச்சிற்றம்பலம்

கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதான் அயலே இருந்தாற் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டனகோ டிக்குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே. 1

முன்றான் கடல்நஞ்சம் உண்ட அதனாலோ
பின்றான் பரவைக் குபகாரம் செய்தாயோ
குன்றாப் பொழில்சூழ் தருகோடிக் குழகா
என்றான் தனியே இருந்தாய் எம்பிரானே. 2

---

8. தேசன் - சோதிவடிவானவன்.
1. கடிதாய் - வேகமாக, கோடி - கோடிக்கரை.

மத்தம் மலிசூழ் மறைக்கா டதன்தென்பால்
பத்தர் பலர்பாட இருந்த பரமா
கொத்தார் பொழில்சூழ் தருகோடிக் குழகா
எத்தால் தனியே இருந்தாய் எம்பிரானே. 3

காடேல் மிகவா லிதுகா ரிகைஅஞ்சக்
கூடிப் பொந்தில் ஆந்தைகள்கூ கைகுழற
வேடித் தொண்டர் சாலவுந் தீயர்சழக்கர்
கோடிக் குழகா இடங்கோயில் கொண்டாயே. 4

மையார் தடங்கண்ணி பங்காகங் கையாளும்
மெய்யா கத்திருந் தனள்வே றிடம்இல்லை
கையார் வளைக்காடு காளோடும் உடனாய்க்
கொய்யார் பொழிற்கோடி யேகோயில் கொண்டாயே. 5

அரவேர் அல்குலாளை ஓர்பாகம் அமர்ந்து
மரவங் கமழ்மா மறைக்கா டதன்தென்பால்
குரவப் பொழில்சூழ் தருகோடிக் குழகா
இரவே துணையாய் இருந்தாய் எம்பிரானே. 6

பறையுங் குழலும் ஒலிபாடல் இயம்ப
அறையுங் கழலார்க்க நின்றாடும் அமுதே
குறையாப் பொழில்சூழ் தருகோடிக் குழகா
இறைவா தனியே இருந்தாய் எம்பிரானே. 7

ஒற்றியூ ரென்றவூ னத்தினா லதுதானோ
அற்றப் படஆ ரூரதென் றகன்றாயோ
முற்றா மதிசூடிய கோடிக் குழகா
எற்றால் தனியே இருந்தாய் எம்பிரானே. 8

---

4. காடேல் மிகவாலிது – நீ உறையும் மயானம் இதைவிடச் சிறந்தது. கூகை – கோட்டான்.

8. அற்றப்பட – ஐயம் உண்டாக.

நெடியானொடு நான்முக னும்மறி வொண்ணாப்
படியான்பலி கொள்ளும் இடங்குடி இல்லை
கொடியார்பலர் வேடர்கள் வாழுங் கரைமேல்
அடிகேளன்ப தாயிடங் கோயில்கொண் டாயே. 9

பாரூர்மலி சூழ்மறைக் காடதன் தென்பால்
ஏரார்பொழில் சூழ்தரு கோடிக் குழகை
ஆரூரன் உரைத்தன பத்திவை வல்லார்
சீரூர்சிவ லோகத் திருப்பவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : அமுதகடநாதர்

அம்பிகை: மையார்தடங்கண் அம்மை

வரலாறு : சேரமான் பெருமாள் நாயனாரோடு பல தலங்களைத் தரிசனம் செய்துகொண்டு வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், மறைக்காட்டுக்குச் சென்று சிலநாள் தங்கி, அப்பால் அகத்தியான் பள்ளியைத் தரிசித்துப் பிறகு கோடிக் குழகர் என்னும் கோடிக்கரைக்கு வந்தார். அங்கே கோயிலுக்கு அயலில் யாரும் குடியிராமையைக் கண்டு உள்ளம் வாடி, இறைவரைத் தரிசித்து இப்பதிகத்தைப் பாடியருளினார் (பெரிய. சேரமான். 88-89.)

நமக்கடிகளாகிய அடிகள்

திருச்சிற்றம்பலம்

பாறுதாங்கிய காடரோபடு தலையரோமலைப் பாவை
யோர், கூறுதாங்கிய குழகரோகுழைக் காதரோகுறுங்
கோட்டிள, ஏறுதாங்கிய கொடியரோசுடு பொடியரோ
இலங் கும்பிறை, ஆறுதாங்கிய சடையரோநமக் கடிகளா
கிய அடிகளே. 1

---

1. பாறு - பருந்து. குறுங்கோடு - சிறிய கொம்பையுடைய அடிகள் - சுவாமி.

இட்டிதாகவந் துறைமின்னேநுமக் கிசையுமாகிலோர் தேத்துவீர், கட்டிவாழ்வது நாகமோசடை மேலுமோர்நதி காந்தையோ, பட்டிஏறுகந் தேறரோபடு வெண்டலைப்பலி கொண்டுவந், தட்டிஆளவுங் கிற்பரோநமக் கடிகளாகிய அடிகளே. 2

ஒன்றினீர்கள்வந் துறைமின்னேநுமக் கிசையுமாகிலோர் தேத்துவீர், குன்றிபோல்வதோர் உருவரோகுறிப் பாகி நீறுகொண் டணிவரோ, இன்றியேஇலர் ஆவரோஅன்றி உடையராய்இலர் ஆவரோ, அன்றியேமிக அறவரோநமக் கடிகளாகிய அடிகளே. 3

தேனைஆடுமுக் கண்ணரோமிகச் செய்யரோவெள்ளை நீற்றரோ, பானெய்ஆடலும் பயில்வரோதமைப் பற்றி னார்கட்கு நல்லரோ, மானைமேவிய கண்ணினாள்மலை மங்கை நங்கையை அஞ்சவோர், ஆனையீர்உரி போர்ப்பரோநமக் கடிகளாகிய அடிகளே. 4

கோணல்மாமதி சூடரோகொடு கொட்டிகாலர் கழலரோ, வீணைதானவர் கருவியோவிடை ஏறுவேத முதல்வரோ, நாணதாகஓர் நாகங்கொண்டரைக் கார்ப்ப ரோநலம் ஆர்தர, ஆணையாகநம் அடிகளோநமக் கடிக ளாகிய அடிகளே. 5

---

2. இட்டிதாக – அருகாக. பட்டி ஏறு – முரட்டுத்தன மான இடபம். அட்டி – இட்டு.

3. குன்றி – குன்றிமணி. ஒரு பொருளும் இயற்கை யாகவே இல்லாமையால் இல்லாதவரோ; அவற்றை நுகராமல் இல்லாதவரோ.

5. கொடுகொட்டி – ஒருவகைப் பறை. அரைக்கு ஆர்ப் பரோ – இடையிலே கட்டிக்கொள்வரோ.

வந்துசொல்லுமின் மூடனேனுக்கு வல்லவாறினைத்
தேத்துவீர், வந்தசாயினை அறிவரோ தம்மை வாழ்த்தி
னார்கட்கு நல்லரோ, புந்தியால்உரை கொள்வரோஅன்றிப்
பொய்யின்மெய்யுரைத் தாள்வரோ, அன்றியேமிக அறவ
ரோநமக் கடிகளாகிய அடிகளே. 6

மெய்யென்சொல்லுமின் நமரங்காள்உமக் கிசையுமா
றினைத் தேத்துவீர், கையிற்சூலம துடையரோகரி காடரோ
கறைக் கண்டரோ, வெய்யபாம்பரை ஆர்ப்பரோவிடை
ஏறரோகடை தோறுஞ்சென், றையங்கொள்ளுமவ் வடிக
ளோநமக் கடிகளாகிய அடிகளே. 7

நீடுவாழ்பதி உடையரோஅயன் நெடியமாலுக்கும்
நெடியரோ, பாடுவாரையும் உடையரோதம்மைப் பற்றி
னார்கட்கு நல்லரோ, காடுதான்அரங் காகவேகைகள் எட்டி
னோடில யம்பட, ஆடுவாரெனப் படுவரோநமக் கடிகளாகிய
அடிகளே. 8

நமணநந்தியுங் கருமவீரனுங் கருமசேனனும் என்
றிவர், குமணமாமலைக் குன்றுபோல்நின்று தங்கள்
கூறையொன் றின்றியே, ஞமணஞாஞண ஞாணஞோணமென்
றோதியாரையும் நாணிலா, அமணராற்பழிப் புடைய
ரோநமக் கடிகளாகிய அடிகளே. 9

படிசெய்நீர்மையிற் பத்தர்காள்பணிந் தேத்தினேன்
பணி யீர்அருள், வடிவிலான்திரு நாவலூரன் வனப்பகை

---

6. சாய் – மென்மை; தளர்ச்சி,

7. நமரங்காள் — நம்மவர்களே. கரிகாடு - சுடுகாடு. கடை — வீட்டுவாயில்.

8. இலயம் பட - தாள அமைதி உண்டாக.

யுப்பன் வன்றொண்டன், செடியனாகிலுந் தீயனாகிலுந் தம்மையேமனஞ் சிந்திக்கும், அடியனூரனை ஆள்வரோநமக் கடிகளாகிய அடிகளே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்புகலூர்

திருச்சிற்றம்பலம்

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும் சார்வினுந்தொண் டர் தருகிலாப், பொய்ம்மையாளரைப் பாடாதேஎந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள், இம்மையேதரும் சோறுங் கூறையும் ஏத்தலாம்இடர் கெடலுமாம், அம்மையேசிவ லோகம்ஆள்வதற் கியாதும்ஐயுற வில்லையே. 1

மிடுக்கிலாதானை வீமனேவிறல் விசயனேவில்லுக் கிவனென்று, கொடுக்கிலாதானைப் பாரியேஎன்று கூறினுங்கொடுப் பார்இலை, பொடிக்கொள்மேனியெம் புண்ணியன்புக லூரைப்பாடுமின் புலவீர்காள், அடுக்குமேல்அமர் உலகம் ஆள்வதற் கியாதுமையுற வில்லையே. 2

காணியேற்பெரி துடையனேகற்று நல்லனேசுற்றம் நற்கிளை, பேணியேவிருந் தோம்புமேஎன்று பேசினுங்கொடுப் பார்இலை, பூணிபூண்டுழப் புட்சிலம்புந்தண் புகலூர் பாடுமின் புலவீர்காள், ஆணியாய்அமர் உலகம் ஆள்வதற் கியாதுமையுற வில்லையே. 3

---

10. படிசெய் நீர்மையின் - பார்த்து இப்படிச் செய்ய வேண்டும் என்று பிறர் ஒழுகுவதற்குரிய இயல்பை உடைய; படி - பிரதி.

1. இச்சை பேசினும் - அவர் விருப்பத்தை உணர்ந்து அதற்கேற்ப இச்சகம் பேசினாலும். அம்மையே - மறுமையில்.

2. மிடுக்கு - வலிமை. விசயன் - அருச்சுனன். பாரி - கடையெழு வள்ளல்களில் ஒருவன்.

3. பூணி - மாடு. ஆணி - உரையாணியைப் போன்ற சிறப்பு.

நரைகள் போந்துமெய் தளர்ந்துமூத்துடல் நடுங்கி நிற்கும்இக் கிழவனை, வரைகள்போல்திரள் தோளனேஎன்று வாழ்த்தினுங்கொடுப் பார்இலை, புரைவெள் ளேறுடைப் புண்ணியன்புக லூரைப்பாடுமின் புலவீர்காள், அரையனாய்அமர் உலகமாள்வதற் கியாதுமையுற வில்லையே. 4

வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப் பாவியைவழக் கில்லியைப், பஞ்சதுட்டனைச் சாதுவேஎன்று பாடினுங்கொடுப் பார்இலை, பொன்செய்செஞ்சடைப் புண்ணியன்புக லூரைப்பாடுமின் புலவீர்காள், நெஞ்சில்நோயறுத் துஞ்சுபோவதற் கியாதுமையுற வில்லையே. 5

நலம்இலாதானை நல்லனேஎன்று நரைத்தமாந்தரை இளையனே, குலம்இலாதானைக் குலவனேஎன்று கூறினுங்கொடுப் பார்இலை, புலமெலாம்வெறி கமழும்பூம்புக லூரைப்பாடுமின் புலவீர்காள், அலமராதமர் உலகம் ஆள்வதற் கியாதுமையுற வில்லையே. 6

நோயனைத்தடந் தோளனேஎன்று நொய்யமாந்தரை விழுமிய, தாயன்றேபுல வோர்க்கெலாம்என்று சாற்றினுங்கொடுப் பார்இலை, போயுழன்றுகண் குழியாதேஎந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள், ஆயம்இன்றிப்போய் அண்டம்ஆள்வதற் கியாதுமையுற வில்லையே. 7

4. புரை — உயர்வு.

5. சழக்கன் — குற்றமுள்ளவன். பஞ்சதுட்டன் — ஐம் பெரும் பாவங்களைச் செய்யும் கொடியவன்.

6. புலம் — வயல். வெறி — நறுமணம்.

7. நொய்ய மாந்தரை — குணத்தினால் இழிந்த மக்களை. ஆயம் — சுங்கம்; இங்கே தடையைக் குறிப்பித்தது.

எள்விழுந்திடம் பார்க்கும்ஆகிலும் ஈக்கும்ஈகிலன் ஆகிலும், வள்ளலேஎங்கள் மைந்தனேஎன்று வாழ்த்தி னுங்கொடுப் பார்இலை, புள்ளெலாஞ்சென்று சேரும்பூம்புக லூரைப்பாடுமின் புலவீர்காள், அல்லற்பட்டழுந் தாது போவதற் கியாதுமையுற வில்லையே. 8

கற்றிலாதானைக் கற்றுநல்லனே காமதேவனை ஒக்குமே, முற்றிலாதானை முற்றனேஎன்று மொழியினுங்கொடுப் பார்இலை, பொத்தில்ஆந்தைகள் பாட்டறாப்புக லூரைப் பாடுமின் புலவீர்காள், அத்தனாய்அமர் உலகம்ஆள்வதற் கியாதுமையுற வில்லையே. 9

தையலாருக்கோர் காமனேஎன்றும் சாலநல்லழக் குடையனே, கையுலாவிய வேலனேஎன்று கழறினுங் கொடுப் பார்இலை, பொய்கைஆவியின் மேதிபாய்புக லூரைப்பாடுமின் புலவீர்காள், ஐயனாய்அமர் உலகம் ஆள்வதற் கியாதுமையுற வில்லையே. 10

செறுவினிற்செழுங் கமலம்ஓங்குதென் புகலூர்மேவிய செல்வனை, நறவம்பூம்பொழில் நாவலூரன் வனப்ப கையப்பன் சடையன்றன், சிறுவன்வன்றொண்டன் ஊரன்

---

8. எள்ளளவு பொருள் கையிலிருந்து விழுந்தாலும், எங்கே விழுந்ததென்று ஆராயும் லோபியைக் குறித்தபடி. மைந்தன் – வீரமுடையவன். அள்ளல் - சேறு.

9. முற்றிலாதான் – எதிலும் முடிவுபோக முயற்சி செய்யாதவன்; முற்றும் இல்லாதவன். முற்றன் – பூரணமாக உடையவன். பொத்தில் – மரப்பொந்துகளில்.

11. செறு – வயல்.

பாடிய பாடல்பத்திவை வல்லவர், அறவனார் அடி சென்று சேர்வதற் கியாதுமையுற வில்லையே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : அக்கினீசுவரர்

அம்பிகை : கருந்தார்க்குழலம்மை

வரலாறு: பங்குனி உத்தரத் திருநாளில் பரவை நாச்சியார் செய்யும் தான தருமங்களுக்குப் பொருள்வேண்டி யிருந்தமையால், ஆளுடைய நம்பிகள் திருப்புகலூருக்குச் சென்று இறைவரைத் தரிசித்து, கோயிலின் முற்றத்தில் அங்கிருந்த செங்கற்களையே தலையணையாக வைத்துத் துயின்றார். துயிலெழுந்து பார்க்க, தலைக்கு உயரமாக இருந்த செங்கற்கள் பொன்னாகியிருக்கக் கண்டு, இறைவர் திருவருளை நினைந்து வியந்து இப்பதிகத்தைப் பாடியருளினார் (பெரிய. ஏயர் கோன். 46–52.)

திருப்புறம்பயம்

திருச்சிற்றம்பலம்

அங்கம் ஓதி ஓர் ஆறைமேற்றளி நின்றும்போந்து வந் தின்னம்பர்த், தங்கினோமையும் இன்னதென்றிலர் ஈசனார்எழு நெஞ்சமே, கங்குல்ஏமங்கள் கொண்டுதேவர்கள் ஏத்திவானவர் தாந்தொழும், பொங்குமால்விடை ஏறி செல்வப் புறப்பயந்தொழப் போதுமே. 1

பதியுஞ்சுற்றமும் பெற்றமக்களும் பண்டையாரலர் பெண்டிரும், நிதியிலிம்மனை வாழும்வாழ்க்கையும் நினைப்பொழிமட நெஞ்சமே, மதியஞ்சேர்சடைக் கங்கையாளிடம்

1. அங்கம் ஓதி – வேதாங்கங்களாகிய சாத்திரங்களை ஓதியவன். கங்குல் – இரவில். ஏமங்கள் – இன்பந்தரும் பொருள்களை. ஏறி – ஏறுபவன்.

முகிழும்மல்லிகை செண்பகம், புதியபூமலர்ந் தெல்லிநாளும் புறம்பயந்தொழப் போதுமே. 2

புறந்திரைந்து நரம்பெழுந்து நரைத்துநீயுரை யால் தளர்ந், தறம்புரிந்து நினைப்பதாண்மை அரிதுகாண்இஃ தறிதியேல், திறம்பியாதெழு நெஞ்சமேசிறு காலைநாமுறு வாணியம், புறம்பயத்துறை பூதநாதன் புறம்பயந்தொழப் போதுமே. 3

குற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள்சூழ்ந்த களவெலாம், செற்றொருவரைச் செய்ததீமைகள் இம்மை யேவருந் திண்ணமே, மற்றொருவரைப் பற்றிலேன்மற வாதெழுமட நெஞ்சமே, புற்றரவுடைப் பெற்றமேறி புறம் பயந்தொழப் போதுமே. 4

கள்ளிநீசெய்த தீமைஉள்ளன பாவமும்பறையும்படி, தெள்ளிதாஎழு நெஞ்சமேசெங்கண் சேவுடைச்சிவ லோகன் ஊர், துள்ளிவெள்ளிள வாளைபாய்வயற் றேன்றுதாமரைப் பூக்கள்மேல், புள்ளிநள்ளிகள் பள்ளிகொள்ளும் புறம்பயந் தொழப் போதுமே. 5

படையெலாம்பக டாரஆளிலும் பௌவஞ்சூழ்ந்தர சாளிலும், கடையெலாம்பிணைத் தேரைவால்கவ லாதெழு மடநெஞ்சமே, மடையெலாங்கழு நீர்மலர்ந்து மருங்கெ ாங்கரும் பாடத்தேன், புடையெலாம்மணம் நாறுசோலைப் றம்பயந்தொழப் போதுமே. 6

---

2. எல்லி – இரவில்.

3. திரைந்து – சுருங்கி. திறம்பியாது –திறம்பாமல். சிறு காலை நாம்உறு வாணியம் - மிக இளமையிலே நாம் பெறும் ஊதியத்தோடு கூடிய வியாபாரம். 4. குற்று - அழித்து.

5. கள்ளி – திருடி. பறையும்படி-தேயும்வண்ணம். சே - இடபம். புள்ளி நள்ளிகள்- புள்ளியை உடைய நண்டுகள்.

6. படையெலாம் பகடு ஆர - சேனைகளில் எல்லாம் யானை நிரம்பும்படி. பவ்வஞ்சூழ்ந்து அரசாளிலும் - தன் நாட்

முன்னைச்செய்வினை இம்மையில்வந்து மூடும்ஆதலின் முன்னமே, என்னைநீதியக் காதெழுமட நெஞ்சமேஎந்தை தந்தையூர், அன்னச்சேவலோ டேடிப்பேடைகள் கூடிச் சேரும் அணிபொழில், புன்னைக்கன்னி கழிக்கணுறும் புறம் பயந்தொழப் போதுமே. 7

மலமெலாம்அறும் இம்மையேமறு மைக்கும்வல்வினை சார்கிலா, சலமெலாம்ஒழி நெஞ்சமேஎங்கள் சங்கரன்வந்து தங்கும்ஊர், கலமெலாங்கடல் மண்டுகாவிரி நங்கைஆடிய கங்கைநீர், புலமெலாம்மண்டிப் பொன்விளைக்கும் புறம் பயந்தொழப் போதுமே. 8

பண்டரீயன செய்ததீமையும் பாவமும்பறை யும்படி, கண்டரீயன கேட்டியேற்கவ லாதெழுமட நெஞ்சமே, தொண்டரீயன பாடித்துள்ளிநின் றாடிவானவர் தாந்தொ ழும், புண்டரீக மலரும்பொய்கைப் புறம்பயந்தொழப் போதுமே. 9

துஞ்சியும்பிறந் துஞ்சிறந்துந் துயக்கறாத மயக்கிவை, அஞ்சிஊரன் திருப்புறம்பயத் தப்பனைத்தமிழ்ச் சீரினால், நெஞ்சினாலே புறம்பயந்தொழு துய்தும்என்று நினைந்

டுக்குக் கடலே எல்லையாக இருக்கும்படி உலகத் தனியரசை ஆண்டாலும். கடை எலாம் பிணைத்தேரைவால் - கடைசியில் இந்தப் பதவியெல்லாம் பெண் தேரையின் வால் தேய்வது போலத் தேய்ந்துவிடும். கவலாது - கவலை அடையாமல்.

7. தியக்காது - கலங்கச் செய்யாமல். புன்னைக் கன்னி - புதிதாகப் பூத்த புன்னைமரம்.

8. சலம் - தீய செயல். கலம் - கப்பல்.

10. துஞ்சியும் - இறந்துபட்டும். துயக்கு - தொடர்பு.

தனை, வஞ்சியாதுரை செய்யவல்லவர் வல்லவானுலகாள் வரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : சாட்சிவரதேசுவரர்

அம்பிகை : கரும்படுசொல்லம்மை

வரலாறு; ஆறைமேற்றளியைத் தரிசித்துப் பின் இன்னம்பரையும் தரிசித்துக்கொண்டு, திருப்புறம்பயத்தைத் தரிசிக்கும் ஆவலோடு நம்பியாரூரர் இப்பதிகத்தைப் பாடியருளினார். (பெரிய. ஏயர்கோன். 94–98.)

திருப்பைஞ்ஞீலி

திருச்சிற்றம்பலம்

காருலாவிய நஞ்சையுண்டிருள் கண்டவெண்டலையோடுகொண், டூரெலாந்திரிந் தென்செய்வீர்பலி ஓரிடத்திலே கொள்ளுமீர், பாரெலாம்பணிந் தும்மையேபரவிப்பணியும்பைஞ் ஞீலியீர், ஆரமாவது நாகமோசொலும் ஆரணீய விடங்கரே. 1

சிலைத்துநோக்கும்வெள் ளேறுசெந்தழல் வாயபாம்பது மூசெனும், பலிக்குநீர்வரும் போதுநுங்கையிற் பாம்புவேண்டா பிரானிரே, மலைத்தசந்தொடு வேங்கைகோங்கமும் மன்னுகாரகில் சண்பகம், அலைக்கும்பைம்புனல் சூழ்பைஞ்ஞீலியில் ஆரணீய விடங்கரே. 2

---

2. சிலைத்து – முழங்கி. மூசெனும் – மூசென்ற ஒலியோடு சீறும். சந்து – சந்தன மரம்.

தூயவர்கண்ணும் வாயும்மேனியுந் துன்னஆடை சுடலையில், பேயொடாடலைத் தவிரும்நீரொரு பித்தரோஎம் பிரானிரே, பாயும்நீர்க்கிடங் கார்கமலமும் பைந்தண் மாதவி புன்னையும், ஆயபைம்பொழில் சூழ்பைஞ்ஞீலியில் ஆரணீய விடங்கரே. 3

செந்தமிழ்த்திறம் வல்லிரோசெங்கண் அரவமுன்கை யில் ஆடவே, வந்தாநிற்குமி தென்கொலோபலி மாற்றமாட் டோம் இடகிலோம், பைந்தண்மாமலர் உந்துசோலைகள் கந்தம்நாறுபைஞ் ஞீலியீர், அந்திவானமும் மேனியோ சொலும் ஆரணீய விடங்கரே. 4

நீறுநுந் திருமேனிநித்திலம் நீளெடுங்கண்ணி னாளொ டும், கூறராய்வந்து நிற்றிராற்கொணர்ந் திடுகிலோம்பலி நடமினோ, பாறுவெண்டலை கையில்ஏந்திப்பைஞ் ஞீலி யேனென்றீர் அடிகள்நீர், ஆறுதாங்கிய சடையரோ சொலும் ஆரணீய விடங்கரே. 5

குரவம்நாறிய குழலினார்வளை கொள்வதேதொழில் ஆகிநீர், இரவும்இம்மனை அறிதிரோஇங்கே நடந்துபோகவும் வல்லிரே, பரவிநாடொறும் பாடுவார்வினை பற்றறுக்கும் பைஞ் ஞீலியீர், அரவம்ஆட்டவும் வல்லிரோசொலும் ஆரணீய விடங்கரே. 6

ஏடுலாமலர்க் கொன்றைசூடுதிர் என்பெலாம்அணிந் தென்செய்வீர், காடுநும்பதி ஓடுகையது காதல்செய்பவர் பெறுவதென், பாடல்வண்டிசை ஆலுஞ்சோலைப்பைஞ் ஞீலியேன்என்று நிற்றிரால், ஆடல்பாடலும் வல்லிரோ சொலும் ஆரணீய விடங்கரே. 7

---

3. துன்ன ஆடை - தைத்த ஆடை. கிடங்கு ஆர் - கிடங்கில் உள்ள.

4. மாற்ற மாட்டோம் இடகிலோம் - இடாமல் திரும்ப வும் வலியில்லோம்; பிச்சையிடவும் வலியில்லோம்.

5. பாறு - பருந்து. 7. கையது ஓடு.

மத்தமாமலர் கொன்றைவன்னியுங் கங்கையாளொடு திங்களும், மொய்த்தவெண்டலை கொக்கிறகொடு வெள்ளெருக்கமுன் சடையதாம், பத்தர்சித்தர்கள் பாடியாடும்பைஞ் ஞீலியேன்என்று நிற்றிரால், அத்தியீர்உரி போர்த்திரோ சொலும் ஆரணீய விடங்கரே. 8

தக்கைதண்ணுமை தாளம்வீணை தகுணிச்சங்கிணை சல்லரி, கொக்கரைகுட முழவினோடிசை கூடிப்பாடிநின் றாடுவீர், பக்கமேகுயில் பாடுஞ்சோலைப்பைஞ் ஞீலியேன் என்று நிற்றிரால், அக்கும்ஆமையும் பூண்டிரோசொலும் ஆரணீய விடங்கரே. 9

கையொர்பாம்பரை ஆர்த்தொர்பாம்பு கழுத்தொர் பாம்பவை பின்புதாழ், மெய்யெலாம்பொடிக் கொண்டு பூசுதிர் வேதம்ஓதுதிர் கீதமும், பையவேவிடங் காக நின்றுபைஞ் ஞீலியேன்என்றீர் அடிகள்நீர், ஐயம்ஏற்குமி தென்கொலோசொலும் ஆரணீய விடங்கரே. 10

அன்னஞ்சேர்வயல் சூழ்பைஞ்ஞீலியில் ஆரணீய விடங்கரை, மின்னும் நுண்ணிடை மங்கைமார்பலர் வேண்டிக்காதல் மொழிந்தசொல், மன்னுதொல்புகழ் நாவலூரன் வன்றொண்டன்வாய்மொழி பாடல்பத், துன்னிஇன்னிசை பாடுவார்உமை கேள்வன்சேவடி சேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : மெய்ஞ்ஞான நீலகண்டேசுவரர்

அம்பிகை : விசாலாட்சியம்மை

வரலாறு: திருப்பைஞ்ஞீலிக்கு வந்த நம்பியாரூரர், கோபுரத்தை இறைஞ்சித் திருக்கோயிலை வலமாக வந்தபோது கங்காள மூர்த்தியைத் தரிசித்து மனம் உருகி, அப்பெருமான் பலிக்கு எழுந்தருளியபோது அவர் அழகிய வடிவைக் கண்ட மாதர்கள் மயலடைந்து வினவிய கூற்றாக இப்பதிகத்தைப் பாடியருளினார். (பெரிய. ஏயர்கோன். 83—84.)

---

9. அக்கு – ருத்திராட்சம்; எலும்பு.
10. ஐயம் – பிச்சை.

திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

குருகுபா யக்கொழுங் கரும்புகள் நெரிந்தசா
றருகுபா யும்வயல் அந்தணா ரூரரைப்
பருகுமா றும்பணிந் தேத்துமா றுந்நினைந்
துருகுமா றும்இவை உணர்த்தவல் லீர்களே. 1

பறக்கும்எங் கிள்ளைகாள் பாடும்எம் பூவைகாள்
அறக்கண்என் னத்தகும் அடிகளா ரூரரை
மறக்ககில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கம்இல் லாமையும் உணர்த்தவல் லீர்களே. 2

சூழும்ஓ டிச்சுழன் றுழலும்வெண் ணாரைகாள்
ஆளும்அம் பொற்கழல் அடிகளா ரூரர்க்கு
வாழுமா றும்வளை சுழலுமா றும்மெனக்
கூழுமா றும்இவை உணர்த்தவல் லீர்களே. 3

சக்ரவா ளத்திளம் பேடைகாள் சேவல்காள்
அக்ரமங் கள்செயும் அடிகளா ரூரர்க்கு
வக்ரம்இல் லாமையும் வளைகள்நில் லாமையும்
உக்ரம்இல் லாமையும் உணர்த்தவல் லீர்களே. 4

இலைகொள்சோ லைத்தலை இருக்கும்வெண் ணாரைகாள்
அலைகொள்சூ லப்படை அடிகளா ரூரர்க்குக்
கலைகள்சோர் கின்றதுங் கனவளை கழன்றதும்
முலைகள்பீர் கொண்டதும் மொழியவல் லீர்களே. 5

வண்டுகாள் கொண்டல்காள் வார்மணற் குருகுகாள்
அண்டவா ணர்தொழும் அடிக ளாரூரரைக்
கண்டவா றுங்காமத் தீக்கனன் றெரிந்துமெய்
உண்டவா றும்மிவை உணர்த்தவல் லீர்களே. 6

---

1. பருகுமாறும் – அநுபவிக்கும் வண்ணத்தையும்.
2. பூவைகாள் – மைனாக்களே.
3. சூழும் – சுற்றிலும்.
5. கலைகள் – ஆடைகள். பீர் – பசலை.
6. கொண்டல் - மேகம்.

தேனலங் கொண்டதேன் வண்டுகாள் கொண்டல்காள்
ஆனலங் கொண்டஎம் அடிகளா ரூரர்க்குப்
பானலங் கொண்டஎம் பணைமுலை பயந்துபொன்
ஊனலங் கொண்டதும் உணர்த்தவல் லீர்களே. 7

சுற்றுமுற் றுஞ்சுழன் றுழலும்வெண் ணுரைகாள்
அற்றமுற் றப்பகர்ந் தடிகளா ரூரர்க்குப்
பற்றுமற் றின்மையும் பாடுமற் றின்மையும்
உற்றுமற் றின்மையும் உணர்த்தவல் லீர்களே. 8

குரவம்நா றக்குயில் வண்டினம் பாடநின்
றரவம்ஆ டும்பொழில் அந்தண ரூரரைப்
பரவிநா டும்மதும் பாடிநா டும்மதும்
உருகிநா டும்மதும் உணர்த்தவல் லீர்களே. 9

கூடும்அன் னப்பெடை காள்குயில் வண்டுகாள்
ஆடும்அம் பொற்கழல் அடிகளா ரூரரைப்
பாடுமா றும்பணிந் தேத்துமா றுங்கூடி
ஊடுமா றும்மிவை உணர்த்தவல் லீர்களே. 10

நித்தமா கநினைந் துள்ளமேத் தித்தொழும்
அத்தன்அம் பொற்கழல் அடிகளா ரூரைச்
சித்தம்வைத் தபுகழ்ச் சிங்கடி யப்பன்மெய்ப்
பத்தனூ ரன்சொன்ன பாடுமின் பத்தரே. 11

திருச்சிற்றம்பலம்

வரலாறு : திருவொற்றியூரிலிருந்து திருவாரூரை நோக்கி வருகையில் முதலில் இருகண்ணும் இழந்த நம்பியாரூரர், பின் காஞ்சிபுரத்தில் ஒரு கண் பெற்றார். ஒரு கண்ணோடு திருவாரூர் வந்து, திரு மூலட்டானத்தை அர்த்தசாம பூசையில் தரிசித்து, அன்பர்கள் எதிரணையக்கண்டு, அயலார் வினவுவது போலக் கைக்கிளையமைய இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார். (பெரிய. ஏயர்கோன். 305.)

---

7. தேன்வண்டு – ஒருவகை வண்டு. பயந்து – பரந்து.
8. அற்றம் – சோர்வு.

5. பண் - கொல்லிக்கௌவாணம்

திருவதிகைத் திருவீரட்டானம்

திருச்சிற்றம்பலம்

தம்மானை அறியாத சாதியார் உளரே சடைமேற் கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன், கைம்மா வின் உரியானைக் கரிகாட்டில் ஆடல் உடையானை விடையா னைக் கறைகொண்ட கண்டத், தெம்மான்றன் அடிக்கொண் டென் முடிமேல்வைத் திடும்என்னும் ஆசையால் வாழ் கின்ற அறிவிலா நாயேன், எம்மானை எறிகெடில வடவீரட் டானத் துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. 1

முன்னேஎம் பெருமானை மறந்தென்கொல் மறவா தொழிந்தென்கொல் மறவாத சிந்தையால் வாழ்வேன், பொன்னேநன் மணியேவெண் முத்தேசெம் பவளக் குன்றமே ஈசனென் றுன்னையே புகழ்வேன், அன்னேஎன் அத்தாஎன் றமரரால் அமரப் படுவானை அதிகைமா நகருள்வாழ் பவனை, என்னேஎன் எறிகெடில வடவீரட் டானத் துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. 2

விரும்பினேற் கெனதுள்ளம் விடகிலா விதியே விண் ணவர்தம் பெருமானே மண்ணவர்நின் றேத்தும், கரும்பேஎன் கட்டிஎன் றுள்ளத்தால் உள்கிக் காதல்சேர் மாதராள் கங்கையாள் நங்கை, வரும்புனலுஞ் சடைக்கணிந்து வளராத பிறையும் வரிஅரவும் உடன்துயில வைத்தருளும் எந்தை, இரும்புனல்வந் தெறிகெடில வடவீரட் டானத் துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. 3

---

1. இறைபோதும் – கணமேனும்.
2. அமரப்படுவானை – விரும்பப்படுபவனை.

நாற்றானைத் தொருவனை நாயனை பரனை நள்ளாற்று நம்பியை வெள்ளாற்று விதியைக், காற்றானைத் தீயானைக் கடலானை மலையின் தலையானைக் கடுங்கலுழிக் கங்கைநீர் வெள்ள, ஆற்றானைப் பிறையானை அம்மானை எம்மான் தம்மானை யாவர்க்கும் அறிவரிய செங்கண், ஏற்றானை எறிகெடில வடவீரட் டானத் துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. 4

சேந்தர்தாய் மலைமங்கை திருநிறமும் பரிவும் உடையானை அதிகைமா நகருள்வாழ் பவனைக்,கூந்தல்தாழ் புனல்மங்கை குயில்அன்ன மொழியாள் சடையிடையிற் கயலினங்கள் குதிகொள்ளக் குலாவி, வாய்ந்தநீர் வரவுந்தி மராமரங்கள் வணக்கி மறிகடலை இடங்கொள்வான் மலையாரம் வாரி, ஏந்துநீர் எறிகெடில வடவீரட் டானத் துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. 5

மைம்மான மணிநீல கண்டத்தெம் பெருமான் வல்லேனக் கொம்பணிந்த மாதவனை வானோர், தம்மானைத் தலைமகனைத் தண்மதியும் பாம்பும் தடுமாறுஞ் சடையானைத் தாழ்வரைக்கை வென்ற, வெம்மான மதகரியின் உரியானை வேத விதியானை வெண்ணீறு சண்ணித்த மேனி, எம்மானை எறிகெடில வடவீரட் டானத் துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. 6

வெய்தாய வினைக்கடலில் தடுமாறும் உயிர்க்கு மிகஇரங்கி அருள்புரிந்து வீடுபே றாக்கம், பெய்தானைப்

---

4. கலுழி – வெள்ளம்.

5. சேந்தர் – முருகவேள். புனல் மங்கை – கங்கை. மலை ஆரம் – மலையிலே விளைந்த சந்தனம்.

6. ஏனக் கொம்பு – காட்டுப் பன்றியின் கொம்பு – சண்ணித்த – பூசிய.

பின்ஞகனை மைஞ்ஞவிலுங் கண்டத் தெண்டோள்எம் பெருமானைப் பெண்பாகம் ஒருபால், செய்தானைச் செக்கர்வான் ஒளியானைத் தீவாய் அரவாடு சடையானைத் திரிபுரங்கள். வேவ, எய்தானை எறிகெடில வடவீரட் டானத் துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. 7

பொன்னானை மயிலூர்தி முருகவேள் தாதை பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல், தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற் சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி,அன்னானை அமரர்கள்தம் பெருமானைக் கருமான் உரியானை அதிகைமா நகருள்வாழ் பவனை, என்னானை எறிகெடில வடவீரட் டானத் துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. 8

திருந்தாத வாள்அவுணர் புரமூன்றும் வேவச் சிலைவளைவித் தொருகணையால் தொழில்பூண்ட சிவனைக், கருந்தாள மதகளிற்றின் உரியானைப் பெரிய கண்மூன்றும் உடையானைக் கருதாத அரக்கன், பெருந்தோள்கள் நாலைந்தும் ஈரைந்து முடியும் உடையானைப் பேயுருவ மூன்றுமுற மலைமேல், இருந்தானை எறிகெடில வடவீரட் டானத் துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. 9

என்பினையே கலனுகஅணிந்தானை எங்கள் எருதேறும் பெருமானை இசைஞானி சிறுவன், வன்பனைய வளர் பொழில்சூழ் வயல்நாவ லூர்க்கோன் வன்றொண்டன் ஆரூரன் மதியாது சொன்ன, அன்பனை யாவர்க்கும் அறிவரிய அத்தர் பெருமானை அதிகைமா நகருள்வாழ்

---

9. திருந்தாத - அறநெறியிலே செல்லாத; பகைத்த என்னும் ஆம். தொழில் பூண்ட- வில்தொழிலை மேற்கொண்ட.

10. கலன் – ஆபரணம்.

பவனை, என்பொன்னை எறிகெடில வடவீரட் டானத் துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : நடுநாடு

சுவாமி : அதிகை வீரட்ட நாதர்

அம்பிகை : அதிகை நாயகி

வரலாறு : சிதம்பரத்தை நோக்கிச் சென்ற நம்பியாரூரர் இடையே பல தலங்களைத் தரிசித்து, திருவதிகைக்கு அருகே வருகையில், அப்பர் சுவாமிகள் தொண்டு புரிந்த பதியென்று அதனை மிதிக்க அஞ்சி அதற்குள் புகுதாமல் அதன் புறத்தே இருந்த சித்தவடமடம் புகுந்து இளைப்பாறித் துயின்றார். அப்போது திருவதிகை வீரட்டானமுடைய பெருமான் முதிய அந்தணர் வேடங்கொண்டு அந்த மடத்தில் புகுந்து சுந்தரர் தலைமீது கால்படும்படி படுத்துக்கொண்டிருந்தார். ஆளுடைய நம்பிகள், "என் தலைமேல் கால்வைத்தீரே" என்று கேட்க, "மூப்புமிகுதியால் ஒன்றும் தெரியவில்லை" என்றார். நம்பிகள் வேறு திசையில் தலைவைத்துத் துயில், அங்கும் திருமுடிமேல் அவர் திருத்தாள் நீட்ட, "பல தடவையும் என் தலைமேல் கால் வைத்த நீர் யார்?" என்று கேட்க, சிவபெருமான், "அறிந்திலையோ?" எனச் சொல்லி மறைந்தருளினார். சுந்தரர், "சிவபெருமான் திருவருளையறியாமல் என் செய்தேன்!" எனஇரங்கி இத் திருப்பதிகத்தைப் பாடியருளினார் (பெரிய. தடுத்தாட் கொண்ட. 82 – 88.)

திருத்தொண்டத்தொகை

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன், இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன் இளையான்றன்

குடிமாறன் அடியார்க்கும் அடியேன், வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன் விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன், அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன் ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன், கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன் கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன், மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன் எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன், அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 2

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன் முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன், செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன் திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன், மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த, அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன், பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன் பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன், ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன் ஒலிபுனல்சூழ் சாத்த

---

1. வெல்லுமா மிகவல்ல – வெற்றிகாணும் விதத்தில் மிக்க வன்மை பெற்ற.

3. மும்மையால் - விபூதி, ருத்திராட்சம், சடை என்னும் மூன்றும் கொண்டு. சண்டிப்பெருமான் - சண்டேச நாயனார்.

மங்கை நீலநக்கற் கடியேன், அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 4

வம்பறு வரிவண்டு மணம்நாற மலரும் மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணு, எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன், ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன், நம்பிரான் திருமூலன் அடியார்க் கும் அடியேன் நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன், அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன், சீர் கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன் செங் காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன், கார் கொண்ட கொடைகழறிற் றறிவார்க்கும் அடியேன் கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன், ஆர் கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 6

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன் பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன், மெய்யடியன் நரசிங்க முனையரையற் கடியேன் விரிதிரை சூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன், கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன் கழற்சத்தி வரிஞ்சை யர்கோன் அடியார்க்கும் அடியேன், ஐயடிகள் காடவர் கோன் அடியார்க்கும் அடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 7

---

5. வம்பு - வாசனை. நாட்டம் மிகு - சிவபிரான் திரு வருளால் கண்ணைப்பெற்ற.

6. கழறிற்றறிவார் - சேரமான்பெருமாள் நாயனர்.

7. சத்தியாகிய வரிஞ்சையர்கோன்.

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன், நிறைக் கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன், துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித் தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன், அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 8

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன், மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்குந் தஞ்சை மன்னவ னுஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன், புடை சூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி பொன்னடிக்கே மனம்வைத்தபுகழ்த்துணைக்கும் அடியேன், அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன் ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்

---

9. ஆடி - ஆடுபவனது.

என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனும் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. 11

திருச்சிற்றம்பலம்

வரலாறு: சுந்தரர் திருவாரூர்த் திருகோயிலுக்குள் எழுந் தருளும்போது தேவாசிரயன் என்னும் மண்டபத்தில் உள்ள தொண்டர்களைக் கண்டு, "இவர்களுக்கு அடிமை செய்யும்படி திருவருள் எப்போது வாய்க்கும்!" என்று எண்ணுகையில் சிவபெருமான் முதலடி எடுத்துக் கொடுக்கப் பாடிய திருப் பதிகம் இது.

திருக்காணாட்டுமுள்ளூர்

திருச்சிற்றம்பலம்

வள்வாய மதிமிளிரும் வளர்சடையி னானை
மறையவனை வாய்மொழியை வானவர்தங் கோனைப்
புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கிஉமிழ்ந் தானைப்
பொன்னிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தி னானை
முள்வாய மடல்தழுவி முடத்தாழை ஈன்று
மொட்டலர்ந்து விரைநாறும் முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய கருங்குவளை கண்வளருங் கழனிக்
காணாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 1

ஒருமேக முகிலாகி ஒத்துலகந் தானாய்
ஊர்வனவும் நிற்பனவும் ஊழிகளுந் தானாய்ப்
பொருமேவு கடலாகிப் பூதங்கள் ஐந்தாய்ப்
புனைந்தவனைப் புண்ணியனைப் புரிசடையி னானைத்

---

1. வள்வாய - கூர்மையான முனையையுடைய மதி - இங்கே, பிறை. உமிழ்ந்தானை - திருமாலாக இருப்பவனை.

திருமேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த
திருத்தக்க அந்தணர்கள் ஓதுநகர் எங்கும்
கருமேதி செந்தாம ரைமேயுங் கழனிக்
காறூட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 2

இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தி னானை
இறைவனை மறையவனை எண்குணத்தி னானைச்
சுரும்புயர்ந்த கொன்றையொடு தூமதியஞ் சூடும்
சடையானை விடையானைச் சோதியெனும் சுடரை
அரும்புயர்ந்த அரவிந்தத் தணிமலர்கள் ஏறி
அன்னங்கள் விளையாடும் அகன்துறையின் அருகே
கரும்புயர்ந்து பெருஞ்செந்நெல் நெருங்கிவிளை கழனிக்
காறூட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 3

பூளைபுனை கொன்றையொடு புரிசடையி னானைப்
புனலாகி அனலாகிப் பூதங்கள் ஐந்தாய்
நாளைஇன்று நெருநலாய் ஆகாயம் ஆகி
ஞாயிறாய் மதியமாம் நின்றஎம் பரனைப்
பாளைபடு பைங்கமுகின் சூழலிளந் தெங்கின்
படுமதஞ்செய் கொழுந்தேறல் வாய்மடுத்துப் பருகிக்
காளைவண்டு பாடமயில் ஆலும்வளர் சோலைக்
காறூட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 4

செருக்குவாய்ப் பைங்கண்வெள் அரவரையி னானைத்
தேவர்கள்சூ ளாமணியைச் செங்கண்விடை யானை
முருக்குவாய் மலர்ஒக்குந் திருமேனி யானை
முன்னிலையாய் முழுதுலகம் ஆயபெரு மானை
இருக்குவாய் அந்தணர்கள் எழுபிறப்புள் எங்கும்
வேள்வியிருந் திருநிதியம் வழங்குநகர் எங்கும்
கருக்குவாய்ப் பெண்ணையொடு தெங்கமலி சோலைக்
காறூட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 5

---

4. நெருநலாய் - நேற்றாகி.

5. முருக்குவாய் மலர் — முள்ளுமுருங்கைப்பூ. இருக்கு - வேதம். பெண்ணை - பனை.

விடைஅரவக் கொடிஏந்தும் விண்ணவர்தம் கோனை
வெள்ளத்து மாலவனும் வேதமுத லானும்
அடியிணையுந் திருமுடியுங் காணஅரி தாய
சங்கரனைத் தத்துவனைத் தையல்மட வார்கள்
உடைஅவிழக் குழல்அவிழக் கோதைகுடைந் தாடக்
குங்குமங்கள் உந்திவரு கொள்ளிடத்தின் கரைமேல்
கடைகள்விடு வார்குவளைக் களைவாருங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 6

அருமணியை முத்தினை ஆன்அஞ்சும் ஆடும்
அமரர்கள்தம் பெருமானை அருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பின் ஊறலிருந் தேனைத்
தெரிவரிய மாமணியைத் திகழ்தருசெம் பொன்னைக்
குருமணிகள் கொழித்திழிந்து சுழித்திழியுந் திரைவாய்க்
கோல்வளையார்குடைந்தாடுங் கொள்ளிடத்தின் கரைமேல்
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 7

இழைதழுவு வெண்ணூலும் மேவுதிரு மார்பின்
ஈசன்றன் எண்டோள்கள் வீசியெரி ஆடக்
குழைதழுவு திருக்காதிற் கோளரவம் அசைத்துக்
கோவணம்கொள் குழகனைக் குளிர்சடையி னானைத்
தழைதழுவு தண்ணிறத்த செங்நெலதன் அயலே
தடந்தரள மென்கரும்பின் தாழ்கிடங்கின் அருகே
கழைதழுவித் தேன்தொடுக்குங் கழனிசூழ் பழனக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 8

குனிவினிய கதிர்மதியம் சூடுசடை யானைக்
குண்டலஞ்சேர் காதவனை வண்டினங்கள் பாடப்
பனிஉதிருஞ் சடையானைப் பால்வெண்ணீற் றானைப்
பலஉருவுந் தன்உருவே ஆயபெரு மானைத்

---

6. விடையாகிய முழக்கத்தையுடைய கொடியைப் பிடிக்கும்; அரவம் - முழக்கம். குவளை களைவாரும் - குவளையைக் களையாக எடுத்தெறியும்.
8. கழை - மூங்கில்.

துனிவினிய தூயமொழித் தொண்டைவாய் நல்லார்
தூநீலங் கண்வளருஞ் சூழ்கிடங்கின் அருகே
கனிவினிய கதலிவனந் தழுவுபொழிற் சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 9

தேவியம்பொன் மலைக்கோமான் தன்பாவை ஆகத்
தனதுருவம் ஒருபாகஞ் சேர்த்துவித்த பெருமான்
மேவியவெந் நரகத்தில் அழுந்தாமை நமக்கு
மெய்ந்நெறியைத் தான்காட்டும் வேதமுத லானைத்
தூவிவாய் நாரையொடு குருகுபாய்ந் தார்ப்பத்
துறைக்கெண்டை மிளிர்ந்துகயல் துள்ளிவிளை யாடக்
காவிவாய் வண்டுபல பண்செய்யுங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 10

திரையினார் கடல்சூழ்ந்த தென்னிலங்கைக் கோனைச்
செற்றவனைச் செஞ்சடைமேல் வெண்மதியி னானைக்
கரையினார் புனல்தழுவு கொள்ளிடத்தின் கரைமேற்
கானாட்டு முள்ளூரிற் கண்டுகழல் தொழுது
உரையினார் மதயானை நாவலா ரூரன்
உரிமையால் உரைசெய்த ஒண்தமிழ்கள் வல்லார்
வரையினார் வகைஞாலம் ஆண்டவர்க்குந் தாம்போய்
வானவர்க்குந் தலைவராய் நிற்பரவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு
சுவாமி: பதஞ்சலீசுவரர்;
அம்பிகை : கோல்வளைக்கையம்மை.

---

9. துனிவு - வலிவு. துனிவு இனிய தூய மொழி-ஊடற்காலத்தும் இனிமையும் தூய்மையும் உள்ள வார்த்தை.

திருக்கச்சூர் ஆலக்கோயில்

திருச்சிற்றம்பலம்

முதுவாய் ஓரி கதற முதுகாட் டெரிகொண் டாடல் முயல்வானே, மதுவார் கொன்றைப் புதுவீ சூடும் மலையான் மகள்தன் மணவாளா, கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக் கண்டால் அடியார் கவலாரே, அதுவே ஆமா றிதுவோ கச்சூர் ஆலக் கோயில் அம்மானே. 1

கச்சேர் அரவொன் றரையில் அசைத்துக் கழலுஞ் சிலம்புங் கலிக்கப் பலிக்கென், றச்சம் போதா ஊரூர் திரியக் கண்டால் அடியார் உருகாரே, இச்சை அறியோம் எங்கள் பெருமான் ஏழேழ் பிறப்பும் எனையாள்வாய், அச்சம் இல்லாக் கச்சூர் வடபால் ஆலக் கோயில் அம்மானே. 2

சாலக் கோயில் உளநின் கோயி லவையென் தலைமேற் கொண்டாடி, மாலைத் தீர்ந்தேன் வினையுந் துரந்தேன் வானோர் அறியா நெறியானே, கோலக் கோயில் குறையாக் கோயில் குளிர்பூங் கச்சூர் வடபாலை, ஆலக் கோயிற் கல்லால் நிழற்கீழ் அறங்கட் டுரைத்த அம்மானே. 3

விடையுங் கொடியுஞ் சடையும் உடையாய் மின்னேர் உருவத் தொளியானே, கடையும் புடைசூழ் மணிமண் டபமுங் கன்னி மாடங் கலந்தெங்கும், புடையும் பொழிலும் புனலுந் தழுவிப் பூமேல் திருமா மகள்புல்கி, அடையுங் கழனிப் பழனக் கச்சூர் ஆலக் கோயில் அம்மானே. 4

---

1. ஓரி - நரி. முதுகாடு - சுடுகாடு. வீ – மலர். கதுவாய்த்தலையில் – முளியாக உடைந்த கபாலத்தில். பலி - பிச்சை. கவலாரே: வினா.

2. கச்சாக அரவை அரையில் அசைத்து. கலிக்க - ஒலிக்க.

3. மாலை - மயக்கத்தை.

4. கடை – வாயில்.

மேலை விதியே வினையின் பயனே விரவார் புரமூன் றெரிசெய்தாய், காலை எழுந்து தொழுவார் தங்கள் கவலை களைவாய் கறைக்கண்டா, மாலை மதியே மலைமேல் மருந்தே மறவேன் அடியேன் வயல்சூழ்ந்த, ஆலைக் கழனிப் பழனக் கச்சூர் ஆலக் கோயில் அம்மானே. 5

பிறவாய் இறவாய் பேணாய் மூவாய் பெற்றம் ஏறிப் பேய்சூழ்தல், துறவாய் மறவாய் சுடுகா டென்றும் இட மாக் கொண்டு நடமாடி, ஒறுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக் கண்டால் அடியார் உருகாரே, அறவே ஒழியாய் கச்சூர் வடபால் ஆலக் கோயில் அம்மானே. 6

பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாக் கொள்வானே, மெய்யே எங்கள் பெருமான் உன்னை நினைவார் அவரை நினைகண்டாய், மையார் தடங்கண் மடந்தை பங்கா கங்கார் மதியஞ் சடைவைத்த, ஐயா செய்யாய் வெளியாய் கச்சூர் ஆலக் கோயில் அம்மானே. 7

ஊனைப் பெருக்கி உன்னை நினையா தொழிந்தேன் செடியேன் உணர்வில்லேன், கானக் கொன்றை கமழ மலருங் கடிநா றுடையாய் கச்சூராய், மானைப் புரையும் மடமென் னோக்கி மடவாள் அஞ்ச மறைத்திட்ட, ஆனைத் தோலாய் ஞானக் கண்ணாய் ஆலக் கோயில் அம்மானே. 8

---

5. ஆலை – கரும்பு.

6. பேணாய் - பிறர் யாரையும் தொழுது நில்லாய். மூவாய் - மூப்பை அடையாய். ஒருவாய்த்தலை - மூளியான கபாலம்.

7. கங்கு - ஓரம். வெளியாய் - வெள்ளை நிறத்தவனே.

8. செடியேன் - தீயேன். கடி – நறுமணம்.

காதல் செய்து களித்துப் பிதற்றிக் கடிமா மலரிட் டுனை ஏத்தி, ஆதல் செய்யும் அடியார் இருக்க ஐயங் கொள்ளவ தழகிதே, ஓதக்கண்டேன் உன்னை மறவேன் உமையாள் கணவா எனையாள்வாய், ஆதற் பழனக் கழனிக் கச்சூர் ஆலக்கோயில் அம்மானே. 9

அன்னம் மன்னும் வயல்சூழ் கச்சூர் ஆலக் கோயில் அம்மானை, உன்ன முன்னும் மனத்தா ரூரன் ஆரூ ரன் பேர் முடிவைத்த, மன்னு புலவன் வயல்நா வலர்கோன் செஞ்சொல் நாவன் வன்றொண்டன், பன்னு தமிழ் நூல் மாலை வல்லார் அவரென் தலைமேற் பயில்வாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: தொண்டை நாடு

சுவாமி: விருந்திட்டவரதர்; அம்பிகை: உமையம்மை.

வரலாறு: சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கழுக்குன்றத்தைத் தரிசித்துக்கொண்டு, திருக்கச்சூர் ஆலக்கோயிலை அடைந்து, ஆலய தரிசனம் செய்துகொண்டு, கோவில்புறத்தே அணைந்தபொழுது, அவருக்கு அமுது அளிக்கும் பரிசனங்கள் வாராமையினால் பசியோடு கோயிலுக்கு வெளியே வந்திருந்தார். அப்பொழுது சிவபெருமான் அவர்முன் ஓர் அந்தணராய்த் தோன்றி, "அன்னப் பிட்சை எடுத்து உம்க்கு அளிக்கின்றேன். எங்கும் செல்லாமல் இங்கு இரும்" என்று கூறி, அவ்வூரில் வீடு தோறும் சென்று பிட்சை வாங்கி வந்து ஆளுடைய நம்பிகளுக்கு அளித்தார். நம்பிகள் உணவு அருந்தி உவந்திருந்தபொழுது சிவபெருமான் மறைந்தருளினார். வந்தவர் சிவபெருமான் என்பதை உணர்ந்த சுவாமிகள் எம்பெருமான் பெருங்கருணைத்திறத்தை நினைந்து இப்பதிகத்தைப் பாடியருளினார் (பெரிய. ஏயர்கோன். 174-182.)

---

9. ஆதல் செய்யும் - ஆக்கத்தைப் பெறும்.

திருவெஞ்சமாக்கூடல்

திருச்சிற்றம்பலம்

எறிக்குங் கதிர்வேய் உதிர்முத்தமொ டேலம் இலவங் கந் தக்கோலம் இஞ்சி, செறிக்கும் புனலுட் பெய்துகொண்டுமண்டித் திளைத்தெற்றுசிற்றா றதன்கீழ்க் கரைமேல், முறிக்குந்தழைமா முடப்புன்னைஞாழல் குருக் கத்திகள்மேற் குயில்கூவலறா, வெறிக்குங் கலைமா வெஞ்ச மாக்கூடல் விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 1

குளங்கள்பலவுங் குழியுந்நிறையக் குடமாமணிசந் தனமும்மகிலும், துளங்கும்புனலுட் பெய்துகொண்டு மண்டித் திளைத்தெற்றுசிற்றா றதன்கீழ்க்கரைமேல், வளங் கொள் மதில்மா ளிகைகோ புரமும் மணிமண்டபமும் இவைமஞ்சுதன்னுள், விளங்கும்மதிதோய் * வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 2

வரைமான் அனையார் மயிற்சாயல் நல்லார் வடிவேற் கண் நல்லார் பலர்வந்திறைஞ்சத், திரையார்புனலுட் பெய்துகொண்டுமண்டித் திளைத்தெற்றுசிற்றா றதன்கீழ்க் கரைமேல், நிரையார்கமுகுந் நெடுந்தாள் தெங்குங் குறுந் தாட்பலவும் விரவிக்குளிரும், விரையார் பொழில்சூழ் வெஞ்சமாக்கூடல் விகிர்தா அடியேனையும்வேண்டுதியே. 3

பண்ணேர் மொழியாளைஓர் பங்குடையாய் படுகாட் டகத்தென் றும்ஓர் பற்றொழியாய், தண்ணார் அகிலுந் நலசாமரையும் அலைத்தெற்றுசிற்றா றதன்கீழ்க்கரைமேல், மண்ணார்முழவுங் குழலும் இயம்ப மடவார்நடமா டுமணி யரங்கில், விண்ணார்மதிதோய் வெஞ்சமாக்கூடல் விகிர்தா அடியேனையும்வேண்டுதியே. 4

---

1. கதிர்: முத்தத்துக்கு விசேடணம். வேய் - மூங்கில். முறிக்கும் - தழைக்கும். ஞாழல்- புலிநகக்கொன்றை. விகிர்தன்: தலத்துமூர்த்தியின் திருநாமம்.

2. மஞ்சு - மேகம். 3. நிரை - வரிசை.

4. சாமரை - கவரிமானின் வால்.

துளைவெண்குழையுஞ் சுருள்வெண்டோடும் தூங்குங் காதில் துளங்கும்படியாய், களையேகமழும் மலர்க்கொன்றையினாய் கலந்தார்க்கருள்செய் திடுங்கற்பகமே, பிளை வெண் பிறையாய் பிறங்குஞ்சடையாய் பிறவாதவனே பெறுதற்கரியாய், வெளைமால்விடையாய் வெஞ்சமாக் கூடல் விகிர்தா அடியேனையும்வேண்டுதியே. 5

தொழுவார்க்கெளியாய் துயர்தீரநின்றாய் சுரும்பார் மலர்க்கொன்றைதுன்றுஞ்சடையாய், உழுவார்க்கரிய விடையேறி ஒன்னார் புரந்தீஎழஓ டுவித்தாய் அழகார், முழவார் ஒலிபாடலொடாடல்அறா முதுகாடரங்கா நட மாடவல்லாய், விழவார்மறுகில் வெஞ்சமாக்கூடல் விகிர்தா அடியேனையும்வேண்டுதியே. 6

கடமாகளியானைஉரித்தவனே கரிகாடிடமா அனல் வீசிநின்று, நடமாடவல்லாய் நரையேறுகந்தாய் நல்லாய் நறுங்கொன்றைநயந்தவனே, படம்ஆயிரமாம் பருத்துத் திப்பைங்கண் பகுவாயெயிற்றோ டழலே உமிழும், விட வார்அரவா வெஞ்சமாக்கூடல் விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 7

காடும்மலையுந் நாடும்மிடறிக் கதிர்மாமணிசந் தனமும் மகிலும், சேடன்உறையும் இடந்தான்விரும்பித் திளைத்

---

5. குழைவலக்காதிலும் தோடு இடக்காதிலும் உள்ளவை. படியாய் - திருவுருவத்தை உடையவனே. களையே -கள்ளையே; தேனை. பிள்ளை வெண்பிறையாய் வெள்ளைமால் விடை.

6. உழுவார்க்கு அரிய விடை -உழுந்தொழில் உடையவருக்குக் கிடைத்தற்கரிய இடபம்; என்றது உலகத்து எருது போன்றதன்று என்பதைக் குறித்தபடி.

7. கரிகாடு - சுடுகாடு. நரை – வெள்ளை. பருத்துத்தி பெரிய படப்பொறியை உடைய.

தெற்றுசிற்று றதன்கீழ்க்கரைமேல், பாடல்முழவுங் குழ லும்மியம்பப் பணைத்தோளியர்பா டலொடாடல்அறு, வேடர்விரும்பும் வெஞ்சமாக்கூடல் விகிர்தாஅடியே னையும் வேண்டுதியே. 8

கொங்கார்மலர்க்கொன் றையந்தாரவனே கொடு கொட்டியொர் வீணைஉடையவனே, பொங்காடரவும் புனலுஞ்சடைமேற் பொதியும்புனிதா புனஞ்சூழ்ந்தழகார், துங்கார்புனலுட் பெய்துகொண்டுமண்டித் திளைத்தெற்று சிற்று றதன்கீழ்க்கரைமேல், வெங்கார் வயல்சூழ் வெஞ்ச மாக்கூடல் விகிர்தாஅடியே னையும்வேண்டுதியே. 9

வஞ்சிநுண்ணிடையார் மயிற்சாயலன்னார் வடிவேற் கண்நல்லார் பலர்வந்திறைஞ்சும், வெஞ்சமாக்கூடல் விகிர்தாஅடியே னையும் வேண்டுதியே என்றுதான்விரும்பி, வஞ்சியாதளிக்கும் வயல்நாவலர்கோன் வனப்பகையப் பன் வன்றொண்டன்சொன்ன, செஞ்சொற்றமிழ்மாலைகள் பத்தும்வல்லார் சிவலோகத்திருப்பது திண்ணமன்றே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: கொங்கு நாடு
சுவாமி: விகிர்தேசுவரர்; அம்பிகை - விகிர்தேசுவரி.

திருமுதுகுன்றம்

திருச்சிற்றம்பலம்

நஞ்சியிடைஇன்று நாளைஎன் றும்மை நச்சுவார், துஞ் சியிட்டாற் பின்னைச் செய்வதென்அடி கேள்சொலீர், பஞ் சியிடப் புட்டில் கீறுமோபணி யீர்அருள், முஞ்சியிடைச் சங்கமார்க் குஞ்சீர்முது குன்றரே. 1

---

1. நஞ்சி – நைந்து. பஞ்சி - பஞ்சு. முஞ்சி - முற்றம்.

ஏரிக்கனகக் கமல மலர்அன்ன சேவடி, ஊரித்தனையுந் திரிந்தக் காலவை நோங்கொலோ, வாரிக்கட் சென்று வளைக்கப் பட்டு வருந்திப்போய், மூரிக்களிறு முழக்க றுமுது குன்றரே. 2

தொண்டர்கள் பாடவிண் ணோர்கள் ஏத்த உழிதர் வீர், பண்டகந் தோறும் பலிக்குச்செல்வதும் பான்மையே, கண்டகர் வாளிகள் வில்லிகள்புறங் காக்குஞ்சீர், மொண் டகை வேள்வி முழக்கறுமுது குன்றரே. 3

இளைப்பறி யீர்இம்மை ஏத்துவார்க்கம்மை செய்வ தென், விளைப்பறி யாதவெங் காலனைஉயிர் வீட்டினீர், அளைப்பிரி யாஅர வல்குலாளொடு கங்கைசேர், முளைப் பிறைச் சென்னிச் சடைமுடிமுது குன்றரே. 4

ஆடி அசைந்தடி யாருநீரும் அகந்தொறும், பாடிப் படைத்த பொருள்எலாம் உமை யாளுக்கோ, மாட மதி லணி கோபுரமணி மண்டபம், மூடி முகில்தவழ் சோலை சூழ்முது குன்றரே. 5

இழைவளர் நுண்ணிடை மங்கையோடிடு காட்டிடைக், குழைவளர் காதுகள் மோதநின்று குனிப்பதே, மழைவள ரும்நெடுங் கோட்டிடை மதயானைகள், முழைவளர்ஆளி முழக்கறுமுது குன்றரே. 6

---

2. வாரி – யானையைப்படுக்கும் இடம்.

3. உழிதர்வீர் - திரிவீர். பண்டு அகந்தோறும். கண்டகர் - கொடியவர். மொண்டு அகை வேள்வி – நெய்யை முகந்து தீ வளர்க்கும் யாகம்; அகைத்தல் - கொழுந்துவிடச் செய்தல்.

4. அளை - வளையை.

6. குனிப்பதே – ஆடுவது தக்கதா? முழை – குகை.

சென்றி லிடைச்செடி நாய்குரைக்கச் சேடிச்சிகள்,
மன்றி லிடைப்பலி தேரப்போவது வாழ்க்கையே, குன்றி
லிடைக்களி றுளிகொள்ளக் குறத்திகள், முன்றி லிடைப்
பிடி கன்றிடும்முது குன்றரே. 7

அந்தி திரிந்தடி யாரும்நீரும் அகந்தொறும், சந்திகள்
தோறும் பலிக்குச்செல்வது தக்கதே, மந்தி கடுவனுக் குண்
பழம் நாடி மலைப்புறம், முந்தி அடிதொழ நின்றசீர்முது
குன்றரே. 8

செட்டிநின் காதலி ஊர்கள்தோறும் அறஞ்செய,
அட்டுமின் சில்பலிக் கென்றகங்கடை நிற்பதே, பட்டிவெள்
ளேறுகந் தேறுவீர்பரி சென்கொலோ, முட்டி அடிதொழ
நின்றசீர்முது குன்றரே. 9

எத்திசை யுந்திரிந் தேற்றக்காற்பிறர் என்சொலார்,
பத்தியி னால்இடு வாரிடைப்பலி கொள்மினே, எத்திசை
யுந்திரை எறமோதிக் கரைகள்மேல், முத்தி முத்தாறு
வலஞ்செயும்முது குன்றரே. 10

முத்தி முத்தாறு வலஞ்செயும்முது குன்றரைப், பித்த
னைப் பான்அடித் தொண்டனூரன் பிதற்றிவை, தத்துவ
ஞானிகள் ஆயினார்தடு மாற்றிலார், எத்தவத் தோர்களும்
எத்துவார்க்கிடர் இல்லையே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : நடுநாடு

சுவாமி பழமலைநாதர் ; அம்பிகை : பெரியநாயகியம்மை.

---

7. செடி – நாற்றம். சேடிச்சிகள் மன்றிலிடை – பணி செய்வதற்குரிய பெண்கள் உள்ள பொதுவிடத்தில். குன்றுகிய இல்லிடையே. கன்றிடும் – வருந்தும்.

8. மந்தி – பெண் குரங்கு. கடுவன் – ஆண் குரங்கு.

9. செட்டி – செட்டாக இருப்பவள். அகம் கடை – வீட்டு வாயிலில். முட்டி – மிக முயன்று.

10. ஏற்றக்கால் - பிச்சை வாங்கினால். முத்தி – முத்த மிட்டு; மோதி.

முடிப்பது கங்கை

திருச்சிற்றம்பலம்

முடிப்பது கங்கையுந் திங்களுஞ் செற்றது மூவெயில்,
நொடிப்பது மாத்திரை நீறெ ழக்கணை நூறினார், கடிப்
பதும் ஏறுமென் றஞ்சு வன்றிருக் கைகளால், பிடிப்பது
பாம்பன்றி இல்லை யோஎம் பிரானுக்கே. 1

தூறன்றி ஆடரங் கில்லை யோசுட லைப்பொடி, நீறன்
றிச் சாந்தமற் றில்லை யோஇம வான்மகள், கூறன்றிக்
கூறுவ தில்லை யோகொல்லைச் சில்லைவெள், ளேறன்றி
ஏறுவ தில்லை யோஎம் பிரானுக்கே. 2

தட்டெனுந் தட்டெனுந் தொண்டர் காள்தடு மாற்
றத்தை, ஒட்டெனும் ஒட்டெனும் மாநி லத்துயிர் கோற
லைச், சிட்டன் திரிபுரஞ் சுட்ட தேவர்கள் தேவனை, வெட்
டெனப் பேசன்மின் தொண்டர் காள்எம் பிரானையே. 3

நரிதலை கவ்வநின் றோரி கூப்பிட நள்ளிருள், எரிதலைப்
பேய்புடை சூழ ஆரிருட் காட்டிடைச், சிரிதலைமாலை
சடைக்க ணிந்தஎஞ் செல்வனைப், பிரிதலைப் பேசன்மின்
தொண்டர் காளெம் பிரானையே. 4

வேயன தோளி மலைம களைவி ரும்பிய, மாயமில்
மாமலை நாடன் ஆகிய மாண்பனை, ஆயன சொல்லிநின்
றார்கள் அல்லல் அறுக்கிலும், பேயனே பித்தனே என்ப
ரால்எம் பிரானையே. 5

இறைவனென் றெம்பெரு மானை வானவர் ஏத்தப்
போய்த், துறையொன் றித்தூ மலரிட் டடியிணை போற்று
வார், மறையன்றிப் பாடுவ தில்லை யோமல்கு வானிளம்,
பிறையன்றிச் சூடுவ தில்லை யோஎம் பிரானுக்கே. 6

---

1. நொடிப்பது மாத்திரை - நொடியளவு நேரத்தில். கணை நூறினார் – அம்பினால் அழித்தார்.
2. தூறு - மரத்தின் அடி. சில் ஐ - சிறிய அழகிய.
4. சிரிதலை - நகுதலை; தசையற்ற என்புத்தலை.
5. வேய் அன – மூங்கிலை ஒத்த.

தாருந்தண் கொன்றையுங் கூவிளந்தனி மத்தமும், ஆரும் அளவறி யாத ஆதியும் அந்தமும், ஊரும் ஒன் றில்லை உலகெ லாம்உகப் பார்தொழப், பேருமோ ராயிரம் என்ப ரால்எம் பிரானுக்கே. 7

அரியொடு பூமிசை யானும் ஆதியும் அறிகிலார், வரி தரு பாம்பொடு வன்னி திங்களும் மத்தமும், புரிதரு புன் சடை வைத்த எம்புனி தற்கினி, எரிஅன் றி அங்கைக்கொன் றில்லை யோஎம் பிரானுக்கே. 8

கரிய மனச்சமண் காடி யாடு கழுக்களால், எரிய வசவுணுந் தன்மை யோஇம வான்மகள், பெரிய மனந்தடு மாறவேண் டிப்பெம் மான்மதக், கரியின் உரியல்ல தில்லை யோஎம் பிரானுக்கே. 9

காய்சின மால்விடை மாணிக்கத் தெங்கறைக் கண் டத், தீச னைஊரன் எட்டோ டிரண்டு விரும்பிய, ஆயின சீர்ப்பகை ஞானியப் பன்அடித் தொண்டன்றான், ஏசின பேசுமின் தொண்டர் காள்எம் பிரானையே. 10

திருச்சிற்றம்பலம்

திருவாமாத்தூர்

திருச்சிற்றம்பலம்

காண்டனன் காண்டனன் காரிகை யாள்தன் கருத் தனாய், ஆண்டனன் ஆண்டனன் ஆமாத் தூர்எம் அடிகட் காட், பூண்டனன் பூண்டனன் பொய்யன் று சொல்லுவன் கேண்மின்கள், மீண்டனன் மீண்டனன் வேதவித் தல்லா தவர்கட்கே. 1

---

8. ஆதியும் – முதலான தேவகணங்களும்.

1. காண்டனன் – கண்டேன்; கண்டனன் என்பதன் விகாரம். அல்லாதவர்களிடமிருந்து மீண்டனன்.

பாடுவன் பாடுவன் பார்ப்பதி தன்னடி பற்றிநான்,
தேடுவன் தேடுவன் திண்ணெனப் பற்றிச் செறிதர,
ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூரெம் அடிகளைக், கூடுவன்
கூடுவன் குற்றம தற்றென் குறிப்பொடே. 2

காய்ந்தவன் காய்ந்தவன் கண்அழ லால்அன்று
காமனைப், பாய்ந்தவன் பாய்ந்தவன் பாதத்தி னால்அன்று
கூற்றத்தை, ஆய்ந்தவன் ஆய்ந்தவன் ஆமாத் தூரெம் அடிக
ளார், ஏய்ந்தவன் ஏய்ந்தவன் எம்பி ராட்டியைப்
பாகமே. 3

ஓர்ந்தனன் ஓர்ந்தனன் உள்ளத்துள் ளேநின்ற ஒண்
பொருள், சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று திருவொற்றி
யூர்புக்குச், சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்றோள்
தடமுலை, ஆர்ந்தனன் ஆர்ந்தனன் ஆமாத் தூர்ஐயன்
அருளதே. 4

வென்றவன் வென்றவன் வேள்வியில் விண்ணவர் தங்
களைச், சென்றவன் சென்றவன் சில்பலிக் கென்று தெரு
விடை, நின்றவன் நின்றவன் நீதி நிறைந்தவர் தங்கள்பால்,
அன்றவன் அன்றவன் செய்யருள் ஆமாத்தூர் ஐயனே. 5

காண்டவன் காண்டவன் காண்டற் கரிய கடவுளாய்,
நீண்டவன் நீண்டவன் நாரணன் நான்முகன் நேடவே,
ஆண்டவன் ஆண்டவன் ஆமாத் தூரையும் எனையும்ஆட்,
பூண்டவன் பூண்டவன் மார்பிற் புரிநூல் புரளவே. 6

எண்ணவன் எண்ணவன் ஏழுல கத்துயிர் தங்கட்குக்,
கண்ணவன் கண்ணவன் காண்டுமென் பாரவர் தங்கட்குப்,
பெண்ணவன் பெண்ணவன் மேனியோர் பாகமாம் பிஞ்ஞ
கன், அண்ணவன் அண்ணவன் ஆமாத் தூரெம் அடி
களே. 7

---

6. காண்டவன் - யாவற்றையும் கண்டவன். நேட - தேட.
7. காண்டும் - பார்ப்போம்.

பொன்னவன் பொன்னவன் பொன்னைத்தந் தென்னைப் போகவிடா, மின்னவன் மின்னவன் வேதத்தி னுட்பொரு ளாகிய, அன்னவன் அன்னவன் ஆமாத்தூர் ஐயனை ஆர்வத்தால், என்னவன் என்னவன் என்மனத் தின்புற் றிருப்பனே. 8

தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நாடொறும், நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல், மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே, ஆடுவன் ஆடுவன் ஆமாத் தூர்எம் அடிகளே. 9

உற்றனன் உற்றவர் தம்மை ஒழிந்துள்ளத் துள்பொருள், பற்றினன் பற்றினன் பங்கயச் சேவடிக் கேசெல்ல, அற்றனன் அற்றனன் ஆமாத்தூர் மேயான் அடியார்கட்காள், பெற்றனன் பெற்றனன் பெயர்த்தும் பெயர்த்தும் பிறவாமைக்கே. 10

ஐயனை அத்தனை ஆளுடை ஆமாத்தூர் அண்ணலை, மெய்யனை மெய்யர்க்கு மெய்ப்பொரு ளான விமலனை, மையனை மையணி கண்டனை வன்றொண்டன் ஊரன் சொல், பொய்யொன்றும் இன்றிப் புலம்புவார் பொற்கழல் சேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : நடுநாடு

சுவாமி : அழகியநாதர் ; அம்பிகை : அழகியநாயகியம்மை.

---

10. பிறவாமையின் பொருட்டுப் பெற்றேன்.

திருநாகைக்காரோணம்

திருச்சிற்றம்பலம்

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப் பாவைய ரைக் கிறிபேசிப் படிறுடித் திரிவீர், செத்தார்தம் எலும் பணிந்து சேவேறித் திரிவீர் செல்வத்தை மறைத்துவைத் தீர் எனக்கொருநாள் இரங்கீர், முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை அவைபூணத் தந்தருளி மெய்க் கினிதா நாறும், கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 1

வேம்பினொடு தீங்கரும்பு விரவினைத் தீற்றி விருத்தி நான் உமைவேண்டத் துருத்திபுக்கங் கிருந்தீர், பாம்பி னொடு படர்சடைகள் அவைகாட்டி வெருட்டிப் பகட்ட நான் ஒட்டுவனே பலகாலும் உழன்றேன், சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கில் திகழும் திருவாரூர் புக்கிருந்த தீவண்ணர் நீரே, காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 2

பூண்பதோர் இளஆமை பொருவிடையொன் றேறிப் பொல்லாத வேடங்கொண் டெல்லாருங் காணப், பாண் பேசிப் படுதலையிற் பலிகொள்கை தவிரீர் பாம்பினொடு படர்சடைமேல் மதிவைத்த பண்பீர், வீண்பேசி மட வார்கை வெள்வளைகள் கொண்டால் வெற்பரையன் மடப் பாவை பொறுக்குமோ சொல்லீர், காண்பினிய மணி மாடம் நிறைந்தநெடு வீதிக் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 3

---

1. கிறி பேசி – பரியாசப் பேச்சுக்கள் பேசி. படிறு ஆடி – பொய்யான வார்த்தைகளைச் சொல்லி. சே - இடபம்.

2. தீற்றி – தின்னச் செய்து. விருத்தி - மானியம்.

3. பாண் பேசி - பகடி பேசி.

விட்டதோர் சடைதாழ வீணைவிடங் காக வீதிவிடை ஏறுவீர் வீண்அடிமை உகந்தீர், துட்டரா யினபேய்கள் சூழநடம் ஆடிச் சுந்தரராய்த் தூமதியஞ் சூடுவது சுவண்டே, வட்டவார் குழல்மடவார் தம்மைமயல் செய்தல் மாதவமோ மாதிமையோ வாட்டமெலாந் தீரக், கட்டியெமக் கீவதுதான் எப்போது சொல்லீர் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 4

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து வினைக் கேடு பலபேசி வேண்டியவா திரிவீர், தொண்டாடித் திரிவேனைத் தொழும்புதலைக் கேற்றும் சுந்தரனை **கந்தமுதல் ஆடைஆபரணம், பண்டாரத் தேஎனக்குப் பணித்தருள வேண்டும் பண்டுதான் பிரமாணம் ஒன்றுண்டே** நம்மைக், கண்டார்க்குங் காண்பரிதாய்க் கனலாகி நிமிர்ந்தீர் கடல் நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 5

இலவவிதழ் வாய்உமையோ டெருதேறிப் பூதம் இசைபாட இடுபிச்சைக் கெச்சுச்சம் போது, பலவகம்புக் குழிதர்வீர் பட்டோடு சாந்தம் பணித்தருளா திருக்கின்ற பரிசென்ன படிறே, உலவுதிரைக் கடல்நஞ்சை அன்றமரர் வேண்ட உண்டருளிச் செய்ததுமக் கிருக்கொண்ணா திடவே, கலவமயில் இயலவர்கள் நடமாடுஞ் செல்வக் கடல் நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 6

---

4. சுவண்டு - கபடம். மாதிமை - அழகு. கட்டி - பொற்கட்டி ; வேண்டிய பொருளையெல்லாம் சேர்த்துக் கட்டியெனலுமாம்.

5. மிண்டாடி - மிடுக்கான காரியங்களைச் செய்து. பண்டாரத்தே – திருக்கோயிற் கருவூலத்திலிருந்து.

6. எச்சு உச்சம்போது – சூரியன் மிக்கு நிற்கும் உச்சி வேளையில். உழிதர்வீர் – திரிபவரே. படிறே - வஞ்சகமோ?

தூசுடைய அகலல்குல் தூமொழியாள் ஊடல் தொலையாத காலத்தோர் சொற்பாடாய் வந்து, தேசுடைய இலங்கையர்கோன் வரைஎடுக்க அடர்த்துத் திப்பியகீதம்பாடத் தேரொடுவாள் கொடுத்தீர், நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த நிறைமறையோர் உறைவீழிமிழலைதனில் நித்தல், காசருளிச் செய்தீர்இன் றெனக்கருள வேண்டும் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 7

மாற்றமேல் ஒன்றுரையீர் வாளாநீர் இருந்தீர் வாழ்விப்பன் எனஆண்டீர் வழியடியேன் உமக்கு, ஆற்றவேற்றிருவுடையீர் நல்கூர்ந்தீர் அல்லீர் அணியாரூர் புகப்பெய்த அருநிதிய மதனில், தோற்றமிகு முக்கூற்றில் ஒருகூறு வேண்டும் தாரீரேல் ஒருபொழுதும் அடியெடுக்கல் ஒட்டேன், காற்றனைய கடும்பரிமா ஏறுவது வேண்டும் கடல் நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 8

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன், எண்ணிலி உண் பெருவயிறன் கணபதிஒன் றறியான் எம்பெருமான் இதுதகவோ இயம்பியருள் செய்யீர், திண்ணெனஎன் உடல்விருத்தி தாரீரே ஆகில் திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக், கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே. 9

---

7. சொற்பாடாய் வந்து - சொல்லி வைத்ததுபோல வந்து. அடியவர்கள் - ஞானசம்பந்தருடனும் அப்பருடனும் வந்த சிவனடியார்கள். நித்தல் – தினந்தோறும்.

8. மாற்றம் – விடை. ஆற்ற ஏல் திருஉடையீர் - மிகுதியாகப் பெற்ற செல்வத்தை உடையீர்.

9. உடல் விருத்தி – பொன்னாகிய சம்மானத்தை. கண்ணறையன் – தலையற்றவன். கொடும்பாடன் – கொடியவன்

மறிஏறு கரதலத்தீர் மாதிமையேல் உடையீர் மாநிதியந் தருவனென்று வல்லீராய் ஆண்டீர், கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீர் அடிகேள் கிறியும்மாற் படுவேனோ திருவாணை உண்டேல், பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர் பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும், கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டும் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே மற்றாரை உடையேன், உண்மயத்த உமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும், ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும், கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டும் கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரென், றண்மயத்தால் அணிநாவல் ஆரூரன் சொன்ன அருந்தமிழ்கள் இவைவல்லார் அமர்உலகாள் பவரே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : காயாரோகணேசுவரர்

அம்பிகை : நீலாயதாட்சியம்மை

வரலாறு ; சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாகைக் காரோணம் சென்று இப்பதிகம் பாடி மணிப்பூணும் நவமணிகளும் ஆடை, சாந்தம், குதிரை, சுரிகை முதலியனவும் பெற்றார் (பெரிய. சேரமான். 63.)

ஊர்த்தொகை

திருச்சிற்றம்பலம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய், கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூர் அரசே கொழுநற்

---

10. மறி – மான். மாதிமை – அழகு. சுரிகை - பிரம்பு. பட்டிகை – திருமார்பில் குறுக்கேயிடுவது.

கொல்லேறே, பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங் காட்டூரானே, மாட்டூர் அறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே. 1

கொங்கிற் குறும்பிற் குரக்குத் தளியாய் குழகா குற் றாலா, மங்குற் றிரிவாய் வானோர் தலைவா வாய்மூர் மண வாளா, சங்கக் குழையார் செவியா அழகா அவியா அனல் ஏந்திக், கங்குற் புறங்காட் டாடீ அடியார் கவலை களையாயே. 2

நிறைக்காட் டானே நெஞ்சத் தானே நின்றி யூரானே, மிறைக்காட் டானே புனல்சேர் சடையாய் அனல்சேர் கையானே, மறைக்காட் டானே திருமாந் துறையாய் மாகோ ணத்தானே, இறைக்காட் டானே எங் கட் குன்னை எம்மான் தம்மானே. 3

ஆரூர் அத்தா ஐயாற் றமுதே அளப்பூர் அம்மானே, காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகா வூரானே, பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே, பாரூர் பலரும் பரவப் படுவாய் பாசூர் அம்மானே. 4

மருகல் உறைவாய் மாகா ளத்தாய் மதியஞ் சடை யானே, அருகற் பிணிநின் அடியார் மேல அகல அரு ளாயே, கருகற் குரலாய் வெண்ணிக் கரும்பே கானூர்க் கட்டியே, பருகப் பணியாய் அடியார்க் குன்னைப் பவளப் படியானே. 5

---

1. அறவா — தர்மசொரூபியே

2. கொங்கில் — கொங்கு நாட்டில்.

3. எங்கட்கு உன்னை இறையளவேனும் காட்டாதவனே

4. பட்டிப்பெருமான் : பேரூரில் எழுந்தருளியுள்ள சுவாமி திருநாமம்.

5 பவளப்படியானே — பவளம் போன்ற செவ்வுருவம் உடையவனே.

தாங்கூர் பிணிநின் அடியார் மேல அகல அருளாயே, வேங்கூர் உறைவாய் விளமர் நகராய் விடையார் கொடியானே, நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய் நல்லூர் நம்பானே, பாங்கூர் பலிதேர் பரனே பரமா பழனப் பதியானே. 6

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய், வானைக் காவல் கொண்டு நின்றார் அறியா நெறியானே, ஆனைக் காவில் அரனே பரனே அண்ணா மலையானே, ஊனைக் காவல் கைவிட் டுன்னை உகப்பார் உணர்வாரே. 7

துருத்திச் சுடரே நெய்த்தா னத்தாய் சொல்லாய் கல்லாலா, பருத்தி நியமத் துறைவாய் வெயிலாய்ப் பலவாய்க் காற்றானாய், திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை இடங்கொள் கயிலாயா, அருத்தித் துன்னை அடைந்தார் வினைகள் அகல அருளாயே. 8

புலியூர்ச் சிற்றம் பலத்தாய் புகலூர்ப் போதா மூதூரா, பொலிசேர் புரமூன் றெரியச் செற்ற புரிபுன் சடையானே, வலிசேர் அரக்கன் தடக்கை ஐஞ்ஞான் கடர்த்த மதிசூடி, கலிசேர் புறவிற் கடவூர் ஆளீ காண அருளாயே. 9

கைம்மா உரிவை அம்மான் காக்கும் பலவூர் கருத் துன்னி, மைம்மாந் தடங்கண் மதுர மன்ன மொழியாள்

---

6. தாம் கூர் பிணிகள் - தம்மிடத்திலே மிக்க நோய்கள்.
7. ஊனைக்காவல் கைவிட்டு – உடம்பை ஊன் முதலியவற்றால் பாதுகாத்தலே தொழிலாக இருப்பதை நீங்கி
8. பருத்தி நியமம் – பருதி நியமம்; செய்யுள் விகாரம். அருத்தித்து – துன்புற்று.
9. பொலி சேர் – பொலிதல் சேர்ந்த. கை ஐஞ்ஞான்கு அடர்த்த கலி – முழக்கம்.
10. கைம்மா உரிவை – யானைத்தோலைப் போர்த்த.

மடச்சிங்கடி, தம்மான் ஊரன் சடையன் சிறுவன் அடியன் தமிழ்மாலை, செம்மாந் திருந்து திருவாய் திறப் பார் சிவலோ கத்தாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பாண்டிக்கொடுமுடி

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாத மேமனம் பாவித்தேன், பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன், கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி, நற்ற வாஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 1

இட்ட னும்மடி ஏத்து வார்இகழ்ந் திட்ட நாள்மறந் திட்டநாள், கெட்ட நாள்இவை என்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரி, வட்ட வாசிகை கொண்ட டிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி, நட்ட வாஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 2

ஓவு நாள்உணர் வழியும் நாள்உயிர் போகும் நாள்உயர் பாடைமேல், காவும் நாள்இவை என்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரிப், பாவு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி, நாவ லாஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 3

---

1. இப்பதிகம் நமச்சிவாயத் திருப்பதிகம் என்றும் வழங்கும் (பெரிய. ஏயர்கோன். 87.)

2. உம்அடியை ஏத்துவார் என்னை இகழ்ந்த நாளும் உம்மை நான் மறந்த நாளும் கெட்ட நாட்கள். வாசிகை - மாலை.

3. ஓவும் நாள். உன்னை மறந்து நீங்கும் நாளை. ஓவும் நாளையே உணர்வழியும் நாள் முதலியனவாகக் கருதுவேன். காவும் – சுமக்கும். பாவு – பரவிய.

எல்லை யில்புகழ் எம்பி ரான்எந்தை தம்பி ரான்என் பொன் மாமணி, கல்லை உந்தி வளம்பொ ழிந்திழி காவி ரியதன் வாய்க்கரை, நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி, வல்ல வாஉனை நான்ம றக்கி னும் சொல்லும் நாநமச்சி வாயவே. 4

அஞ்சி னார்க்கரண் ஆதிஎன் றடி யேனும் நான்மிக அஞ்சினேன், அஞ்சல் என்றடித் தொண்ட னேற்கருள் நல்கி னாய்க்கழி கின்றதென், பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி, நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 5

ஏடு வான்இளந் திங்கள் சூடினை என்பின் கொல் புலித் தோலின்மேல், ஆடு பாம்பத ரைக்க சைத்த அழக னேஅந்தண் காவிரிப், பாடு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடிச், சேட னேஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 6

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும் விண்டனன், நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற நின்ற காவிரிக் கோட்டிடைக், குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந் தாடு பாண்டிக் கொடுமுடி, விரும்ப னேஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 7

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரம் தீயெ ழச்சிலை கோலினாய், வம்பு லாங்குழ லாளைப் பாகம் அமர்ந்து காவிரிக் கோட்டிடைக், கொம்பின் மேற்குயில் கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடுமுடி, நம்ப னேஉனை நான்ம றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 8

---

5. அரண் ஆதி-பாதுகாப்பாகிறாய். அழிகின்றது என்-இரங்குவது எதற்காக.

6. ஏடு-மலரிதழைப் போன்ற. சேடன்-பெருமையை உடையவன்.

7. கோட்டிடை-கரையில்

சாரணன் தந்தை எம்பி ரான்எந்தை தம்பி ரான்
என்பொன் மாமணியென் று, பேரெ ணாயிர கோடி தேவர்
பிதற்றி நின்று பிரிகிலார், நார ணன்பிர மன்தொழுங்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடிக், கார ணாஉனை நான்ம
றக்கினும் சொல்லும் நாநமச்சி வாயவே. 9

கோணி யபிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக்
கொடுமுடி, பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த
னைப்பிறப் பில்லியைப், பாணு லாவரி வண்ட றைகொன்
றைத் தார னைப்படப் பாம்பரை, நாண னைத்தொண்டன்
ஊரன் சொல்இவை சொல்லு வார்க்கில்லைத் துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: கொங்கு நாடு

சுவாமி: கொடுமுடிநாதர்; அம்பிகை: பண்மொழியம்மை.

திருமுருகன்பூண்டி

திருச்சிற்றம்பலம்

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவ லாமை
சொல்லித், திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்
டாற லைக்கும்இடம், முடுகு நாறிய வடுகர் வாழ்முரு கன்
பூண்டி மாநகர்வாய், இடுகு நுண்ணிடை மங்கை தன்னொ
டும் எத்துக் கிங்கிருந் தீர்எம்பிரானிரே. 1

---

9. சாரணன்–தூதனாக இருப்பவன்.

10. படப்பாம்பை அரைநாணாக உடையவனை.

1. கொடுகு–வளைந்த விரவலாமை சொல்லி–விரோதமான வார்த்தைகளைச் சொல்லி. திடுகுமொட்டு: ஒலிக்குறிப்பு. முடுகு நாறிய–வேகம் மிக்க. இடுகு – சிறுத்த. எத்துக்கு– எதற்காக.

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர் விரவ லாமை சொல்லிக், கல்லினால்எறிந் திட்டும் மோதியுங் கூறை கொள்ளுமிடம், முல்லைத் தாது மணங்கமழ் முருகன் பூண்டி மா நகர்வாய், எல்லை காப்பதொன் றில்லை யாகில்நீர் எத்துக் கிங்கிருந் தீரெம்பிரானிரே. 2

பசுக்க ளேகொன்று தின்று பாவிகள் பாவம் ஒன் றறியார், உசிர்க்கொலைபல நேர்ந்து நாள்தொறுங் கூறை கொள்ளும்இடம், முசுக்கள்போற்பல வேடர்வாழ் முருகன் பூண்டி மாநகர்வாய், இசுக்கழியப் பயிக்கங் கொண்டுநீர் எத்துக் கிங்கிருந் தீரெம்பிரானிரே. 3

பீறற் கூறை உடுத்தோர் பத்திரங் கட்டி வெட்டன ராய்ச், சூறைப் பங்கிய ராகி நாள்தொறுங் கூறைகொள்ளு மிடம், மோறை வேடுவர் கூடிவாழ் முருகன் பூண்டி மாநகர்வாய், ஏறு காலிற்ற தில்லை யாய்விடில் எத்துக் கிங்கிருந் தீரெம்பிரானிரே. 4

தயங்கு தோலை உடுத்த சங்கரா சாம வேதம்ஓதி, மயங்கி ஊரிடு பிச்சை கொண்டுணும் மார்க்கம் ஒன் றறியீர், முயங்கு பூண்முலை மங்கை யாளொடு முருகன் பூண்டி மாநகர்வாய், இயங்க வும்மிடுக் குடைய ராய்விடில் எத்துக் கிங்கிருந் தீரெம்பிரானிரே. 5

---

2. கூறை—ஆடை.

3. முசுக்கள்—குரங்குகள். இசுக்கு அழிய-பெருமை கெடும் படி. பயிக்கம்—பிச்சை.

4. பத்திரம்—வாள். வெட்டனராய்—கொடிய சொற்களைச் சொல்பவராய். சூறைப் பங்கியர்—பரட்டைத் தலையை யுடையார்; பங்கி-தலைமயிர். மோறை—அழகற்ற முகத்தையுடைய.

5. இயங்கவும் இடுக்குடையராய்விடில்—நடக்கவும் இடையூறுடையவரானால்; வழிப்பறி செய்வோரால் வழி நடப்பது கூட அபாயத்துக்கு இடமாகுமானால் என்பது கருத்து.

விட்டி சைப்பன கொக்க ரைகொடு கொட்டித் தத்தளகம், கொட்டிப் பாடுமித் துந்து மியொடு குடமுழா நீர்மகிழ்வீர், மொட்ட லர்ந்து மணங்கமழ் முருகன் பூண்டி மாநகர்வாய், இட்ட பிச்சைகொண் டுண்ப தாகில்நீர் எத்துக்கிங்கிருந் தீரெம்பிரானிரே. 6

வேதம் ஓதிவெண் ணீறு பூசிவெண் கோவணந் தற்றயலே ஓதம் மேவிய ஒற்றி யூரையும் முத்தி நீர்மகிழ்வீர், மோதி வேடுவர் கூறை கொள்ளும் முருகன் பூண்டி மாநகர்வாய், ஏது காரணம் ஏது காவல்கொண் டெத்துக் கிங்கிருந் தீரெம்பிரானிரே. 7

படவ ரவுநுண் ணேரிடைப் பணைத்தோள் வரி நெடுங்கண், மடவ ரல்லுமை நங்கை தன்னையோர் பாகம் வைத்துகந்தீர், முடவர் அல்லீர் இடரிலீர் முருகன் பூண்டி மாநகர்வாய், இடவம் ஏறியும் போவ தாகில்நீர் எத்துக் கிங்கிருந் தீரெம்பிரானிரே. 8

சாந்த மாகவெண் ணீறு பூசிவெண் பற்றலை கலனு, வேய்ந்த வெண்பிறைக் கண்ணி தன்னையோர் பாகம் வைத்துகந்தீர், மோந்தை யோடு முழக்கறு முருகன் பூண்டி மாநகர்வாய், ஏந்து பூண்முலை மங்கை தன்னொடும் எத்துக் கிங்கிருந் தீரெம்பிரானிரே. 9

முந்தி வானவர் தாந்தொழு முருகன் பூண்டி மாநகர் வாய்ப், பந்த ணைவிரற் பாவை தன்னையோர் பாகம் வைத் தவனைச், சிந்தை யிற்சிவ தொண்ட னூரன் உரைத்தன

---

7. தற்று-இறுக்கிக் கட்டி. ஓதம்-கடல். முத்தி-சார்ந்து.

8. அரவு போன்ற இடை.

9. வெள்ளிய பிறையாகிய கண்ணியின் ஒரு பகுதியைச் சிரத்தில் வைத்து மகிழ்ந்தீர். மோந்தை – ஒரு வாத்தியம்.

பத்துங்கொண், டெந்தம் மடிகளை ஏத்து வார்இடர் ஒன்றுந்தாம் இலரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: கொங்கு நாடு

சுவாமி : முருகாவுடையார்; அம்பிகை : ஆவுடையநாயகி.

வரலாறு: சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமாள் நாயனார் அளித்த பொருள்களை ஆட்களின் தலையில் ஏற்றித் திருமுருகன் பூண்டிக்கு அருகில் வரும்போது பெருமான் ஏவலால் பூதங்கள் வேடுவராகி வந்து அந்தப் பொருள்களைப் பறித்துப் போயினர். சுவாமிகள் இத்தலத்துக்கு வந்து இப் பதிகத்தைப் பாடவே, சிவபிரான் பூதங்கள் கவர்ந்த பொருளை மீண்டும் பெறச் செய்தார்.

திருப்புனவாயில்

திருச்சிற்றம்பலம்

சித்தம் நீநினை என்னொடு சூளறும் வைகலும், மத்த யானையின் ஈருரி போர்த்த மணாளனார், பத்தர் தாம்பலர் பாடிநின் றாடும் பழம்பதி, பொத்தில் ஆந்தைகள் பாட்டறாப் புன வாயிலே. 1

கருது நீமனம் என்னொடு சூளறும் வைகலும், எருது மேற்கொளும் எம்பெரு மாற்கிடம் ஆவது, மருத வானவர் வைகும் இடம்மற வேடுவர், பொருது சாந்தொடு பூசல் அறாப்புன வாயிலே. 2

---

1. சித்தம்; விளி. என்னொடு நீ நினை. சூள் அறும்-பொய்யாக மேற்கண்ட உறுதிமொழிகள் எல்லாம் அற்றுவிடும். வைகலும் – நாள்தோறும். பொத்தில்-மரப்பொந்துகளில்.

2. மருத வானவர் – மருத நிலத்தில் உள்ள பெருமையுடையோர். சாத்தொடு-வியாபாரிகளின் கூட்டத்தோடு செய்யும். பூசல்–சண்டை.

தொக்காய மனம் என்னொடு சூளறும் வைகலும், நக்கான் நமையாளுடையான் நவிலும்மிடம், அக்கோடரவார்த் தபிரான் அடிக்கன்பராய்ப், புக்கார் அவர் போற்றொழியாப்புன வாயிலே. 3

வற்கென் றிருத்திகண் டாய்மனம் என்னொடு சூளறும் வைகலும், பொற்குன் றஞ்சேர்ந்த தோர்காக்கை பொன்னா மதுவேபுகல், கற்குன்றுந் தூறுங் கடுவெளி யுங் கடற் கானல்வாய்ப், புற்கென்று தோன்றிடும் எம்பெருமான்புன வாயிலே. 4

நில்லாய் மனம் என்னொடு சூளறும் வைகலும், நல்லான் நமையாளுடையான் நவிலும்மிடம், வில்லாய்க் கணைவேட் டுவர்ஆட்ட வெருண்டுபோய்ப், புல்வாய்க் கணம் புக்கொளிக் கும்புன வாயிலே. 5

மறவல் நீமனம் என்னொடு சூளறும் வைகலும், உறவும் ஊழியும் ஆயபெம் மாற்கிடம் ஆவது, பிறவு கள்ளியின் நீள்கவட் டேறித்தன் பேடையைப், புறவங் கூப்பிடப் பொன்புனஞ் சூழ்புன வாயிலே. 6

ஏசற்று நீநினை என்னொடு சூளறும் வைகலும், பாசற் றவர்பாடி நின்றா டும்ப ழம்பதி, தேசத் தடியவர் வந்திரு போதும் வணங்கிடப், பூசற் றுடி பூசல் அறாப்புன வாயிலே. 7

---

3. என்னொடு தொக்கு ஆய — என்னோடு சேர்ந்து இறைவன் புகழை ஆராய்ச்சி செய்ய. அக்கு-ருத்திராட்சம்; எலும்புமாம்.

4. வற்கென்று-எதற்கும் அஞ்சாமல் தைரியத்தோடு. தூறு—புதர். புற்கென்று-பொலிவழிந்து.

5. ஆட்ட-அலைக்க. புல்வாய்க் கணம்—மான் கூட்டம்.

6. பிறவுகள்ளி—அந்த நிலத்தில் முளைக்கும் உரிமையையுடைய கள்ளி. கவடு-கிளை.

7. ஏசற்று-வருத்தமின்றி. பாசு—பாசம் பூசல் துடி—ஆரவாரத்தை உடைய உடுக்கை.

கொள்ளி வாயின கூரெயிற் றேனம் கிழிக்கவே, தெள்ளி மாமணி தீவிழிக் கும்மிடஞ் செந்தறை, கள்ளி வற்றிப்புல் தீந்துவெங் கானங் கழிக்கவே, புள்ளி மானினம் புக்கொளிக் கும்புன வாயிலே. 8

எற்றேனினை என்னொடு சூளறும் வைகலும், மற்றேதும் வேண்டா வல்வினை ஆயின மாய்ந்தறக், கற்றாறுகார்க் காட்டிடை மேய்ந்தகார்க் கோழிபோய்ப், புற்றேறிக் கூகூ எனஅழைக் கும்புன வாயிலே. 9

பொடியாடு மேனியன் பொன்புனஞ் சூழ்புன வாயிலை, அடியார் அடியன் நாவல ஊரன் உரைத்தன, மடியாது கற்றிவை ஏத்தவல் லார்வினை மாய்ந்துபோய்க், குடியாகப் பாடினின் றாடவல் லார்க்கில்லை குற்றமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : பாண்டி நாடு

சுவாமி: பழம்பதிநாயகர்; அம்பிகை: பரங்கருணைநாயகி.

திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

பத்திமையும் **அடி**மையையும் கைவிடுவான் பாவியேன், பொத்தினநோ யதுவிதனைப் பொருளறிந்தேன் போய்த் தொழுவேன், முத்தினைமா மணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன், எத்தனைநாட் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 1

---

9. கல்தூறு–கல்லிடையே முளைத்த புதர். கார்க்கோழி–கரிய காட்டுக் கோழி.

10. மடியாது–சோம்பாமல்.

1. பொத்தின–மூண்ட.

ஐவணமாம் பகழியுடை அடல்மதனன் பொடியாகச், செவ்வணமாந் திருநயனம் விழிசெய்த சிவமூர்த்தி, மையணவு கண்டத்து வளர்சடைஎம் ஆரமுதை, எவ்வணம்நான் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 2

சங்கலக்குந் தடங்கடல்வாய் விடஞ்சுடவந் தமரர் தொழ, அங்கலக்கண் தீர்த்துவிடம் உண்டுகந்த அம்மானை, இங்கலக்கும் உடற்பிறந்த அறிவிலியேன் செறிவின்றி, எங்குலக்கப் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 3

இங்ஙனம்வந் திடர்ப்பிறவிப் பிறந்தயர்வேன் அயராமே, அங்ஙனம்வந் தெனைஆண்ட அருமருந்தென் ஆரமுதை, வெங்கனல்மா மேனியனை மான்மருவுங் கையானை, எங்ஙனம்நான் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 4

செப்பரிய அயனொடுமால் சிந்தித்துந் தெளிவரிய, அப்பெரிய திருவினையே அறியாதே அருவினையேன், ஒப்பரிய குணத்தானை இணையிலியை அணைவின்றி, எப்பரிசு பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 5

வன்னாகம் நாண்வரைவில் அங்கிகணை அரிபகழி, தன்னாகம் உறவாங்கிப் புரம்எரித்த தன்மையனை, முன்னாக நினையாத மூர்க்கனேன் ஆக்கைசுமந், தென்னாகப் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 6

---

2. ஐவணமாம் பகழி உடை—ஐந்து விதமாகிய அம்புகளை உடைய.

3. அலக்கும் - ஒலிக்கும். அங்கு அலக்கண் தீர்த்து: அலக்கண்—துன்பம். அலக்கும் உடல்—துன்புறுதற் கேதுவாகிய உடம்பு. உலக்க—அழிய.

5. எப்பரிசு - எவ்வாறு.

6. நாகம் நாண், வரை வில், அங்கி கணை, அரி பகழி; அங்கி - அக்கினி: பகழி - அம்பு. ஆகம் உற வாங்கி - திருமேனியிற் படும்படி இழுத்து வளைத்து.

வன்சயமாய் அடியான்மேல் வருங்கூற்றின் உரங்கிழிய, முன்சயமார் பாதத்தால் முனிந்துகந்த மூர்த்திதனை, மின்செயும்வார் சடையானை விடையானை அடைவின்றி, என்செயநான் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே.

முன்னெறிவா னவர்கூடித் தொழுதேத்தும் முழுமுதலை, அந்நெறியை அமரர்தொழும் நாயகனை அடியார்கள், செந்நெறியைத் தேவர்குலக் கொழுந்தைமறந் திங்ஙனம்நான், என்னறிவான் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 8

கற்றுளவான் கனியாய கண்ணுதலைக் கருத்தார, உற்றுளனாம் ஒருவனைமுன் இருவர்நினைந் தினிதேத்தப், பெற்றுளனாம் பெருமையனைப் பெரிதடியேன் கையகன்றிட், டெற்றுளனாய்ப் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 9

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய, தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி, மாழைஒண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா, ஏழையேன் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே. 10

வங்கமலி கடல்நஞ்சை வானவர்கள் தாம்உய்ய, நுங்கிஅமு தவர்க்கருளி நொய்யேனைப் பொருட்படுத்துச், சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனைச் சழக்கனேன், எங்குலக்கப் பிரிந்திருக்கேன் என்ஆரூர் இறைவனையே.

---

7. அடியான் - மார்க்கண்டேயர். அடைவு இன்றி - அடைதலின்றி.

9. இருவர் - திருமாலும் பிரமனும்.

10. துரிசுகளுக்கு - குற்றங்களுக்கு. மாழை - மாவடுவின் பிளப்பு.

11. வங்கம் - கப்பல். உப்புக் கடலில் அமுது கடைந்ததாகவும் ஒரு வரலாறு உண்டு. நுங்கி - உண்டு. அவர்க்கு - தேவர்களுக்கு. நொய்யேனை - புல்லியவனாகிய என்னை. சழக்கனேன் - வஞ்சகனாகிய யான். உலக்க - அழிய.

பேரூரும் மதகரியின் உரியானைப் பெரியவர்தம், சீரூருந் திருவாரூர்ச் சிவன்அடியே திறம்விரும்பி, ஆரூரன் அடித்தொண்டன் அடியன்சொல் அகலிடத்தில், ஊரூரன் இவைவல்லார் உலகவர்க்கு மேலாரே. 12

திருச்சிற்றம்பலம்

வரலாறு: சுந்தரமூர்த்தி நாயனார் திருவொற்றியூரில் சங்கிலியாரோடு இருந்த காலத்தில் இளவேனிற் பருவம் வர, திருவாரூரில் அப்போது நடைபெறும் வசந்த விழாவை நினைத்து, புற்றிடங் கொண்டாரை எண்ணி இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

திருவாலங்காடு

திருச்சிற்றம்பலம்

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா, சித்தா சித்தித் திறங்காட்டும் சிவனே தேவர் சிங்கமே, பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய, அத்தா ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே. 1

பொய்யே செய்து புறம்புறமே திரிவேன் றன்னைப் போகாமே, மெய்யே வந்திங் கெனைஆண்ட மெய்யா மெய்யர் மெய்ப்பொருளே, பையா டரவம் அரைக்கசைத்த பரமா பழைய னூர்மேய, ஐயா ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே. 2

தூண்டா விளக்கின் நற்சோதீ தொழுவார் தங்கள் துயர்தீர்ப்பாய், பூண்டாய் எலும்பைப் புரமூன்றும் பொடியாச் செற்ற புண்ணியனே, பாண்டாழ் வினைகள் அவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய, ஆண்டா ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே. 3

---

1. முத்தா - பாசத்தினின்றும் இயல்பாகவே விடுபட்டவனே. முகிழ் - அரும்பு போன்ற.

2. புறம்புறமே திரிவேன்தன்னை - உன்னை அணுகாமல் அப்பால் திரிகின்ற என்னை. பை - படத்தை உடைய.

3. பாண் தாழ் - இழிவையுடைய; பாண் - தாழ்வு.

மறிநேர் ஒண்கண் மடநல்லார் வலையிற் பட்டு மதி மயங்கி, அறிவே அழிந்தேன் ஐயாநான் மையார் கண்டம் உடையானே, பறியா வினைக ளவைதீர்க்கும் பரமா பழைய னூர்மேய, அறிவே ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே. 4

வேலங் காடு தடங்கண்ணார் வலையுட் பட்டுன் நெறி மறந்து, மாலங்காடி மறந்தொழிந்தேன் மணியே முத்தே மரகதமே, பாலங் காடு நெய்யாடு படர்புன் சடையாய் பழையனூர், ஆலங் காடா உன்னுடைய அடியார்க் கடியேன் ஆவேனே. 5

எண்ணார் தங்கள் எயில்எய்த எந்தாய் எந்தை பெரு மானே, கண்ணாய் உலகங் காக்கின்ற கருத்தா திருத்த லாகாதாய், பண்ணார் இசைக ளவைகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர், அண்ணா ஆலங் காடாஉன் அடி யார்க் கடியேன் ஆவேனே. 6

வண்டார் குழலி உமைநங்கை பங்கா கங்கை மண வாளா, விண்டார் புரங்கள் எரிசெய்த விடையாய் வேத நெறியானே, பண்டாழ் வினைகள் பலதீர்க்கும் பரமா பழைய னூர்மேய, அண்டா ஆலங் காடாஉன் அடியார்க் கடியேன் ஆவேனே. 7

பேழ்வாய் அரவின் அணையானும் பெரிய மலர்மேல் உறைவானும், தாழா துன்றன் சரண்பணியத் தழலாய் நின்ற தத்துவனே, பாழாம் வினைக ளவைதீர்க்கும் பரமா பழைய னூர்தன்னை, ஆள்வாய் ஆலங் காடாஉன் அடி யார்க் கடியேன் ஆவேனே. 8

---

5. வேல் அங்கு ஆடு தடங்கண்ணார் - வேலைப்போன்று அசையும் விசாலமான கண்ணையுடைய மகளிர். மால் அங்கு ஆடி - மயக்கத்தில் மூழ்கி.

6. எண்ணார் - பகைவர். திருத்தலாகாதாய் - பிறர் ஒருவரால் திருத்துதல் இயலாதவனே; இயல்பாகவே திருந்தியவன் என்றபடி.

7. விண்டார் - பகைவர். பண்டு ஆழ் வினைகள்.

8. பேழ்வாய் - பிளவுபட்ட வாய்.

எம்மான் எந்தை மூத்தப்பன் ஏழேழ் படிகால் எமையாண்ட, பெம்மான் ஈமப் புறங்காட்டிற் பேயோ டாடல் புரிவானே, பன்மா மலர்க ளவைகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர், அம்மா ஆலங் காடாஉன் அடி யார்க் கடியேன் ஆவேனே. 9

பத்தர் சித்தர் பலர்ஏத்தும் பரமன் பழைய னூர் மேய, அத்தன் ஆலங் காடன்றன் அடிமைத் திறமே அன்பாகிச், சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவன் ஊரன் ஒண்டமிழ்கள், பத்தும் பாடி ஆடுவார் பரமன் அடியே பணிவாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: தொண்டை நாடு

சுவாமி: ஊர்த்துவ தாண்டவேசுரர்

அம்பிகை : வண்டார்குழலி

திருக்கடவூர் மயானம்

திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலை போல, வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத், திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும், பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 1

---

9. மூத்தப்பன் - பிதாமகன். ஏழேழ் படிகால் - நாற்பத் தொன்பது தலைமுறை. ஈமமாகிய புறங்காடு.

1. மரு - நறுமணம். நாகர் - நாகலோக வாசிகள். தானவர் - அசுரர்.

விண்ணோர் தலைவர் வெண்புரிநூல் மார்பர் வேத கீதத்தர், கண்ணார் நுதலர் நகுதலையர் காலகாலர் கடவூரர், எண்ணார் புரம்மூன் றெரிசெய்த இறைவர் உமையோர் ஒருபாகம், பெண்ஆண் ஆவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 2

காயும் புலியின் அதளுடையர் கண்டர் எண்டோட் கடவூரர், தாயும் தந்தை பல்லுயிர்க்குந் தாமே ஆய தலைவனார், பாயும் விடையொன் றதுவேறிப் பலிதேர்ந் துண்ணும் பரமேட்டி, பேய்கள் வாழும் மயானத்துப் பெரியபெருமா னடிகளே. 3

நறைசேர் மலரைங் கணையானை நயனத் தீயாற் பொடி செய்த, இறையார் ஆவர் எல்லார்க்கும் இல்லை என்ற தருள் செய்வார், பறையார் முழவம் பாட்டோடு பயிலுந் தொண்டர் பயில்கடவூர்ப், பிறையார் சடையார் மயானத் துப் பெரிய பெருமா னடிகளே. 4

கொத்தார் கொன்றை மதிசூடிக் கோள்நா கங்கள் பூண்டாக, மத்த யானை உரிபோர்த்து மருப்பும் ஆமைத் தாலியார், பத்தி செய்து பாரிடங்கள் பாடி ஆடப் பலி கொள்ளும், பித்தர் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 5

துணிவார் கீளுங் கோவணமுந் துதைந்து சுடலைப் பொடிஅணிந்து, பணிமேல் இட்ட பாசுபதர் பஞ்ச வடி மார் பினர்கடவூர்த், திணிவார் குழையார் புரமூன்றுந் தீவாய்ப் படுத்த சேவகனார், பிணிவார் சடையார் மயா னத்துப் பெரிய பெருமா னடிகளே. 6

---

2. உமை ஓர் பாகம் பெண் ஆவர்; ஒரு பாகம் ஆண் ஆவர் என்று கூட்டுக.

3. அதள் - தோல். கண்டர் - கழுத்திலே விசேடம் உடையவர். 4. நறை - நறுமணம்.

5. மருப்பும் ஆமையோடும் தாலியாக மார்பில் அணி பவர்; தாலி - மார்பில் தொங்கவிடும் ஆபரணம் பாரிடங் கள் - பூதங்கள்.

6. துதைந்து-பொருந்தி பஞ்சவடி-மயிரினால்செய்தபூணூல்.

காரார் கடலின் நஞ்சுண்ட கண்டர் கடவூர் உறை வாணர், தேரார் அரக்கன் போய்வீழ்ந்து சிதைய விரலால் ஊன்றினார், ஊர்தான் ஆவ தலகேழும் உடையார்க் கொற்றி யூர்ஆரூர், பேரா யிரவர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 7

வாடா முலையாள் தன்னோடும் மகிழ்ந்து கானில் வேடுவனாய்க், கோடார் கேழற் பின்சென்று குறுகி விசயன் தவம்மகிழ்ந்து, நாடா வண்ணஞ் செருச்செய்து ஆவ நாழி நிலையருள்செய், பீடார் சடையார் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 8

வேழம் உரிப்பர் மழுவாளர் வேள்வி அழிப்பர் சிரம் அறுப்பர், ஆழி அளிப்பர் அரிதனக்கன் றானஞ் சுகப்பர் அறம்உரைப்பர், ஏழைத் தலைவர் கடவூரில் இறைவர் சிறுமான் மறிக்கையர், பேழைச் சடையர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. 9

மாடம் மல்கு கடவூரில் மறையோர் ஏத்தும் மயானத்துப், பீடை தீர அடியாருக் கருளும் பெருமா னடிகள் சீர், நாடி நாவ லாரூரன் நம்பி சொன்ன நற்றமிழ்கள், பாடும் அடியார் கேட்பார்மேற் பாவம் ஆன பறையுமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : பிரமபுரீசுவரர்

அம்பிகை : மலர்க்குழல் மின்னம்மை

---

8. கோடு - கொம்பு. ஆவநாழி – அம்பறாத் தூணி.

9. ஆழி - சக்கரத்தை. ஆன் அஞ்சு – பஞ்சகவ்வியம். பேழைச்சடையர் - பாம்பு முதலியன இருத்தலின் பேழையைப்போல இருக்கும் சடையை உடையவர்.

10. பீடை - துன்பம். பறையும் - தேயும்.

7. பண்: தக்கேசி

திருவொற்றியூர்

திருச்சிற்றம்பலம்

அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன் அதுவும் நான்படப் பாலதொன் றானால், பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடிகேள் பிழைப்பன் ஆகிலுந் திருவடிப் பிழையேன், வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால் மற்று நான்அறி யேன்மறு மாற்றம், ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய் ஒற்றி யூரெனும் ஊருறை வானே. 1

கட்ட னேன்பிறந் தேன்உனக் காளாய்க் காதற் சங்கிலி காரண மாக, எட்டி னால்திக ழுந்திரு மூர்த்தி என்செய் வான்அடி யேன்எடுத் துரைக்கேன், பெட்ட னாகிலுந் திருவடிப் பிழையேன் பிழைப்ப னாகிலும் திருவடிக் கடிமை, ஒட்டி னேன்எனை நீசெய்வ தெல்லாம் ஒற்றி யூரெனும் ஊருறை வானே. 2

கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே கட்டி யேபலர்க் குங்கனி கண்ணே, அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே அத்தா என்னிடர் ஆர்க்கெடுத் துரைக்கேன், சங்கும் இப்பியுஞ் சலஞ்சலம் முரல வயிரம் முத்தொடு பொன்மணி வரன்றி, ஓங்கு மாகடல் ஓதம்வந் துலவும் ஒற்றி யூரெனும் ஊர்உறை வானே. 3

---

1. பிழுக்கை வாரியும் பால்கொள்வர் – ஆட்டுப் பால் கொள்பவர் அது இட்ட பிழுக்கையை வாரி எறிந்துவிட்டுப் பாலைக் கறந்து கொள்வார்கள். பிழைப்பனாகிலும் - குற்றம் செய்பவனானாலும். ஒழுக்க - விட.

2. கட்டனேன் - இழிவையுடையவன்; துன்பத்தையுடையவன் எனினும் ஆம். எட்டினால் - ஐந்து பூதங்கள், ஆன்மா, இருசுடர் என்னும் எட்டு உருவங்களோடு. பெட்டனாகிலும் - விரும்பத்தகாத பொருளை விரும்புபவன் ஆயினும். ஒட்டினேன் - சார்ந்தேன்.

3. வரன்றி-அரித்து. ஓங்கும்; ஓங்கும் என்பதன் விகாரம்.

ஈன்று கொண்டதோர் சுற்றமொன் றன்று வியாவ ராகிலென் அன்புடை யார்கள், தோன்ற நின்றருள் செய்தளித் திட்டாற் சொல்லு வாரைஅல் லாதன சொல்லாய், மூன்று கண்ணுடை யாய்அடி யேன்கண் கொள்வ தேகணக் குவழக் காகில், ஊன்று கோல்எனக் காவதோன் றருளாய் ஒற்றியூர்எனும் ஊர்உறை வானே. 4

வழித்த லைப்படு வான்முயல் கின்றேன் உன்னைப் போல்என்னைப் பாவிக்க மாட்டேன், சுழித்த லைப்பட்ட நீரது போலச் சுழல்கின் றேன்சுழல் கின்றதென் உள்ளம், கழித்த லைப்பட்ட நாயது போல ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கை, ஒழித்து நீஅரு ளாயின செய்யாய் ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே. 5

மானை நோக்கியர் கண்வலைப் பட்டு வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சித், தேனை ஆடிய கொன்றையி னாய்உன் சீல முங்குண முஞ்சிந்தி யாதே, நானும் இத்தனை வேண் டுவ தடியேன் உயிரோ டுநர கத்தழுந் தாமை, ஊனம் உள் ளன தீர்த்தருள் செய்யாய் ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே. 6

மற்றுத் தேவரை நினைந்துனை மறவேன் நெஞ்சி னொடு வாழவும் மாட்டேன், பெற்றி ருந்து பெறுதொழி கின்ற பேதை யேன்பிழைத் திட்டதை அறியேன், முற்றும் நீஎனை முனிந்திட அடியேன் கடவ தென்உனை நான்மற வேனேல், உற்ற நோயுறு பிணிதவிர்த் தருளாய் ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே. 7

---

4. இரண்டு கண்ணுக்கு மேற்பட்டு ஒரு கண் உடைய நீ என் இரண்டு கண்களையும் கொள்ளுதல் முறையோ என்றபடி. கணக்கு-நியாயம். வழக்கு - வழக்கம். ஊன்றுகோலாவது எனக்கு அருளாய் என்று கூட்டுக.

5. கற கறவென்று இழுத்துச் செல்லுதலை நீக்கி.

6. மான் ஐ நோக்கியர்-மான்போன்ற அழகையுடைய கண்ணையுடைய மகளிர்.

கூடி னாய்மலை மங்கையை நினையாய் கங்கை ஆயிர முகம்உடை யாளைச், சூடி னாய் என்று சொல்லிய புக்கால் தொழும்ப னேனுக்குஞ் சொல்லலு மாமே, வாடி நீஇருந் தென்செய்தி மனனே வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சி, ஊடி னால்இனி ஆவதொன் றுண்டே ஒற்றி யூர்எனும் ஊர் உறை வானே. 8

மகத்திற் புக்கதோர் சனிஎனக் கானாய் மைந்த னே மணி யேமண வாளா, அகத்திற் பெண்டுகள் நான்ஒன்று சொன்னால் அழையேற் போகுரு டாஎனத் தரியேன், முகத் திற் கண்இழந் தெங்ஙனம் வாழ்கேன் முக்க ணாமுறை யோமறை யோதீ, உகைக்குந் தண்கடல் ஓதம்வந் துலவும் ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே. 9

ஓதம் வந்துல வுங்கரை தன்மேல் ஒற்றி யூர்உறை செல் வனை நாளும், ஞாலந் தான்பர வப்படு கின்ற நான் மறை அங்கம் ஓதிய நாவன், சீலந் தான்பெரி தும்மிக வல்ல சிறு வன் றொண்டன் ஊரன் உரைத்த, பாடல் பத்திவை வல்லவர் தாம்போய்ப் பரகதி திண்ணம் நண்ணுவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

நாடு: தொண்டை நாடு.

சுவாமி : படம் பக்கநாதர்; மாணிக்கத் தியாகர்.
அம்பிகை: வடிவுடையம்மை 10

வரலாறு : சங்கிலி நாச்சியாரைப் பிரிவதில்லை என்று சபதம் செய்து பிறகு திருவொற்றியூரைப் பிரிந்து செல்லுகையில் தம் பார்வையை இழந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் இப்பதிகத்தைப் பாடினார்.

---

8. பார்வதியம்மையாரோடு கங்காதேவியையும் மனையாளாக ஏற்றுக்கொண்டாய் என்று உன்னைக் குறைகூறப் புகுவது நியாயமானால் எனக்கும் அத்தகைய குறையைச் சொல்லலாம். தொழும்பனேன் - தொண்டனாகிய நான்.

9. எனத் தரியேன்-என்றுகூற அதனை நான்சகிக்கமாட்டேன்.

திருப்புன்கூர்

திருச்சிற்றம்பலம்

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத அவனைக் காப்
பது காரண மாக, வந்த காலன்றன் ஆருயி ரதனை வவ்வி
னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன், எந்தைநீஎனை நமன்
தமர் நலியின் இவன்மற் றென்அடி யான்என விலக்கும்,
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன் செழும்பொ
ழில்திருப் புன்கூர் உளானே. 1

வைய கமுற்றும் மாமழை மறந்து வயலில் நீரிலை மா
நிலந் தருகோம், உய்யக் கொள்கமற் றெங்களை என்ன ஒளி
கொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும், பெய்யு மாமழைப்
பெருவெள்ளந் தவிர்த்துப் பெயர்த்தும் பன்னிரு வேலி
கொண் டருளும், செய்கை கண்டுநின் திருவடி அடைந்
தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. 2

ஏத நன்னிலம் ஈரறு வேலி ஏயர் கோன்உற்ற இரும்
பிணி தவிர்த்துக், கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற, தாதை தாள்
அற எறிந்தசண் டிக்குன் சடைமி சைமலர் அருள்செயக்
கண்டு, பூத ஆளிநின் பொன்னடி அடைந்தேன் பூம்பொ
ழில்திருப் புன்கூர் உளானே. 3

நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன் நாவினுக் கரையன்
நாளைப்போ வானும், கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள், குற்றஞ் செய்யி
னும் குணம்எனக் கருதும் கொள்கை கண்டுநின் குறை
கழல் அடைந்தேன், பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே, 4

---

1. மார்க்கண்டேயர் வரலாற்றைக் குறிக்கின்றார்
2. தருகோம் - தேவதானமாக அளிப்போம்.
3. இரும்பிணி யென்றது சூலை நோயை. கோதனங்கள் - பசுக்களாகிய செல்வம். தண்டி - சண்டேசர். பூத ஆளி - பூதங்களைக் கணங்களாக உடையவன்.

கோல மால்வரை மத்தென நாட்டிக் கோளர வுசுற்றிக் கடைந்தெ ழுந்த, ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய அமரர் கட்கருள் புரிவது கருதி, நீலம் ஆர்கடல் விடந்தனை உண்டு கண்டத் தேவைத்த பித்தநீ செய்த, சீலங் கண்டுநின் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. 5

இயக்கர் கின்னரர் யமனொடு வருணர் இயங்கு தீவளி ஞாயிறு திங்கள் மயக்கம் இல்புலி வானரம் நாகம் வசுக்கள் வானவர் தானவர் எல்லாம், அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு, திகைப்பொன் றின்றிநின் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. 6

போர்த்த நீள்செவி யாளர்அந் தணர்க்குப் பொழில்கொள் ஆல்நிழற் கீழறம் புரிந்து, பார்த்த னுக்கன்று பாசுபதங்கொடுத் தருளி ஞய்பண்டு பகீரதன் வேண்ட, ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை நங்கை யாளைநின் சடைமிசைக்கரந்த, தீர்த்த னேநின்றன் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. 7

மூவெ யில்செற்ற ஞான்றுய்ந்த மூவரில் இருவர் நின் திருக் கோயிலின் வாய்தல்,காவ லாளர்என் றேவிய பின்னை ஒருவ நீகரி காடரங் காக, மானை நோக்கியோர் மாநடம் மகிழ மணிமு ழாமுழக் கஅருள் செய்த, தேவ தேவநின் திருவடி அடைந்தேன் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானே. 8

---

5. இரிய - ஓட.

7. போர்த்த நீள் செவியாளர்-கேள்வி போர்த்து நீண்ட செவியை உடைய சனகாதி முனிவர். அறம் புரிந்து - தருமோபதேசம் செய்து. பார்த்தன் - அருச்சுனன். தீர்த்தனே - தூயவனே. கங்கையைச் சடையிற் கரந்தமையால் தூய்மை பெறுமல், இயல்பாகவே தூயவன் என்றபடி.

8. இருவர் - தாரகாட்சன், வித்யுன்மாலி. வாய்தல் - திருவாயில். ஒருவன் - வாணசுரன். கரிகாடு - சுடுகாடு.

அறிவி னால்மிக்க அறுவகைச் சமயம் அவ்வ வர்க்கங்கே ஆரருள் புரிந்து, எரியு மாகடல் இலங்கையர் கோனைத் துலங்க மால்வரைக் கீழ்அடர்த் திட்டுக், குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக் கோல வாளொடு நாளது கொடுத்த, செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன் செழும்பொழில்திருப் புன்கூர் உளானே. 9

கம்ப மால்களிற் றின்னுரி யானைக் காமற் காய்ந்ததோர் கண்உடை யானைச், செம்பொ னேஒக்குந் திருவுருவானைச் செழும்பொ ழில்திருப் புன்கூர் உளானை, உம்பராளியை உமையவள் கோனை ஊரன் வன்றொண்டன் உள்ளத் தால்உகந், தன்பி னாற்சொன்ன அருந்தமிழ் ஐந்தோடைந்தும் வல்லவர் அருவினை இலரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு

சுவாமி: சிவலோக நாதர்; அம்பிகை: சொக்கநாயகி.

வரலாறு: சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஏயர்கோன் கலிக்காம நாயனாருடன் சென்று தரிசித்துப் பாடியது (பெரிய. ஏயர்கோன் 406.)

திருநீடூர்

ஊர்வ தோர்விடை ஒன்றுடை யானை ஒண்ணு தற்றனிக் கண்ணுத லானைக், கார தார்கறை மாமிடற் றானைக் கருத லார்புரம் மூன்றெரித் தானை, நீரில் வாளை வரால்குதி கொள்ளும் நிறைபு னற்கழ னிச்செல்வ நீடூர்ப், பாரு ளார்பர வித்தொழ நின்ற பரம னைப்பணி யாவிட லாமே. 1

---

9. குறிகொள் – பொருட்குறிப்பையுடைய.

1. ஒள் நுதல் தனிக்கண் நுதலானை - ஒள்ளிய, யாவரும் சிறப்பித்துப் பேசும் ஒரு கண்ணை நெற்றியிலே உடையவனை. பணியா விடலாமே - பணியாமல் விடுதல் கூடுமோ?

துன்னு வார்சடைத் தூமதி யானைத் துயக்கு றுவகை தோன்றுவிப் பானைப், பன்னு நான்மறை பாடவல் லானைப் பார்த்த னுக்கருள் செய்த பிரானை, என்னை இன்னருள் எய்துவிப் பானை ஏதி லார்தமக் கேதிலன் றன்னைப், புன்னை மாதவி போதலர் நீடூர்ப் புனித னைப்பணி யாவிட லாமே.

கொல்லும் மூவிலை வேலுடை யானைக் கொடிய காலனை யுங்குமைத் தானை, நல்ல வாநெறி காட்டுவிப் பானை நாளும் நாம்உ கக் கின்றபி ரானை, அல்ல லில்அரு ளேபுரி வானை ஆடு நீர்வயல் சூழ்புனல் நீடூர்க், கொல்லை வெள்ளெரு தேறவல் லானைக் கூறி நாம்பணி யாவிட லாமே. 3

தோடு காதிடு தூநெறி யானைத் தோற்ற முந்துறப் பாயவன் றன்னைப், பாடு மாமறை பாடவல் லானைப் பைம்பொ ழிற்குயில் கூவிட மாடே, ஆடு மாமயில் அன்னமோ டாட அலைபு னற்கழ னித்திரு நீடூர்,வேட னாயபி ரானவன் றன்னை விரும்பி நாம்பணி யாவிட லாமே. 4

குற்றம் ஒன்றடி யார்இலர் ஆனாற் கூடு மாறத னைக் கொடுப் பானைக், கற்ற கல்வியி லும்மினி யானைக் காணப் பேணு மவர்க்கெளி யானை, முற்ற அஞ்சுந் துறந்திருப் பானை மூவ ரின்முத லாயவன் றன்னைச், சுற்று நீள்வயல் சூழ்திரு நீடூர்த் தோன்ற லைப்பணி யாவிட லாமே. 5

---

2. துயக்குறு வகை - கலக்கமில்லாதபடி. ஏதிலார் - அயலார். தன்னை அணுகாமல் அயலாக இருப்பவருக்குத் தானும் அயலாக இருப்பான் என்றபடி.

3. குமைத்தானை - வருத்தினவனை. கொல்லை - தினைக் கொல்லையையுடைய முல்லை நிலம்.

4. காதில் தோட்டை இடு.தோற்றம் முந்துறப் பாயவன் தன்னை - சிருஷ்டிக்கு முன்பே எங்கும் பரவியிருப்பவனை. மாடே - பக்கத்தில்.

5. அஞ்சும் - ஐம்பொறிகளையும்; "பொறிவாயி லைந் தவித்தான்" (குறள்.)

காடில் ஆடிய கண்ணுத லானைக் காலனைக்கடிந் திட்ட பிரானைப், பாடி ஆடும்பரி சேபுரிந் தானைப் பற்றி னோடுசுற் றம்மொழிப் பானைத், தேடி மாலயன் காண்பரி யானைச் சித்த முந்தெளி வார்க்கெளி யானைக், கோடி தேவர்கள் கும்பிடு நீடூர்க் கூத்த னைப்பணி யாவிட லாமே.

விட்டி லங்கெரி யார்கையி னானை வீடி லாத வியன்புக ழானைக், கட்டு வாங்கந் தரித்தபி ரானைக் காதி லார்கன கக்குழை யானை, விட்டி லங்குபுரி நூலுடை யானை வீந்த வர்தலை ஓடுகை யானைக், கட்டி யின்கரும் போலங்கிய நீடூர்க் கண்டு நாம்பணி யாவிட லாமே. 7

மாய மாய மனங்கெடுப் பானை மனத்து ளேமதி யாய்இருப் பானைக்,காய மாயமும் ஆக்குவிப்பானைக் காற்று மாய்க்கன லாய்க்கழிப் பானை, ஓயு மாறுரு நோய்புணர்ப் பானை ஒல்லை வல்வினை கள்கெடுப் பானை, வேய்கொள் தோள்உமை பாகனை நீடூர் வேந்த னைப்பணி யாவிட லாமே. 8

கண்ட முங்கறுத் திட்டபி ரானைக் காணப் பேணு மவர்க்கெளி யானைத், தொண்டரைப்பெரி தும்முகப் பானைத் துன்ப முந்துறந் தின்பினி யானைப், பண்டை வல்வினை கள்கெடுப் பானைப் பாக மாமதி யானவன் றன்னைக், கெண்டை வாளை கிளர்புனல் நீடூர்க் கேண்மை யாற்பணி யாவிட லாமே. 9

---

6. பாடி ஆடுந் திறத்தை என்பால் அமையச்செய்தவனை.
7. வீடிலாத-அழியாத. கட்டுவாங்கம் - யோகதண்டம். வீந்தவர் - இறந்தவர்களுடைய. கட்டி இன் கரும்பு - கற்கண்டு இனிதாகக் காரணமான கரும்பு.
8. மதி - அறிவு. மனம் என்றது அந்தக்கரணத்தை; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு பகுதிகள் அமைந்த அதில் மதியாகிய புத்தி ஒன்று. காயம் - உடம்பு. ஒல்லை - விரைவில். வேய் கொள் தோளுமை: தலத்து அம்பிகை.
9. பாகமா மதியான் அவன் றன்னை; பாகமாமதி - பிறை.

அல்லல் உள்ளன தீர்த்திடு வானை அடைந்தவர்க்கமு தாயிடு வானைக், கொல்லை வல்லர வம்மதைத் தானைக் கோல மார்கரி யின்உரி யானை, நல்ல வர்க்கணி ஆனவன் றன்னை நாளுங் காதல்செய் கின்ற பிரானை, எல்லி மல்லிகை யேகமழ் நீடூர் ஏத்தி நாம்பணி யாவிட லாமே. 10

பேரோ ராயிர முமுடை யானைப் பேசி னற்பெரி தும்மினி யானை, நீரூர் வார்சடை நின்மலன் றன்னை நீடூர் நின்றுகந் திட்டபி ரானை, ஆரூ ரன்னடி காண்பதற் கன்பாய் ஆத ரித்தழைத் திட்டஇம் மாலை, பாரூ ரும்பர வித்தொழ வல்லார் பத்த ராய்முத்தி தாம்பெறு வாரே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : சோமநாதேசுவரர்

அம்பிகை : வேயுறுதோளியம்மை

வரலாறு: **திருமின்றியூரைத் தரிசித்த திருநாவலூரர் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு, அருகில் உள்ள திருநீடூரைப் பணியாமல் செல்லும்பொழுதில், இடையிலே உணர்வு பெற்று இப்பதிகத்தை ஓதித் திருநீடூர் வந்து பணிந்தார் (பெரிய. ஏயர். 150–152.)**

திருவாழ்கொளிபுத்தூர்

திருச்சிற்றம்பலம்

தலைக்க லன்தலை மேல்தரித் தானைத் தன்னை என்னை நினைக்கத் தருவானைக், கொலைக்கை யானைஉரி போர்த்துகந் தானைக் கூற்று தைத்தகுரை சேர்கழ லானை, அலைத்த செங்கண்விடை ஏறவல் லானை ஆனை யால்அடி யேன்அடி நாயேன், மலைத்த செந்நெல்வயல் வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. 1

---

10. கொல் ஐ - கொல்லுகின்ற அழகிய. எல்லி–இரவில்.

11. பேசினற்பெரிதும் இனியானை : "பேசப் பெரிது மினியாய் நீயே" (அப்பர் தேவாரம்.)

1. தலைக்கலன் - தலையாகிய ஆபரணத்தை. தன்னை நினைக்க என்னைத் தருவானை குரைசேர் - ஒலி சேர்ந்த. என் நினைக்கேன் - எதை நினைப்பேன். மாணிக்கம் : மாணிக்க வண்ணர் என்பது இத்தல மூர்த்தியின் திருநாமம்.

படைக்கட் சூலம் பயிலவல் லானைப் பாவிப் பார் மனம் பாவிக்கோண் டானைக், கடைக்கட்பிச் சைக்கிச்சை காதலித் தானைக் காமன் ஆகந்தனைக் கட்டழித் தானைச், சடைக்கட் கங்கையைத் தாழ்வைத் தானைத் தண்ணீர்மண் ணிக்கரை யானைத்தக் கானை, மடைக்கண் நீலம்அலர் வாழ் கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. 2

வெந்த நீறுமெய் பூசவல் லானை வேத மால்விடை ஏறவல் லானை, அந்தம் ஆதிஅறி தற்கரி யானை ஆறலைத் தசடை யானைஅம் மானைச், சிந்தை யென்தடு மாற்றறுப் பானைத் தேவ தேவன்என் சொல்முனி யாதே, வந்தென்உள் ளம்புகும் வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென் நினைக்கேனே. 3

தடங்கை யால்மலர் தூய்த்தொழு வாரைத் தன்அடிக் கேசெல்லு மாறுவல் லானைப், படங்கொள் நாகம்அரை ஆர்த்துகந் தானைப் பல்லின்வெள் ளைத்தலை ஊணுடை யானை, நடுங்க ஆனைஉரி போர்த்துகந் தானை நஞ்சம் உண்டு கண் டங்கறுத் தானை, மடந்தை பாகனை வாழ்கொளி புத் தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. 4

வளைக்கை முன்கைமலை மங்கை மணாளன் மார னார்உடல் நீறெழச் செற்றுத், துளைத்தஅங் கத்தொடு தூமலர்க் கொன்றை தோலும்நூ லுந்துதைந் தவரை மார்

---

2. பாவி-பரவி. கடைக்கண் - வாயிலில். தாழ - தங்க. மண்ணி - ஓர் ஆறு.

3. வேத விடை, மால்விடை இரண்டையும் ஊர்பவனை.

4. வெள்ளைத் தலையில் இரந்து உண்ணும் உணவை உடையவனை.

பன், திளைக்குந் தெவ்வர் திரிபுரம் மூன்றும் அவுணர் பெண்டிரும் மக்களும் வேவ, வளைத்த வில்லினைய வாழ் கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக்கேனே. 5

திருவின் நாயகன் ஆகிய மாலுக் கருள்கள் செய் திடும் தேவர் பிரானை, உருவி னானைஒன் றாஅறி வொண்ணா மூர்த்தி யைவிச யற்கருள் செய்வான், செருவில் ஏந்திஓர் கேழற்பின் சென்று செங்கண் வேடனாய் என்னொடும் வந்து, மருவி னான்றனை வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. 6

எந்தை யைஎந்தை தந்தை பிரானை ஏதமா யஇடர் தீர்க்கவல் லானை, முந்தி யாகிய மூவரின் மிக்க மூர்த்தி யைமுதல் காண்பரி யானைக், கந்தின் மிக்ககரி யின்மருப் போடு கார கில்கவ ரிம்மயிர் மண்ணி, வந்து வந்திழி வாழ் கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக்கேனே.

தேனை ஆடிய கொன்றையி னானைத் தேவர் கைதொழுந் தேவர் பிரானை, ஊனம் ஆயின தீர்க்கவல்லானை ஒற்றை ஏற்றனை நெற்றிக்கண் ணானைக், கான ஆனையின் கொம்பினைப் பீழ்ந்த கள்ளப் பிள்ளைக்குங் காண்பரி தாய, வான நாடனை வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்நினைக் கேனே. 8

---

5. மாரனார் : பன்மை, இழிவுக்குறிப்பு. வரைமார்பன்- தாழ்வரையைப் போன்ற திருமார்பை உடையவன். தெவ்வர் - பகைவர். திரிபுரம் — வானிலே திரிந்த புரங்கள். அவுணருடைய பெண்டிரும் மக்களும் வேவ, அவுணராகிய மூவரும் வெந்திலர்.

6. செரு வில் — போருக்குரிய வில்லை. கேழல் — பன்றி.

7. முந்தி — முதல். கந்தின் மிக்க - கட்டுத்தறியைவிட அளவிலே மிக்க.

8. கான ஆனையின் கொம்பினைப் பீழ்ந்த - குவலயாபீட மென்னும் காட்டுயானையின் கொம்பைப் பிடுங்கிய. கள்ளப் பிள்ளை - கண்ணன்.

காளை யாகி வரைஎடுத் தான்றன் கைகள் இற்றவன் மொய்தலை எல்லாம், மூளை போத ஒருவிரல் வைத்த மூர்த்தி யைமுதல் காண்பரி யானைப், பாளை தெங்கு பழம்விழ மண்டிச் செங்கண் மேதிகள் சேடெறிந் தெங்கும், வாளை பாய்வயல் வாழ்கொளி புத்தூர் மாணிக் கத்தைமறந் தென்னினைக் கேனே. 9

திருந்த நான்மறை பாடவல் லானைத் தேவர்க் குந் தெரி தற்கரி யானைப், பொருந்த மால்விடை ஏறவல் லானைப் பூதிப் பைபுலித் தோலுடை யானை, இருந்துண் தேரரும் நின்றுணும் சமணும் ஏச நின்றவன் ஆருயிர்க் கெல்லாம், மருந்த னானைவாழ்கொளி புத்தூர் மாணிக் கத் தைமறந் தென்னினைக் கேனே. 10

மெய்யனை மெய்யின் நின்றுணர் வானை மெய்யி லாதவர் தங்களுக் கெல்லாம், பொய்ய னைப்புரம் மூன்றெரித் தானைப் புனித னைப்புலித் தோலுடை யானைச், செய்ய னைவெளி யதிரு நீற்றில் திகழு மேனியன் மான்மறி ஏந்தும், மைகொள் கண்டனை வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்னினைக் கேனே. 11

வளங்கி ளர்பொழில் வாழ்கொளி புத்தூர் மாணிக்கத் தைமறந் தென்னினைக் கேனென், றுளங்கு ளிர்தமிழ் ஊரன் வன் றொண்டன் சடையன் காதலன் வனப்பகை அப்பன், நலங்கி ளர்வயல் நாவலர் வேந்தன் நங்கை சிங்கடி தந்தை

---

9. சேடு – சேறு.

10. தேரர்- பௌத்தர்.

12. நாவலர் – நாவலூரில் உள்ளார். பறையும் – தேயும்.

பயந்த, பலங்கி ளர்தமிழ் பாடவல் லார்மேற் பறையு மாஞ் செய்த பாவங்க டாளே. 12

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு
சுவாமி: மாணிக்கவண்ணர்
அம்பிகை: வண்டமர் பூங்குழலம்மை

வரலாறு: சுந்தரமூர்த்தி சுவாமிகள் மண்ணிப்படிக்கரையைத் தரிசித்துவிட்டுச் செல்லுகையில் அருகில்உள்ள திருவாழ்கொளிபுத்தூருக்குப் போகாமல் செல்லும்போது, இடையே நினைவு வந்து மீண்டு, இப்பதிகம் பாடி அத்தலத்துக்கு வந்து சிவபெருமானைத் தரிசித்தார் (பெரிய. ஏயர். 118 - 119.)

திருக்கழுமலம்

திருச்சிற்றம்பலம்

சாதலும் பிறந்தலுந் தவிர்த்தெனை வகுத்துத் தன் அருள் தந்தஎம் தலைவனை மலையின், மாதினை மதித்தங் கொர் பால்கொண்ட மணியை வருபுனல் சடையிடை வைத்தஎம் மானை, ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை எண்வகை ஒருவனை எங்கள்பி ரானைக், காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த கழுமல வளநகர்க் கண்டு கொண் டேனே. 1

மற்றொரு துணைஇனி மறுமைக்குங் காணேன் வருந் தலுற் றேன்மற வாவரம் பெற்றேன், சுற்றிய சுற்றமுந் துணைஎன்று கருதேன் துணைஎன்று நான்தொழப் பட்ட ஒண் சுடரை, முத்தியும் ஞானமும் வானவர் அறியா முறை முறை பலபல நெறிகளுங் காட்டிக், கற்பனை கற்பித்த கட வுளை அடியேன் கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 2

---

1. ஏது இல் என் - யாதொரு பற்றும் இல்லாத எனது. எண்வகை ஒருவன் - அட்டமூர்த்தி. கழுமல வளநகர் - சீகாழி.

திருத்தினை நகர்உறை சேந்தன் அப்பன்என் செய்வினை அறுத்திடுஞ் செம்பொனை அம்பொன், ஒருத்தனை அல்லதிங் காரையும் உணரேன் உணர்வுபெற் றேன்உய்யுங் காரணந் தன்னால், விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி விழித்தெங்குங் காணமாட் டாதுவிட் டிருந்தேன், கருத்தனை நிருத்தஞ்செய் காலனை வேலைக் கழுமல வளநகர்க் கண்டு கொண் டேனே. 3

மழைக்கரும் பும்மலர்க் கொன்றையி னானை வளைக்கலுற் றேன்மற வாமனம் பெற்றேன், பிழைத்தொரு கால்இனிப் போய்ப்பிற வாமைப் பெருமைபெற் றேன்பெற்ற தார்பெறு கிற்பார், குழைக்கருங் கண்டனைக் கண்டுகொள் வானே பாடுகின் றேன்சென்று கூடவும் வல்லேன், கழைக்கரும் புங்கத லிப்பல சோலைக் கழுமல வளநகர்க் கண்டு கொண் டேனே. 4

குண்டலங் குழைதிகழ் காதனே என்றும் கொடுமழு வாட்படைக் குழகனே என்றும், வண்டலம் பும்மலர்க் கொன்றையன் என்றும் வாய்வெரு வித்தொழு தேன்விதி யாலே, பண்டைநம் பலமன முங்களைந் தொன்றாய்ப் பசுபதி பதிவின விப்பல நாளும், கண்டலங் கழிக்கரை ஓதம் வந் துலவும் கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 5

வரும்பெரும் வல்வினை என்றிருந் தேன்இனி வருந்தலுற் றேன்மற வாமனம் பெற்றேன், விரும்பிஎன் மனத்திடை மெய்குளிர்ப் பெய்தி வேண்டிநின் றேன்தொழு தேன்விதி யாலே, அரும்பினை அலரினை அமுதினைத் தேனை ஐயனை அறவன்என் பிறவிவேர் அறுக்கும், கரும்பினைப் பெருஞ்செந்நெல் நெருங்கிய கழனிக் கழுமல வளநகர்க் கண்டு கொண் டேனே. 6

---

3. சேந்தன் அப்பன் - முருகவேளுடைய தந்தை. வேலை - பிரளய காலத்தில் சமுத்திரத்திலே மிதந்த.

4. மழைக்கு அரும்பும்; கொன்றை கார் காலத்தில் மலர்வது. கழைக்கரும்பு - மூங்கிலைப்போல வளர்ச்சிபெற்றகரும்பு.

5. குழகன் – இளமையை உடையவன். கண்டல் - முள்ளி. ஓதம் - பொங்கும் கடல்நீர்.

அயலவர் பரவவும் அடியவர் தொழவும் அன்பர்கள் சாயலுள் அடையலுற் றிருந்தேன், முயல்பவர் பின்சென்று முயல்வலை யானை படுமென மொழிந்தவர் வழிமுழுதெண்ணிப், புயலினைத் திருவினைப் பொன்னின தொளியை மின்னின் றுருவை என்னிடைப் பொருளைக், கயலினஞ் சேலொடு வயல்விளை யாடுங் கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 7

வினைதரு பாவங்கள் நாசங்க ளாக நினைந்துமுன் தொழுதெழப் பட்டஒண் சுடரை, மலைதரு மலைமகள் கணவனை வானோர் மாமணி மாணிக்கத் தைமறைப் பொருளைப், புனைதரு புகழினை எங்கள தொளியை இருவரும் ஒருவனென் றுணர்வரி யவனைக், கனைதரு கருங்கடல் ஓதம்வந் துலவும் கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 8

மறையிடைத் துணிந்தவர் மனையிடை இருப்ப வஞ்சனை செய்தவர் பொய்கையும் மாயத், துறையுறக் குளித்துள தாகவைத் துய்த்த உண்மை யெனுந்தக வின்மையை ஓரேன், பிறையுடைச் சடையனை எங்கள்பி ரானைப் பேரரு ளாளனைக் காரிருள் போன்ற, கறையணி மிடறுடை அடிகளை அடியேன் கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 9

செழுமலர்க் கொன்றையுங் கூவிள மலரும் விரவிய சடைமுடி அடிகளை நினைந்திட், டழுமலர்க் கண்ணிணை அடியவர்க் கல்லால் அறிவரி தவன்திரு அடியிணை இரண்டும், கழுமல வளநகர்க் கண்டுகொண் டேரன் சடையன்றன்

---

7. சாயலுள் - மென்மையான கூட்டத்தில்.

8. இருவரும் – திருமாலும் பிரமனும்.

10. கூவிள மலர் – வில்வப்பூ.

காதலன் பாடிய பத்தும், தொழுமலர் எடுத்தகை அடியவர் தம்மைத் துன்பமும் இடும்பையுஞ் சூழகி லாவே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு

சுவாமி: பிரமபுரீசுவரர்; அம்பிகை; திருநிலைநாயகியம்மை.

வரலாறு: சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிதம்பரத்தைத் தரிசித்துக்கொண்டு கொள்ளிடத்தைக் கடந்து சீகாழியை நோக்கி வந்தவர், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அவதரித்த அத்தலத்தைக் காலினல் மிதிக்க அஞ்சி, ஊர்ப்புறத்தே நின்று வணங்கி வலம் வருகையில், சிவபெருமான் அவருக்குக் காட்சி கொடுத்தருளினர். அப்போது ஆளுடைய நம்பிகள் பாடிய பதிகம் இது (பெரிய. தடுத்தாட்கொண்ட 110-111.)

திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப் போக முந்திரு வும்புணர்ப் பானைப், பின்னை என்பிழை யைப் பொறுப் பானைப் பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை, இன்ன தன்மையன் என்றறி வொண்ணா எம்மா னைஎளி வந்தபி ரானை, அன்னம் வைகும் வயற்பழ னத்தணி ஆரு ரானை மறக்கலு மாமே. 1

கட்ட மும்பிணி யுங்களை வானைக் காலற் சீறிய காலுடை யானை, விட்ட வேட்கைவெந் நோய்களை வானை விரவி னல்விடு தற்கரி யானைப், பட்ட வார்த்தை படநின்ற வார்த்தை வாரா மேதவி ரப்பணிப் பானை, அட்ட மூர்த்தியை மட்டவிழ் சோலை ஆரு ரானை மறக்கலு மாமே. 2

---

1. மெய்ப்பொருள் - உண்மையான செல்வம்; அருள். ஆமே: வினு.

2. விட்ட - என்னிடத்திலே தங்கிய; மனம் போனபடி விடுத்த எனலும் ஆம். விரவினல் - அன்பு செய்து பயின்ருல். பட்ட வார்த்தை - முன்பே பட்ட பழிச் சொற்கள்.

கார்க்குன் றமழை யாய்ப்பொழி வானைக் கலைக்கெ லாம்பொரு ளாய்உடன் கூடிப், பார்க்கின் றஉயிர்க் குப்பரிந் தானைப் பகலுங் கங்குலும் ஆகிநின் றானை, ஓர்க்கின் றசெவி யைச்சுவை தன்னை உணரும் நாவினைக். காண்கின்ற கண்ணை, ஆர்க்கின் றகட லைமலை தன்னை ஆரூ ரானை மறக்கலு மாமே. 3

செத்த போதினில் முன்னின்று நம்மைச் சிலர்கள் கூடிச் சிரிப்பதன் முன்னம், வைத்த சிந்தைஉண் டேமனம் உண்டே மதிஉண் டேவிதி யின்பயன் உண்டே, முத்தன் எங்கள் பிரான்என்று வானோர் தொழநின் றதிமில் ஏறுடை யானை, அத்தன் எந்தைபி ரான்எம்பி ரானை ஆரூ ரானை மறக்கலு மாமே. 4

செறிவுண் டேல்மனத் தால்தெளி வுண்டேல் தேற்றத் தால்வருஞ் சிக்கன வுண்டேல், மறிவுண் டேல்மறு மைப்பிறப் புண்டேல் வாணாள் மேற்செல்லும் வஞ்சனை உண் டேல், பொ றி வண் டாழ்செய்யும் பொன்மலர்க் கொன்றை பொன்போ லுஞ்சடை மேற்புனைந் தானை, அறிவுண் டேஉட லத்துயிர் உண்டே ஆரூ ரானை மறக்கலு மாமே. 5

பொள்ளல் இவ்வுட லைப்பொருள் என்று பொருளுஞ் சுற்றமும் போகமும் ஆகி, மெள்ள நின்றவர் செய்வன எல் லாம் வாரா மேதவிர்க் கும்விதி யானை, வள்ளல் எந்தமக் கேதுணை என்று நாள்நா ளும்அம ரர்தொழு தேத்தும், அள்ள லங்கழ னிப்பழ னத்தணி ஆரூ ரானை மறக்கலு மாமே. 6

3. கங்குல் - இரவு. ஓர்க்கின்ற - உற்றுக் கேட்கின்ற.

4. சிந்தை - சித்தம். மதி-புத்தி.

5. செறிவு-அடக்கம். தேற்றத்தால் - தெளிவினால். சிக்கனவு - மனத்திண்மை. மறிவு - இறப்பு. பொறிவண்டு ஆழ் செயும்; ஆழ் - யாழ்; யாழிசையை.

6. பொள்ளல் - ஓட்டைகளை உடைய. வள்ளல்: தியா கேசர் என்பதை நினைப்பித்தபடி. அள்ளல் - சேறு.

கரியானை உரி கொண்டகை யானைக் கண்ணின் மேல் ஒரு கண்ணுடை யானை, வரியானை வருத் தங்களை வானை மறையானைக் குறை மாமதி சூடற், குரியானை உலகத்துயிர்க் கெல்லாம் ஒளியானை உகந் துள்கிநண் ணுதார்க், கரியானை அடி யேற்கெளி யானை ஆரூ ரானை மறக்கலு மாமே. 7

வாளா நின்று தொழும் அடி யார்கள் வான் ஆளப்பெறும் வார்த்தையைக் கேட்டும், நாளு நாண்மலர் இட்டுவ ணங்கார் நம்மைஆள் கின்ற தன்மையை ஓரார், கேளா நான் கிடந் தேஉழைக் கின்றேன் கிளைக்கெ லாந்துணை யாம் எனக் கருதி, ஆளா வான்பலர் முன்பழைக் கின்றேன் ஆரூ ரானை மறக்கலு மாமே. 8

விடக்கை யேபெருக் கிப்பல நாளும் வேட்கை யாற் பட்ட வேதனை தன்னைக், கடக்கி லேன்நெறி காணவு மாட் டேன் கண்கு ழிந்திரப் பார்கையில் ஒன்றும், இடக்கி லேன்பர வைத்திரைக் கங்கைச் சடையானை உமை யாளை யோர் பாகத், தடக்கி னானை அந் தாமரைப் பொய்கை ஆரூ ரானை மறக்கலு மாமே. 9

---

7. கரி யானை – கருநிறம் பெற்ற யானை. வரியானை – பாட்டாகி இருப்பவனை.

8. உழைக்கின்றேன் - வருந்துகின்றேன். அழைக்கின் றேன் - கூவுகின்றேன்.

9. விடக்கை - உடம்பை. இடக்கிலேன் - அளித்தேனல் லேன். பரவைத்திரைக் கங்கை – பரவுதலையுடைய அலைகளை யுடைய கங்கை; கடலலை போன்ற அலைகளையுடைய கங்கை எனலும் ஆம்.

ஒட்டி ஆட்கொண்டு போய்ஒளித் திட்ட உச்சிப் போதனை நச்சர வார்த்த,பட்டி யைப்பக லைஇருள் தன்னைப் பாவிப் பார்மனத் தூறுமத் தேனைக், கட்டி யைக்கரும் பின்தெளி தன்னைக் காத லாற்கடற் சூர்தடிந்திட்ட,செட்டி யப்பனைப் பட்ட னைச் செல்வ ஆரூரானை மறக்கலுமாமே.

ஊரூர் என்றல கங்களுக் கெல்லாம் உரைக்க லாம்பொரு ளாய்உடன் கூடிக், காரூ ருங்கமழ் கொன்றைநன் மாலை முடியன் காரிகை காரண மாக, ஆரூ ரைமறத் தற்கரி யானை அம்மான் றன்திருப் பேர்கொண்ட தொண்டன், ஆரூ ரன்அடி நாய்உரை வல்லார் அமர லோகத் திருப்பவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

வரலாறு: கொடுங்கோளூரில் சேரமான்பெருமாள் நாயனார் செய்த உபசாரங்களை ஏற்றுக்கொண்டு தங்கியிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஒருநாள் திருவாரூர்ப்பெருமானுடைய நினைவு வரவே, இப்பதிகத்தைப் பாடியருளினார் (பெரிய. சேரமான். 156.)

திருவிடைமருதூர்

திருச்சிற்றம்பலம்

கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தாற் கைப்பர் பாழ்புக மற்றது போலப், பழுது நான்உழன் றுட்டடு மாறிப் படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய், அழுது நீஇருந் தென்செய்தி மனனே அங்க ணாஅர னேஎன மாட்டா, இழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 1

---

10. ஒட்டி - முன்னின்று வாதிட்டு. உச்சிப் போதனை - பிச்சை வாங்குவதற்கு உச்சிப் போதை உடையவனை. பட்டியை - யார்க்கும் அடங்காதவனை. கட்டியை - கற்கண்டை. செட்டி அப்பனை - முருகனுடைய தந்தையை.

11 கார் ஊரும் கமழ் கொன்றை - கார்காலத்திலே பரவி மலர்ந்து கமழும் கொன்றை.

1. எய்த்தால் - சோர்ந்து போனால். கைப்பர் பாழ்புக - பாழ்வெளியிலே போகும்படித் துரத்துவார்கள். இழுதையேன் - தாழ்ந்தவன்.

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே நன்றி யில் வினை யேதுணிந் தெய்த்தேன், அரைத்த*மஞ்சள தாவதை அறிந்தேன் அஞ்சி னேன்நம னாரவர் தம்மை, உரைப்பன் நான்உன சேவடி சேர உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத, இரைப்பனே னுக்கோர் உய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 2

புன்னு னைப்பனி வெங்கதிர் கண்டாற் போலும் வாழ்க்கை பொருள்இலை நாளும், என்னே னக்கினி இற்றைக்கு நாளை என்றி ருந்திடர் உற்றனன் எந்தாய், முன்ன மேஉன சேவடி சேரா மூர்க்க னாகிக் கழிந்தன காலம், இன்னம் என்றனக் குய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 3

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய மூர்க்க னாகிக் கழிந்தன காலம், சிந்தித் தேமனம் வைக்கவும் மாட்டேன் சிறுச்சிறி தேஇரப் பார்கட்கொன் றீயேன், அந்தி வெண் பிறை சூடும்எம் மானே ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா, எந்தை நீஎனக் குய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 4

அழிப்பர் ஐவர் புரவுடை யார்கள் ஐவ ரும்புர வாசற ஆண்டு, கழித்துக் காற்பெய்து போயின பின்னைக் கடைமு றைஉனக் கேபொறை ஆனேன், விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை வேண்டேன் மானுட வாழ்க்கைஈ தாகில், இழித்தேன் என்றனக் குய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 5

---

2. இன்னே - இப்பொழுதே. இரைப்பன் - மோகத்தை உடையவன்; இரைப்பு-மோகம்.

3. புல்லின் நுனியிலே உள்ள பனி, வெவ்விய சூரியனைக் கண்டால் உடனே மறைவதுபோல நிலையாமையையுள்ள வாழ்க்கை; "புல்நுனி நீர்போல் நிலையாமை" (நாலடி.) பொருள் இலை - பயனுடையதன்று. எனக்கு இனி என்.

4. சிறுச்சிறிதே - மிகச் சிறிய அளவேனும்.

5. ஐவர் புரவுடையார்கள் - இந்த உடம்பை ஆளும் ஆட்சியையுடைய ஐம்பொறிகள். ஆசு அற ஆண்டு - சிறிதும் எஞ்சுதலின்றி ஆட்சிசெய்து. கழித்து - நீத்து. காற்பெய்து -

குற்றந் தன்னொடு குணம்பல பெருக்கிக் கோல நுண்ணிடை யாரொடு மயங்கிக், கற்றி லேன்கலை கள்பல ஞானங் கடிய ஆயின கொடுமைகள் செய்தேன், பற்ற லாவதோர் பற்றுமற் றில்லேன் பாவி யேன்பல பாவங்கள் செய்தேன், எற்று ளேன்எனக் குய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 6

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னைக் குற்றஞ் செற்றம் இவைமுத லாக, விடுக்க கிற்றிலேன் வேட்கையுஞ் சினமும் வேண்டில் ஐம்புலன் என்வசம் அல்ல, நடுக்கம் உற்றதோர் மூப்புவந் தெய்த நமன்த மர்நர கத்திடல் அஞ்சி, இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 7

ஐவ கையர் ஐயர வராகி ஆட்சி கொண்டொரு காலவர் நீங்கார், அவ்வ கையவர் வேண்டுவ தானால் அவ ரவர் வழி ஒழுகிநான் வந்து, செய்வ கைஅறி யேன்சிவ லோகா தீவ ணாசிவ னேஎரி யாடீ, எவ்வ கைஎனக் குய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தை பிரானே. 8

ஏழை மானுட இன்பினை நோக்கி இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம், வாழை தான்பழுக் குநமக் கென்று வஞ்ச வல்வினை யுள்வலைப் பட்டுக், கூழை மாந்தர்தஞ் செல்கதிப் பக்கம் போக மும்பொருள் ஒன்றறி யாத, ஏழை யேனுக்கோர் உய்வகை அருளாய் இடைம ருதுறை எந்தைபி ரானே. 9

காலடியிலே போட்டுவிட்டு. பொறை - பாரம். விழித்து- உணர்வுபெற்று.

7. செற்றம் - பகைமை.

8. ஐவகையர் ஐயர் அவராகி - ஐந்து வெவ்வேறு வகையினவாகிய பொறிகள் தலைவர் ஆகி.

9. இளையவர் - இளைய மங்கையர். ஒருமுறை பழுத்த வாழை மற்ற மரங்களைப்போல மீண்டும் பழுக்கும் என்று எண்ணி ஏமாந்ததுபோல ஏமாந்து. கூழை மாந்தர் - தாழ்வுடைய மக்கள்.

அரைக்குஞ் சந்தனத் தோடகில் உந்தி ஐவ னஞ்சுமந் தார்த்திரு பாலும், இரைக்குங் காவிரித் தென்கரை தன்மேல் இடைம ருதுறை எந்தைபிரானை, உரைக்கும் ஊரன் ஒளிதிகழ் மாலை உள்ளத் தால்உகந் தேத்தவல் லார்கள், நரைப்பு மூப்பொடு நடலையும் இன்றி நாதன் சேவடி நண்ணுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு
சுவாமி: மகாலிங்கம்; அம்பிகை: பெருமுலை நாயகி.

திருக்கச்சி ஏகம்பம்

திருச்சிற்றம்பலம்

ஆலந் தான்உகந் தமுதுசெய் தானை ஆதி யைஅம ரர்தொழு தேத்தும், சீலந் தான்பெரி தும்முடை யானைச் சிந்திப் பாரவர் சிந்தையு ளானை, ஏல வார்குழ லாள்உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற, கால காலனைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடியேன்பெற்ற வாறே. 1

உற்ற வர்க்குத வும்பெரு மானை ஊர்வ தொன்றுடை யான்உம்பர் கோனைப், பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப் பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானை, அற்ற மில்புக ழாள்உமை நங்கை ஆத ரித்து வழிபடப் பெற்ற, கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 2

---

10. ஐவனம் — மலை நெல். இரைக்கும்-ஒலிக்கும். நடலை - துன்பம்.

1. அமுது செய்தானை - உண்டவனை. ஏலம் - நறுமணம். கம்பன் - ஏகம்பன்.

2. உற்றவர்க்கு — துன்பம் அடைந்தவர்களுக்கு. பாவிக் கொண்டானை - பாவியவனை. அற்றம் - சோர்வு.

திரியும் முப்புரம் தீப்பிழம் பாகச் செங்கண் மால் விடை மேற்றிகழ் வானைக், கரியின் ஈருரி போர்த்துகந் தானைக் காம னைக்கன லாவிழித் தானை, வரிகொள் வெள் வளை யாள்உமை நங்கை மருவி ஏத்தி வழிபடப் பெற்ற, பெரிய கம்பனை எங்கள்பி ரானைக் காணக் கண்அடி யேன் பெற்ற வாறே. 3

குண்ட லந்திகழ் காதுடை யானைக் கூற்று தைத்த கொடுந்தொழி லானை, வண்டலம் புமலர்க் கொன்றையி னானை வாள ராமதி சேர்சடை யானைக், கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை கெழுமி ஏத்தி வழிபடப் பெற்ற, கண்டம் நஞ்சுடைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 4

வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை வேலைநஞ் சுண்ட வித்தகன் றன்னை, அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை அருமறையவை அங்கம்வல் லானை, எல்லையில்புக ழாள்உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற, நல்ல கம்பனை எங்கள் பிரானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 5

திங்கள் தங்கிய சடையுடை யானைத் தேவ தேவனைச் செழுங்கடல் வளரும், சங்க வெண்குழைக் காதுடை யானைச் சாம வேதம் பெரிதுகப்பானை, மங்கை நங்கை மலை மகள் கண்டு மருவி ஏத்தி வழிபடப் பெற்ற, கங்கை யாள னைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 6

---

3. திரியும் - வானிலே பறந்து திரிந்த. திரிபுரசங்கார காலத்தில் திருமால் இடபமாக வந்து தாங்கினார் என்பது புராண வரலாறு. பெரிய கம்பன் - ஏகாம்பரநாதர்.

4. அலம்பும் - முழங்கும். வாள் - ஒளி.

5. நல்ல கம்பன் - உருத்திரரால் பூசிக்கப்பெற்ற மூர்த்தி.

விண்ண வர்தொழு தேத்தநின் றானை வேதந் தான்
விரித் தோதவல் லானை, **நண்ணி னார்க்கென்றும் நல்லவன்**
றன்னை *நாளும் நாம்உகக் கின்றபி ரானை, எண்ணில் தொல்*
புக ழாள்உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற,
கண்ணும் மூன்றுடைக் கம்பனெம் மானைக் காணக் கண்
அடி யேன்பெற்ற வாறே. 7

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள் சிந்தையில்
திக ழுஞ்சிவன் றன்னைப்,பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலோ டானஞ்சும் ஆட்டுகந் தானை, *அந்த மில்புக ழாள்*
உமை நங்கை ஆத ரித்து வழிபடப் பெற்ற, கந்த வார்
சடைக் கம்பன்எம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற
வாறே. 8

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம் வாலி யபுரம்
மூன்றெரித் தானை, நிரம்பிய தக்கன் றன்பெரு வேள்வி
நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைப், பரந்த தொல்புக
ழாள்உமை நங்கை பரவி ஏத்தி வழிபடப் பெற்ற, கரங்
கள் எட்டுடைக் கம்பன்எம் மானைக் காணக் கண்அடி
யேன்பெற்ற வாறே. 9

எள்கல் இன்றி இமையவர் கோனை ஈச னைவழி பாடு
செய் வாள்போல், உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிப டச்சென்று நின்றவா கண்டு, வெள்ளங் காட்டி
வெருட்டிட அஞ்சி வெருவி ஓடித் தழுவ வெளிப்
பட்ட,கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக் காணக்கண் அடி
யேன்பெற்ற வாறே. 10

---

8. பந்தித்த - கட்டிய. பாலொடு ஆன் அஞ்சும் ஆட்டு உகந்தானை - தனிப் பாலபிடேகத்தோடு பஞ்சகவ்விய அபிடேகமும் ஏற்றுக்கொண்டவனை. கந்தம் - வாசனை.

9 வாலிய - வெள்ளிய; அறிவற்றார்க்குரிய. நிரந்தரஞ் செய்த - அழித்த. நிட்கண்டகன் கடுமையுடையவன்.

10. எள்கல் - இழிவு செய்தல். கள்ளக்கம்பன் - திருமால் பூசித்த மூர்த்தி.

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப் பெரிய எம்பெரு மான்என்றெப் போதும், கற்ற வர்பர வப்படு வானைக் காணக் கண்அடி யேன்பெற்ற தென்று, கொற்ற வன்கம்பன் கூத்தன்எம் மானைக் குளிர்பொ ழில்திரு நாவலா ரூரன், நற்ற மிழ்இவை ஈரைந்தும் வல்லார் நன்னெ றிஉல கெய்துவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : தொண்டை நாடு

சுவாமி : ஏகாம்பரநாதர்; அம்பிகை : காமாட்சியம்மை.

வரலாறு : திருவொற்றியூரை விட்டுப் புறப்பட்ட சுந்தர மூர்த்தி சுவாமிகள், சங்கிலி நாச்சியார்க்களித்த உறுதி மொழியை மீறினமையால் இரண்டு கண்ணையும் இழந்து, பல தலங்களுக்குச் சென்று பணிந்து காஞ்சிபுரம் வந்தார். அங்கே திருவேகம்பமுடையானை வணங்கி வேண்டியபோது, அப்பெருமான் திருவருளால் இடக்கண் பார்வை மாத்திரம் கிடைக்க, உடனே இப்பதிகத்தைப் பாடியருளினார் (பெரிய. ஏயர். 286 288.)

திருக்கோலக்கா

திருச்சிற்றம்பலம்

புற்றில் வாளர வார்த்தபி ரானைப் பூத நாதனைப் பாதமே தொழுவார், பற்று வான்துணை எனக்கெளி வந்த பாவ நாசனை மேவரி யானை, முற்ற லார்திரி புரம்ஒரு மூன்றும் பொன்ற வென்றிமால் வரைஅரி அம்பாக், கொற்ற வில்அங்கை ஏந்திய கோனைக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 1

---

11. பெற்றமாகிய ஏற்றை.

1. புற்றில் வாள் அரவு : சாதியை நோக்கிய விசேடணம். வான் துணை – மேலான துணை. முற்றலார் - பகைவர். திரிபுரம் - திரிந்த புரம். மால்வரையை வில்லாக ஏந்திய.

அங்கம் ஆறும்மா மறைஒரு நான்கும் ஆய நம்பனை வேய்புரை தோளி, தங்கு மாதிரு உருவுடை யானைத் தழல்ம திசடை மேற்புனைந் தானை, வெங்கண் ஆனையின் ஈருரி யானை விண்ணு ளாரொடு மண்ணுளார் பரசும், கொங்கு லாம்பொழிற் குரவெறி கமழும் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 2

பாட்ட கத்திசை ஆகிநின் றானைப் பத்தர் சித்தம் பரிவினி யானை, நாட்டகத் தேவர் செய்கையு ளானை நட்டம் ஆடியை நம்பெரு மானைக், காட்ட கத்துறு புலியுரி யானைக் கண்ணோர் மூன்றுடை அண்ணலை அடியேன், கோட்ட கப்புன லார்செழுங் கழனிக் கோலக் காவினிற் கண்டுகோண் டேனே. 3

ஆத்தம் என்றெனை ஆளுகந் தானை அமரர் நாதனைக் குமரனைப் பயந்த,வார்த்த யங்கிய முலைமட மானை வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த, தீர்த்த னைச்சிவ னைச்செழுந் தேனைத் தில்லை அம்பலத் துள்நிறைந் தாடும், கூத்த னைக்குரு மாமணி தன்னைக் கோலக் காவினிற் கண்டு கொண் டேனே. 4

அன்று வந்தெனை அகலிடத் தவர்முன் ஆள தாக என் றுவணங் காட்டி, நின்று வெண்ணெய்நல் லூர்மிசை ஒளித்த நித்தி லத்திரட் டொத்தினை முத்திக்,கொன் றினன் றனை உம்பர் பிரானை உயரும் வல்லர ணங்கெடச் சீறும், குன்ற வில்லியை மெல்லிய லுடனே கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. 5

---

2. அங்கம் - சாத்திரம். வேய் - மூங்கில். பரசும் - புகழும். கொங்கு - நறுமணம். குர வெறி கமழும் - குராமலர் வாசனை வீசும்.

3. கோட்டகம் - குளம்.

4. ஆத்தம் - ஆப்தம்; நெருங்கிய நட்பு. பயந்த - பெற்ற

5. அகலிடத்தவர் - உலகத்தார். ஆவணம் - உரிமை யோலை. தொத்து - கொத்து.

காற்றுத் தீப்புனல் ஆகினின் றானைக் கடவு ளைக்கொடு
மால்விடை யானை, நீற்றுத் தீஉரு வாய்நிமிர்ந் தானை நிரம்பு
பல்கலை யின்பொரு ளாலே, போற்றித் தன்கழல் தொழு
மவன் உயிரைப் போக்கு வான்உயிர் நீக்கிடத் தாளாற்,கூற்
றைத் தீங்குசெய் குரைகழ லானைக் கோலக் காவினிற் கண்
டுகொண் டேனே. 6

அன்ற யன்சிரம் அரிந்ததிற் பலிகொண் டமர ருக்க
ருள் வெளிப்படுத் தானைத், துன்று பைங்கழ லிற்சிலம்
பார்த்த சோதி யைச்சுடர் போல்ஒளி யானை, மின்ற யங்
கிய இடைமட மங்கை மேவும் ஈசனை வாசமா முடிமேற்,
கொன்றை அஞ்சடைக் குழகனை அழகார் கோலக் காவி
னிற் கண்டுகொண் டேனே. 7

நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும் ஞான சம்பந்
த னுக்குல கவர்முன், தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
தன்மை யாளனை என்மனக் கருத்தை, ஆளும் பூதங்கள்
பாடநின் றாடும் அங்க ணன்றனை எண்கணம் இறைஞ்சும்,
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக் கோலக் காவினிற்
கண்டுகொண் டேனே. 8

அரக்கன் ஆற்றலை அழித்தவன் பாட்டுக் கன்றி ரங்
கிய வென்றியி னானைப், பரக்கும் பாரளித் துண்டுகந் தவர்
கள் பரவி யும்பணி தற்கரி யானைச், சிரக்கண் வாய்செவி
மூக்குயர் காயம் ஆகித் தீவினை தீர்த்தஎம் மானைக், குரக்கி
னங்குதி கொண்டுகள் வயல்சூழ் கோலக் காவினிற் கண்டு
கொண் டேனே. 9

---

6. தொழும் அவன் - மார்க்கண்டேயன். தீங்கு செய் - அழித்த.

7. அரிந்து அதில் பலிகொண்டு; பலி - பிச்சை. கழலில் - திருவடியில்.

8. தாளம் ஈந்தது, இத்திருத்தலத்தில்.

9. அரக்கன் – இராவணன். அளித்து உகந்தவர், பிரமதேவர்; உண்டு உகந்தவர், திருமால். அளித்தல்-இங்கே சிருஷ்டி செய்தல். காயம் - உடம்பு.

கோட ரம்பயில் சடையுடைக் கரும்பைக் கோலக் காவுள்எம் மாணிமெய்ம் மானப், பாட ரங்குடி அடியவர் விரும்பப் பயிலும் நாவலா ரூரன்வன் றொண்டன், நாடி ரங்கிமுன் அறியுமந் நெறியால் நவின்ற பத்திவை விளம்பிய மாந்தர், காட ரங்கென நடம்நவின் றுன்பாற் கதியும் எய்துவர் பதியவர்க் கதுவே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு

சுவாமி:சத்தபுரீசுவரர்; அம்பிகை:ஓசைகொடுத்தநாயகியம்மை.

நம்பி என்ற திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மெய்யைமுற் றப்பொடிப் பூசியோர் நம்பி வேதம் நான் கும்விரித் தோதியோர் நம்பி, கையில்ஓர் வெண்மழு ஏந்தியோர் நம்பி கண்ணு மூன்றுமுடை யாயொரு நம்பி, செய்ய நம்பிசிறு செஞ்சடை நம்பி திரிபுரந் தீயெழச் செற்றதோர் வில்லால், எய்த நம்பிஎன்னை ஆளுடை நம்பி எழுபிறப் புமெங்கள் நம்பிகண் டாயே. 1

திங்கள் நம்பிமுடி மேல்அடி யார்பாற் சிறந்த நம்பி பிறந்த உயிர்க் கெல்லாம், அங்கண் நம்பியருள் மால்விசும் பாளும் அமரர் நம்பிகும ரன்முதல் தேவர், தங்கள் நம்பித வத் துக்கொரு நம்பி தாதை என்றுன சரண்பணிந் தேத்தும், எங்கள் நம்பிஎன்னை ஆளுடை நம்பி எழுபிறப் புமெங்கள் நம்பிகண் டாயே. 2

---

10. கோடரம் - கிளை. மெய்ம்மானப் பாடர் அம் குடி அடியவர் - உண்மையும் பெருமையும் உடைய பாட்டையுடையவராகிய அழகிய குடியிற் பிறந்த அடியவர். காடு அரங்கு என; காடு - மயானம்.

1. பொடி - திருநீறு. நம்பி - புருஷோத்தமனே.

வருந்த அன்றுமத யானை உரித்த வழக்கு நம்பிமு
ழக் குங்கடல் நஞ்சம், அருந்தும் நம்பிஅம ரர்க்கமு
திக்க அருளெ னம்பிபொரு ளால்வரு நட்டம், புரிந்த நம்பி
புரி நூலுடை நம்பி பொழுதும் விண்ணும் முழுதும் பல
வாகி, இருந்த நம்பிஎன் னை ஆளுடை நம்பி எழுபிறப்
பும்எங்கள் நம்பிகண் டாயே. 3

ஊறு நம்பிஅமு தாஉயிர்க் கெல்லாம் உரிய நம்பிதெரி
யும்மறை அங்கம், கூறு நம்பிமுனி வர்க்கருங் கூற்றைக்
குமைத்த நம்பிகுமை யாப்புலன் ஐந்தும், சீறு நம்பிதிரு
வெள்ளடை நம்பி செங்கண் வெள்ளைச்செழுங் கோட்டெரு
தென்றும், ஏறு நம்பிஎன் னை ஆளுடை நம்பி எழுபி றப்
பும்எங்கள் நம்பிகண் டாயே. 4

குற்ற நம்பிகுறு கார்எயில் மூன்றைக் குலைத்த நம்பி
சிலை யாவரை கையில், பற்றுநம்பிபர மானந்த வெள்ளம்
பணிக்கும் நம்பிஎனப் பாடுத லல்லால், மற்று நம்பிஉனக்
கென்செய வல்லேன் மதியி லேன்படு வெந்துயர் எல்
லாம், எற்று நம்பிஎன் னை ஆளுடை நம்பி எழுபிறப்பும்எங்
கள் நம்பிகண் டாயே. 5

அரித்த நம்பிஅடி கைதொழு வார்நோய் ஆண்ட நம்
பிமுன் னை ஈண்டுல கங்கள், தெரித்த நம்பிஒரு சேவுடை
நம்பி சில்பலிக் கென்றகந் தோறுமெய் வேடம், தரித்த நம்
பிசம யங்களின் நம்பி தக்கன் றன் வேள்விபுக் கன்றிமை
யோரை, இரித்த நம்பிஎன் னை ஆளுடை நம்பி எழுபி றப்
பும்எங்கள் நம்பிகண் டாயே. 6

---

3. அருளையுடைய என் நம்பி. பொருளால் வரு நட்டம் புரிந்த - குறிப்பாகிய பொருளோடு வந்த நடனத்தைச் செய்த.

4. அமுதா ஊறும் நம்பி. குமைத்த - அழித்த. திருவெள்ளடை: குருகாவூரில் உள்ள பெருமானது திருநாமம். கோடு - கொம்பு.

6 நோயை அரித்த நம்பி ; அரித்த - அழித்த. சே. இடபம். இரித்த - ஓடச்செய்த.

பின்னை நம்பும்புயத் தான்நெடு மாலும் பிரமனும் என்றிவர் நாடியுங் காணா, உன்னை நம்பிஒரு வர்க்கெய்த லாமே உலகு நம்பிஉரை செய்யும தல்லால், முன்னை நம்பி பின்னும் வார்சடை நம்பி முழுதிவை இத்தனை யுந்தொகுத் தாண்ட, தென்னை நம்பிஎம் பிரானாய நம்பி எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 7

சொல்லை நம்பிபொரு ளாய்நின்ற நம்பி தோற்றம் ஈறு முத லாகிய நம்பி, வல்லை நம்பிஅடி யார்க்கருள் செய்ய வருந்தி நம்பிஉனக் காட்செய கில்லார், அல்லல் நம்பிபடு கின்றதென் நாடி அணங்கொரு பாகம்வைத் தெண்கணம் போற்ற, இல்ல நம்பியிடு பிச்சைகொள் நம்பி எழுபி றப்பும் எங்கள் நம்பிகண் டாயே. 8

காண்டு நம்பிகழற் சேவடி என்றும் கலந்துனைக் காதலித் தாட்செய்கிற் பாரை, ஆண்டு நம்பியவர் முன்கதி சேர அருளும் நம்பிகுரு மாப்பிறை பாம்பைத், தீண்டு நம்பி சென்னி யிற்கன்னி தங்கத் திருத்து நம்பிபொய்ச் சமண்பொரு ளாகி, ஈண்டு நம்பிஇமை யோர்தொழு நம்பி எழுபி றப்பும்எங்கள் நம்பிகண் டாயே. 9

கரக்கும் நம்பிகசி யாதவர் தம்மைக் கசிந்த வர்க் கிம்மையோ டம்மையில் இன்பம், பெருக்கு நம்பிபெரு கக்கருத்தா............ 10

திருச்சிற்றம்பலம்

---

7. பின்னை - திருமகள். நம்பும் - விரும்பும்.

8. சொல்லை - சொல்லாகியிருக்கின்றாய்.

9. குரு - நிறத்தை உடைய.

10. கசியாதவர் - அன்பினால் உருகாதவர்.

திருத்தினை நகர்

திருச்சிற்றம்பலம்

நீறு தாங்கிய திருநுத லானை நெற்றிக் கண்ணனை நிரைவளை மடந்தை, கூறு தாங்கிய கொள்கையி ஞனைக் குற்றம் இல்லியைக் கற்றையஞ் சடைமேல், ஆறு தாங்கிய அழகனை அமரர்க் கரிய சோதியை வரிவரால் உகளும், சேறு தாங்கிய திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 1

பிணிகொள் ஆக்கை பிறப்பிறப் பென்னும் இதனை நீக்கி ஈசன் திருவடி யிணைக்காள், துணிய வேண்டிடிற் சொல்லுவன் கேள்நீ அஞ்சல் நெஞ்சமே வஞ்சர்வாழ் மதில்மூன், றணிகொள் வெஞ்சிலை யால்உகச் சீறும் ஐயன் வையகம் பரவிநின் றேத்தும், திணியும் வார்பொழில் திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 2

வடிகொள் கண்ணிணை மடந்தையர் தம்பால் மயல துற்றுவஞ் சனைக்கிடம் ஆகி, முடியு மாகரு தேல்எரு தேறும் மூர்த்தி யைமுத லாய பிரானை, அடிகள் என்றடி யார்தொழு தேத்தும் அப்பன் ஒப்பிலா முலைஉமை கோனைச், செடிகொள் கான்மலி திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனமே. 3

பாவ மேபுரிந் தகலிடந் தன்னிற் பலப கர்ந்தல மந்துயிர் வாழ்க்கைக், காவ என்றுழந் தயர்ந்துவீ ழாதே அண்ணல் தன்திறம் அறிவிஞற் கருதி, மாவின் ஈருரி உடை புனைந் தானை மணியை மைந்தனை வானவர்க் கமுதைத், தேவ தேவனைத் திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 4

---

1. நிரை வளை - வரிசையாக அணிந்த வளை.
2. ஆள் துணிய வேண்டிடின் - அடிமையாகத் துணிய விரும்பிஞல். திணியும் - செறியும்.
3. வடி - கூர்மை ; வாளும் ஆம். செடி - புதர்.
4. ஆவ - ஆந்தோ. மாவின் - யானையின்.

ஒன்ற லாஉயிர் வாழ்க்கையை நினைந்திட் டுடல்த ளர்ந் தரு மாநிதி இயற்றி, என்றும் வாழலாம் எமக்கெனப் பேசும் இதுவும் பொய்யென வேநினை உளமே, குன்ற லாவிய புயமுடை யானைக் கூத்தனைக் குலாவிக்குவ லயத்தோர், சென்றெ றலாம்பயில் திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 5

வேந்த ராய்உல காண்டறம் புரிந்து வீற்றி ருந்தஇவ் வுடலது தன்னைத், தேய்ந்தி றந்துவெந் துயர்உழந் திடும்இப் பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே, பாந்த ளங்கையில் ஆட்டுகந் தானைப் பரம னைக்கடற் சூர்தடிந் திட்ட, சேந் தர் தாதையைத் திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 6

தன்னில் ஆசறு சித்தமும் இன்றித் தவம் முயன்றவம் ஆயின பேசிப், பின்ன லார்சடை கட்டிஎன் பணிந்தாற் பெரிதும் நீந்துவ தரிது நிற்க, முன்னெ லாம்முழு முத லென்று வானோர் மூர்த்தி யாகிய முதலவன் றன்னைச், செங்நெ லார்வயல் திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 7

* பரிந்த சுற்றமும் மற்றுவன் றுணையும் பலருங் கண்டழு தெழஉயிர் உடலைப், பிரிந்து போமிது நிச்சயம் அறிந்தாற் பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து, கருந்த டங் கண்ணி பங்கனை உயிரைக் கால காலனைக் கடவுளை விரும் பிச், செருந்தி பொன்மலர் திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 8

---

5. ஒன்றலா - ஒருநிலையுடையதென்று சொல்வதற் கில்லாத.

6. பொக்கம் - வஞ்சனை; பொய்யுமாம். பாந்தள் - பாம்பு. கடல் சூர் தடிந்திட்ட சேந்தர் தாதையை - கடலிலே புக்கு ஒளித்த சூரபன்மனைச் சங்காரம் செய்த முருகவேளுக் குத் தந்தையை.

7. ஆசு அறு - பற்றுக்கோடு அற்ற.

8. பரிந்த - இரங்கிய.

நமையெ லாம்பலர் இகழ்ந்துரைப் பதன்முன் நன்மை ஒன்றிலாத் தேரர்புன் சமணும், சமய மாகிய தவத்தினார் அவத்தத் தன்மை விட்டொழி நன்மையை வேண்டில், உமையொர் கூறனை ஏறுகந் தானை உம்பர் ஆதியை எம்பெரு மானைச், சிமய மார்பொழில் திருத்தினை நகருட் சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே. 9

நீடு பொக்கையிற் பிறவியைப் பழித்து நீங்க லாம் என்று மனத்தினைத் தெருட்டிச், சேடு லாம்பொழில் திருத் தினை நகருட் சிவக்கொ ழுந்தினைத் திருவடி யிணைதான், நாடெ லாம்புகழ் நாவலூ ராளி நம்பிவன் றொண்ட னூரன் உரைத்த, பாட லாந்தமிழ் பத்திவை வல்லார் முத்தி யாவது பரகதிப் பயனே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : நடு நாடு

சுவாமி : திருநந்தீசுவரர் ; அம்பிகை: இளங்கொம்பன்னாள்.

திருநின்றியூர்

திருச்சிற்றம்பலம்

திருவும் வண்மையும் திண்டிறல் அரசும் சிலந்தி யார் செய்த செய்பணி கண்டு, மருவு கோச்செங்க ணான்றனக் களித்த வார்த்தை கேட்டுநுன் மலரடி அடைந்தேன், பெருகு பொன்னிவந் துந்துபன் மணியைப் பிள்ளைப் பல் கணம் பண்ணையுள் நண்ணித், தெருவுந் தெற்றியும் முற்ற மும் பற்றித் திரட்டுந் தென்றிரு நின்றியூ ரானே. 1

---

9. அவத்தத் தன்மை - பொய்யாகிய இயல்பு. உம்பர் ஆதியை - தேவர்களுக்குள் முதல்வனை. சிமயம் - உச்சி.

10. பொக்கையிற் பிறவி - பூர்ணத்தன்மையின்றி விலையா மையையுடைய பிறவி ; பொக்கை - ஓடிந்தது. தெருட்டி - தெளியச் செய்து. சேடு - பெருமை

1. திரு முதலியவற்றைச் செங்கணான் தனக்கு அளித்த என்று கூட்டுக. பண்ணை - விளையாட்டிடம். தெற்றி - திண்ணை.

அணிகொள் ஆடையம் பூண்அணி மாலை அமுது செய் தமு தம் பேறு சண்டி. இணைகொள் ஏழெழு நூறிரு பனுவல் ஈன்ற வன்திரு நாவினுக் கரையன், கணைகொள் கண் ணப்பன் என்றிவர் பெற்ற காதலின்னருள் ஆதரித் தடைந் தேன், துணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும் செல்வத் தென்றிரு நின்றியூ ரானே. 2

மொய்த்த சீர்முந் நூற் றறுபது வேலி மூன்று நூறு வே தியரொடு நுனக்கு, ஒத்த பொன்மணிக் கலசங்கள் ஏந்தி ஓங்கு நின்றியூர் என்றுனக் களிப்பப், பத்தி செய்த அப் பரசுராமற்குப் பாதங் காட்டிய நீதிகண் டடைந்தேன், சித்தர் வானவர் தானவர் வணங்கும் செல்வத் தென்றிரு நின்றியூ ரானே. 3

இரவி நீள்சுடர் எழுவதன் முன்னம் எழுந்து தன் முலைக் கலசங்கள் ஏந்திச், சுரபி பால்சொரிந் தாட்டிநின் பாதந் தொடர்ந்த வார்த்தை திடம்படக் கேட்டுப், பரவி உள்கிவன் பாசத்தை அறுத்துப் பரம வந்துநுன் பாதத்தை அடைந்தேன், நிரவி நித்திலம் அத்தகு செம்பொன் அளிக் குந் தென்றிரு நின்றியூ ரானே. 4

வந்தோர் இந்திரன் வழிபட மகிழ்ந்து வான நாடுநீ ஆள்கென அருளிச், சந்தி மூன்றிலுந் தாபரம் நிறுத்திச் சகளி செய்திறைஞ் சகத்தியர் தமக்குச், சிந்து மாமணி அணிதிருப் பொதியிற் சேர்வு நல்கிய செல்வங்கண் டடைந்

---

2. *அமுதம் - முத்தி. பனுவல் - திருப்பதிகங்கள். கணை - அம்பு. திணைகொள் - பொருட்பிரிவாகிய ஐந்து திணைகளைக் கொண்ட ; திண்ணையிலே மாணவர்பயிலத் தெரிந்துகொண்ட என்பதும் பொருந்தும்.*

4. *சுரபி - காமதேனு. நித்திலத்தை நிரவி.*

5. *கற்பந்தோறும் இந்திரர் வேறுபடுதலின் ஓர் இந்திரன் என்றார். சந்தி மூன்றிலும் - காலை, நண்பகல், மாலை என்ற மூன்று சந்திகளிலும். தாபரம் நிறுத்தி - இலிங்கத்தைப் பிர திட்டை செய்து. சகளிசெய்து - உருவம் படைத்து. பொதி யிற் சேர்வு நல்கிய - பொதிய மலை வாழ்க்கையை அருளிச் செய்த.*

தேன், செந்தண் மாமலர்த் திருமகள் மருவும் செல்வத் தென்றிரு நின்றியூ ரானே. 5

காது பொத்தரக் கின்னரர் உழுவை கடிக்கும் பன்னகம் பிடிப்பருஞ் சீயம், கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக் கோல ஆல்நிழற் கீழ்அறம் பகர, ஏதஞ் செய்த வர் எய்திய இன்பம் யானுங் கேட்டுநின் இணைஅடி அடைந்தேன், நீதி வேதியர் நிறைபுகழ் உலகில் நிலவு தென்றிரு நின்றியூ ரானே. 6

கோடு நான்குடைக் குஞ்சரங் குலுங்க நலங்கொள் பாதம்நின் றேத்திய பொழுதே, பீடு விண்மிசைப் பெருமை யும் பெற்ற பெற்றி கேட்டுநின் பொற்கழல் அடைந்தேன், பேடை மஞ்ஞையும் பிணைகளின் கன்றும் பிள்ளைக் கிள்ளை யும் எனப்பிறை நுதலார், நீடு மாடங்கள் மாளிகை தோறும் நிலவு தென்றிரு நின்றியூ ரானே. 7

* * * * 8, 9, 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி: மகாலட்சுமி நாதர்; அம்பிகை: உலகநாயகி.

---

6. காது பொத்து - இன்னிசையன்றிப் பிற ஒலிகளைக் கேட்டால் காதைப் பொத்திக்கொள்ளும். கின்னரர் - தேவ சாதியில் ஒரு வகையினர். உழுவை - புலி. சீயம் - சிங்கம். உடன்கேட்ப - ஒருங்கே இருந்து கேட்கும்படி. ஏதஞ்செய் தவர் - முன்பு பிறருக்குத் துன்பம் செய்தவர்கள்.

7. குஞ்சரம்-ஐராவதம். பிணைகள் பெண் மான்கள்.

திருவாவடுதுறை

திருச்சிற்றம்பலம்

மறையவன் ஒருமாணி வந்தடைய வாரமாய்அவன்
ஆருயிர் நிறுத்தக், கறைகொள் வேலுடைக் காலனைக்
காலாற் கடந்த காரணங் கண்டுகண் டடியேன், இறைவன்
எம்பெருமான் என்றெப் போதும் ஏத்தி ஏத்திநின் றஞ்சலி
செய்துன், அறைகொள் சேவடிக் கன்பொடும் அடைந்
தேன் ஆவடு துறை ஆதிஎம் மானே. 1

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி சித்திரப்
பந்தர் சிக்கென இயற்றச், சுருண்ட செஞ்சடை யாய்அது
தன்னைச் சோழன் ஆக்கிய தொடர்ச்சிகண் டடியேன்,
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம் போற்றி போற்றி
என் றன்போடு புலம்பி, அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந்
தடைந்தேன் ஆவடு துறை ஆதிஎம் மானே. 2

திகழும் மாலவன் ஆயிர மலரால் ஏத்து வான்ஒரு
நீள்மலர் குறையப், புகழி னால்அவன் கண்இடந் திடலும்
புரிந்து சக்கரங் கொடுத்தல்கண் டடியேன், திகழும் நின்
திருப் பாதங்கள் பரவித் தேவ தேவநின் திறம்பல பிதற்றி,
அகழும் வல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன் ஆவடு துறை
ஆதிஎம் மானே. 3

---

1. மாணி - பிரமசாரி. வாரமாய் - அன்பாகி. கறை - உயிர்களைக்கொன்ற கறை. வேல் - சூலம். கடந்த - வென்ற. அஞ்சலி செய்து - கும்பிட்டு. அறைகொள் - சிலம்பு முதலியன ஒலித்தலையுடைய.

2. சிக்கென - திண்ணிதாக. சோழனாக்கிய - கோச்செங்கட் சோழனாகப் பிறக்கச் செய்த. அருண்டு - கலங்கி.

3. இடந்து இடலும் - பறித்துத் திருவடிக்கீழ் அருச்சித்தவுடன். புரிந்து - விரும்பி.

வீரத் தால்ஒரு வேடுவ னாகி விசைத்தோர் கேழலைத் துரந்துசென் றணைந்து, போரைத் தான்விச யன்றனக் கன்பாய்ப் புரிந்து வான்படை கொடுத்தல்கண் டடியேன், வாரத் தால்உன நாமங்கள் பரவி, வழிபட் டுன்திற மேநினைந் துருகி, ஆர்வத் தோடும்வந் தடியிணை அடைந் தேன் ஆவ டுதுறை ஆதிஎம் மானே. 4

ஒக்க முப்புரம் ஓங்கெரி தூவ உன்னை உன்னிய மூவர்நின் சரணம், புக்கு மற்றவர் பொன்னுல காளப் புகழி னால்அருள் ஈந்தமை அறிந்து, மிக்க நின்கழ லேதொழு தரற்றி வேதி யாஆதி மூர்த்திநின் அரையில், அக்க ணிந்தஎம் மான்உனை அடைந்தேன் ஆவ டுதுறை ஆதிஎம் மானே. 5

* * * 6, 7, 8, 9, 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழநாடு

சுவாமி: மாசிலாமணி ஈசுவரர்

அம்பிகை: ஒப்பிலாமுலையம்மை

திருவலிவலம்

திருச்சிற்றம்பலம்

ஊனங் கத்துயிர்ப் பாய்உல கெல்லாம் ஓங்கா ரத்துரு ஆகிநின் றானை, வானங் கத்தவர்க் கும்அளப் பரிய வள்ள லைஅடி யார்கள்தம் உள்ளத், தேனங் கத்தமு தாகஉள் ளூறும் தேச னைத்தினைத் தற்கினி யானை, மானங் கைத்தலத் தேந்தவல் லானை வலிவ லந்தனில் வந்து கண்டேனே. 1

---

4. விசைத்து - விரைந்து. துரந்து - ஓட்டி. படை - பாசுபதாஸ்திரம். வாரத்தால் - அன்பினால்.

5. மூவர்-திரிபுரங்களின் தலைவராகிய மூவர். அக்கு-என்பு.

1. ஊன் அங்கத்து உயிர்ப்பாய் - ஊனையுடைய உடலிலே மூச்சுக் காற்றாகி. வான் அங்கத்தவர்க்கும் - வானத்தில் வாழும் திருமேனியையுடைய தேவர்களுக்கும். தேன் அங் கத்து அமுது ஆகி. தேசனை - ஒளிபடைத்தவனை. அங்கைத் தலத்து மான் ஏந்த வல்லானை.

பல்லடி யார்பணிக் குப்பரி வானைப் பாடிஆ டும்பத் தர்க் கன்புடை யானைச், செல்லடி யேநெருக் கித்திறம் பாது சேர்ந்த வர்க்கேசித்தி முத்திசெய் வானை, நல்லடி யார்மனத் தெய்ப்பினில் வைப்பை நானுறு குறைஅறிந் தருள்புரி வானை, வல்லடி யார்மனத் திச்சையு ளானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 2

ஆழிய னாய்அகன் றேஉயர்ந் தானை ஆதிஅந் தம்பணி வார்க்கணி யானைக், கூழைய ராகிப்பொய் யேகுடி ஓம்பிக் குழைந்து மெய்யடி யார்குழுப் பெய்யும், வாழியர்க் கேவழு வாநெறி காட்டி மறுபிறப் பென்னை மாசறுத் தானை, மாழையொண் கண்உமை யைமகிழ்ந் தானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 3

நாத்தான் உன்திற மேதிறம் பாது நண்ணி அண்ணித் தமுதம் பொதிந் தூறும், ஆத்தா னைஅடி யேன்றனக் கென்றும் அளவிறந்தபல தேவர்கள் போற்றும், சோத்தா னைச்சுடர் மூன்றிலும் ஒன்றித் துருவி மால்பிர மன்னறி யாத, மாத்தா னைமாத் தெனக்குவைத் தானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 4

---

2. செல் அடியே நெருக்கி - அன்பர்பாற் செல்கின்ற திருவடியினை அணுகி. எய்ப்பினில் வைப்பை - இளைத்த காலத்தில் பயன்படும் நிதியை.

3. ஆழம், அகலம், உயரம் என்னும் மூன்றும் உடையவன். ஆழியனாய் - ஆழத்தையுடையவனாய். கூழையர் ஆகி- வணக்கத்தை உடையவராய். பொய்யே குடி ஓம்பி பொய்யாகக் குடும்பத்தைக் காத்து. குழு பெய்யும் கூட்டத்திலே சேரும். மாழை யொண் கண்ணுமை : தலத்து அம்பிகை.

4. அண்ணித்து - தித்தித்து. ஆத்தானை - ஆப்தனை. சோத்தானை - தோத்திரத்தைப் பெற்றவனை. சுடர் மூன்று - சூரிய சந்திராக்கினிகள். மாத்தானை - பெருமையை உடையவனை; மகத்து என்பது மாத்து என வந்தது; மாத்து-பெருமை.

நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக் கரசரும் பாடிய நற்றமிழ் மாலை, சொல்லிய வேசொல்லி ஏத்துகப் பானைத் தொண்ட னேன்அறி யாமை அறிந்து, கல்லி யல் மனத் தைக்கசி வித்துக் கழலடி காட்டிஎன் களைகளை அறுக்கும், வல்லியல் வானவர் வணங்கநின் றானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 5

பாடுமா பாடிப் பணியுமா றறியேன் பனுவுமா பனு விப் பரவுமா றறியேன், தேடுமா தேடித் திருத்துமா றறியேன் செல்லுமா செல்லச் செலுத்துமா றறியேன், கூடுமா றெங்ஙன மோஎன்று கூறக் குறித்துக் காட்டிக் கொணர்ந்தெனை ஆண்டு, வாடிநீ வாளா வருந்தல்என் பானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 6

பந்தித்த வல்வினைப் பற்றறப் பிறவிப் படுக டற்பரப் புத்தவிர்ப் பானைச், சந்தித் ததிற லார்பணி பூட்டித் தவத்தை ஈட்டிய தம்மடி யார்க்குச், சிந்தித் தற்கெளி தாய்த்திருப் பாதஞ் சிவலோ கந்திறந் தேற்றவல் லானை, வந்திப் பார்தம் மனத்தினுள் ளானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 7

எவ்வெவர் தேவர் இருடிகள் மன்னர் எண்ணிறந் தார்கள்மற் றெங்கும்நின் றேத்த, அவ்வவர் வேண்டிய தேஅருள் செய்து அடைந்தவர்க் கேஇட மாகிநின் றானை, இவ்வவர் கருணைஎம் கற்பகக் கடலை எம்பெரு மான்அரு ளாய்என்ற பின்னை, வவ்விஎன் ஆவி மனங்கலந் தானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 8

---

5. கல் இயல் மனத்தை - கல்லின் இயல்புகொண்ட திண் ணிய மனத்தை. களைகளை - குற்றங்களை.

6. பனுவுமா பனுவி - செய்யுள் செய்யுமாறு செய்து.

7. பணிபூட்டி - தொண்டை மேற்கொண்டு. திருப்பாத மாகிய சிவலோகம்; திருவடியே மோட்சமாதலின் இங்ஙனம் கூறினர். வந்திப்பார் - வணங்குபவர்.

8. எவ்வெவர் தேவர் - யார் யாரோ தேவர்கள் என் ஆவியும் மனமும் கலந்தானை.

திரியும் முப்புரஞ் செற்றதுங் குற்றத் திறல ரக்கனைச் செறுத்ததும் மற்றைப், பெரிய நஞ்சமு துண்டதும் முற்றும் பின்னை யாய்முன்ன மேமுளைத் தானை, அரிய நான்மறை அந்தணர் ஓவா தடிப ணிந்தறி தற்கரியானை, வரையின் பாவை மணாளனெம் மானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 9

ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து நிறைக்க மாஉதி ரத்தினை ஏற்றுத், தோன்று தோள்மிசைக் களேபரந் தன்னைச் சுமந்த மாவிர தத்தகங் காளன், சான்று காட்டுதற் கரியவன் எளியவன் தன்னைத் தன்னி லாமனத் தார்க்கு, மான்று சென்றணை யாதவன் றன்னை வலிவல லந்தனில் வந்துகண் டேனே. 10

கலிவ லங்கெட ஆரழல் ஓம்பும் கற்ற நான்மறை முற்றனல் ஓம்பும், வலிவ லந்தனில் வந்துகண் டடியேன் மன்னும் நாவலா ரூரன்வன் றொண்டன், ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ் பத்தும் உள்ளத் தால்உகந் தேத்தவல் லார்போய், மெலிவில் வானுல கத்தவர் ஏத்த விரும்பி விண்ணுல கெய்துவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு
சுவாமி: மனத்துணை நாதர்
அம்பிகை; மாழையங்கண்ணி அம்மை

---

9. அரக்கனை - இராவணனை. செறுத்ததும் - தண்டித்ததும். வரையின் பாவை - பார்வதி.

10. அந்தணன் - பிரமனது. களேபரம் - உயிர்போன உடல். சான்று - சாட்சி. மான்று - மயங்கி.

11. கலியினது வெற்றி கெடும்படியாக.

திருநள்ளாறு

திருச்சிற்றம்பலம்

செம்பொன் மேனிவெண் ணீறணி வானைக் கரிய கண்டனை மால்அயன் காணாச், சம்பு வைத்தழல் அங்கையி னானைச் சாம வேதனைத் தன்னொப்பி லானைக், கும்ப மாகரி யின்உரி யானைக் கோவின் மேல்வருங் கோவினை எங்கள், நம்ப னைநள் ளாறனை அமுதை நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. 1

விரைசெய் மாமலர்க் கொன்றையி னானை வேத கீதனை மிகச்சிறந் துருகிப், பரசு வார்வினைப் பற்றறுப் பானைப் பாலொ டானஞ்சும் ஆடவல் லானைக், குரைக டல்வரை ஏழுல குடைய கோனை ஞானக் கொழுந்தினைத் தொல்லை, நரைவிடை யுடைநள் ளாறனைஅமுதை நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. 2

பூவில் வாசத்தைப் பொன்னினை மணியைப் புவியைக் காற்றினைப் புனல்அனல் வெளியைச், சேவின் மேல்வருஞ் செல்வனைச் சிவனைத் தேவ தேவனைத் தித்திக்குந் தேனைக், காவியங் கண்ணி பங்கனைக் கங்கைச் சடைய னைக்காமரத்திசை பாட, நாவில் ஊறும்நள் ளாறனை அமுதை நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. 3

தஞ்சம் என்றுதன் தாளது அடைந்த பாலன் மேல்வந்த காலனை உருள, நெஞ்சில் ஓர்உதை கொண்டபி ரானை நினைப்ப வர்மனம் நீங்ககில் லானை, விஞ்சை வானவர் தானவர் கூடிக் கடைந்த வேலையுள் மிக்கெழுந் தெரியும், நஞ்சம் உண்டநள் ளாறனை அமுதை நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. 4

---

1. கும்பம்-மத்தகம். கோவின்மேல் - இடபத்தின்மேல்.
2. பரசுவார் - புகழ்வார்.
3. வெளியை - ஆகாயத்தை. சே - இடபம். காமரம் - ஒரு பண்.
4. பாலன் - மார்க்கண்டேயர். விஞ்சை - வித்தை.

மங்கை பங்கனை மாசிலா மணியை வான நாடனை ஏனமோ டன்னம், எங்கும் நாடியுங் காண்பரி யானை ஏழை யேற்கெளி வந்த பிரானை, அங்கம் நான்மறை யால்நிறை கின்ற அந்த ணாளர் அடியது போற்றும், நங்கள் கோனை நள் ளாறனை அமுதை நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. 5

கற்ப கத்தினைக் கனகமால் வரையைக் காம கோப னைக் கண்ணுத லானைச், சொற்ப தப்பொருள் இருளறுத் தருளுந் தூய சோதியை வெண்ணெய்நல் லூரில், அற்பு தப்பழ ஆவணங் காட்டி அடிய னென்னை ஆளது கொண்ட, நற்ப தத்தைநள் ளாறனை அமுதை நாயி னேன்மறந் தென்நினைக் கேனே. 6

மறவ னைஅன்று பன்றிப்பின் சென்ற மாயனை நால் வர்க் காலின்கீழ் உரைத்த, அறவ னைஅம ரர்க்கரி யானை அமரர் சேனைக்கு நாயக னை, குறவர் மங்கைதன் கேள் வனைப் பெற்ற கோனை நான்செய்த குற்றங்கள் பொறுக் கும், *நறை விரியும்நள் ளாறனை அமுதை நாயி னேன்மறந் தென்நினைக் கேனே.* 7

மாதி னுக்குடம் பிடங்கொடுத் தானை மணியி னைப் பணி வார்வினை கெடுக்கும், வேதனை வேத வேள்வியர் வணங்கும் விமலனைஅடி யேற்கெளி வந்த, தூதனைத் தன் னைத் தோழமை அருளித் தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும், நாத னைநள் ளாறனை அமுதை நாயி னேன் மறந் தென்நினைக் கேனே. 8

---

6. *காம கோபனை - காமனைச் சினந்து எரித்தவனை. ஆவணம் - அடிமையோலை.*

7. *மறவனை - வீரம் உடையவனை. மாயனை - பொய் வேடம் உடையவனை. அமரர் சேனைக்கு நாயகன் — தேவர்கள் சேனைக்கு அதிபனாகிய முருகன்; "வானோர் வணங்குவிற் றானைத் தலைவ" (திருமுருகாற்றுப்படை.) குறவர் மங்கை — வள்ளி நாச்சியார் கேள்வனை - கணவனை.*

8. *உடம்பு இடம் - உடம்பில் இடப்பாகத்தை. துரி சுகள் - குற்றங்களை*

இலங்கை வேந்தன் எழில்திகழ் கயிலை எடுப்ப ஆங்கிம வான்மகள் அஞ்சத், துலங்கு நீள்முடி ஒருபதுந் தோள்கள் இருப துந்நெரித் தின்னிசை கேட்டு, வலங்கை வாளொடு நாமமுங் கொடுத்த வள்ள லைப்பிள்ளை மாமதிச் சடைமேல், நலங்கொள் சோதிநள் ளாறனை அமுதை நாயினேன்மறந் தென்நினைக் கேனே. 9

செறிந்த சோலைகள் சூழ்ந்தநள் ளாற்றெம் சிவனை நாவலூர்ச் சிங்கடி தந்தை, மறந்து நான்மற்றும் நினைப்பதே தென்று வனப்பகை யப்பன் ஊரன்வன் றொண்டன், சிறந்த மாலைகள் அஞ்சிநோ டஞ்சும் சிந்தை யுள்உரு கிச்செப்ப வல்லார்க், கிறந்து போக்கில்லை வரவில்லை யாகி இன்ப வெள்ளத்துள் இருப்பர்கள் இனிதே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு
சுவாமி : தர்ப்பாரணிய ஈசுவரர்
அம்பிகை : போகமார்த்த பூண்முலையம்மை

வட திருமுல்லைவாயில்

திருச்சிற்றம்பலம்

திருவும்மெய்ப் பொருளுஞ் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்கள்என் றெண்ணி, ஒருவரை மதியா துறுமைகள் செய்தும் ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன், முருகமர் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய் வாயினால் உன்னைப், பரவிடும் அடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 1

---

9. நாமம் – இராவணன் என்ற பெயர்; அழுதவன் என்னும் பொருளுடையது.
10. இறந்து போக்கு - செத்துப்போதல். வரவு – பிறவி.
1. திரு – போகபோக்கியங்களுக்குக் கருவியான ஐசுவரியம். மெய்ப்பொருளும் – உண்மையான அருட் செல்வமும். செல்வம்-நிதி. உறுமைகள் செய்து-அவர்களிடம் புகல்புகா

கூடிய இலயஞ் சதிபிழை யாமைக் கொடியிடை உமையவள் காண, ஆடிய அழகா அருமறைப் பொருளே அங்கணா எங்குற்றாய் என்று, தேடிய வானோர் சேர்திரு முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால், பாடிய அடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 2

விண்பணிந் தேத்தும் வேதியா மாதர் வெருவிட வேழமன் றுரித்தாய், செண்பகச் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய் தேவர்தம் அரசே, தண்பொழில் ஒற்றி மாநகர் உடையாய் சங்கிலிக் காஎன்கண் கொண்ட, பண்பநின் அடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 3

பொன்னலங் கழனிப் புதுவிரை மருவிப் பொறிவரி வண்டிசை பாட, அந்நலங் கமலத் தவிசின்மேல் உறங்கும் அலவன்வந் தலவிட அள்ளல், செந்நெலங் கழனி சூழ் திரு முல்லை வாயிலாய் திருப்புகழ் விருப்பால், பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய் பாசுப தாபரஞ் சுடரே. 4

சந்தன வேருங் காரகிற் குறடும் தண்மயிற் பீலியுங் கரியின், தந்தமுந் தரளக் குவைகளும் பவளக் கொடிகளுஞ் சுமந்துகொண் டுந்தி, வந்திழி பாலி வடகரை முல்லை வாயிலாய் மாசிலா மணியே, பந்தனை கெடுத்தென் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 5

மையைச் செய்து. உறைப்பனாய் – மிடுக்குடையவனாகி. முருகு - வாசனை. படு துயர் என்றது கண்ணை இழந்து பட்ட வருத்தத்தை.

2. இலயம் - தாளம். சதி - காலினால் தாளத்திற்கு ஏற்ப மிதித்தல். கொடியிடை உமை : தலத்து அம்பிகை.

3. மாதர் – உமாதேவியார்.

4. விரை – நறுமணம். அலவன் - நண்டு. அள்ளல் – சேறு.

5. சந்தனத்தின் வேரையும் குறடு - கட்டை. பாலி – பாலாறு. மாசிலாமணி : தலத்து மூர்த்தியின் திருநாமம். பந்தனை – பாசம்.

மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார் வள்ளலே கள்ளமே பேசிக், குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங் கொள்கையால் மிகைபல செய்தேன், செற்றமீ தோடுந் திரிபுரம் எரித்த திருமுல்லை வாயிலாய் அடியேன். பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 6

மணிகெழு செவ்வாய் வெண்ணகைக் கரிய வார்குழல் மாமயிற் சாயல், அணிகெழு கொங்கை அங்கயற் கண்ணார் அருநடம் ஆடல் அறாத, திணிபொழில் தழுவு திருமுல்லை வாயிற் செல்வனே எல்லியும் பகலும், பணியது செய்வேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 7

நம்பனே அன்று வெண்ணெய்நல் லூரில் நாயினேன் றன்னைஆட் கொண்ட, சம்புவே உம்ப ரார்தொழு தேத்துந் தடங்கடல் நஞ்சுண்ட கண்டா, *செம்பொன்மா ளிகைசூழ் திருமுல்லை வாயில் தேடியான் திரிதர்வேன் கண்ட,* பைம் *பொனே அடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே.* 8

மட்டுலாம் மலர்கொண் டடியிணை வணங்கும் மாணிதன் மேல்மதி யாதே, கட்டுவான் வந்த காலனை மாளக் காலினால் ஆருயிர் செகுத்த, சிட்டனே செல்வத் திருமுல்லை வாயிற் செல்வனே செழுமறை பகர்ந்த, பட்டனே அடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. 9

சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையாற் கட்டிட்,டெல்லையில்இன்பம் அவன் பெற வெளிப்பட் டருளிய இறைவனே என்றும், *நல்லவர் பரவுந் திருமுல்லை வாயில் நாதனே நரைவிடை ஏறீ, பல் கலைப் பொருளே படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே.* 10

---

6. மிகை - செய்யத் தகாத செயல்கள்.
7. மணிகெழு - பவளத்தைப் போன்ற. திணி பொழில் - அடர்ந்த சோலை. எல்லி - இரவு.
9. மாணி - மார்க்கண்டேயர். பட்டன் - ஆசிரியன்.
10. இத்தலத்துச் செய்தி.

விரைதரு மலர்மேல் அயனொடு மாலும் வெருவிட நீண்டஎம் மானைத், திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயிற் செல்வனை நாவலா ரூரன், உரைதரு மாலையோர் அஞ்சினோ டஞ்சும் உள்குளிர்ந் தேத்தவல் லார்கள், நரைதிரை மூப்பும் நடலையும் இன்றி நண்ணுவர் விண்ணவர்க் கரசே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு: தொண்டை நாடு

சுவாமி: மாசிலாமணி ஈசுவரர்

அம்பிகை: கொடியிடைநாயகியம்மை

திருவாவடுதுறை

திருச்சிற்றம்பலம்

கங்கை வார்சடை யாய்கண நாதா கால காலனே காமனுக் கனலே, பொங்கு மாகடல் விடமிடற் றானே பூத நாதனே புண்ணியா புனிதா, செங்கண் மால்விடை யாய் தெளி தேனே தீர்த்த னேதிரு வாவடு துறையுள், அங்கணா எனை அஞ்சலென் றருளாய் ஆரெ னக்குற வமரர்கள் ஏறே. 1

மண்ணின் மேல்மயங் கிக்கிடப் பேனை வலிய வந்தெனை ஆண்டுகொண் டானே, கண்ணி லேன்உடம் பில்லடு நோயாற் கருத்த ழிந்துனக் கேபொறை ஆனேன், தெண்ணி லாஎறிக் குஞ்சடை யானே தேவ னேதிரு வாவடு துறையுள், அண்ண லேஎனை அஞ்சலென் றருளாய் ஆரெ னக்குற வமரர்கள் ஏறே. 2

---

11. நீண்ட - பேருருவம் எடுத்து நின்ற. நடலை - துன்பம். அரசு - அரச பதவி.

1. தீர்த்தனே - தூயவனே.

2. பொறை - பாரம்.

ஒப்பி லாமுலை யாளொரு பாகா உத்த மாமத்தம் ஆர்தரு சடையாய், முப்பு ரங்களைத் தீவளைத் தங்கே மூவ ருக்கருள் செய்யவல் லானே, செப்ப ஆல்நிழற் கீழிருந் தருளுஞ் செல்வ னேதிரு வாவடு துறையுள், அப்ப னேஎனை அஞ்சலென் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 3

கோதியி னால்வரு காளிதன் கோபங் குறைய ஆடிய கூத்துடை யானே, மதியி லேன்உடம் பில்லடு நோயால் மயங்கி னேன்மணி யேமணா ளா, விதியி னால்இமை யோர்தொழு தேத்தும் விகிர்த னேதிரு வாவடு துறையுள், அதிப னேஎனை அஞ்சலென் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 4

வந்த வாளரக் கன்வலி தொலைத்து வாழும் நாள் கொடுத் தாய்வழி முதலே, வெந்த வெண்பொடிப் பூசவல் லானே வேட னாய்விச யற்கருள் புரிந்த, இந்து சேகர னேஇமை யோர்சீர் ஈச னேதிரு வாவடு துறையுள், அந்த ணாஎனை அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 5

குறைவி லாநிறை வேகுணக் குன்றே கூத்த னேகுழைக் காதுடை யானே, உறவி லேன்உனை அன்றி மற் றடியேன் ஒருபி ழைபொறுத் தால்இழி வுண்டே, சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச் செம்பொ னேதிரு வாவடு துறையுள், அறவ னேஎனை அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 6

---

3. ஒப்பிலா முலையாள்: தலத்து அம்பிகை. மத்தம் - ஊமத்த மலர். செப்ப - உபதேசம் செய்ய.

4. கோதி - மனக்கொதிப்பு. மணி : மாசிலாமணி என்பது இத்தலத்துச் சிவபெருமான் திருநாமம். விதியினால் - முறைமையோடு.

5. இந்து சேகரன் - சந்திரனை முடித்தவன்.

வெய்ய மாகரி ஈருரி யானே வேங்கை ஆடையி
ஞய்விதி முதலே, மெய்ய னேஅடல் ஆழியன் றரிதான்
வேண்ட நீகொடுத் தருள்புரி விகிர்தா, செய்ய மேனிய
னேதிகழ் ஒளியே செங்க ணைதிரு வாவடு துறையுள்,
ஐய னேஎனை அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற
வமரர்கள் ஏறே. 7

கோதி லாஅமு தேஅருள் பெருகு கோல மேஇமை
யோர்தொழு கோவே, பாதி மாதொரு கூறுடை யானே
பசுப தீபர மாபர மேட்டி, தீதி லாமலை யேதிரு வருள்
சேர் சேவ காதிரு வாவடு துறையுள், ஆதி யேஎனை
அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 8

வான நாடனே வழித்துணை மருந்தே மாசி லாமணி
யேமறைப் பொருளே, ஏன மாவெயி றாமையும் எலும்பும்
ஈடு தாங்கிய மார்புடை யானே, தேனெய் பால்தயிர்
ஆட்டுகந் தானே தேவ னேதிரு வாவடு துறையுள்,
ஆனே யேஎனை அஞ்சல்என் றருளாய் ஆர்எ னக்குற
வமரர்கள் ஏறே. 9

வெண்ட லைப்பிறை கொன்றையும் அரவும் வேரி
மத்தமும் விரவிமுன் முடித்த, இண்டை மாமலர்ச் செஞ்
சடை யானை ஈச னைத்திரு வாவடு துறையுள், அண்ட
வாணனைச் சிங்கடி யப்பன் அணுக்க வன்றொண்டன்
ஆர்வத்தால் உரைத்த,தண்ட மிழ்மலர் பத்தும்வல் லார்கள்
சாத லும்பிறப் பும்மறுப் பாரே. 10

திருச்சிற்றம்பலம்

வரலாறு: சுந்தரர் திருவொற்றியூரில் இழந்த இருகண்ணில் ஒரு கண்ணைக் காஞ்சிபுரத்தில் பெற்றுத் திருவாரூரை நோக்கி வருகையில், இத்தலத்தைத் தரிசித்துப் பாடியது (பெரிய. ஏயர். 296.)

---

7. விதி முதலே பிரமாவுக்கும் முதல்வனானவனே; விதிக்கின்ற முதல்வனேஎனலும் ஆம். ஆழியை அன்று அரி வேண்ட.
8. சேவகா வீரனே.
9. ஏன மா எயிறு - பன்றியின் பெரிய கொம்பையும். ஈடு - இடுதலை. ஆட்டு - அபிடேகம்.
10. வேரி - வாசனை.

8. பண் : காந்தாரம்

திருமறைக்காடு

திருச்சிற்றம்பலம்

யாழைப்பழித் தன்னமொழி மங்கைஒரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறை வைத்தான்இடம் பேணில்
தாழைப்பொழி லூடேசென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறைக் காடே. 1

சிகரத்திடை இளவெண்பிறை வைத்தான்இடம் தெரியில்
முகரத்திடை முத்தின்னொளி பவளத்திரள் ஓதத்
தகரத்திடை தாழைத்திரள் ஞாழற்றிரள் நீழல்
மகரத்தொடு சுறவங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே. 2

அங்கங்களும் மறைநான்குடன் விரித்தான்இடம் அறிந்தோம், தெங்கங்களும் நெடும்பெண்ணையும் பழம்வீழ் மணற் படப்பைச், சங்கங்களும் இலங்கிப்பியும் வலம்புரிகளும் இடறி, வங்கங்களும் உயர்கூம்பொடு வணங்கும் மறைக் காடே. 3

நரைவிரவிய மயிர்தன்னொடு பஞ்சவ்வடி மார்பன்
உரைவிரவிய உத்தமனிடம் உணரல்லுறு மனமே
குரைவிரவிய குலைசேகரக் கொண்டற்றலை விண்ட
வரைபுரைவன திரைபொருதிழிந் தெற்றும்மறைக் காடே.

சங்கைப்படு நினையாதெழு நெஞ்சேதொழு தேத்தக்
கங்கைச்சடை முடிஉடையவர்க் கிடமாவது பரவை
அங்கைக்கடல் அருமாமணி உந்திக்கரைக் கேற்ற
வங்கத்தொடு சுறவங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே. 5

---

1. பேழை - பல பொருளை வைத்திருத்தலால் பெட்டியைப் போன்ற. பூழைத்தலை – இடைவெளி யிடையே.
2. சிகரம் - தலை. முகரம் - சங்கு. தகரம் – ஒருவகை வாசனை மரம். ஞாழல் - புலிநகக் கொன்றை.
3. தெங்கங்கள் – தென்ன மரங்கள். பெண்ணை - பனை. படப்பை –தோட்டம். இப்பி – சிப்பி. வங்கங்கள் - கப்பல்கள்.
4. குரை – ஒலி. குலை – கரை. 5. சங்கை – சந்தேகம்.

அடல்விடையினன் மழுவாளினன் அலராலணி கொன்
படருஞ்சடைமுடியுடையவர்க்கிடமாவது பரவைக் [றைப்
கடலிடையிடை கழியருகினிற் கடிநாறுதண் கைதை
மடலிடையிடை வெண்குருகெழு மணிநீர்மறைக் காடே. 6

முளைவளரிள மதிஉடையவன் முன்செய்தவல் வினைகள்
களைகளைந்தெனை ஆளல்லுறு கண்டன்னிடஞ் செந்நெல்
வளைவிளைவயற் கயல்பாய்தரு குணவார்மணற் கடல்வாய்
வளைவளையொடு சலஞ்சலங் கொணர்ந் தெற்றும்மறைக் காடே.

நலம்பெரியன சுரும்பார்ந்தன நங்கோன்இடம் அறிந்தோம்
கலம்பெரியன சாருங்கடற் கரைபொருதிழி கங்கைச்
சலம்புரிசடை முடிஉடையவர்க்கிடமாவதுபரவை [காடே.
வலம்புரியொடு சலஞ்சலங்கொணர்ந் தெற்றும்மறைக்

குண்டாடியுஞ் சமணாடியுங் குற்றுடுக்கையர் தாமும்
கண்டார்கண்ட காரணம்மவை கருதாதுகை தொழுமின்
எண்டோளினன் முக்கண்ணினன் ஏழிசையினன் அறுகால்
வண்டாடுதண் பொழில்சூழ்ந்தெழு மணிநீர்மறைக் காடே.

பாரூர்பல புடைசூழ்வள வயல்நாவலர் வேந்தன்
வாரூர்வன முலையாள்உமை பங்கன்மறைக் காட்டை
ஆரூரன தமிழ்மாலைகள் பாடும்மடித் தொண்டர்
நீரூர்தரு நிலனோடுயர் புகழாகுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழநாடு
சுவாமி : மறைக்காட்டீசுவரர்
அம்பிகை : யாழைப் பழித்த நாயகி

---

6. வாள் - ஆயுதம்., கைதை- தாழை.

7. எனை ஆளும் அல்உறு கண்டன்; அல் – கருமை. குண வார்மணற் கடல்வாய் – வார்ந்த மணலையுடைய குணகடலிடத்தே; குணகடல் – கீழ்கடல். வளை வளை - வளைந்த சங்கு - சலஞ்சலம் - ஒருவகைச் சங்கு.

8. கலம் - கப்பல் சலம் – கங்கை நீர்.

9. குண்டு ஆடியும் – கீழ்மையான வார்த்தைகளைப் பேசியும்.

திருவலம்புரம்

திருச்சிற்றம்பலம்

எனக்கினித் தினைத்தனைப் புகலிடம் அறிந்தேன்
பனைக்கனி பழம்படும் பரவையின் கரைமேல்
எனக்கினி யவன்தமர்க் கினியவன் எழுமையும்
மனக்கினி யவன்றன திடம்வலம் புரமே. 1

புரமவை எரிதர வளைந்தவில் லினன்அவன்
மரவுரி புலியதள் அரைமிசை மருவினன்
அரவுரி இரந்தயன் இரந்துணா விரும்பினன்
றிரவெரி யாடிதன் இடம்வலம் புரமே. 2

நீறணி மேனியன் நெருப்புமிழ் அரவினன்
கூறணி கொடுமழு ஏந்தியோர் கையினன்
ஆறணி அவிர்சடை அழல்வளர் மழலைவெள்
ஏறணி அடிகள்தம் இடம்வலம் புரமே. 3

கொங்கணை சுரும்புணை நெருங்கிய குளிர்இளம்
தெங்கொடு பனைபழம் படும்இடந் தேவர்கள்
தங்கிடும் இடந்தடங் கடற்றிரை புடைதர
எங்களை தடிகள்நல் இடம்வலம் புரமே. 4

கொடுமழு விரகினன் கொலைமலி சிலையினன்
நெடுமதில் சிறுமையின் நிரவவல் லவனிடம்
படுமணி முத்தமும் பவளமும் மிகச்சுமந்
திடுமணல் அடைகரை இடம்வலம் புரமே. 5

கருங்கடக் களிற்றுரிக் கடவுள திடங்கயல்
நெருங்கிய நெடும்பெணை அடும்பொடு விரவிய
மருங்கொடு வலம்புரி சலஞ்சலம் மணம்புணர்ந்
திருங்கடல் அடைகரை இடம்வலம் புரமே. 6

---

1. தமர்க்கு - என் சுற்றத்தார்க்கு. மனக்கு – மனத்துக்கு.
4. கொங்கு - பூந்தாது.
5. நெடுமதில் - திரிபுரங்களை.
6. அடும்பு – நெய்தல் நிலத்தில் படரும் ஒரு வகைக் கொடி.

நரிபுரி காடரங் காநடம் ஆடுவர்
வரிபுரி பாடநின் றாடும்எம் மான்இடம்
புரிசுரி வரிகுழல் அரிவையொர் பால்மகிழ்ந்
தெரிஎரி யாடிதன் இடம்வலம் புரமே. 7

பாறணி முடைதலை கலன்என மருவிய
நீறணி நிமிர்சடை முடியினன் நிலவிய
மாறணி வருதிரை வயல்அணி பொழிலது
ஏறுடை அடிகள்தம் இடம்வலம் புரமே. 8

சடசட விடுபெணை பழம்படும் இடவகை
படவட கத்தொடு பலிகலந் துலவிய
கடைகடை பலிதிரி கபாலிதன் இடமது
இடிகரை மணல்அடை இடம்வலம் புரமே. 9

குண்டிகைப் படப்பினில் விடக்கினை ஒழித்தவர்
கண்டவர் கண்டடி வீழ்ந்தவர் கனைகழல்
தண்டுடைத் தண்டிதன் இனமுடை அரவுடன்
எண்டிசைக் கொருசுடர் இடம்வலம் புரமே. 10

---

7. வரி - பாட்டு.

8. பாறு - பருந்து. முடைதலை – புலால் நாற்றம் நாறும் கபாலம். கலன் – பிச்சை ஏற்கும் பாத்திரம்.

9. சடசட: ஒலிக்குறிப்பு. பெணை – பெண்ணை; பனை. பழம் படும் - பழம் வீழும். வடகத்தொடு பலி கலந்து உலவிய கடைகடை – பிறர் மேலாடையிலே பிச்சை வாங்கி உலாவிய வாயில்தோறும்; துறவியர் ஆடையில் பிட்சை பெறுவதை மாதுாகர பிட்சை என்பர்; வடகம் - மேலாடை.

10. குண்டிகைப் படப்பினில் - கமண்டலத்தை வைத்திருக்கும் இடத்தில் (உறைந்து). விடக்கினை ஒழித்தவர் - ஊன் உணவினை ஒழித்த துறவியர். கண்டவர் கண்டு அடிவீழ்ந்தவர் - கண்டவர்கள் கண்டவுடன் திருவடியில் விழுந்து வணங்கத்தக்கவர்; யதிகளைக் கண்டவுடன் வணங்குதல் மரபு. தண்டுடைத் தண்டி - தண்டந் தரித்த சந்நியாசி. இனமுடைச் சுடர் என்று கூட்டுக.

வருங்கல மும்பல பேணுதல் கருங்கடல்
இருங்குலப் பிறப்பர்தம் இடம்வலம் புரத்தினை
அருங்குலத் தருந்தமிழ் ஊரன்வன் றொண்டன்சொல்
பெருங்குலத் தவரொடு பிதற்றுதல் பெருமையே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு
சுவாமி: வலம்புரநாதர்; அம்பிகை: வடுவகிர்க்கண்ணம்மை.

திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

கரையுங் கடலும் மலையுங் காலையும் மாலையும் எல்லாம், உரையில் விரவி வருவான் ஒருவன் உருத்திரலோகன், வரையின் மடமகள் கேள்வன் வானவர் தானவர்க் கெல்லாம், அரையன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 1

தனியன் என்றெள்கி அறியேன் தம்மைப் பெரிதும் உகப்பன், முனிவர் தம்மை முனிவன் முகம்பல பேசி மொழியேன், கனிகள் பலவுடைச் சோலைக் காய்க்குலை ஈன்ற கமுகின், இனியன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 2

சொல்லிற் குலாவன்றிச் சொல்லேன் தொடர்ந்தவர்க் குந்துணை அல்லேன், கல்லில் வலிய மனத்தேன் கற்ற பெரும்புலவாணர், அல்லல் பெரிதும் அறுப்பான் அருமறை ஆறங்கம் ஓதும், எல்லை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 3

---

11. கலம் - கப்பல்.

1. இடவகைகளிலும் காலவகைகளிலும் கலந்திருப்பவன்.

2. எள்கி – இகழ்ந்து.

3. குலா – கலந்த அன்பான வார்த்தைகள். அரிய மறையும் ஆறு அங்கமும் ஓதுகின்ற அப்பொருளுக் கெல்லாம் முடிவிடமாக நிற்பவன்; எல்லை – முடிவிடம்.

நெறியும் அறிவும் செறிவும் நீதியும் நான்மிகப்பொல் லேன், மிறையுந் தறியும் உகப்பன் வேண்டிற்றுச் செய்து திரிவன், பிறையும் அரவும் புனலும் பிறங்கிய செஞ்சடை வைத்த, இறைவன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 4

நீதியில் ஒன்றும் வழுவேன் நிட்கண் டகஞ்செய்து வாழ்வேன், வேதியர் தம்மை வெகுளேன் வெகுண்டவர்க் குந்துணை ஆகேன், சோதியிற் சோதிஎம் மானைச் சுண்ண வெண் ணீறணிந் திட்ட, ஆதி இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 5

அருத்தம் பெரிதும் உகப்பன் அலவலை யேன்அலந் தார்கள், ஒருத்தர்க் குதவியேன் அல்லேன் உற்றவர்க் குத் துணை அல்லேன், பொருத்தமேல் ஒன்றும் இலாதேன் புற்றெடுத் திட்டிடங் கொண்ட, அருத்தன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 6

சந்தம் பலஅறுக் கில்லேன் சார்ந்தவர் தம்அடிச் சாரேன்,முந்திப் பொருவிடை ஏறி மூவுல குந்திரி வானே, கந்தங் கமழ்கொன்றை மாலைக் கண்ணியன் விண்ணவர் ஏத்தும், எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள் வரோ கேளீர். 7

---

4. நெறி முதலியன இல்லாத பொல்லாதவன். செறிவு - அடக்கம். மிறையும் தறியும் - மிடுக்கும் பிறரைப் பிரித்தலும்.

5. நீதியில் ஒன்றும் வழுவேன் - நீதிநெறியிலே பொருந் திய வழுவை உடையவன்; நீதி வழுவினவன். நிட்கண்டகம் - வன்கண்மை,

6 அருத்தம் - பொருளை. அலவலையேன் - மனக்கவலை யைஉடையேன். அலந்தார்க்கு—வருந்தினவர்க்கு. உற்றவர்க்கு - துன்பம் அடைந்தவருக்கு. புற்றெடுத்திட்ட இடத்தைத் தாம் கொண்ட அருத்தன் ; புற்றிடங்கொண்ட நாயகர்; அருத் தன் - செல்வன்.

7. சந்தம் பல - ஒருமைப்பாடின்றி அமைந்த பல திற இயல்புகள்.

நெண்டிக் கொண்டேயுங் கிலாய்ப்பன் நிச்சய மேஇது திண்ணம், மிண்டர்க்கு மிண்டலாற் பேசேன் மெய்ப்பொரு ளன்றி உணரேன், பண்டங் கிலங்கையர் கோனைப் பரு வரைக் கீழ்அடர்த் திட்ட, அண்டன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 8

நமர்பிறர் என்ப தறியேன் நான்கண்ட தேகண்டு வாழ்வேன், தமரம் பெரிதும் உகப்பன் தக்கவா றொன் றும் இலாதேன், குமரன் திருமால் பிரமன் கூடித் தேவர் வணங்கும், அமரன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 9

ஆசை பலஅறுக் கில்லேன் ஆரையும் அன்றி உரைப்பேன், பேசிற் சழக்கலாற் பேசேன் பிழைப்புடை யேன்மனந் தன்னால், ஓசை பெரிதும் உகப்பேன் ஒலிகடல் நஞ்சமு துண்ட, ஈசன் இருப்பதும் ஆரூர் அவர்எம்மையும் ஆள்வரோ கேளீர். 10

எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள் வரோ என்று, சிந்தை செயுந்திறம் வல்லான் திருமரு வுந் திரள் தோளன்,மந்த முழவம் இயம்பும் வளவயல் நாவலா

---

8. நெண்டிக் கொண்டேயும் கிலாய்ப்பன் – மேலும் மேலும் முயற்சி செய்துகொண்டிருந்தும் வருந்துவேன்; நெண்டு தல் - உந்துதல். மிண்டர் – மிடுக்குடையவர். மெய்ப்பொருள் அன்றி உணரேன் – உண்மைப் பொருளை விரோதித்து உண ராமல் இருப்பேன்; அன்றுதல் - பகைத்தல்.

9. நம்மவர் பிறர் என்னும் வேறுபாட்டை அறியேன். தமரம் – வெறும் ஆரவாரம்.

10. அன்றி–பகைத்து.சழக்கு–வஞ்சகம். பிழைப்பு–தவறு.

ரூரன், சந்தம் இசையொடும் வல்லார் தாம்புகழ் எய்து வர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

வரலாறு: பல தலங்களைத் தரிசனம் செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தில்லையில் வந்து பணிந்ததும், "ஆரூருக்கு வா" என்று எம்பெருமான் அசரீரியாகப் பணிக்க, அவ்வாறே அத் தலத்தை அணுகினார். சுவாமிகள் வருவதை அங்குள்ள தொண்டர்களுக்கு எம்பெருமான் தெரிவிக்க, அவர்கள் சுவாமிகளை எதிர்கொண்டு வணங்கினர். அப்போது பாடியருளிய திருப் பதிகம் இது (பெரிய.தடுத்தாட்கொண்ட, 122-1்3.)

திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்

திருச்சிற்றம்பலம்

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி வெடி படக் கரையொடுந் திரைகொணர்ந் தெற்றும், அன்னமாங் காவிரி அகன்கரை உறைவார் அடியிணை தொழுதெழும் அன்பராம் அடியார், சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன், என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை என்னுடம் படும் பிணி இடர்கெடுத் தானை. 1

கூடுமா றுள்ளன கூடியுங் கோத்துங் கொய்புன ஏனலோ டைவனஞ் சிதறி, மாடுமா கோங்கமே மருதமே பொருது மலையெனக் குலைகளை மறிக்குமா றுந்தி, ஓடுமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன், பாடுமா றறிகிலேன் எம்பெரு மானைப் பழவினை உள்ளன பற்றறுத் தானை. 2

---

1. வெடிபட—துள்ள. அன்னம் ஆம்-அன்னங்கள் ஆக்கத்தைப்பெறும்; சோற்றை விளைவிக்கும் எனலுமாம். சொன்னவா றறிவார்: தலத்துப் பெருமான் திருநாமம். செடியனேன்—கெட்டவன். நான் மறக்குமாறு என்னை. உடம்பு அடும் — உடலை வருத்தும்.

2. கொய்புன ஏனலோடு — புனத்திலே கொய்யப்படும் தினையோடு. ஐவனம் - மலைநெல். மாடு — பக்கத்தில். குலைகளை—கரைகளை.

கொல்லுமால் யானையின் கொம்பொடு வம்பார் கொழுங்கனிச் செழும்பயன் கொண்டுகூட் டெய்திப், புல்கி யுந் தாழ்ந்தும் போந்து தவஞ்செய்யும் போகரும் யோக ரும் புலரிவாய் மூழ்கச், செல்லுமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன், சொல்லுமா றறிகிலேன் எம்பெரு மானைத் தொடர்ந்தடுங் கடும்பிணித் தொடர்வறுத் தானை. 3

பொறியுமா சந்தனத் துண்டமோ டகிலும் பொழிந் திழிந் தருவிகள் புன்புலங் கவரக், கறியுமா மிளகொடு கத லியும் உந்திக் கடலுற விளைப்பதே கருதித்தன் கைபோய், எறியுமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடி களைச் செடியனேன் நாயேன், அறியுமா றறிகிலேன் எம் பெரு மானை அருவினை உள்ளன ஆசறுத் தானை. 4

பொழிந்திழி மும்மதக் களிற்றின மருப்பும் பொன் மலர் வேங்கையின் நன்மலர் உந்தி, இழிந்திழிந் தருவி கள் கடும்புனல் ஈண்டி எண்டிசை யோர்களும் ஆடவந் திங்கே, சுழிந்திழி காவிரித் துருத்தியார் வேள்விக் குடியு ளார் அடிகளைச் செடியனேன் நாயேன், ஒழிந்திலேன் பிதற்றுமா றெம்பெரு மானை உற்றநோய் இற்றையே உறவொழித் தானை. 5

புகழுமா சந்தனத் துண்டமோ டகிலும் பொன்மணி வரன்றியும் நன்மலர் உந்தி, அகழுமா அருங்கரை வளம் படப் பெருகி ஆடுவார் பாவந்தீர்த் தஞ்சனம் அலம்பித், திகழுமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடி களைச் செடியனேன் நாயேன், இகழுமா றறிகிலேன் எம் பெரு மானை இழித்தநோய் இம்மையே ஒழிக்கவல் லானை. 6

---

3. வம்பு-வாசனை. புலரிவாய்-விடியற்காலையில்.

4. கறியும்-சிறுமிளகும். மா மிளகு-பெரியமிளகு. கை போய்-கரைகளிடத்தே போய். எறியும்-மோதும். ஆசு-பற்று.

5. பொன் மலர் வேங்கை-பொன்னைப்போல மலர்கின்ற வேங்கை. கடும்புனல்-வேகமுள்ள நீர்.

*6. வரன்றியும்-அரித்தும். அஞ்சனம் அலம்பி - மடவார்

வரையின்மாங் கனியொடு வாழையின் கனியும் வருடியும் வணக்கியும் மராமரம் பொருது, கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க் காம்பிலி சுமந்தொளிர் நித்திலங் கைபோய், விரையுமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன், உரையுமா றறிகிலேன் எம்பெரு மானை உலகறி பழவினை அறவொழித் தானை. 7

ஊருமா தேசமே மனம்உகந் துள்ளிப் புள்ளினம் பலபடிந் தொண்கரை உகளக், காருமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க் கவரிமா மயிர்சுமந் தொண்பளிங் கிடறித், தேருமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன், ஆருமா றறிகிலேன் எம்பெரு மானை அம்மைநோய் இம்மையே ஆசறுத் தானை. 8

புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப் பொன்களே சுமந்தெங்கும் பூசல்செய் தார்ப்ப, இலங்குமார் முத்தினோ டினமணி இடறி இருகரைப் பெருமரம் பீழ்ந்து கொண் டெற்றிக், கலங்குமா காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன், விலங்குமா றறிகிலேன் எம்பெரு மானை மேலைநோய் இம்மையே வீடுவித் தானை. 9

கண்களில் தீட்டிய மையைக் கழுவி.

7 வருடியும்-மெல்லத் தடவியும். வணக்கியும்-வளையச் செய்தும். கரையும்-ஒலிக்கும். காம்பீலி; காம்பு பீலி என்பதன் விகாரம்; காம்பையுடைய மயிற்பீலி.

8. உகள-துள்ள. காரும்-கருமை நிறம்பெற்ற.

9. புலங்களை-வயல்களை. போக்கு அற-குற்றம் நீங்கவும். புலங்கள் வளம்படவும் மக்கள் குற்றம் நீங்கவும் பெருகும் என்க. பொன்களை சுமந்து: பொன் என்னும் பெயர்ப் பொருளைக் குறிப்பித்தபடி. பூசல் செய்து-ஆரவாரம் செய்து. பீழ்ந்து-பிளந்து. விலங்குமாறு விட்டுப் போகுமாறு.

மங்கையோர் கூறுகந் தேறுகந் தேறி மாறலார் திரிபுரம் நீறெழச் செற்ற, அங்கையான் கழலடி அன்றிமற் றறியான் அடியவர்க் கடியவன் தொழுவனா ரூரன், கங்கை யார் காவிரித் துருத்தியார் வேள்விக் குடியுளார் அடிகளைச் சேர்த்திய பாடல், தங்கையால் தொழுதுதம் நாவின்மேற் கொள்வார் தவநெறி சென்றம ருலகம்ஆள் பவரே. 10

திருச்சிற்றம்பலம்

வரலாறு: திருத்துருத்தியை அடைந்த சுந்தர மூர்த்தி சுவாமிகள், தம் திருமேனியிற் கண்ட பிணியைப் போக்கியருள வேண்டுமென்று தொழுது வணங்க, இறைவர், "வடகுளத்தே குளிப்பாயாக!" என்று அருள் செய்ய, அப்படியே அத்தீர்த் தத்தில் மூழ்கினார். மூழ்கி எழுந்தபோது பிணி நீங்கிப் பண் டைத் திருமேனி பெற்றுத் திருக்கோயிலை வந்தடைந்து இத் திருப்பதிகத்தைப் பாடியருளினார் (பெரிய. ஏயர். 297-301.)

திருவானைக்கா

திருச்சிற்றம்பலம்

மறைகள் ஆயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாம், துறையுந் தோத்திரத் திறையுந் தொன்மையும் நன்மையும் ஆய, அறையும் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும், இறைவன் என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே.* 1

வங்கம் மேவிய வேலை நஞ்செழ வஞ்சர்கள் கூடித், தங்கள் மேல்அட ராமை உண்ணென உண்டிருள் கண்டன், அங்கம் ஓதிய ஆனைக் காவுடை ஆதியை நாளும், எங்கள் ஈசனென் பார்கள் எம்மையும் ஆளுடையாரே. 2

---

10. மாறலார்-மாறுதலையுடைய பகைவர்; மாறு அலார்-போரில் பகைவர்களுடைய எனலும் ஆம். தொழுவன்-தொழும் தொழில் உடையவன்.

1. தோத்திரத்து இறையும் - யாவரும் செய்யும் தோத் திரங்களை உடைய இறைவனும்.

2. வஞ்சர்கள் - தேவர்கள். அடராமை - வருத்தாமல்.

நீல வண்டறை கொன்றை நேரிழை மங்கைஓர் திங்கள், சால வாள்அர வங்கள் தங்கிய செஞ்சடை எந்தை, ஆல நீழலுள் ஆனைக் காவுடை ஆதியை நாளும், ஏலு மாறுவல் லார்கள் எம்மையும் ஆளுடை யாரே. 3

தந்தை தாய்உல குக்கோர் தத்துவன் மெய்த்தவத் தோர்க்குப், பந்த மாயின பெருமான் பரிசுடை யவர்திரு வடிகள், அந்தண் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும், எந்தை என்றடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 4

கணைசெந் தீயர வந்நாண் கல்வளை யுஞ்சிலை யாகத், துணைசெய் மும்மதில் மூன்றுஞ் சுட்டவ னேஉல குய்ய, அணையும் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும், இணைகொள் சேவடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 5

விண்ணின் மாமதி சூடி விலையிலி கலன்அணி விமலன், பண்ணின் நேர்மொழி மங்கை பங்கினன் பசுவுகந் தேறி, அண்ண லாகிய ஆனைக் காவுடை ஆதியை நாளும், எண்ணு மாறுவல் லார்கள் எம்மையும் ஆளுடை யாரே. 6

தார மாகிய பொன்னித் தண்டுறை ஆடி விழுத்தும், நீரில் நின்றடி போற்றி நின்மலா கொள்என ஆங்கே, ஆரங் கொண்டஎம் ஆனைக் காவுடை ஆதியை நாளும், ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடை யாரே. 7

---

3. மங்கை-கங்கை. ஏலுமாறு-மனத்திலே ஏற்றுக் கொள்ளும் திறத்தில்.

4. பந்தமாயின-விடாத தொடர்பாகிய.

5. கணையாகச் செந்தீயையும், அரவத்தை நாணாகவும், மலையை வளையும் வில்லாகவும் கொண்டு. திரிபுரசங்கார காலத்தில் அக்கினி, வாயு, திருமால் ஆகிய மூவரும் அம்பாக இருந்தனர் என்பது புராண வரலாறு. இணை - இரண்டு.

6. விலையில்லாத கலனை; என்றது பாம்பை.

7. பொன்னி-காவிரி. விழுத்தும்-வீழ்த்திய. ஆரங்கொண்ட பெருமான் என்பது இத்தலத்துச் சுவாமியின் திருநாமங்களுள் ஒன்று. ஈரம்-அன்பு.

உரவம் உள்ளதோர் உழையின் உரிபுலி அதளுடை யானை, விரைகொள் கொன்றையி னானை விரிசடை மேற் பிறை யானை, அரவம் வீக்கிய ஆனைக் காவுடை ஆதியை நாளும், இரவும் எல்லியும் பகலும் ஏத்துவார் எமை உடை யாரே. 8

வலங்கொள் வாரவர் தங்கள் வல்வினை தீர்க்கும் மருந்து, கலங்கக் காலனைக் காலாற் காமனைக் கண்சிவப் பானை, அலங்கல் நீர்பொரும் ஆனைக் காவுடை ஆதியை நாளும், இலங்கு சேவடி சேர்வார் எம்மையும் ஆளுடை யாரே. 9

ஆழி யாற்கருள் ஆனைக் காவுடை ஆதிபொன் னடி யின், நீழ லேசர ணாக நின்றருள் கூர நினைந்து, வாழ வல்லவன் றொண்டன் வண்டமிழ் மாலைவல் லார்போய், ஏழு மாபிறப் பற்று எம்மையும் ஆளுடை யாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு

சுவாமி: சம்புகேசுவரர்; அம்பிகை: அகிலாண்டநாயகி.

9. பண் : பியந்தைக் காந்தாரம்

திருவாஞ்சியம்

திருச்சிற்றம்பலம்

பொருவ னார்புரி நூலர் புணர்முலை உமையவ ளோடு,
மருவ னார்மரு வார்பால் வருவதும் இல்லைநம் அடிகள்,
திருவ னார்பணிந் தேத்தும் திகழ்திரு வாஞ்சியத் துறையும்,
ஒருவ னார்அடி யாரை ஊழ்வினை நலியஒட் டாரே. 1

---

8. உரவம்-வலிமை. உழையின் உரி-மான்தோல். வீக்கிய-கட்டிய.

1. பொருவனார்-தமக்கு உவமை தாமே ஆனவர்; உயர்ந்தாருக் கெல்லாம் உவமையாக நிற்பவர் எனலும் ஆம்; பொரு-உவமை.

தொறுவின் ஆனிள ஏறு துண்ணென இடிகுரல் வெருவிச், செறுவில் வாளைகள் ஓடச் செங்கயல் பங்கயத் தொதுங்கக், கறுவி லாமனத் தார்கள் காண்டகு வாஞ்சியத் தடிகள், மறுவி லாதவெண் ணீறு பூசுதல் மன்னு மொன் றுடைத்தே. 2

தூர்த்தர் மூவெயில் எய்து சுடுநுனைப் பகழிய தொன் றால், பார்த்த னார்திரள் தோள்மேற் பன்னுனைப் பகழிகள் பாய்ச்சித், தீர்த்த மாமலர்ப் பொய்கைத் திகழ்திரு வாஞ் சியத் தடிகள், சாத்து மாமணிக் கச்சங் கொருதலை பல தலை உடைத்தே. 3

சள்ளை வெள்ளையங் குருகு தானது வாமெனக் கருதி, வள்ளை வெண்மலர் அஞ்சி மறுகியோர் வாளையின் வாயில், துள்ளு தெள்ளுநீர்ப் பொய்கைத் துறைமல்கு வாஞ்சியத் தடிகள், வெள்ளை நுண்பொடிப் பூசும் விகிர்தம் ஒன் றொழிகிலர் தாமே. 4

மைகொள் கண்டர்எண் தோளர் மலைமகள் உடன் உறை வாழ்க்கைக், கொய்த கூவிள மாலை குலவிய சடை முடிக் குழகர், கைதை நெய்தலங் கழனி கமழ்புகழ் வாஞ் சியத் தடிகள், பைதல் வெண்பிறை யோடு பாம்புடன் வைப்பது பரிசே. 5

---

2. தொறு-பசு மந்தை. செறு-வயல். கறுஇலா-பகை இல்லாத. மன்னும் ஒன்று உடைத்தே-நிலைபெற்ற கருத்தொன்றை உடையது.

3. தூர்த்தர் - இழிதகையோர்களுடைய. நுனை - முனை. பகழி - அம்பு. பகைவரை அம்பு ஒன்றால் எய்து, அன்புடையான்பால் பல அம்புகளை எய்தார் என்றது ஒரு நயம்.

4. சள்ளை-தனக்குத் துன்பத்தைத் தரும். வள்ளையின் வெண்மலரை வெண்குருகென்று எண்ணி அஞ்சி.

5. பைதல்-பசுமை; இங்கே இளமை. ஒன்றுக்கு ஒன்று

கரந்தை கூவிள மாலை கடிமலர்க் கொன்றையுஞ் சூடிப், பரந்த பாரிடஞ் சூழ வருவர்எம் பரமர்தம் பரிசால், திருந்து மாடங்கள் நீடு திகழ்திரு வாஞ்சியத் துறையும், மருந்த னார்அடி யாரை வல்வினை நலியவொட் டாரே. 6

அருவி பாய்தரு கழனி அலர்தரு குவளையங் கண்ணார், குருவி யாய்கிளி சேப்பக் குருகினம் இரிதரு கிடங்கில், பருவ ரால்குதி கொள்ளும் பைம்பொழில் வாஞ்சியத் துறையும், இருவ ரால்அறி யொண்ணா இறைவன தறை கழல் சரணே. 7

களங்கள் ஆர்தரு கழனி அளிதரக் களிதரு வண்டு, உளங்க ளார்கலிப் பாடல் உம்பரில் ஒலித்திடுங் காட்சி, குளங்க ளானிழற் கீழ்நற் குயில்பயில் வாஞ்சியத் தடிகள், விளங்கு தாமரைப் பாதம் நினைப்பவர் வினைநலி விலரே. 8

வாழை யின்கனி தானும் மதுவிம்மு வருக்கையின் சுளையும், கூழை வானரந் தம்மிற் கூறிது சிறிதெனக் குழறித், தாழை வாழையந் தண்டாற் செருச்செய்து தருக்குவாஞ் சியத்துள், ஏழை பாகனை அல்லால் இறை யெனக் கருதுதல் இலமே. 9

பகைமையையுடைய பிறையையும் பாம்பையும் உடன் வைப்பது நியாயமா? பரிசு-முறை.

6. பாரிடம்-பூதம்.

7. கழனியில் அலர்தரு குவளை. குருவியும் அழகிய கிளியும் வந்து தங்க. இரிதரு-ஓடுகின்ற. இருவர்-திருமாலும் பிரமனும்

8. களம்-போரடிக்கும் களம். உம்பரில்-மேலே.

9. வருக்கை இன் சுளை - பலாப்பழத்தின் இனிய சுளை. கூறு இது சிறிதுஎன - எனக்குத் தந்த இக்கூறு சிறிது என்று. ஏழை – மங்கை.

செந்நெ லங்கலங் கழனித் திகழ்திரு வாஞ்சியத்
துறையும்,மின்ன லங்கலஞ் சடைஎம் இறைவனை தறைகழல்
பரவும், பொன்ன லங்கனல் மாடப் பொழிலணி நாவலா
ரூரன், பன்ன லங்கனல் மாலை பாடுமின் பத்தரு ளீரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு

சுவாமி: வாஞ்சியநாதர்; அம்பிகை: வாழவந்த நாயகி.

10. பண் : காந்தார பஞ்சமம்

திருவையாறு

திருச்சிற்றம்பலம்

பரவும் பரிசொன் றறியேன்நான் பண்டே உம்மைப் பயிலாதேன், இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினைய மாட்டேன்நான், கரவில் அருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை, அரவந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 1

எங்கே போவேன் ஆயிடினும் அங்கே வந்தென் மனத்தீராய்ச், சங்கை ஒன்றும் இன்றியே தலைநாள் கடைநாள் ஒக்கவே, கங்கை சடைமேற் கரந்தானே கலைமான் மறியுங் கனல்மழுவும், தங்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 2

---

10. செந்நெல் அங்கு அலங்கு கழனி. அலங்கு கழனி, அலங்கழனி என நின்றது; அலங்குதல்-அசைதல். மின் அலங்கல் அம் சடை-மின்னைப் போன்ற, மாலையை அணிந்த அழகிய சடை. பொன் நலம் கனல் - திருமகளின் அழகு ஒளிதருகின்ற. பன்னு அலங்கல் நன் மாலை - பாடிய மாலை போன்ற நல்ல பாவின் வரிசை.

1. பயிலாதேன்–பழகாதவன். கரவு இல் அருவி–நீரோட்டத்தைக் கரவாமல் தரும் அருவி. கோட்டம் - கரை; அம்: சாரியை.

2. தலைநாள் கடைநாள் ஒக்க–முதல் நாளில் இருந்த நிலை வரவர மாறாமல் கடைநாள் அளவும் ஒத்து நிற்க.

மருவிப் பிரிய மாட்டேன்நான் வழிநின் றொழிந் தேன் ஒழிகிலேன், பருவி விச்சி மலைச்சாரற் பட்டை கொண்டு பகடாடிக், குருவி ஓப்பிக் கிளிகடிவார் குழல் மேல் மாலை கொண்டோட்டந், தரவந் திரைக்கா விரிக் கோட்டத் தையா றுடைய அடிகளோ. 3

பழகா நின்று பணிசெய்வார் பெற்ற பயமொன் றறிகிலேன், இகழா துமக்காட் பட்டோர்க்கு வேக பட மொன் றரைச்சாத்தி, குழகா வாழைக் குலைத்தெங்கு கொணர்ந்து கரைமேல் எறியவே, அழகார் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 4

பிழைத்த பிழையொன் றறியேன்நான் பிழையைத் தீரப் பணியாயே, மழைக்கண் நல்லார் குடைந்தாட மலையும் நிலனுங் கொள்ளாமைக், கழைக்கொள் பிரசங் கலந்தெங் குங் கழனி மண்டிக் கையேறி, அழைக்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 5

கார்க்கொள் கொன்றை சடைமேலொன் றுடையாய் விடையாய் கையினால், மூர்க்கர் புரமூன் றெரிசெய்தாய் முன்னீ பின்னீ முதல்வன்நீ, வார்க்கொள் அருவி பலவாரி மணியும் முத்தும் பொன்னுங்கொண், டார்க்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 6

---

3. பருவி விச்சி - பருத்தியை விதைத்து. பகடு ஆடி - விளையாடி. ஓப்பி - ஓட்டி.

4. ஏகபடம் ஒன்று - ஒற்றை ஆடையை. குழகா - இளமையை உடையவனே.

5. கழைக்கொள் பிரசம் - கரும்பின்மேல் தொடுத்த தேன். கை ஏறி - பக்கத்தில் உள்ள கரையின் மீதூர்ந்து. அழைக்கும்- ஒலிக்கும்.

6. கார்க்கொள் கொன்றை - கார்காலத்தை மலரும் பருவ மாகக்கொண்ட கொன்றைமலர். மூர்க்கர் - திரிபுராதியர் வார்க் கொள் - ஒழுகுதலைக் கொண்ட.

மலைக்கண் மடவாள் ஒருபாலாய்ப் பற்றி உலகம் பலி தேர்வாய், சிலைக்கொள் கணையால் எயில்எய்த செங்கண் விடையாய் தீர்த்தன்நீ, மலைக்கொள் அருவி பலவாரி மணியும் முத்தும் பொன்னுங்கொண், டலைக்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 7

போழும் மதியும் புனக்கொன்றை புனல்சேர் சென்னிப் புண்ணியா, சூழும் அரவச் சுடர்ச்சோதீ உன்னைத் தொழுவார் துயர்போக, வாழும் அவர்கள் அங்கங்கே வைத்த சிந்தை உய்த்தாட்ட, ஆழுந் திரைக்கா விரிக் கோட்டத் தையா றுடைய அடிகளோ. 8

கதிர்க்கொள் பசியே ஒத்தேநான் கண்டேன் உம்மைக் காணாதேன், எதிர்த்து நீந்த மாட்டேன்நான் எம்மான் தம்மான் தம்மானே, விதிர்த்து மேகம் மழைபொழிய வெள்ளம் பரந்து நுரைசிதறி, அதிர்க்குந் திரைக்கா விரிக் கோட்டத் தையா றுடைய அடிகளோ. 9

கூசி அடியார் இருந்தாலுங் குணம்ஒன் றில்லீர் குறிப்பிலீர், தேச வேந்தன் திருமாலும் மலர்மேல் அயனுங் காண்கிலாத், தேசம் எங்குந் தெளித்தாடத் தெண்ணீர் அருவி கொணர்ந்தெங்கும், வாசந் திரைக்கா விரிக் கோட்டத் தையா றுடைய அடிகளோ. 10

---

7. பால் - பாகம்.
8. போழும் மதி - பிளந்தாற்போன்ற பிறை.
9. விதிர்த்து - நடுங்கும்படியாக இடித்து.
10. தேச வேந்தன் - ஒளியை உடைய இந்திரன்.

கூடி அடியார் இருந்தாலுங் குணமென் றில்லீர் குறிப் பிலீர், ஊடி இருந்தும் உணர்கிலேன் உம்மைத் தொண் டன் ஊரனேன், தேடி எங்கும் காண்கிலேன் திருவா ரூரே சிந்திப்பன், ஆடுந் திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய அடிகளோ. 11

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு

சுவாமி: செம்பொற்சோதி

அம்பிகை: அறம் வளர்த்த நாயகி

வரலாறு: சேரமான் பெருமாள் நாயனாருடைய விருப்பத் தின்படி அவருடன் மலைநாட்டுக்குப் புறப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள், இடையே பல தலங்களைத் தரிசித்துத் திருக்கண்டி யூர் வந்து பணிந்து புறம் போந்தார். அப்போது காவிரியின் வடகரையில் திருவையாறு தோன்ற, சேரமன்னர் அத்தலத்துக் குச் சென்று பணியவேண்டுமென்ற தம் விருப்பத்தை உரைத் தார். அப்போது காவிரியில் பெருவெள்ளம் (ஓடம் போக இயலாதபடி) உண்டாக, அதுகண்ட சுவாமிகள் இப்பதிகத் தைப் பாடியருளினார். உடனே காவிரி இடையே வழிவிட, அவ்வழியே சென்று திருவையாற்றைத் தரிசித்து, மீண்டும் அவ்வழியே வந்தனர். காவிரி பழையபடியே செல்லலாயிற்று (பெரிய. சேரமான் 131—139.)

---

11. பண் : நட்டபாடை

திருக்கேதாரம்

திருச்சிற்றம்பலம்

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்

தாழாதறஞ் செய்ம்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரமெ னீரே. 1

பறியேசுமந் துழல்வீர்பறி நரிகீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங்கொளும் நாளால்அறம் உளவே
அறிவானிலும் அறிவானல நறுநீரொடு சோறு
கிறிபேசிநின் றிடுவார்தொழு கேதாரமெ னீரே. 2

கொம்பைப்பிடித் தொருக்காலர்கள் இருக்கால்மலர் தூவி
நம்பன்னமை ஆள்வானென்று நடுநாளையும் பகலும்
கம்பக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவிச்
செம்பொற்பொடி சிந்துந்திருக் கேதாரமெ னீரே. 3

உழக்கேஉண்டு படைத்தீட்டிவைத் திழப்பார்களுஞ்சிலர்கள்
வழக்கேஎனிற் பிழைக்கேமென்பர் மதிமாந்திய மாந்தர்
சழக்கேபறி நிறைப்பாரொடு தவமாவது செயன்மின்
கிழக்கேசலம் இடுவார்தொழு கேதாரமெ னீரே. 4

---

1. மாயம் - நிலையாமையை உடையது. இந்த வாழ்வு பிறவிக்கடலும் பசிநோயும் தமக்கென்று பறித்துக்கொண்ட கொள்ளைதான். பிறவிக்கடலில் பசியாகிய நோயைச் செய்த உடம்பு எனலும் ஆம். தடங்கண்ணன்-திருமால்; அவன் கீழும், மலரோன் மேலும் உற.

2. பறி - உடம்பு. கீறுவது - கிழிப்பது. குறி கூவிய - மரணத்துக்குரிய அறிகுறிகளெல்லாம் வரவேற்று அழைத்த. கூற்றுவன் உயிர் கொள்ளும் நாளில் நீரோடு சோறு கொடுத்த அறம் நம்மைக் காப்பாற்ற உள்ளன கிறி - பரியாசம்.

3. ஒருக்காலர்கள் - ஒருவகைத் தேவசாதியினர். இருக்கால் - வேதமந்திரத்தோடு.

4. தாம் உழக்களவு நுகர்ந்து மற்றவற்றை யாருக்கும் பயன்படாமல் ஈட்டிவைத்து இழப்பவர்கள் பிறருக்கு உதவுதல் என்றால், ஐயோ, எங்கள் உயிர் போய்விடும் என்பவர்கள். மதி மாந்திய - அறிவை விழுங்கின; அறிவில்லாத. சழக்கே பறி நிறைப்பார் - பொய்யாக உடம்புக்கு உணவு இட்டு நிரப்புவார்கள். கிழக்கே - கீழே. சூரியன் உதயமாகும்போது கீழ்த் திசையை நோக்கி எனலும் ஆம்.

வாளோடிய தடங்கண்ணியர் வலையில்அழுந் தாதே
நாளோடிய நமனார்தமர் நணுகாமுனம் நணுகி
ஆளாய்உய்ம்மின் அடிகட்கிடம் அதுவேஎனில் இதுவே
கீளோடர வசைத்தானிடம் கேதாரமெ னீரே. 5

தளிசாலைகள் தவமாவது தம்மைப்பெறில் அன்றே
குளியீர்உளங் குருக்கேத்திரங் கோதாவிரி குமரி
தெளியீர்உளம் சீபர்ப்பதந் தெற்குவடக் காகக்
கிளிவாழைஒண் கனிகீறிஉண் கேதாரமெ னீரே. 6

பண்ணின்தமிழ் இசைபாடலின் பழவேய்முழ வதிரக்
கண்ணின்னொளி கனகச்சுனை வயிரம்மவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கள் மணிவாரிக்கொண் டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதாரமெ னீரே. 7

முளைக்கைப்பிடி முகமன்சொலி முதுவேய்களை இறுத்துத்
துளைக்கைக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவி
வளைக்கைப்பொழி மழைகூர்தர மயில்மான்பிணை நிலத்
கிளைக்கமணி சிந்துந்திருக் கேதாரமெ னீரே. [தைக் 8

பொதியேசுமந் துழல்வீர்பொதி அவமாவதும் அறியீர்
மதிமாந்திய வழியேசென்று குழிவீழ்வதும் வினையால்
கதிசூழ்கடல் இலங்கைக்கிறை மலங்கவரை அடர்த்துக்
கெதிபேறுசெய் திருந்தானிடங் கேதாரமெ னீரே. 9

---

5. நாள் ஓடிய நமனார் – நாட்கள் கழிய அதுகண்டு வரும் எமன். ஆளாய் - தொண்டராகி.

6. தளி - கோயில். சாலை – ஆசிரமம். தம்மைத்தாம் பெற்றால்தான் தளியும் சாலையும் தவமும் பயன் பெற்றன ஆகும். குமரி – கன்யாகுமரித் தீர்த்தம்.

7. பழவேய் தமிழ் நாட்டின் பழைய இசைக்கருவி யாகிய புல்லாங்குழல். கண்ணுக்கு இனிதாகிய ஒளியை வீசும் பொன். மண்ணில் நின்றனவாகிய வேழம்.

8. முகமன் - உபசாரம்.

9. பொதி - உடற்சுமை. அவமாவது - வீணாவது-

நாவின்மிசை யரையன்னொடு தமிழ்ஞானசம் பந்தன்
யாவர்சிவன் அடியார்களுக் கடியான்அடித் தொண்டன்
தேவன்திருக் கேதாரத்தை ஊரன்னுரை செய்த
பாவின்தமிழ் வல்லார்பர லோகத்திருப் பாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : வட நாடு

சுவாமி : கேதாரநாதர்; அம்பிகை : கேதாரகௌரி.

திருப்பருப்பதம்

திருச்சிற்றம்பலம்

மானும்மரை இனமும்மயில் இனமுங்கலந் தெங்கும்
தாமேமிக மேய்ந்துதடஞ் சுனைநீர்களைப் பருகிப்
பூமாமரம் உரிஞ்சிப்பொழி லூடேசென்று புக்குத்
தேமாம்பொழில் நீழல்துயில் சீபர்ப்பத மலையே. 1

மலைச்சாரலும் பொழிற்சாரலும் புறமேவரும் இனங்கள்
மலைப்பாற்கொணர்ந் திடித்தூட்டிட மலங்கித்தன களிற்றை
அழைத்தோடியும் பிளிறீயவை அலமந்துவந் தெய்த்துத்
திகைத்தோடித்தன் பிடிதேடிடுஞ் சீபர்ப்பத மலையே. 2

மன்னிப்புனங் காவல்மட மொழியாள்புனங் காக்கக்
கன்னிக்கிளி வந்துகவைக் கோலிக்கதிர் கொய்ய
என்னைக்கிளி மதியாதென்று எடுத்துக்கவண் ஒலிப்பத்
தென்னற்கிளி திரிந்தேறிய சீபர்ப்பத மலையே. 3

மலங்க—மயங்க. கெதிபேறு-நல்லகதியை அடையும் பாக்கியம்.

10. நாவின் மிசை அரையன் - திருநாவுக்கரசர்.

1. உரிஞ்சி - உராய்ந்து.

3. கவைக்கோலி - கவ்வுதலைச் செய்து; கவை – கவ்வை. தென் நற் கிளி - அழகிய நல்ல கிளி.

மையார்தடங் கண்ணாள்மட மொழியாள்புனங் காக்கச்
செவ்வேதிரிந் தாயோஎனப் போகாவிட விளிந்து
கைபாவிய கவணால்மணி எறியஇரிந் தோடிச்
செவ்வாயன கிளிபாடிடுஞ் சீபர்ப்பத மலையே. 4

ஆனைக்குலம் இரிந்தோடித்தன் பிடிசூழலில் திரியத்
தானப்பிடி செவிதாழ்த்திட அதற்குமிக இரங்கி
மானக்குற அடல்வேடர்கள் இலையாற்கலை கோலித்
தேனைப்பிழிந் தினிதூட்டிடுஞ் சீபர்ப்பத மலையே. 5

மாற்றுக்களி றடைந்தாய்என்று மதவேழங்கை எடுத்தும்
ஊற்றித்தழல் உமிழ்ந்தும்மதம் பொழிந்தும்முகஞ் சுழியத்
தூற்றத்தரிக் கில்லேன்என்று சொல்லிஅயல் அறியத்
தேற்றிச்சென்று பிடிசூழறுஞ் சீபர்ப்பத மலையே. 6

அப்போதுவந் துண்டீர்களுக் கழையாதுமுன் இருந்தேன்
எப்போதும்வந் துண்டால்எமை எமர்கள்சுழி யாரோ
இப்போதுமக் கிதுவேதொழில் என்றோடியக் கிளியைச்
செப்பேந்திள முலையாள்எறி சீபர்ப்பத மலையே. 7

திரியும்புரம் நீறாக்கிய செல்வன்றன கழலை
அரியதிரு மாலோடயன் றானும்மவர் அறியார்
கரியின்னினம் ஓடும்பிடி தேன்உண்டவை களித்துத்
திரிதந்தவை திகழ்வாற்பொலி சீபர்ப்பத மலையே. 8

ஏனத்திரள் கிளைக்கஎரி போலமணி சிதறத்
தீயென்றவை மலைச்சாரலில் திரியுங்கர டியும்
மானும்மரை இனமும்மயில் மற்றும்பல எல்லாம்
தேனுண்பொழில் சோலைமிகு சீபர்ப்பத மலையே. 9

---

4. இரிந்து ஓடி - கலைந்து ஓடி.

5 தானம் - மதம். கலை - கல்லை; தொன்னை.

6. சுழிய - சுளிக்க.

நல்லாரவர் பலர்வாழ்தரு வயல்நாவல வூரன்
செல்லல்உற அரியசிவன் சீபர்ப்பத மலையை
அல்லலவை தீரச்சொன தமிழ்மாலைகள் வல்லார்
ஒல்லைசெல உயர்வானகம் ஆண்டங்கிருப் பாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : வடநாடு

சுவாமி : பருப்பத நாதர்; அம்பிகை : பருப்பத நாயகி.

திருக்கேதீச்சரம்

திருச்சிற்றம்பலம்

நத்தார்புடை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமழு வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே. 1

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறைக் கீளும்
கடமார்களி யானைஉரி அணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே. 2

அங்கம்மொழி அன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்

---

10. செல்லல் – துன்பம்.

1. நத்து ஆர் புடை - சங்குகள் முழங்கும் பக்கத்தை உடைய. நனை கவிழ்வாய் - நனைந்த கவிழ்ந்த வாயையுடைய. பத்து - பக்தி பாலாவி - ஓர் ஆறு

2. பட ஏர் இடை - துகிலை அணிந்த அழகிய இடை; படம் - ஆடை; படம் என்பதை நாகத்துக்கு ஆகுபெயராக்கிப் பாம்பு போன்ற இடை எனலும் ஆம்.

3. அங்கம் மொழி அன்னாரவர் - சாத்திரங்களை விரித்துரைக்கும் அத்தன்மையை யுடையோர். வங்கம் - கப்பல். மாதோட்டம் என்பது ஊர்ப்பெயர்; கேதீச்சரம் என்பது திருக்கோயிலின் பெயர்.

பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே. 3

கரியகறைக் கண்டன்நல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை எறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே. 4

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 5

வெய்யவினை யாயஅடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேர்இடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே. 6

ஊனத்துறு நோய்கள்அடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறும் மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே. 7

அட்டன்னழ காகஅரை தன்மேல்அர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே. 8

---

4. பரிய - பருத்த.

5. அங்கம் - உடல். பங்கம்செய்த மடவாள் - தம்முடைய திரு மேனியில் ஒரு பாகத்தைப் பகுத்துக்கொண்ட உமா தேவியார்.

7. ஊனம் - உடல்; ஊன் என்பது அம்முச்சாரியை பெற்றது. வால் நத்து உறு - வெள்ளிய சங்குகள் இருக்கும். பால் நத்துறு மொழியாள் - இனிமையின்பொருட்டுப் பாலும் விரும்பும் மொழியையுடைய அம்பிகை.

8. அட்டன் - அட்டமூர்த்தி. மட்டு - தேன். பட்டத்தையும் வரியையும் உடைய நுதலாள்.

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை அறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே. 9

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்உரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : ஈழ நாடு

சுவாமி : கேதீசுவரர்; அம்பிகை : கௌரியம்மை.

வரலாறு: சுந்தரமூர்த்தி சுவாமிகள் இராமேச்சுவரத்துக்குச் சென்று தரிசித்தபின், அங்கிருந்தபடியே ஈழநாட்டிலுள்ள தலமாகிய திருக்கேதீச்சரத்தைப் பாடியருளினார் (பெரிய. சேரமான்பெருமாள். 109.)

திருக்கழுக்குன்றம்

திருச்சிற்றம்பலம்

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 1

---

10. கறை - நீலநிறம்.

1. செய்த கொடுமையாலும் பல சொல்லவும் நின்றபாவம்.

இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடையன் எங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகள் நித்திலங் கொண்டிழி
கறங்கு வெள்ளை அருவித் தண்கழுக் குன்றமே. 2

நீள நின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகள் அல்கி அழிந்திடத்
தோளும் எட்டும் உடைய மாமணிச் சோதியான்
காள கண்டன் உறையுந் தண்கழுக் குன்றமே. 3

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி ஆடியை
முளிறி லங்குமழு வாளன் முந்தி உறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்ம்மதம் மூன்றுடைக்
களிறி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. 4

புலைகள் தீரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலைகொள் சூலப் படையன் எந்தை பிரானிடம்
முலைகள் உண்டு தழுவிக் குட்டி யொடுமுசுக்
கலைகள் பாயும் புறவில் தண்கழுக் குன்றமே. 5

மடமுடைய அடியார் தம்மனத் தேஉற
விடமுடைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமுடைய அரவன் றான்பயி லும்மிடம்
கடமுடைய புறவில் தண்கழுக் குன்றமே. 6

ஊனம் இல்லா அடியார் தம்மனத் தேஉற
ஞான மூர்த்தி நட்ட மாடி நவிலும்மிடம்
தேனும் வண்டும் மதுவுண் டின்னிசை பாடியே
கான மஞ்ஞை உறையுந் தண்கழுக் குன்றமே. 7

---

3. அல்கி - குறைந்து.
4. வெளிறு - அறியாமை. முளிறு – கூர்மை. பிளிறு தீர - பிளிறிநிற்கும் அச்சம் தீரும்படி; பிளிறுதல் - முழங்குதல்.
5. புலை - இழிந்த குணம்.
6. மடம் உடைய - அறியாமை அழியும்பொருட்டு. கடம் - காடு. புறவு - முல்லைநிலம்.

அந்தம் இல்லா அடியார் நம்மனத் தேஉற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்கள் நித்தலுஞ் சேரவே
கந்தம் நாறும் புறவில் தண்கழுக் குன்றமே. 8

பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் றான்உறை யும்மிடம்
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
குழைகொள் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்றமே. 9

பல்லில் வெள்ளைத் தலையன் தான்பயி லும்மிடம்
கல்லில் வெள்ளை அருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரள்தோள் ஊரன் வனப்பினால்
சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொழு மின்களே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : தொண்டை நாடு
சுவாமி : வேதகிரீசுவரர்
அம்பிகை : பெண்ணினல்லாளம்மை.

---

12. பண்-நட்டராகம்

திருச்சுழியல்

திருச்சிற்றம்பலம்

ஊனாய்உயிர் புகலாய்அக லிடமாய்முகில் பொழியும்,
வானாய்அதன் மதியாய்விதி வருவான்இடம் பொழிலின்,
தேனாதரித் திசைவண்டினம் மிழற்றுந்திருச் சுழியல்,
நானாவிதம் நினைவார்தமை நலியார்நமன் தமரே. 1

---

9. மழைகள் சால - பல பருவத்துப் பெய்யும் மழைப் பெயல்கள் நிறைய. கலித்து நீடு உயர் வேய் - அதனால் தழைத்து ஓங்கி உயர்ந்த மூங்கில். குழை - காதணி.

10. பல் இல்லாத வெள்ளைத்தலை; தசையற்ற என் புத்தலை.

1. ஊனாய் - உடலாய். உயிர்புகலாய் – எல்லா உயிர் களுக்கும் புகலிடமாகி. அகலிடமாய் - பூமியாகி.

தண்டேர்மழுப் படையான்மழ விடையான்எழு கடல்நஞ், சுண்டேபுரம் எரியச்சிலை வளைத்தான்இமை யவர்க்காத், திண்டேர்மிசை நின்றானவன் உறையுந்திருச் சுழியல், தொண்டேசெய வல்லார்அவர் நல்லார்துயர் இலரே. 2

கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக், கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியல், தெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவார்அடி தொழுவார், அவ்வத்திசைக் கரசாகுவர் அலராள் பிரியாளே. 3

மலையான்மகள் மடமாதிட மாகத்தவள் மற்றுக், கொலையானையின் உரிபோர்த்தஎம் பெருமான்திருச் சுழியல், அலையார்சடை உடையான்அடி தொழுவார்பழு துள்ளம், நிலையார்திகழ் புகழால்நெடு வானத்துயர் வாரே. 4

உற்றான்நமக் குயரும்மதிச் சடையான்புலன் ஐந்தும், செற்றார்திரு மேனிப்பெரு மானூர்திருச் சுழியல், பெற்றான்இனி துறையத்திறம் பாமைத்திரு நாமம், கற்றாரவர் கதியுட்செல்வர் ஏத்தும்மது கடனே. 5

மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச், சலந்தாங்கிய முடியான்அமர்ந் திடமாந்திருச் சுழியல், நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையால்நினைந் தேத்தும், தலந்தாங்கிய புகழாம்மிகு தவமாஞ்சது ராமே. 6

---

2. தேவர்களுக்காகத் திரிபுர சங்காரஞ் செய்யக் கருதித் தேரில் ஏறி நின்றவன்.

3. கவ்வை - முழக்கத்தை உடைய. கொவ்வைத் துவர் வாயார் - கோவைக்கனியைப்போன்ற சிவந்த வாயையுடைய பெண்கள். அலராள் - திருமகள்.

4. பழுது உள்ளம் நிலையார் - குற்றத்தையுடைய உள்ளத்தில் உள்ள குற்றம் நீங்கப் பெறுவர் என்றபடி.

5. திருமேனிப்பெருமான்: தலத்துமூர்த்தி. உற்றான் - இடையூறு வருங்கால் துணையாக வருபவன். திறம்பாமை - மாறாமல்.

6. சதுர் - அறிவுத்திறம்.

அந்தம் இல்லா அடியார் நம்மனத் தேஉற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தை செய்த மலர்கள் நித்தலுஞ் சேரவே
கந்தம் நாறும் புறவில் தண்கழுக் குன்றமே. 8

பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் றான்உறை யும்மிடம்
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
குழைகொள் முத்தஞ் சொரியுந் தண்கழுக் குன்றமே. 9

பல்லில் வெள்ளைத் தலையன் தான்பயி லும்மிடம்
கல்லில் வெள்ளை அருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரள்தோள் ஊரன் வனப்பினால்
சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொழு மின்களே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : தொண்டை நாடு
சுவாமி : வேதகிரீசுவரர்
அம்பிகை : பெண்ணினல்லாளம்மை.

---

12. பண்-நட்டராகம்

திருச்சுழியல்

திருச்சிற்றம்பலம்

ஊனாய்உயிர் புகலாய்அக லிடமாய்முகில் பொழியும்,
வானாய்அதன் மதியாய்விதி வருவான்இடம் பொழிலின்,
தேனாதரித் திசைவண்டினம் மிழற்றுந்திருச் சுழியல்,
நானாவிதம் நினைவார்தமை நலியார்நமன் தமரே. 1

---

9. மழைகள் சால - பல பருவத்துப் பெய்யும் மழைப் பெயல்கள் நிறைய. கலித்து நீடு உயர் வேய் - அதனால் தழைத்து ஓங்கி உயர்ந்த மூங்கில். குழை - காதணி.

10. பல் இல்லாத வெள்ளைத்தலை; தசையற்ற என்புத்தலை.

1. ஊனாய் - உடலாய். உயிர்புகலாய் - எல்லா உயிர்களுக்கும் புகலிடமாகி. அகலிடமாய் - பூமியாகி.

தண்டேர்மழுப் படையான்மழ விடையான்எழு கடல்நஞ், சுண்டேபுரம் எரியச்சிலை வளைத்தான்இமை யவர்க்காத், திண்டேர்மிசை நின்றானவன் உறையுந்திருச் சுழியல், தொண்டேசெய வல்லார்அவர் நல்லார்துயர் இலரே. 2

கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற் றக், கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியல், தெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவார்அடி தொழுவார், அவ்வத்திசைக் கரசாகுவர் அலராள் பிரி யாளே. 3

மலையான்மகள் மடமாதிட மாகத்தவள் மற்றுக், கொலையானையின் உரிபோர்த்தஎம் பெருமான்திருச் சுழி யல், அலையார்சடை உடையான்அடி தொழுவார்பழு துள் ளம், நிலையார்திகழ் புகழால்நெடு வானத்துயர் வாரே. 4

உற்றான்நமக் குயருமதிச் சடையான்புலன் ஐந்தும், செற்றார்திரு மேனிப்பெரு மானூர்திருச் சுழியல், பெற் றான்இனி துறையத்திறம் பாமைத்திரு நாமம், கற்றாரவர் கதியுட்செல்வர் ஏத்தும்மது கடனே. 5

மலந்தாங்கிய பாசப்பிறப் பறும்பீர்துறைக் கங்கைச், சலந்தாங்கிய முடியான்அமர்ந் திடமாந்திருச் சுழியல், நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையால்நினைந் தேத்தும், தலந்தாங்கிய புகழாம்மிகு தவமாஞ்சது ராமே. 6

---

2. தேவர்களுக்காகத் திரிபுர சங்காரஞ் செய்யக் கருதித் தேரில் ஏறி நின்றவன்.

3. கவ்வை - முழக்கத்தை உடைய. கொவ்வைத் துவர் வாயார் - கோவைக்கனியைப்போன்ற சிவந்த வாயையுடைய பெண்கள். அலராள் - திருமகள்.

4. பழுது உள்ளம் நிலையார் – குற்றத்தையுடைய உள் ளத்தில் உள்ள குற்றம் நீங்கப் பெறுவர் என்றபடி.

5. திருமேனிப்பெருமான்; தலத்துமூர்த்தி. உற்றான் - இடை யூறு வருங்கால் துணையாக வருபவன் திறம்பாமை - மாறுமல்.

6. சதுர் - அறிவுத்திறம்.

கைவத்தசெவ் வுருவன்திரு நீற்றன்உரு மேற்றன்,
கைவைத்தொரு சிலையால்அரண் மூன்றும்எரி செய்தான்,
தெய்வத்தவர் தொழுதேத்திய குழகன்திருச் சுழியல்,
மெய்வைத்தடி நினைவார்வினை தீர்தல்எளி தன்றே. 7

பூவேந்திய பீடத்தவன் றானும்அடல் அரியும்,
கோவேந்திய வினயத்தொடு குறுகப்புகல் அறியார்,சேவேந்
திய கொடியானவன் உறையுந்திருச் சுழியல், மாவேந்திய
கரத்தான்எம சிரத்தான்றன தடியே. 8

கொண்டாடுதல் புரியாவரு தக்கன்பெரு வேள்வி,
செண்டாடுதல் புரிந்தான்திருச் சுழியற்பெரு மானைக்,
குண்டாடிய சமண்ஆதர்கள் குடைச்சாக்கியர் அறியா,
மிண்டாடிய அதுசெய்தது வானல்வரு விதியே. 9

நீரூர்தரு நிமலன்திரு மலையார்க்கயல் அருகே, தேரூர்
தரும் அரக்கன்சிரம் நெரித்தான் திருச் சுழியல், பேரூரென
உறைவான்அடி பெயர்நாவலர் கோமான், ஆரூரன தமிழ்
மாலைபத் தறிவார்துயர் இலரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : பாண்டி நாடு

சுவாமி : திருமேனிநாதர்; அம்பிகை : துணைமாலைநாயகி.

---

7. உரும் ஏற்றன் - இடியைப்போல முழங்கும் இடபவாகனத்தை உடையவன். தெய்வத்தவர் - தேவர். மெய்வைத்து - உண்மையை மேற்கொண்டு; அடியிலே உடம்பை வைத்து வணங்கி எனலும் ஆம்.

8. பூவைத் தன்னை ஏந்திய பீடமாகக் கொண்ட பிரமதேவன். கோஏந்திய - தலைமைபெற்ற. வினயம் - பணிவு. சே- இடபம். மா - மான். அடி குறுகப்புகுதலை அறியார்.

9 செண்டாடுதல் - பந்தைப்போலத் தூக்கி எறிந்து விளையாடுதல். ஆதர்கள் - நகைப்புக்கு இடமானவர்கள். சாக்கியர் - பௌத்தர்.

10 திருமலையார்க்கு - கைலாயமலையில் உள்ளாருக்கு. அரக்கன் - இராவணன்.

13. பண் - புறநீர்மை

திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே. 1

நின்ற வினைக்கொடுமை நீங்க இருபொழுதும்
துன்று மலர்இட்டுச் சூழும் வலஞ்செய்து
தென்றல் மணங்கமழும் தென்திரு வாரூர்புக்
கென்றன் மனங்குளிர என்றுகொல் எய்துவதே. 2

முன்னை முதற்பிறவி மூதறி யாமையினால்
பின்னை நினைந்தனவும் பேதுற வும்மொழியச்
செந்நெல் வயற்கழனித் தென்திரு வாரூர்புக்
கென்னுயிர்க் கின்னமுதை என்றுகொல் எய்துவதே. 3

நல்ல நினைப்பொழிய நாள்களில் ஆருயிரைக்
கொல்ல நினைப்பனவுங் குற்றமும் அற்றொழியச்
செல்வ வயற்கழனித் தென்திரு வாரூர்புக்
கெல்லை மிதித்தடியேன் என்றுகொல் எய்துவதே. 4

கடுவரி மாக்கடலுட் காய்ந்தவன் தாதையைமுன்
சுடுபொடி மெய்க்கணிந்த சோதியை வன்றலைவாய்
அடுபுலி ஆடையனை ஆதியை ஆரூர்புக்
கிடுபலி கொள்ளியைநான் என்றுகொல் எய்துவதே. 5

---

1. அஞ்சுபதம் - பஞ்சாட்சரம்; ஒவ்வோரெழுத்துக்கும் தனித்தனியே பொருள் உண்மையின் ஒவ்வொன்றும் பதம் ஆயிற்று. பராமரியா - பாதுகாத்து.

3. மூதறியாமையினால் - பல நாளாக அடிப்பட்டு வந்த பழைய அஞ்ஞானத்தால். பேதுறவு - மயங்குதல்.

சூழொளி நீர்நிலந்தீத் தாழ்வளி ஆகாசம்
வானுயர் வெங்கதிரோன் வண்டமிழ் வல்லவர்கள்
ஏழிசை ஏழ்நரம்பின் ஓசையை ஆரூர்புக்
கேழுல காளியைநான் என்றுகொல் எய்துவதே. 6

கொம்பனை நுண்ணிடையாள் கூறனை நீறணிந்த
வம்பனை எவ்வுயிர்க்கும் வைப்பினை ஒப்பமராச்
செம்பொனை நன்மணியைத் தென்திரு ஆரூர்புக்
கென்பொனை என்மணியை என்றுகொல் எய்துவதே. 7

ஆறணி நீள்முடிமேல் ஆடர வஞ்சூடிப்
பாறணி வெண்டலையிற் பிச்சைகொள் நச்சரவன்
சேறணி தண்கழனித் தென்திரு வாரூர்புக்
கேறணி எம்மிறையை என்றுகொல் எய்துவதே. 8

மண்ணினை உண்டுமிழ்ந்த மாயனும் மாமலர்மேல்
அண்ணலும் நண்ணரிய ஆதியை மாதினொடும்
திண்ணிய மாமதில்சூழ் தென்திரு வாரூர்புக்
கெண்ணிய கண்குளிர என்றுகொல் எய்துவதே. 9

மின்னெடுஞ் செஞ்சடையான் மேவிய ஆரூரை
நன்னெடுங் காதன்மையால் நாவலர் கோன்ஊரன்
பன்னெடுஞ் சொல்மலர்கொண் டிட்டன பத்தும்வல்லார்
பொன்னுடை விண்ணுலகம் நண்ணுவர் புண்ணியரே. 10

திருச்சிற்றம்பலம்

வரலாறு: **இருகண்களையும் இழந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் காஞ்சிபுரம் வந்து திருவேகம்பரைப் பணிந்து ஒரு கண் பெற்றார். அப்பால் திருவாரூரை நினைத்து இப்பதிகத்தைப் பாடியருளினார்** (பெரிய. ஏயர்கோன். 290 - 291.)

---

5. கடுவரி மா கடலுள் காய்ந்தவன் தாதையை - கடிய கோடுகளையுடைய மாமரத்தைக் கடலிலே கோபித்து அழித்த முருகவேளுடைய தந்தையை. புலி ஆடையனை - புலித்தோலை ஆடையாக அணிந்தவனை. கொள்ளியை - கொள்பவனை.

7. வம்பனை - மணம் உடையவனை. ஒப்பு அமரா - உவமையில் பொருந்தாத.

8. பாறு - பருந்து. நஞ்சு அரவன்.

திருக்கானப்பேர்

திருச்சிற்றம்பலம்

தொண்டர் அடித்தொழலும் சோதி இளம்பிறையும்
சூதன மென்முலையாள் பாகமும் ஆகிவரும்
புண்ட ரிகப்பரிசாம் மேனியும் வானவர்கள்
பூச லிடக்கடல்நஞ் சுண்ட கருத்தமரும்
கொண்டல் எனத்திகழுங் கண்டமும் எண்தோளும்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமும் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவ தென்றுகொ லோஅடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 1

கூதல் இடுஞ்சடையுங் கோளர வும்விரவும்
கொக்கிற குங்குளிர்மா மத்தமும் ஒத்துனதாள்
ஓதல் உணர்ந்தடியார் உன்பெரு மைக்குநினைந்
துள்ளுரு காவிரசும் ஓசையைப் பாடலும்நீ
ஆதல் உணர்ந்தவரோ டன்பு பெருத்தடியேன்
அங்கையின் மாமலர்கொண் டென்கண தல்லல்கெடக்
காத லுறத்தொழுவ தென்றுகொ லோஅடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 2

நானுடை மாடெனவே நன்மை தரும்பரனை
நற்பதம் என்றுணர்வார் சொற்பதம் ஆர்சிவனைத்
தேனிடை இன்னமுதை மற்றத னிற்றெளிவைத்
தேவர்கள் நாயகனைப் பூவுயர் சென்னியனை

---

1. சூது - சூதுவிளையாட்டில் வைத்தாடும் காய். பூசல் இட - ஆரவாரம் செய்ய.

2. கூதல் இடும் - நீர்த்துளி வீசி வாடைக்காலத்தை உண்டாக்கும். விரசும் - கலக்கும்.

3. மாடு - செல்வம். நற்பதம் - நல்லநிலை. சொற்பதம் ஆர் சிவனை - சொல்லின் பக்குவத்திலே அமைந்த சிவபெருமானை. கானிடை மாநடன் - மயானத்தில் மகா நடனம் செய்தருளுபவன்.

வானிடை மாமதியை மாசறு சோதியனை
மாருத மும்மனலும் மண்டல மும்மாய
கானிடை மாநடனென் றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 3

செற்றவர் முப்புரம்அன் றட்ட சிலைத்தொழிலார்
சேவகம் முன்நினைவார் பாவக முந்நெறியும்
குற்றமில் தன்அடியார் கூறும் இசைப்பரிசும்
கோசிக மும்அரையிற் கோவண மும்மதளும்
மற்றிதழ் திண்புயமும் மார்பிடை நீறுதுதை
மாமலை மங்கைஉமை சேர்சுவ டும்புகழக்
கற்றன வும்பரவிக் கைதொழல் என்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 4

கொல்லை விடைக்குழகுங் கோல நறுஞ்சடையிற்
கொத்தல ரும்மிதழித் தொத்தும் அதனருகே
முல்லை படைத்தகைகை மெல்லிய லாள்ஒருபால்
மோகம் மிகுத்திலங்குங் கூறுசெய் எப்பரிசும்
தில்லை நகர்ப்பொதுவுற் றாடிய சீர்நடமும்
திண்மழு வுங்கைமிசைக் கூர்எரி யும்அடியார்
கல்ல வடப்பரிசுங் காணுவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 5

பண்ணுத லைப்பயனார் பாடலும் நீடுதலும்
பங்கய மாதனையார் பத்தியும் முத்திஅளித்
தெண்ணுத லைப்பெருமான் என்றெழு வார்அவர்தம்
ஏசற வும்பிறையாம் எந்தையை யும்விரவி

---

4. சேவகம் — வீரம். பாவகம் — குறிப்பு. கோசிகம் — பட்டாடை. அதள் — தோல். சுவடு - அடையாளம்.

5. தொத்து - பூங்கொத்து. முல்லை படைத்த - முல்லை யின் உருவைப்படைத்த. பொது - அம்பலம். கல்லவடம் - ஒரு வகைப் பறை.

நண்ணாத லைப்படுமா றெங்ஙனம் என்றயலே
　　நைகிற என்னை மதித் துய்யும்வ ணம்மருளும்
கண்ணுத லைக்கனியைக் காண்பதும் என்றுகொலோ
　　கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 6

மாவை உரித்ததள்கொண் டங்கம் அணிந்தவனை
　　வஞ்சர் மனத்திறையும் நெஞ்சணு காதவனை
மூவர் உருத்தனதாம் மூல முதற்கருவை
　　மூசிடு மால்விடையின் பாகனை ஆகம்உறப்
பாவகம் இன்றிமெய்யே பற்று மவர்க்கமுதைப்
　　பால்நறு நெய்தயிரைந் தாடு பரம்பரனைக்
காவல் எனக்கிறைஎன் றெய்துவ தென்றுகொலோ
　　கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 7

தொண்டர் தமக்கெளிய சோதியை வேதியனைத்
　　தூய மறைப்பொருளாம் நீதியை வார்கடல்நஞ்
சுண்ட தனுக்கிறவா தென்றும் இருந்தவனை
　　ஊழி படைத்தவனோ டொள்ளரி யும்உணரா
அண்டனை அண்டர்தமக் காகம நூல்மொழியும்
　　ஆதியை மேதகுசீர் ஓதியை வானவர்தம்
கண்டனை அன்பொடுசென் றெய்துவ தென்றுகொலோ
　　கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 8

நாதனை நாதமிகுத் தோசைய தானவனை
　　ஞான விளக்கொளியாம் ஊன்உயி ரைப்பயிரை
மாதனை மேதகுதன் பத்தர் மனத்திறையும்
　　பற்றுவி டாதவனைக் குற்றமில் கொள்கையனைத்

---

7. மாவை - யானையை. அங்கம் - எலும்பு. இறையும் - சிறிதளவும். திரிமூர்த்திகளும் தன்னுடைய உருவாக அவற்றிற்கு மூலமாக உள்ள ஆதிப் பொருளை. பாவகம் இன்றி - போலியாக வேடங் காட்டலில்லாமல். பால் நெய் தயிர் முதலிய ஆனைந்தின் அபிடேகத்தைக் கொள்ளும்.

8. நஞ்சு உண்டதனுக்கு இறவாது என்றும் இருந்தவனை - நஞ்சை உண்ட செயலுக்குப் பயனாக இறப்பை அடையாமல் என்றும் வாழ்வானை; "வானோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும், உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்" (சிலப்பதிகாரம்)

நாதனை என்றனையாள் தோழனை நாயகனைத்
தாழ்மக ரக்குழையுந் தோடும் அணிந்ததிருக்
காதனை நாயடியேன் எய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே. 9

கன்னலை இன்னமுதைக் கார்வயல் சூழ்கானப்
பேருறை காளையைஒண் சீருறை தண்டமிழால்
உன்னி மனத்தயரா உள்ளுரு கிப்பரவும்
ஒண்பொழில் நாவலர்கோன் ஆகிய ஆரூரன்
பன்னும் இசைக்கிளவி பத்திவை பாடவல்லார்
பத்தர் குணத்தினராய் எத்திசை யும்புகழ
மன்னி இருப்பவர்கள் வானின் இழிந்திடினும்
மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : பாண்டி நாடு

சுவாமி : காளையப்பர்; அம்பிகை : மகமாயி.

வரலாறு: சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான்பெருமாள் நாயனாருடன் சென்று திருச்சுழியலைத் தரிசித்துவிட்டு இரவில் அத்தலத்தில் தங்கினார். அந்த இரவிலே அவர் கனவில் சிவபெருமான் காளைத் திருவடிவத்தோடு எழுந்தருளி, "யாம் இருப்பது கானப்பேர்" என்று சொல்லி மறைந்தார். சுவாமிகள் உடனே துயிலுணர்ந்து அதிசயித்து இறைவர் திருவருளை நினைத்து, திருக்கானப்பேருக்குப் புறப்படுவாராகி, இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார் (பெரிய. சேரமான். 112 — 113.)

ஊழிப்படைத்தவன் - யுகத்தைப் படைத்த பிரமதேவன். அண்டனை - தேவனை. வானவர்தம் கண் தன்னை.

9. நாதம் - நாதத்துவம்.

10. கன்னலை - கரும்பை, மண்டல நாயகராய் - நாட்டுக்கு அரசராகி.

திருக்கூடலையாற்றூர்

திருச்சிற்றம்பலம்

வடிவுடை மழுஏந்தி மதகரி உரிபோர்த்துப்
பொடிஅணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடிஅணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 1

வையகம் முழுதுண்ட மாலொடு நான்முகனும்
பையர விளவல்குற் பாவையொ டும்முடனே
கொய்யணி மலர்ச்சோலைக் கூடலை யாற்றூரில்
ஐயனிவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 2

ஊர்தொறும் வெண்டலைகொண் டுண்பலி இடுமென்று
வார்தரு மென்முலையாள் மங்கையொ டும்முடனே
கூர்நுனை மழுவேந்திக் கூடலை யாற்றூரில்
ஆர்வன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 3

சந்தண வும்புனலுந் தாங்கிய தாழ்சடையன்
பந்தண வும்விரலாள் பாவையொ டும்முடனே
கொந்தண வும்பொழில்சூழ் கூடலை யாற்றூரில்
அந்தணன் வழிபோந்த அதிசயம் அறியேனே. 4

வேதியர் விண்ணவரும் மண்ணவ ரும்தொழநற்
சோதிய துருவாகிச் சுரிகுழல் உமையோடும்
கோதிய வண்டறையுங் கூடலை யாற்றூரில்
ஆதிஇவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 5

வித்தக வீணையொடும் வெண்புரி நூல்பூண்டு
முத்தன வெண்முறுவல் மங்கையொ டும்முடனே
கொத்தல ரும்பொழில்சூழ் கூடலை யாற்றூரில்
அத்தன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 6

---

1. அடிகள் - சுவாமி.
4. கொந்து - பூங்கொத்து.
6. வித்தகம் - கலைத்திறம்.

மழைநுழை மதியமொடு வாளர வஞ்சடைமேல்
இழைநுழை துகில்அல்குல் ஏந்திழை யாளோடும்
குழையணி திகழ்சோலைக் கூடலை யாற்றூரில்
அழகன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 7

மறைமுதல் வானவரும் மாலயன் இந்திரனும்
பிறைநுதல் மங்கையொடும் பேய்க்கண முஞ்சூழக்
குறள்படை யதனோடுங் கூடலை யாற்றூரில்
அறவன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 8

வேலையின் நஞ்சுண்டு விடையது தான்ஏறிப்
பாலன மென்மொழியாள் பாவையொ டும்முடனே
கோலம தாகிக் கூடலை யாற்றூரில்
ஆலன்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே. 9

கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடும்
ஆடலு கந்தானை அதிசயம் இதுவென்று
நாடிய இன்றமிழால் நாவல வூரன்சொல்
பாடல்கள் பத்தும்வல்லார் தம்வினை பற்றறுமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : நடுநாடு

சுவாமி: நெறிகாட்டும் நாயகர்; அம்பிகை: புரிகுழல்நாயகி.

வரலாறு: சுந்தரமூர்த்தி சுவாமிகள் பல தலங்களைத் தரிசித்து வரும்போது, கூடலையாற்றூருக்கு அருகில் வந்தும் அத்தலத்துக்குச் செல்லாமல் திருமுதுகுன்றை நோக்கிச் செல்லலானார். அப்பொழுது சிவபெருமான் வழியிடையே ஓர் அந்தணராய் நிற்க, அவரைக் கண்டு சுந்தரர், முதுகுன்றுக்கு வழி யாதென்று வினவினர். இந்தக் கூடலையாற்றூர் வழியாகப் போகவேண்டுமென்று பெருமான் வழிகாட்டிப் பின்வர, சுந்தரர் கூடலையாற்றூரை அணுகியவுடன் பின்வந்த சிவபெருமான் மறைந்தருளினார். அந்த அதிசயம் உணர்ந்து இத்திருப்பதிகத்தைப்பாடினார் (பெரிய. ஏயர்கோன். 100 - 103).

---

8. குறள்படை – குட்டையாகிய உருவத்தையுடைய பூதப்படை.

9. ஆலன் - ஆலடியில் தட்சிணாமூர்த்தியாக இருந்தவன்.

14. பண் - சீகாமரம்

திருவன்பார்த்தான் பனங்காட்டூர்

திருச்சிற்றம்பலம்

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை,
டையில்அன் புடையானை யாவர்க்கும் அறியொண்ணா,
டையில்வாளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்,
டையிற்கங்கை தரித்தானைச் சாராதார் சார்பென்னே. 1

அறையும்பைங் கழல்ஆர்ப்ப அரவாட அனல்ஏந்திப்,
றையுங்கங் கையுஞ்சூடிப் பெயர்ந்தாடும் பெருமானார்,
றையுஞ்சங் கொலிஓவாப் படிறன்றன் பனங்காட்டூர்,
றையும்எங்கள் பிரானை உணராதார் உணர்
வென்னே. 2

தண்ணார்மா மதிசூடித் தழல்போலுந் திருமேனிக்,
கெண்ணார்நாள் மலர்கொண்டங் கிசைந்தேத்தும் அடியார்
கள், பண்ணார்பா டல்அறாத படிறன்றன் பனங்காட்டூர்,
பெண்ணாணா யபிரானைப் பேசாதார் பேச்சென்னே. 3

நெற்றிக்கண் உடையானை நீறேறுந் திருமேனிக்,
குற்றமில் குணத்தானைக் கோணாதார் மனத்தானைப்,
பற்றிப்பாம் பரைஆர்த்த படிறன்றன் பனங்காட்டூர்ப்,
பெற்றொன்றே றும்பிரானைப் பேசாதார் பேச்சென்னே. 4

உரமென்னும் பொருளானை உருகில்உள் உறைவானைச்,
சிரமென்னுங் கலனானைச் செங்கண்மால் விடையானை, வரம்

---

1. அடையில் - முடிவடையாத.
2. அறையும் - ஒலிக்கும்.
3. பெண்ணும் ஆணும் ஆகிய பிரானை.
4. கோணாதார் - நேர்மையுடையார். பெற்று - இடபம்.

முன்னம் அருள்செய்வான் வன்பார்த்தான் பனங்காட்டூர்ப், பரமன்எங் கள்பிரானைப் பரவாதார் பரவென்னே. 5

எயிலார்பொக் கம்எரித்த எண்டோள்முக் கணிறைவன், வெயிலாய்க்காற் றெனவீசி மின்னாய்த்தீ எனநின்றான், மயிலார்சோ லைகள்சூழ்ந்த வன்பார்த்தான் பனங்காட்டூர்ப், பயில்வானுக் கடிமைக்கட் பயிலாதார் பயில்வென்னே. 6

மெய்யன்வெண் பொடிபூசும் விகிர்தன்வே தமுதல்வன், கையில்மான் மழுவேந்திக் காலன்கா லம்அறுத்தான், பைகொள்பாம் பரைஆர்த்த படிறன்றன் பனங்காட்டூர், ஐயன்எங்கள் பிரானை அறியாதார் அறிவென்னே. 7

வஞ்சமற்ற மனத்தாரை மறவாத பிறப்பிலியைப், பஞ்சிச்சீ றடியாளைப் பாகம்வைத் துகந்தானை, மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங்காட்டூர், நெஞ்சத்தெங் கள்பிரானை நினையாதார் நினைவென்னே. 8

மழையானுந் திகழ்கின்ற மலரோன்என் றிருவர்தாம், உழையாநின் றவர்உள்க உயர்வானத் துயர்வானைப், பழையானைப் பனங்காட்டூர் பதியாகத் திகழ்கின்ற, குழைகாதற் கடிமைக்கட் குழையாதார் குழைவென்னே. 9

பாரூரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானைச், சீரூருந் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த, ஆரூ

---

5. உரம் - அறிவு. கலன் - பாத்திரம். வரம் அருள் செய்வான்.

6. பொக்கம் - பொய்த்தன்மை.

7. காலன் காலம் அறுத்தான் - யமனுக் கணக்குப் பண்ணும் மார்க்கண்டேயனது ஆயுட்காலமுடிவை நீக்கினவன்.

9. மழையானும் - மேகத்தைப்போன்ற நிறத்தையுடைய திருமாலும். உழையாநின் றவர் - பக்கத்தில் நின்றவர்கள்.

10. பவளத்தின் படியானை - பவளத்தைப்போன்ற சிவந்த திருவுருவம் உடையானை. ஊரூரன் - ஊர்தோறும்.

ரன் னடித்தொண்டன் அடியன்சொல் அடிநாய்சொல்,
ஊரூரன் உரைசெய்வார் உயர்வானத் துயர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு : தொண்டை நாடு

சுவாமி: பனங்காட்டுநாதர்; அம்பிகை: அமிர்தவல்லி.

திருப்பனையூர்

திருச்சிற்றம்பலம்

மாடமாளிகை கோபுரத்தொடு மண்டபம்வள ரும்வளர்பொழில், பாடல் வண்டறையும் பழனத் திருப்பனையூர்த், தோடுபெய்தொரு காதினிற்குழை தூங்கத்தொண்டர்கள் துள்ளிப்பாடநின் றாடு மாறுவல்லார் அவரே அழகியரே. 1

நாறுசெங்கழு நீர்மலர்நல்ல மல்லிகை சண்பகத்தொடு, சேறுசெய் கழனிப் பழனத் திருப்பனையூர், நீறுபூசிநெய் யாடிதன்னை நினைப்பவர்தம் மனத்தன் ஆகிநின், றாறு சூடவல்லார் அவரே அழகியரே. 2

செங்கண் மேதிகள் சேடெறிந்து தடம்படிதலிற் சேல்இனத்தொடு, பைங்கண் வாளைகள்பாய் பழனத் திருப்பனையூர்த், திங்கள்சூடிய செல்வனார்அடி யார்தம்மேல்வினை தீர்ப்பராய்விடில், அங்கிருந் துறைவார் அவரே அழகியரே. 3

வாளைபாய மலங்கிளங்கயல் வரிவரால்உக ளுங்கழனி யுள், பாளைஒண் கமுகம் புடைசூழ் திருப்பனையூர்த்,

---

1. பழனம் - வயல்.
3. சேடு - சேறு. தடம் - குளம்.

தோளுமாகமுந் தோன்றநட்டமிட் டாடுவார்அடித் தொண்டர்தங்களை, ஆளு மாறுவல்லார் அவரே அழகியரே. 4

கொங்கை யார்பலருங்குடைந் தாடநீர்க்குவளை மலர்தரப், பங்கயம் மலரும் பழனத் திருப்பனையூர், மங்கை பாகமும் மாலொர்பாகமுந் தாம்உடையவர் மான்மழு விஞ்ஞெ, டங்கைத் தீஉகப்பார் அவரே அழகியரே. 5

காவிரிபுடை சூழ்சோணாட்டவர் தாம்பரவிய கருணையங்கடல்அப்,பாவிரி புலவர் பயிலுந் திருப்பனையூர், மாவிரிமட நோக்கிஅஞ்ச மதகிரிஉரி போர்த்துகந்தவர், ஆவில்ஐந் துகப்பார் அவரே அழகியரே. 6

மரங்கள்மேல்மயில் ஆலமண்டப மாடமாளிகை கோபுரத்தின்மேல், திரங்கல்வன் முகவன் புகப்பாய் திருப்பனையூர்த், துரங்கன்வாய்பிளந் தானுந் தூமலர்த் தோன்றலும்மறி யாமற்றோன்றிநின், றரங்கில் ஆடவல்லார் அவரே அழகியரே. 7

மண்ணெலாம்முழ வம்மதிர்தர மாடமாளிகை கோபுரத்தின்மேல், பண்ணி யாழ்முர லும் பழனத் திருப்பனையூர், வெண்ணிலாச்சடை மேவியவிண் ணவரொடுமண் ணவர் தொழ, அண்ணல் ஆகின்றார் அவரே அழகியரே. 8

குரக்கினங்குதி கொள்ளத்தேன்உகக் குண்டுதண்வயற் கெண்டைபாய்தரப், பரக்குந் தண்கழனிப் பழனத் திருப்பனையூர், இரக்கம் இல்லவர் ஐந்தொடைந்தலை தோள்இருபது தாள்நெரிதர, அரக்கனை அடர்த்தார் அவரே அழகியரே. 9

---

4. மலங்கு - ஒருவகை மீன். உகளும் - துள்ளும்.
6. மா விரி - மாவடுவின் தன்மை விரிந்த.
7. திரங்கல் - சுருங்கிய தோலையுடைய. வன்முகவன் - குரங்கு. துரங்கன்-குதிரையாக நின்ற கேசி என்னும் அசுரன். வாய்பிளந்தான் - திருமால்.
9. உகக்குண்டு - உகக்க உண்டு

வஞ்சிநுண்ணிடை மங்கைபங்கினர் மாதவர்வள ரும் வளர்பொழில், பஞ்சின் மெல்லடியார் பயிலுந் திருப் பனையூர், வஞ்சியும்வளர் நாவலூரன் வனப்பகையவள் அப்பன் வன்றொண்டன், செஞ்சொற் கேட்டுகப்பார் அவரே அழகியரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு

சுவாமி: சௌந்தரநாதர்; அம்பிகை: பெரியநாயகி.

வரலாறு: திருப்புகலூரைத் தரிசித்துக்கொண்டு செல்லும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருப்பனையூரை நோக்கி வருகையில் ஊர்ப்புறத்தே இறைவர் திருநடனக்காட்சியை அருளத் தரிசித்து இறைஞ்சி இப் பதிகத்தைப்பாடினர் (பெரிய. ஏயர்கோன் 52—3.)

திருவீழிமிழலை

திருச்சிற்றம்பலம்

நம்பினார்க்கருள் செய்யும்அந்தணர் நான்மறைக்கிடம் ஆய வேள்வியுள், செம்பொனேர் மடவார் அணிபெற்ற திரு மிழலை, உம்ப ரார்தொழு தேத்தமாமலை யாளொடும்முடனேஉறைவிடம், அம்பொன் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 1

விடங்கொள் மாமிடற் றீர்வெள்ளைச்சுருள் ஒன் றிட்டு விட்ட காதினீர் என்று, திடங்கொள் சிந்தையினார் கலிகாக்குந் திருமிழலை, மடங்கல்பூண்ட விமானமண்மிசை

---

1. செம்பொன் நேர் மடவார் - சிவந்த திருமகளை ஒத்த மகளிர்.

2. சுருள் - தோடு. கலிகாக்கும் - துன்பத்தை வராமல் பாதுகாக்கும். மடங்கல் - சிங்கம். இழிச்சிய - இறங்கச்செய்த. திருவீழிமிழலையில் விண்ணிழி விமானம் உண்டு. திருமால் கொண்டு வந்தாரென்பது தலவரலாறு.

வந்திழிச்சிய வானநாட்டையும், அடங்கல் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 2

ஊனைஉற்றுயிர் ஆயினீர்ஒளி மூன்றுமாய்த்தெளி நீரோடானஞ்சின், தேனை ஆட்டுகந்தீர் செழுமாடத் திருமிழலை, மானைமேவிய கையினீர்மழு ஏந்தினீர்மங்கை பாகத்தீர் விண்ணில், ஆன வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 3

பந்தம்வீடிவை பண்ணினீர்படி றீர்மதிப்பிதிர்க் கண்ணியீர் என்று, சிந்தைசெய் நான்மறையோர் சிறந்தேத்துந் திருமிழலை, வந்துநாடகம் வானநாடியர் ஆடமால் அயன் ஏத்த நாடோறும், அந்தண் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 4

புரிசைமூன்றையும் பொன்றக்குன்றவில் ஏந்திவேதப் புரவித்தேர்மிசைத், திரிசெய் நான்மறையோர் சிறந்தேத்துந் திருமிழலைப், பரிசினால்அடி போற்றும் பத்தர்கள் பாடிஆடப் பரிந்துநல்கினீர், அரிய வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 5

எறிந்தசண்டி இடந்தகண்ணப்பன் ஏத்துபத்தர்கட் கேற்றம்நல்கினீர், செறிந்த பூம்பொழில் தேன்துளிவீசுந் திருமிழலை, நிறைந்த அந்தணர் நித்தம்நாள்தொறும் நேசத்தால்உமைப் பூசிக்கும்மிடம், அறிந்து வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 6

---

3. ஊனை உற்று - உடம்பை அடைந்து. ஒளி மூன்று - சந்திர சூரியாக்கினிகள்.

4. படிறீர் - பட்சபாதம் உடையீர். மதி தலையிற் சூடுவதாதலின் அதைக் கண்ணியென்றார். மதிப்பிதிர் - பிறை. வானநாடியர் - வானுலகத்திலுள்ள அரம்பையர்.

5. பொன்ற - அழிய. பரிந்து - விரும்பி.

6. எறிந்த சண்டி - தம் தந்தையாரின் காலை வெட்டிய

பணிந்தபார்த்தன் பகீரதன்பல பத்தர்சித்தர்க்குப் பண்டுநல்கினீர், திணிந்த மாடந்தொறுஞ் செல்வம்மல்கு திருமிழலைத், தணிந்த அந்தணர் சந்திநாள்தொறும் அந்தி வான்இடு பூச்சிறப்பவை, அணிந்து வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 7

பரந்தபாரிடம் ஊரிடைப்பலி பற்றிப் பார்த்துணுஞ் சுற்றம் ஆயினீர், தெரிந்த நான்மறை யோர்க்கிடம் ஆகிய திருமிழலை, இருந்துநீர் தமிழோடிசைகேட்கும் இச்சையாற் காசு நித்தம்நல்கினீர், அருந்தண் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 8

தூயநீர்அமு தாயவா றது சொல்லு கென்றுமைக் கேட்கச்சொல்லினீர், தீயராக்குலை யாளர் செழுமாடத் திருமிழலை, மேயநீர்பலி ஏற்றதென்னென்று விண்ணப்பஞ் செய் பவர்க்குமெய்ப்பொருள், ஆய வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 9

வேதவேதியர் வேதநீதியர் ஓதுவார்விரி நீர்மிழலையுள், ஆதி வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுகென்று, நாத கீதம்வண் டோதுவார்பொழில் நாவலூரன்வன் றொண் டன்நற்றமிழ், பாதம் ஓதவல்லார் பரனோடு கூடுவரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு

சுவாமி: வீழியழகர்; அம்பிகை: சுந்தரகுசாம்பிகையம்மை.

சண்டேச நாயனார். இடந்த - கண்ணை இடந்த.

7. பார்த்தன் - அருச்சுனன். திணிந்த - வளம் செறிந்த. தணிந்த - சினம் ஆறிய; சாந்த இயல்புடைய. சந்திதோறும், நாள்தோறும் எனக் கூட்டுக.

8. பாரிடம் - பூதம். காசு நித்தல் நல்கினீர்: இத்தலத்தில் ஞானசம்பந்தருக்கும் அப்பர் சுவாமிகளுக்கும் சிவபெருமான் படிக்காசு அருளினார்.

9. தீயர் ஆக்கு உலையாளர் - வேள்வித் தீயை உடைய அந்தணரும், பிறருக்கு உணவிடும் பொருட்டு ஆக்கும் உலையையுடைய அறவாணரும் வாழும்.

10. வண்டு நாதகீதத்தை ஓதும் வார்பொழில்.

திருவெண்பாக்கம்

திருச்சிற்றம்பலம்

• பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால், பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய், குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேஎன்ன, உழையுடையான் உள்ளிருந்துளோம்போகீர் என்றானே.

இடையறியேன் தலையறியேன் எம்பெருமான் சரணம்என்பேன், அடையுடையன் நம்மடியான் என்றவற்றைப் பாராதே, விடையுடையான் விடநாகன் வெண்ணீற்றன் புலியின்தோல், உடையுடையான் எனையுடையான் உளோம்போகீர் என்றானே. 2

செய்வினைஒன் றறியாதேன் திருவடியே சரணென்று, பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ வேண்டாவோ, பையரவா இங்கிருந்தா யோஎன்னப் பரிந்தென்னை, உய்யஅருள் செய்யவல்லான் உளோம்போகீர் என்றானே. 3

கம்பமருங் கரிஉரியன் கறைமிடற்றன் காபாலி, செம்பவளத் திருவுருவன் சேயிழையோ டுடனாகி, நம்பிஇங்கே இருந்தீரே என்றுநான் கேட்டலுமே, உம்பர்தனித் துணைஎனக் குளோம்போகீர் என்றானே. 4

பொன்னிலங்கு நறுங்கொன்றை புரிசடைமேற் பொலிந்திலங்க, மின்னிலங்கு நுண்ணிடையாள் பாகமாஎருதேறி, துன்னியிரு பால்அடியார் தொழுதேத்த அடியேனும், உன்னமதாய்க் கேட்டலுமே உளோம்போகீர் என்றானே. 5

---

1. படலம் - கண்ணை மறைக்கும் தோற்படலம். வடிகாது - தாழ்ந்த காது. உளாயே: வினா. உழை – மான்.
2. அடை உடையன் - நம்பால் அடுத்தலை உடையவன்.
4. கம்பு அமரும் - கட்டுத் தறியிலே பொருந்தும்.

கண்ணுதலாற் காமனையுங் காய்ந்ததிறற் கங்கைமலர், தெண்ணிலவு செஞ்சடைமேல் தீமலர்ந்த கொன்றையி னான், கண்மணியை மறைப்பித்தாய் இங்கிருந்தா யோஎன்ன, ஒண்ணுதலி பெருமானார் உளோம்போகீர் என்றானே. 6

பார்நிலவு மறையோரும் பத்தர்களும் பணிசெய்யத், தார்நிலவு நறுங்கொன்றைச் சடையனார் தாங்கரிய, கார் நிலவு மணிமிடற்றீர் இங்கிருந்தீ ரேஎன்ன, ஊர்அரவம் அரைக்கசைத்தான் உளோம்போகீர் என்றானே. 7

வாரிடங்கொள் வனமுலையாள் தன்னோடு மயானத் துப், பாரிடங்கள் பலசூழப் பயின்றாடும் பரமேட்டி, காரி டங்கொள் கண்டத்தன் கருதும்இடந் திருவொற்றி, யூரிடங் கொண் டிருந்தபிரான் உளோம்போகீர் என்றானே. 8

பொன்னவிலுங் கொன்றையினாய் போய்மகிழ்க்கீழ் இரு வென்று, சொன்னஎனைக் காணாமே சூளறவு மகிழ்க்கீழே என்னவல்ல பெருமானே இங்கிருந்தா யோஎன்ன, ஒன் னலரைக் கண்டார்போல் உளோம்போகீர் என்றானே. 9

மான்திகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களேல் லாம், தோன்றஅருள் செய்தளித்தாய் என்றுரைக்க உலக மேலாம், ஈன்றவனே வெண்கோயில் இங்கிருந்தா யோஎன்ன, ஊன்றுவதோர் கோல்அருளி உளோம்போகீர் என்றானே. 10

---

7. ஊர் அரவம் அரைக்கு அசைத்தான் - ஊர்கின்ற பாம்பை இடையிலே கட்டியவன்.

8. பாரிடங்கள் - பூதங்கள். கார் — கருமை.

9. சங்கிலியிடம் சூளுறவு செய்த வரலாற்றைக் குறிக் கின்றார். ஒன்னலர் - பகைவர்

10. மானைப்போலத் திகழும்.

ஏராரும்பொழில்நிலவு வெண்பாக்கம்இடங்கொண்ட, காராரும் மிடற்றானைக் காதலித்திட் டன்பினொடும், சீராருந் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த, ஆரூரன் தமிழ்வல்லார்க் கடையாவல் வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு: தொண்டை நாடு

சுவாமி: வெண்பாக்கநாதர்; அம்பிகை; கனிவாய்மொழி.

வரலாறு: திருவொற்றியூரை அகன்று வருகையில் இரண்டு கண்ணும் இழந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெண்பாக்கத்துக்கு வந்து தொண்டர்கள் புடைசூழத் திருக்கோயிலை வலம் வந்து இறைவரை வணங்கி, "இறைவரே, நீர் கோயிலில் உள்ளீரா?" எனக் கேட்க, சிவபெருமான் சுவாமிகளுக்கு ஊன்றுகோல் ஒன்று அளித்து, "உளோம், போகீர்" என்று அருளினார். அயலாரைப்போல அவ்வாறு சொல்லவே சுவாமிகள் இப்பதிகத்தைப் பாடினார் (பெரிய. ஏயர்கோன். 278—280.)

---

15. பண் - குறிஞ்சி

கோயில்

திருச்சிற்றம்பலம்

மடித்தாடு மடிமைக்கண் அன்றியே மனனேநீ வாழும் நாளும், தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில் இடும்போது, தடுத்தாட் கொள்வான், கடுத்தாடு கரதலத்தில் தமருகமும் எரிஅகலுங் கரிய பாம்பும், பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 1

---

1. அடிமைக்கண் மடித்து ஆடும் - தனக்கு அடிமையாக இருக்கும் தன்மையில் நம்மைத் திருப்பி ஆட்கொள்வான். அன்றியே - அஃது அல்லாமலும். வாழும் நாளைத் தடுத்து அலைத்து யமனுடைய ஏவலர் செக்கில் இடும்போதும் ஆட்கொள்வான். ஆட்டி - அலைத்து.

பேராது காமத்திற் சென்ருற்போல் அன்றியே பிரியா துள்கிச், சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன் அடிவீழுந் திருவிஞரை, ஓராது தருமஞர் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான், பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே. 2

நரியார்தங் கள்ளத்தாற் பக்கான பரிசொழிந்து நாளும் உள்கிப், பிரியாத அன்பராய்ச் சென்றுமுன் அடிவீழும் சிந்தை யாரைத், தரியாது தருமஞர் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான், பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே. 3

கருமையார் தருமஞர் தமர்நம்மைக் கட்டியகட் டறுப்பிப் பானை, அருமையாந் தன்னுலகந் தருவானை மண்ணுலகங் காவல் பூண்ட, உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடாமன்னவரை மறுக்கஞ் செய்யும்,பெருமையார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே.

கருமானின் உரியாடைச் செஞ்சடைமேல் வெண்மதியக் கண்ணி யானை, உருமன்ன கூற்றத்தை உருண்டோட உதைத்துகந் தலவா இன்பம், தருவானைத் தருமஞர் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான், பெருமாஞர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்ரு மன்றே. 5

உய்த்தாடித் திரியாதே உள்ளமே ஒழிகண்டாய் ஊன்கண் ஓட்டம், எத்தாலுங் குறைவில்லை என்பர்காண் நெஞ்சமே நம்மை நாளும், பைத்தாடும் அரவினன் பட

---

2. பேராது - தவிராமல். பேராளர் - புகழுடையார் வாழ்கின்ற.
3. பக்கு - பை
4. மறுக்கம் - வருத்தம்.
5. உருமு அன்ன - இடியேற்றை ஒத்த.
6. ஊன்கண் ஓட்டம் ஒழி கண்டாய் - உடம்பிணிடத்தே விருப்புக்கொண்டு ஓடுதலை விடுவாயாக. பித்தாடி; பெயர்.

சடையன் பரஞ்சோதி பாவந் தீர்க்கும், பித்தாடி புலியூர்ச் சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 6

முட்டாத முச்சந்தி மூவா யிரவர்க்கு மூர்த்தி என்னப், பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார் பாவமும் வினையும் போக, விட்டானை மலையெடுத்த இராவணனைத் தலைபத்தும் நெரியக் காலால், தொட்டானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 7

கற்றானுங் குழையுமா றன்றியே கருதுமா கருத கிற்றார்க், கெற்றாலுங் குறைவில்லை என்பர்காண் உள்ளமே நம்மை நாளுஞ், செற்றாட்டித் தருமனார் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான், பெற்றேறி புலி யூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 8

நாடுடைய நாதன்பால் நன்றென்றுஞ் செய்மனமே நம்மை நாளும், தாடுடைய தருமனார் தமர்செக்கில் இடும் போது தடுத்தாட் கொள்வான், மோடுடைய சமணர்க்கும் முடையுடைய சாக்கியர்க்கும் மூடம் வைத்த, பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே.

பாரூரும் அரவல்குல் உமைநங்கை யவள்பங்கன் பைங்கண் ஏற்றன், ஊரூரன் தருமனார் தமர்செக்கில் இடும் போது தடுத்தாட் கொள்வான், ஆரூரன் தம்பிரான் ஆரூ ரன் மீகொங்கில் அணிகாஞ் சிவாய்ப், பேரூர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றா மன்றே. 10

திருச்சிற்றம்பலம்

---

7. முட்டாத - இடையீடுபடாத. காலால் மலையைத் தொட்ட அளவிலே இராவணன் தலைகள் நெரிந்தன என்றபடி.

8. கல்தானும். கருத கிற்றார்க்கு - கருதும் வன்மையை யுடையாருக்கு. செற்று - வருத்தி. பெற்று - பெற்றம்; இடபம்

9. தாடு - தடுத்தல். மோடு - பெருவயிறு. முடை - நாற்றம். மூடம் - அறியாமை.

10. மீகொங்கு — மேல் கொங்குநாடு. காஞ்சிவாய்ப் பேரூர் - திருப்பேரூர் என்னும் தலம்; காஞ்சி — நொய்யில் என்னும் ஆறு.

திருவொற்றியூர்

திருச்சிற்றம்பலம்

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே
ஓட்டுந் திரைவாய் ஒற்றி யூரே. 1

பந்துங் கிளியும் பயிலும் பாவை
சிந்தை கவர்வார் செந்தீ வண்ணர்
எந்தம் மடிகள் இறைவர்க் கிடம்போல்
உந்துந் திரைவாய் ஒற்றி யூரே. 2

பவளக் கனிவாய்ப் பாவை பங்கன்
கவளக் களிற்றின் உரிவை போர்த்தான்
தவழும் மதிசேர் சடையாற் கிடப்போல்
உகளுந் திரைவாய் ஒற்றி யூரே. 3

என்ன தெழிலும் நிறையும் கவர்வான்
புன்னை மலரும் புறவில் திகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்
உன்னப் படுவான் ஒற்றி யூரே. 4

பணங்கொள் அரவம் பற்றிப் பரமன்
கணங்கள் சூழக் கபாலம் ஏந்தி
வணங்கும் இடைமென் மடவார் இட்ட
உணங்கல் கவர்வான் ஒற்றி யூரே. 5

படையார் மழுவன் பால்வெண் ணீற்றன்
விடையார் கொடியன் வேத நாவன்
அடைவார் வினைகள் அறுப்பான் என்னை
உடையான் உறையும் ஒற்றி யூரே. 6

---

1. **வினைகள்** - பாவங்கள். **கலம்** - கப்பல். **திமில்** - மீன்படகு.
2. **போல்:** போலும் என்பதன் விகாரம்.
5. **பணம்** - படம். **உணங்கல்** - புழுங்கலரிசிச் சோறு.

சென்ற புரங்கள் தீயில் வேவ
வென்ற விகிர்தன் வினையை வீட்ட
நன்று நல்ல நாதன் நரையே
றொன்றை உடையான் ஒற்றி யூரே. 7

கலவ மயில்போல் வளைக்கை நல்லார்
பலரும் பரவும் பவளப் படியான்
உலகின் உள்ளார் வினைகள் தீர்ப்பான்
உலவுந் திரைவாய் ஒற்றி யூரே. 8

பற்றி வரையை எடுத்த அரக்கன்
இற்று முரிய விரலால் அடர்த்தார்
எற்றும் வினைகள் தீர்ப்பர் ஓதம்
ஒற்றுந் திரைவாய் ஒற்றி யூரே. 9

ஒற்றி யூரும் அரவும் பிறையும்
பற்றி யூரும் பவளச் சடையான்
ஒற்றி யூர்மேல் ஊரன் உரைத்த
கற்றுப் பாடக் கழியும் வினையே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்புக்கொளியூர் அவிநாசி

திருச்சிற்றம்பலம்

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு
மானையே,உற்றாயென் றுன்னையே உள்குகின் றேன்உணர்ந்
துள்ளத்தால், புற்றா டரவா புக்கொளி யூரவி நாசியே,
பற்றாக வாழ்வேன் பசுபதி யேபர மேட்டியே. 1

---

8. நல்லார் - மகளிர். பவளப்படியான் - பவளம்போன்ற திருமேனியை உடையான்; படி - உருவம்.

9. ஓதம் ஒற்றும் - கடலின் நீர் மோதும்.

10. ஒற்றி ஊரும் - மேலே பற்றி ஊர்கின்ற. உரைத்த - பாடிய பாடல்களை.

1. உள்குகின்றேன் - நினைக்கின்றேன்.

வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய மாணிநீ, ஒழிவ தழகோ சொல்லாய் அருளோங்கு சடையானே, பொழிலாருஞ் சோலைப் புக்கொளி யூரிற் குளத்திடை, இழியாக் குளித்த மாணி எனைக்கிறி செய்ததே. 2

எங்கேனும் போகினும் எம்பெரு மானை நினைந்தக்கால், கொங்கே புகினுங் கூறைகொண் டாறலைப் பாரிலை, பொங்கா டரவா புக்கொளி யூரவி நாசியே, எங்கோ னேஉனை வேண்டிக்கொள் வேன்பிற வாமையே. 3

உரைப்பார் உரைஉகந் துள்கவல் லார்தங்கள் உச்சியாய், அரைக்கா டரவா ஆதியும் அந்தமும் ஆயினாய், புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவிநாசியே, கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே. 4

அரங்காவ தெல்லா மாயிடு காடது அன்றியும், சரங்கோலை வாங்கி வரிசிலை நாணியிற் சந்தித்துப், புரங்கோட எய்தாய் புக்கொளி யூரவி நாசியே, குரங்காடு சோலைக் கோயில்கொண் டகுழைக் காதனே. 5

நாத்தானும் உனைப்பாடல் அன்றிநவி லாதெனாச், சோத்தென்று தேவர் தொழநின்ற சுந்தரச் சோதியாய், பூத்தாழ் சடையாய் புக்கொளி யூரவி நாசியே, கூத்தா உனக்குநான் ஆட்பட்ட குற்றமுங் குற்றமே. 6

---

2. மாணி - பிரமசாரி. இழியா - இறங்கி. கிறி - வஞ்சகம்.

3. கொங்கு - கொங்கு நாடு. கூறைகொண்டு - ஆடையைக் கவர்ந்துகொண்டு.

4. உச்சியாய் - தலைமேல் உள்ளவனே. புரைக்கு ஆடு - உயர்வதற்காக ஆடுகின்ற; புரை - உயர்வு.

5. ஆய் இடுகாடு அரங்காவது. சரமாகிய கோலை; கோல் - அம்பு. சந்தித்து - பூட்டி.

6. சோத்து - தோத்திரம். குற்றமே : வினா.

மந்தி கடுவனுக் குண்பழம் நாடி மலைப்புறம், சந்திகள் தோறுஞ் சலபுட்பம் இட்டு வழிபடப், புந்தி உறைவாய் புக்கொளி யூரவி நாசியே, நந்தி உனைவேண்டிக் கொள்வேன் நரகம் புகாமையே. 7

பேணு தொழிந்தேன் உன்னை அலாற்பிற தேவரைக், காணு தொழிந்தேன் காட்டுதி யேல்இன்னங் காண்பன் நான், பூணும் அரவா புக்கொளி யூரவி நாசியே, காணுத கண்கள் காட்டவல் லகறைக் கண்டனே. 8

நள்ளாறு தெள்ளா றரத்துறை வாய்எங்கள் நம்பனே, வெள்ளாடை வேண்டாய் வேங்கையின் தோலை விரும்பினாய், புள்ளேறு சோலைப் புக்கொளி யூரிற் குளத்திடை, உள்ளாடப் புக்க மாணியென் னைக்கிழி செய்ததே. 9

நீரேற ஏறும் நிமிர்புன் சடைநின்மல மூர்த்தியைப், போரேற தேறியைப் புக்கொளி யூரவி நாசியைக், காரேறு கண்டனைத் தொண்டன் ஆரூரன் கருதிய, சீரேறு பாடல்கள் செப்பவல் லார்க்கில்லை துன்பமே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: கொங்கு நாடு

சுவாமி: அவிநாசியப்பர்

அம்பிகை: பெருங்கருணை நாயகி

வரலாறு: அவிநாசியில் அந்தணர் குலத்துச் சிறுவன் ஒருவனை முதலை சில ஆண்டுகளுக்குமுன் உண்டதென்று அறிந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், இத்திருப்பதிகம் பாடி, மீண்டும் அச்சிறுவனைத் தக்க வளர்ச்சியுடன் அழைப்பித்தார்.

---

7. மந்தி - பெண் குரங்கு. கடுவன் - ஆண் குரங்கு. சலமும் புட்பமும் இட்டு.

8. பிற தேவரைப் பேணுதொழிந்தேன். பூணும் நாணும் அரவமாக உள்ளவனே.

திருநறையூர்ச் சித்தீச்சரம்

திருச்சிற்றம்பலம்

நீரும் மலரும் நிலவும் சடைமேல்
ஊரும் அரவம் உடையான் இடமாம்
வாரும் அருவி மணிபொன் கொழித்துச்
சேரும் நறையூர்ச் சித்தீச் சரமே. 1

அளைப்பை அரவேர் இடையாள் அஞ்சத்
துளைக்கைக் கரித்தோல் உரித்தான் இடமாம்
வளைக்கைம் மடவார் மடுவில் தடநீர்த்
திளைக்கும் நறையூர்ச் சித்தீச் சரமே. 2

இகழுந் தகையோர் எயில்மூன் றெரித்த
பகழி யொடுவில் உடையோன் பதிதான்
முகிழ்மென் முலையார் முகமே கமலம்
திகழும் நறையூர்ச் சித்தீச் சரமே. 3

மறக்கொள் அரக்கன் வரைதோள் வரையால்
இறக்கொள் விரற்கோன் இருக்கும் இடமாம்
நறக்கொள் கமலந் நனிபள் ளிஎழத்
திறக்கும் நறையூர்ச் சித்தீச் சரமே. 4

முழுநீ றணிமே னியன்மொய் குழலார்
எழுநீர் மைகொள்வான் அமரும் இடமாம்
கழுநீர் கமழக் கயல்சேல் உகளும்
செழுநீர் நறையூர்ச் சித்தீச் சரமே. 5

ஊன்ற ருடைவெண் டலைஉண் பலிகொண்
டானார் அடலே றமர்வான் இடமாம்

---

2. அளை பை அரவு - வளையில் வாழும் படத்தையுடைய பாம்பு. மடவார் நீரில் திளைக்கும்.

3. எயில் - மதில். பகழி - அம்பு. கமலம்போலத் திகழும்.

4. நற - தேன். நனி பள்ளி எழ - உள்ளே உள்ள வண்டு நன்றாகத் துயில் நீங்கும்படியாக.

வானார் மதியம் பதிவண் பொழில்வாய்த்
தேனார் நறையூர்ச் சித்தீச் சரமே. 6

காரூர் கடலில் விடம்உண் டருள்செய்
நீரூர் சடையன் நிலவும் இடமாம்
வாரூர் முலையார் மருவும் மறுகில்
தேரூர் நறையூர்ச் சித்தீச் சரமே. 7

கரியின் உரியுங் கலைமான் மறியும்
எரியும் மழுவும் உடையான் இடமாம்
புரியும் மறையோர் நிறைசொற் பொருள்கள்
தெரியும் நறையூர்ச் சித்தீச் சரமே. 8

பேணா முனிவன் பெருவேள் வியெலாம்
மாணா மைசெய்தான் மருவும் இடமாம்
பாணார் குழலும் முழவும் விழவில்
சேணார் நறையூர்ச் சித்தீச் சரமே. 9

குறியில் வழுவாக் கொடுங்கூற் றுதைத்த
எறியும் மழுவாட் படையான் இடமாம்
நெறியில் வழுவா நியமத் தவர்கள்
செறியும் நறையூர்ச் சித்தீச் சரமே. 10

போரார் புரம்எய் புனிதன் அமரும்
சீரார் நறையூர்ச் சித்தீச் சரத்தை
ஆரூ ரன்சொல் இவைவல் லவர்கள்
ஏரார் இமையோர் உலகெய் துவரே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி : சித்தநாதர்; அம்பிகை: அழகம்மை.

---

6. மதியம் பதிந்த பொழில்.
7. தேர் ஊர் - திருத்தேர் செல்கின்ற.
9. பேணா முனிவன் - தன்னைப் பூசியாத தக்கன். மாணாமை செய்தான் - சிறப்படையாமல் அழியச் செய்தான். பாண் - பாட்டு. சேண் ஆர் - நெடுந்தூரம் முழங்கும்.
10. குறியில் - இன்ன உயிரை இன்னகாலத்தில் கொள்ள வேண்டும் என்ற இலக்கில். நியமம் - விரதம்.

16. பண் - கௌசிகம்

திருச்சோற்றுத்துறை

திருச்சிற்றம்பலம்

அழல்நீர் ஒழுகி அனைய சடையும்
உழையீர் உரியும் உடையான் இடமாம்
கழைநீர் முத்துங் கனகக் குவையும்
சுழல்நீர்ப் பொன்னிச் சோற்றுத் துறையே. 1

பண்டை வினைகள் பறிய நின்ற
அண்ட முதல்வன் அமலன் இடமாம்
இண்டை கொண்டன் பிடைஅறாத
தொண்டர் பரவுஞ் சோற்றுத் துறையே. 2

கோல அரவுங் கொக்கின் இறகும்
மாலை மதியும் வைத்தான் இடமாம்
ஆலும் மயிலும் ஆடல் அளியும்
சோலை தருநீர்ச் சோற்றுத் துறையே. 3

பளிக்குத் தாரை பவள வெற்பில்
குளிக்கும் போல்நூற் கோமாற் கிடமாம்
அளிக்கும் ஆத்தி அல்லால் மதுவம்
துளிக்குஞ் சோலைச் சோற்றுத் துறையே. 4

---

1. நெருப்பில் நீர் ஓடினதுபோன்ற சடையும்; கங்கை யமைந்த சடையாதலின் இங்ஙனம் கூறினார். உழையீர் உரி - மான்தோல். கழைநீர்முத்தும் - மூங்கிலில் உண்டான நல்வியல்பையுடைய முத்தும்.

2. இண்டை - ஒரு வகை மாலை.

3. ஆலும் - ஆடும். ஆடல் - அசைதல்.

4. பளிக்குத்தாரை - பளிங்கின் நீட்சி; இது பூணூலுக்கு உவமை. பவளவெற்பு, சிவபெருமான் திருமேனிக்கு உவமை.

உதையுங் கூற்றுக் கொல்கா விதிக்கு
வதையுஞ் செய்த மைந்தன் இடமாம்
திதையுந் தாதுந் தேனுஞ் ஞிமிறும்
துதையும் பொன்னிச் சோற்றுத் துறையே. 5

ஓதக் கடல்நஞ் சினைஉண் டிட்ட
பேதைப் பெருமான் பேணும் பதியாம்
சீதப் புனல்உண் டெரியைக் காலும்
சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே. 6

இறந்தார் என்பும் எருக்குஞ் சூடிப்
புறங்காட் டாடும் புனிதன் கோயில்
சிறந்தார் சுற்றந் திருவென் றின்ன
துறந்தார் சேருஞ் சோற்றுத் துறையே. 7

காமன் பொடியாக் கண்ஒன் றிமைத்த
ஓமக் கடலார் உகந்த இடமாம்
தேமன் குழலார் சேக்கை புகைத்த
தூமம் விசும்பார் சோற்றுத் துறையே. 8

---

5. கூற்றுக்கு உதையும் விதிக்கு வதையும் செய்த; விதி - பிரமதேவன். திதையும் - சிதறிய. தேன், ஞிமிறு, வண்டின் வகை. துதையும் - பொருந்தும்.

6. பேதைப்பெருமான் - கருணை செய்யுமிடத்துத் தகுதி பாராத பேதைமையை உடைய பெருமான்; அருள்மடம் உடையவன். எரியைக் காலும் சூதப் பொழில் - நெருப்பைக் கொப்புளித்தாற்போலச் செந்நிறத் தளிரைத் தழைக்கச் செய்யும் மாஞ்சோலை.

7. புறங்காடு - மயானம். தமக்கு அன்பு முதலியவற்றாற் சிறந்தவரையும் சுற்றத்தாரையும் செல்வத்தையும் பிற பொருள்களையும் துறந்தவர்கள்.

8. கண்ணொன்று என்றார் நுதற்கண்ணாதலின். தேம்மன் குழலார்; தேம் - வாசனை. சேக்கை - இருப்பிடங்களில். குழலுக்குப் புகையூட்டும்பொருட்டுப் புகைத்தனர்.

இலையால் அன்பால் ஏத்தும் அவர்க்கு
நிலையா வாழ்வை நீத்தார் இடமாம்
தலையால் தாழுந் தவத்தோர்க் கென்றும்
தொலையாச் செல்வச் சோற்றுத் துறையே. 9

சுற்றார் தருநீர்ச் சோற்றுத் துறையுள்
முற்றா மதிசேர் முதல்வன் பாதத்
தற்றார் அடியார் அடிநாய் ஊரன்
சொற்றான் இவைகற் றார்துன் பிலரே. 10

திருச்சிற்றம்பலம்

17. பண் - செந்துருத்தி

திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே, மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி, ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால், வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 1

---

9. இலையால் - பத்திரங்களைக் கொண்டு. நிலையா வாழ்வை நீத்தார் - நிலையாமையை உடைய உலக வாழ்வை நீக்கி நிலை பெற்ற முத்தியின்பத்தை அருள்பவர்.

10. சுற்று ஆர்தரும் நீர் - சுற்றிலும் நிறைந்த நீரை உடைய. முற்று மதி - பிறை.

1. மீளா - பிறரிடம் மீண்டு செல்லாத. வாளாங்கு - சும்மா.

விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட் டேன், குற்றம் ஒன்றுஞ் செய்த தில்லை கொத்தை ஆக்கி னீர், எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப் பட்டீர், மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே. 2

அன்றில் முட்டா தடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே, கன்று முட்டி உண்ணச் சுரந்த காலி யவைபோல, என் றும் முட்டாப் பாடும் அடியார் தங்கண் காணாது, குன் றில் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே. 3

துருத்தி உறைவீர் பழனம் பதியாச் சோற்றுத் துறைஆள்வீர், இருக்கை திருவா ரூரே உடையீர் மனமே எனவேண்டா, அருத்தி உடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால், வருத்தி வைத்து மறுமை பணித்தால் வாழ்ந்து போதீரே. 4

செந்தண் பவளந் திகழுஞ் சோலை இதுவோ திருவா ரூர், எந்தம் அடிகேள் இதுவே ஆமா றுமக்காட் பட் டோர்க்குச், சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணாது, வந்தெம் பெருமான் முறையோ என்றால் வாழ்ந்து போதீரே. 5

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திருவா ரூர்ப்,புனைத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப் புரிபுன் சடையீரே, தனத்தால் இன்றித் தாந்தாம் மெலிந்து தங்

---

2. கொத்தை - குருடு. ஒரு கண் பெற்று மற்றொரு கண் ணைப் பெறுவதற்குப் பாடினமையின் 'மற்றைக்கண்' என்றார்.

3. காலி - பசு. தம் கண் காணாது - தம்முடைய கண் பார்க்கும் தொழிலைச் செய்யாமல்.

4. அருத்தி - அன்பு. வருத்தி வைத்து மறுமை பணித் தால் - இம்மையில் வருத்தத்தை உண்டுபண்ணி வைத்து, மறுமையின்பம் கிடைக்கும்படி கட்டளையிட்டால்.

6. தினைத்தாள் - தினைப்பயிரின் அடி. புனை தார் கொன்றை - புனைதலையுடைய கொன்றை மாலை. தனத்தால் இன்றி - செல்வக் குறைபாட்டால் இன்றி.

கண் காணாது, மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே. 6

ஆயம் பேடை அடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே, ஏயெம் பெருமான் இதுவே ஆமா றுமக்காட் பட்டோர்க்கு, மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக், காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே.

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி, இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழா தேத்துவோம், பழிதான் ஆவ தறியீர் அடிகேள் பாடும் பத்தரோம், வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே. 8

பேயோ டேனும் பிரிவொன் றின்னா தென்பர் பிற ரெல்லாம், காய்தான் வேண்டிற் கனிதான் அன்றோ கருதிக் கொண்டக்கால், நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு, வாய்தான் திறவீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 9

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை இதுவோ திரு வாரூர், பொருந்தித் திருமூ லட்டா னம்மே இடமாக் கொண்டீரே, இருந்தும் நின்றுங் கிடந்தும் உம்மை இகழா தேத்துவோம், வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே. 10

---

7. ஆயம் பேடை அடையும் - ஆண் பறவைக்கூட்டம் பெண் பறவைகளை வந்து அடையும். காயம் - உடம்பு.

8. கலன் - கப்பல். அலமந்து - மனம் சுழன்று.

9. பேயோடு நட்புச்செய்து பிரிந்தாலும் அப் பிரிவு துன்பத்தை உண்டாக்கும் என்பர்.

10. திருமூலட்டானம் - புற்றிடங்கொண்ட நாயகர் எழுந்தருளியுள்ள மூலஸ்தானம்.

காரூர் கண்டத் தெண்டோள் முக்கண் கலைகள் பல வாகி, ஆரூர்த் திருமூ லட்டா னத்தே அடிப்பே ராரூரன், பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர், வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே.

திருச்சிற்றம்பலம்

வரலாறு: திருவொற்றியூரிலிருந்து கண் இரண்டும் இன்றிப் புறப்பட்ட சுந்தரர் திருவேகம்பத்தில் ஒற்றைக் கண் பெற்று, பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாரூரை அடைந்தார் திருக்கோயிலிற் புக்குத் திருமூலட்டானத்தை இறைஞ்சி இப்பதிகம் பாடி மற்றைக் கண்ணும் அருளும்படி வேண்ட, இறைவர் அவ்வாறே கொடுத்தருளினார் (பெரிய. ஏயர்கோன். 308—310.)

---

18. பண் - பஞ்சமம்

திருவாரூர்ப் பரவையுண்மண்டளி

திருச்சிற்றம்பலம்

தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள்
காவாயே கண்டுகொண் டார்ஐவர் காக்கிலும்
நாவாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்
காவாஎன் பரவையுண் மண்டளி அம்மானே. 1

பொன்னானே புலவர்க்கு நின்புகழ் போற்றலாம்
தன்னானே தன்னைப் புகழ்ந்திடுந் தற்சோதி
மின்னானே செக்கர் வானத் திளஞாயி
றன்னானே பரவையுண் மண்டளி அம்மானே. 2

---

1. தூவாயா: துர்வாச முனிவர் பூசித்த மூர்த்தியாதலின் தூவாயர் என்ற திருநாமம் அமைந்தது. ஐவர் - ஐம்பொறிகள். காக்கிலும் - நின்பால் செல்லாமல் தடுத்தாலும். ஆவா என் - அந்தோ என்று இரங்குவாயாக.

2. புலவர்க்குப் பொன்னாக இருப்பவன்.

நாமாறு துன்னையே நல்லன சொல்லுவார்
போமாறென் புண்ணியா புண்ணியம் ஆனானே
பேய்மாறாப் பிணமிடு காடுகந் தாடுவாய்க்
காமாறென் பரவையுண் மண்டளி அம்மானே. 3

நோக்குவேன் உன்னையே நல்லன நோக்காமைக்
காக்கின்றாய் கண்டுகொண் டாரைவர் காக்கினும்
வாக்கென்னும் மாலைகொண் டுன்னை என்மனத்
தார்க்கின்றேன் பரவையுண் மண்டளி அம்மானே. 4

பஞ்சேரும் மெல்லடி யாளையோர் பாகமாய்
நஞ்சேரும் நன்மணி கண்டம் உடையானே
நெஞ்சே நின்னையே உள்கி நினைவாரை
அஞ்சேலென் பரவையுண் மண்டளி அம்மானே. 5

அம்மானே ஆகம சீலர்க் கருள்நல்கும்
பெம்மானே பேரரு ளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூற்புல வாணர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்டளி யம்மானே. 6

விண்டானே மேலையார் மேலையார் மேலாய
எண்டானே எழுத்தொடு சொற்பொருள் எல்லாம்உன்
கண்டானே கண்டனைக் கொண்டிட்டுக் காட்டாயே
அண்டானே பரவையுண் மண்டளி அம்மானே. 7

காற்றானே கார்முகில் போல்வதோர் கண்டத்தெம்
கூற்றானே கோல்வளை யாளைஓர் பாகமாய்
நீற்றானே நீள்சடை மேல்நிறை உள்ளதோர்
ஆற்றானே பரவையுண் மண்டளி யம்மானே. 8

---

4. வாக்கென்னும் மாலை - சொல்மாலை. ஆர்க்கின்றேன் - கட்டுகின்றேன்.

7. விண்டானே - எதன்கண்ணும் சாராமல் நீங்கியிருப்பவனே. மேலானவர்களுக்குள்ளே மேலானவர்களின் மேலான கருத்தாய் இருப்பவனே. எண் - எண்ணம். எழுத்து சொல் பொருள் என்னும் மூன்றும் உன் மூன்று கண்களாக உள்ளன.

8. எம் கூற்றானே - எம் பங்கில் இருப்பவனே; காலகாலனே எனலும் ஆம்.

செடியேன்நான் செய்வினை நல்லன செய்யாத
கடியேன்நான் கண்டதே கண்டதே காமுறும்
கொடியேன்நான் கூறுமா றுன்பணி கூறுத
அடியேன்நான் பரவையுண் மண்டளி யம்மானே. 9

கரந்தையும் வன்னியும் மத்தமுங் கூவிளம்
பரந்தசீர்ப் பரவையுண் மண்டளி அம்மானை
நிரம்பிய ஊரன் உரைத்தன பத்திவை
விரும்புவார் மேலையார் மேலையார் மேலாரே. 10

திருச்சிற்றம்பலம்

வரலாறு: திருவேகம்பத்தில் ஒற்றைக் கண் பெற்று வரும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரை அடைந்து, முதலில் பரவையுண் மண்டளியைத் தரிசித்து இப்பதிகத்தைப் பாடினார் (பெரிய. ஏயர். 301—303.)

திருநனிபள்ளி

திருச்சிற்றம்பலம்

ஆதியன் ஆதிரையன் அயன்மால் அறிதற்கரிய,சோதி
யன் சொற்பொருளாய்ச் சுருங்காமறை நான்கினையும், ஓதி
யன் உம்பர்தங்கோன் உலகத்தினுள் எவ்வுயிர்க்கும், நாதி
யன் நம்பெருமான் நண்ணும் ஊர்நனி பள்ளியதே. 1

---

9. செடியேன் - தீயவனாகிய நான்.

10. மத்தம் : ஊமத்தமலர். கூவிளம் - வில்வம். மேலையாருக்கும் மேலையாருக்கும் மேலானவர்.

1. ஆதிரையன் - திருவாதிரை நட்சத்திரத்துக்கு உரியவன். ஓதியன் - உரைத்தவன். நாதியன் - பற்றுக்கோடாக இருப்பவன்.

உறவிலி ஊனமிலி உணரார்புரம் மூன்றெரியச், செறு
விலி தன்னினைவார் வினையாயின தேய்ந்தழிய, அறவில
கும்அருளான் மருளார்பொழில் வண்டறையும், நறவிரி
கொன்றையினான் நண்ணும் ஊர்நனி பள்ளியதே. 2

வானுடை யான்பெரியான் மனத்தாலும் நினைப்பரி
யான், ஆனிடை ஐந்தமர்ந்தான் அணு வாகியோர் தீயு
ருக்கொண், ஊனுடை இவ்வுடலம் ஒடுங்கிப்புகுந் தான்
பரந்தான், நானுடை மாடெம்பிரான் நண்ணும் ஊர்நனி
பள்ளியதே. 3

ஓடுடை யன்கலனா உடைகோவண வன்உமையோர்,
பாடுடை யன்பலிதேர்ந் துணும்பண்புடை யன்பயிலக்,
காடுடை யன்னிடமா மலைஏழுங் கருங்கடல்சூழ், நாடுடை
நம்பெருமான் நண்ணும்ஊர் நனிபள்ளியதே.

பண்ணற் கரியதொரு படைஆழி தனைப்படைத்துக்,
கண்ணற் கருள்புரிந்தான் கருதாதவர் வேள்விஅவி, உண்
ணற் கிமையவரை உருண்டோட உதைத்துகந்து, நண்ணற்
கரியபிரான் நண்ணும் ஊர்நனி பள்ளியதே. 5

மல்கிய செஞ்சடைமேல் மதியும்அர வும்முடனே,
புல்கிய ஆரணன்எம் புனிதன்புரி நூல்விகிர்தன், மெல்கிய

---

2. எரியும்படியாகச் செற்ற வில்லை யுடையவன்; விலி - வில்லி. தன்னைத் தியானிப்பவர் பாவங்கள் தேய்ந்து அழியவும் அறவும் விளங்குகின்ற திருவருளை உடையவன். மருள் ஆர் - செறிவினால் இருண்டு மயக்கம் நிறைந்த.

3. அமர்ந்தான் - விரும்பியவன். மாடு - செல்வம்.

4. கலனாக ஓட்டை உடையவன். ஓர் பாடு - ஒரு பக்கத்தில்.

5. படை ஆழி - சக்கராயுதம். கண்ணற்கு - கண்ணை அருச்சித்த திருமாலுக்கு. தன்னை எண்ணாத தக்கனைச் சார்ந்தோர் செய்த வேள்வியில் அவியை உண்டதற்காகத் தேவரை உருண்டு ஓடும்படி உதைத்து உகந்தவன்.

விற்றொழிலான் விருப்பன்பெரும் பார்த்தனுக்கு, நல்கிய நம்பெருமான் நண்ணும்ஊர் நனிபள்ளியதே. 6

அங்கமொ ராறவையும் அருமாமறை வேள்விகளும், எங்கும் இருந்தந்தணர் எரிமூன்றவை ஓம்பும்இடம், பங்கய மாமுகத்தாள் உமைபங்கன் உறைகோயில், செங்கயல் பாயும்வயல் திருவூர்நனி பள்ளியதே. 7

திங்கட் குறுங்தெரியல் திகழ்கண்ணியன் நண்ணியனாய், நங்கட் பிணிகளைவான் அருமாமருந் தேழ்பிறப்பும், மங்கத் திருவிரலால் அடர்த்தான்வல் அரக்கனையும்,நங்கட் கருளும்பிரான் நண்ணும் ஊர்நனி பள்ளியதே. 8

ஏன மருப்பினொடும் எழில்ஆமையும் பூண்டுகந்து, வான மதிள்அரணம் மலையேசிலை யாவளைத்தான், ஊனமில் காழிதன்னுள் உயர்ஞானசம் பந்தர்க்கன்று, ஞானம் அருள்புரிந்தான் நண்ணும் ஊர்நனி பள்ளியதே 9

காலமும் நாழிகையுந் நனிபள்ளி மனத்தின் உள்கிக், கோலமதாயவனைக் குளிர்நாவல ஊரன்சொன்ன, மாலை மதித்துரைப்பார் மண்மறந்துவா னோர்உலகில், சாலநல் இன்பம் எய்தித் தவலோகத் திருப்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

நாடு: சோழ நாடு
சுவாமி: நற்றுணையப்பர்; அம்பிகை : பர்வதராசபுத்திரி.

---

6. மல்கிய - நிறைந்த. ஆரணன் - வேதப்பொருளாக உள்ளவன். பெரும்பார்த்தனிடத்தில் மென்மையாகச் செய்த விற்றொழிலை உடையவன்.
7. அங்கம் - சாத்திரம். எரி மூன்று - ஆகவனீயம், தாக்ஷிணாக்கினி, காருகபத்தியம். மூகத்தாளாகிய உமை.
8. ஏழ் பிறப்பிலும் அரிய பெரிய மருந்தாக இருப்பவன்.
9. ஆமை - இங்கே, ஆமை ஓடு.
10. கோலமது ஆயவன் - அழகிய திருக்கோலமாகி நிற்பவன். தவலோகத்து-தவம் செய்தோர் வாழும் சிவலோகத்தில்.

திருநன்னிலத்துப்பெருங்கோயில்

திருச்சிற்றம்பலம்

தண்ணியல் வெம்மையினான் தலையிற்கடை தோறும் பலி, பண்ணியல் மென்மொழியார் இடக்கொண்டுழல் பண்டரங்கன், புண்ணிய நான்மறையோர் முறையால்அடி போற்றிசைப்ப, நண்ணிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 1

வலங்கிளர் மாதவஞ்செய் மலைமங்கையோர் பங்கினனாய்ச், சலங்கிளர் கங்கைதங்கச் சடையொன்றிடை யேதரித்தான், பலங்கிளர் பைம்பொழில்தண் பனிவெண்மதி யைத்தடவ, நலங்கிளர் நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 2

கச்சிய னின்கருப்பூர் விருப்பன்கரு திக்கசிவார், உச்சியன் பிச்சைஉண்ணி உலகங்கள்எல் லாம்உடையான், நொச்சியம் பச்சிலையான் நுரைதீர்புன லால்தொழுவார், நச்சிய நன்னிலந்துப் பெருங்கோயில் நயந்தவனே. 3

பாடிய நான்மறையான் படுபல்பிணக் காடரங்கா, ஆடிய மாநடத்தான் அடிபோற்றிஎன் றன்பினராய்ச்,

---

1. தண் இயல் வெம்மையினான்-தண்ணிய இயல்போடு சேர்ந்த வெம்மையை உடையவன்; முரண்பாடுள்ளனபோல் தோன்றும் இயல்புடையவன் என்றபடி. இயல்பினால் தண்மையாக உள்ளவனேனும் தோற்றத்தால் வெம்மையாக உள்ளவன் எனலும் ஆம். புறவெம்மையும் அகத்தண்மையுமாகிய மறக்கருணைக்கு இருப்பிடமானவன் என்றபடி. கடைதோறும் - வாயில்தோறும். பலி கொண்டு உழல். முறையால் - மரபின்படி; ஆகம நூல்களால் எனலுமாம்.

2. பலம் - பழம்.

3. கசிவார் - அன்பினால் உருகுபவர். நொச்சியாகிய பச்சிலையாலும் தெளிந்த புனலாலும் பூசித்துத் தொழுபவர்; நொச்சி, பஞ்ச வில்வங்களுள் ஒன்று.

சூடிய செங்கையினர் பலதோத்திரம் வாய்த்தசொல்லி, நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 4

பிலந்தரு வாயினொடு பெரிதும்வலி மிக்குடைய, சலந்தரன் ஆகம்இரு பிளவாக்கிய சக்கரமுன், நிலந் தரு மாமகள்கோன் நெடுமாற்கருள் செய்தபிரான், நலந் தரு நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 5

வெண்பொடி மேனியினன் கருநீல மணிமிடற்றன், பெண்படி செஞ்சடையான் பிரமன்சிரம் பீடழித்தான், பண்புடை நான்மறையோர் பயின்றேத்திப்பல் காலவ ணங்கும், நண்புடை நன்னிலத்துப் பெருங்கோயில் நயந் தவனே. 6

தொடைமலி கொன்றைதுன்றுஞ் சடையன்சுடர் வெண்மழுவாட், படைமலி கையன்மெய்யிற் பகட்டீருரிப் போர்வையினன், மடைமலி வண்கமலம் மலர்மேல்மட வன்னம் மன்னி, நடைமலி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 7

குளிர்தரு திங்கள்கங்கை குரவோடரக் கூவிளமும், மிளிர்தரு புன்சடைமேல் உடையான்விடை யான்விரை சேர், தளிர்தரு கோங்குவேங்கை தடமாதவி சண்பகமும், நளிர்தரு நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 8

---

4. சூடிய - தலைமேற் குவித்த.

5. பிலந்தருவாய் - குகையைப்போன்ற ஆழமான வாய். சலந்தரனை அறுத்த சக்கரத்தைத் திருமாலுக்கு அருளியவன். நிலமகளுக்கும் மாமகளுக்கும் கோன்.

6. பெண்படி - கங்கைதங்கிய.

7. பகட்டு ஈர்உரிப் போர்வையினன் - யானையினது ஈர மான தோலைப் போர்வையாக உடையவன். கமலம் மலர்: செய்யுள் விகாரம்.

8. அர - பாம்பு. நளிர்தரு - குளிர்ச்சியைத் தருகின்ற.

கமர்பயில் வெஞ்சுரத்துக் கடுங்கேழற்பின் கானவ
னாய், அமர்பயில் வெய்திஅருச் சுனனுக்கருள் செய்தபி
ரான், தமர்பயில் தண்விழவில் தருசைவர் தவத்தின் மிக்க,
நமர்பயில் நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 9

கருவரை போல்அரக்கன் கயிலைம்மலைக் கீழ்க்கதற,
ஒருவிர லால்அடர்த்தின் னருள்செய்த உமாபதிதான்,
திரைபொரு பொன்னிநன்னீர்த் துறைவன்திகழ் செம்பி
யர்கோன், நரபதி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்
தவனே. 10

கோடுயர் வெங்களிற்றுத் திகழ்கோச்செங்க ணான்
செய்கோயில், நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்
தவனைச், சேடியல் சிங்கிதந்தை சடையன்திரு வாரூரன்,
பாடிய பத்தும்வல்லார் புகுவார்பர லோகத்துளே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாகேச்சரம்

திருச்சிற்றம்பலம்

பிறையணி வாள்நுதலாள் உமையாளவள் பேழ்க
ணிக்க, நிறையணி நெஞ்சனுங்க நீலமால்விடம் உண்ட
தென்னே, குறையணி குல்லைமுல்லை அளைந்துகுளிர் மாதவி
மேல்,சிறையணி வண்டுகள்சேர் திருநாகேச் சரத்தானே. 1

---

9. கமர் - வெடிப்பு. கேழல் - பன்றி. கானவனாய் - வேடுவனாகி.

10. பொன்னி - காவிரி. செம்பியர் கோன் - கோச்செங்கட் சோழன்.

11. சேடு - பெருமை.

1. பேழ்கணிக்க - அஞ்ச. அனுங்க - வருந்த. குல்லை - கஞ்சங்குல்லை; துளவமும் ஆம்.

அருந்தவ மாமுனிவர்க் கருளாகியோர் ஆலதன்கீழ், இருந்தற மேபுரிதற் கியல்பாகிய தென்னைகொலாம், குருந் தய லேகுரவம் அரவின்னெயி றேற்றரும்பச், செருந்தி செம் பொன்மலருந் திருநாகேச் சரத்தானே. 2

பாலனு தாருயிர்மேற் பரியாது பகைத்தெழுந்த காலனை வீடுவித்துக் கருத்தாக்கிய தென்னைகொலாம், கோல மலர்க்குவளைக் கழுநீர்வயல் சூழ்கிடங்கில், சேலொடு வாளைகள்பாய் திருநாகேச் சரத்தானே. 3

குன்ற மலைக்குமரி கொடியேரிடை யாள்வெருவ, வென்றி மதகரியின் உரிபோர்த்ததும் என்னைகொலாம், முன்றில் இளங்கமுகின் முதுபாளை மதுவளைந்து, தென்றல் புகுந்துலவுந் திருநாகேச் சரத்தானே. 4

அரைவிரி கோவணத்தோ டரவார்த்தொரு நான் மறைநூல், உரைபெரு கவ்வுரைத்தன் றுகந்தருள் செய்த தென்னே, வரைதரு மாமணியும் வரைச்சந்தகி லோடும் உந்தித், திரைபொரு தண்பழனத் திருநாகேச் சரத் தானே. 5

தங்கிய மாதவத்தின் தழல்வேள்வியி னின்றெழுந்த, சிங்கமும் நீள்புலியுஞ் செழுமால்கரி யோடலறப், பொங் கிய போர்புரிந்து பிளந்தீருரி போர்த்ததென்னே, செங்க யல் பாய்கழனித் திருநாகேச் சரத்தானே. 6

நின்றஇம் மாதவத்தை ஒழிப்பான்சென் றணைந்து மிகப், பொங்கிய பூங்கணைவேள் பொடியாக விழித்த லென்னே, பங்கய மாமலர்மேல் மதுஉண்டுவண் டேன்

---

2. குரா அரும்புக்குப் பாம்பின் பல் உவமை.
3. பாலன் - மார்க்கண்டேயர். பரியாது - இரங்காமல்.
4. முன்றில் - சோலையின் முன்னிடத்தில் உள்ள.
5. மணி - வயிரம். சந்து - சந்தனம்.
6. வேள்வி - தாருகாவனத்து முனிவர் செய்த யாகம்.
7. பூங்கணை வேள் - மலராகிய அம்பையுடைய காமன். தேன் - வண்டு.

முரலச், செங்கயல் பாய்வயல்சூழ் திருநாகேச் சரத் தானே. 7

வரியர நாணதாக மாமேரு வில்லதாக, அரியன முப் புரங்க ளவைஆரழல் மூட்டல்என்னே, விரிதரு மல்லி கையும் மலர்ச்சண்பக மும்மளைந்து, திரிதரு வண்டுபண் செய் திருநாகேச் சரத்தானே. 8

அங்கியல் யோகுதன்னை அழிப்பான்சென் றணைந்து மிகப், பொங்கிய பூங்கணைவேள் பொடியாக விழித்தல் என்னே, பங்கய மாமலர்மேல் மதுவுண்டுபண் வண்டறை யச், செங்கயல் நின்றுகளுந் திருநாகேச் சரத்தானே. 9

குண்டரைக் கூறைஇன்றித் திரியுஞ்சமண் சாக்கியப் பேய், மிண்டரைக் கண்டதன்மை விரவாகிய தென்னை கொலோ, தொண்டிரைத் துவணங்கித் தொழில்பூண்டடி யார்பரவும், தெண்டிரைத் தண்வயல்சூழ் திருநாகேச் சரத்தானே. 10

கொங்கணை வண்டரற்றக் குயிலும்மயி லும்பயிலும், தெங்கணை பூம்பொழில்சூழ் திருநாகேச் சரத்தானை,வங்கம் மலிகடல்சூழ் வயல்நாவலா ரூரன்சொன்ன, பங்கமில் பாடல்வல்லா ரவர்தம்வினை பற்றறுமே. 11

திருச்சிற்றம்பலம்

நாடு : சோழ நாடு

சுவாமி: சண்பகாரணியேசுவரர்

அம்பிகை: குன்றமுலையம்மை

---

8. வரி அர நாணதாக - கோடுகளை உடைய பாம்பு நாண் கயிறாக.

10. குண்டு - தாழ்வையுடைய. அரைக்கூறையின்றி - இடையிலே ஆடையுமில்லாமல். தொண்டு - தொண்டர்கள். இரைத்து - முழங்கி.

11. கொங்கு - பூந்தாது. தெங்கு - தென்னை. வங்கம் - கப்பல். வயல்கள் கப்பல் மலிந்த கடலை நினைக்கச் செய்கின் றன. பரப்பும் நீர்வளமும் இத்தகையன என்றபடி.

திருநொடித்தான்மலை

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே, நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து, வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து, ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே. 1

ஆனை உரித்தபகை அடியேனொடு மீளக்கொலோ, ஊனை உயிர்வெருட்டி ஒள்ளியானை நினைந்திருந்தேன், வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை ஏறவைக்க, ஆனை அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 2

மந்திரம் ஒன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன், சுந்தர வேடங்களால் துரிசேசெயுந் தொண்டன் எனை, அந்தர மால்விசும்பில் அழகானை அருள்புரிந்த, துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே. 3

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப்பட், டாழ முகந்தஎன்னை அதுமாற்றி அமரரெல்லாம், சூழ அருள்புரிந்து தொண்டனேன் பரம்அல்லதொரு, வேழம் அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 4

---

1. வான் - தேவலோகத்தார். ஊன் உயிர் வேறு செய்தான் - ஊனையும் உயிரையும் வேறாக்கினான். நொடித்தான் மலை - கைலயங்கிரி.

2. ஆனையை முன்பு உரித்த பகை என்னால் நீங்கும் பொருட்டோ எனக்கு யானையை அருளி அதன்மேல் ஊர்ந்து தன்பால் வரச் செய்தான்.

3. அழகிய கோலங்கள் பூண்டு அவற்றால் குற்றத்தையே செய்த. அழகையுடைய யானை. அருள் புரிந்ததும் தரமோ - அருள் செய்த செயலும் என் தகுதிக்கு ஏற்றதோ.

4. தொண்டனேன் பரம் அல்லதொரு வேழம் - தொண்டனாகிய என்னால் தாங்குதற்குரியதல்லாத பெரு மதிப்பையுடைய யானையை.

மண்ணுல கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடி
யார், பொன்னுல கம்பெறுதல் தொண்டனேன்இன்று
கண்டொழிந்தேன், விண்ணுல கத்தவர்கள் விரும்ப
வெள்ளை யானையின்மேல், என்னுடல் காட்டுவித்தான்
நொடித்தான்மலை உத்தமனே. 5

அஞ்சினை ஒன்றிநின்று அலர்கொண்டடி சேர்வறியா,
வஞ்சனை என்மனமே வைகிவானநன் னாடர்முன்னே, துஞ்
சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன்பரம் அல்லதொரு,
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 6

நிலைகெட விண்அதிர நிலம்எங்கும் அதிர்ந்தசைய,
மலையிடை யானைஏறி வழியேவரு வேன்எதிரே, அலைகட
லால்அரையன் அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச, உலை
யணை யாதவண்ணம் நொடித்தான்மலை உத்தமனே. 7

அரவொலி ஆகமங்கள் அறிவார்அறி தோத்திரங்கள்,
விரவிய வேதஒலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப,
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர், சிர
மலி யானைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 8

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்,
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை அருள்புரிந்து,
மந்திர மாமுனிவர் இவனார்என எம்பெருமான், நந்தமர்
ஊரனென்றான் நொடித்தான்மலை உத்தமனே. 9

---

6. அஞ்சினை ஒன்றி - ஐம்பொறிகளோடு சேர்ந்து. அலர் கொண்டு - அருச்சிப்பதற்குரிய மலர்களைக் கைக்கொண்டு அலர் கொண்டு சேர்தலை அறியாத. அலர் - பழியுமாம். நின்று கொண்டு அறியா எனக் கூட்டுக. துஞ்சுதல் - இறத்தலை.

7. அலைகடல் ஆளுகின்ற அரையன்; வருணன். உலை - அழிவு.

8. அர ஒலி - ஹரஹர என்ற முழக்கம். ஏறுவதோர் சிரம்மலி - ஏறுவதற்குரிய தலை பெரிதாக உள்ள.

ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன்னொடித் தான்மலையைச், சூழிசை யின்கரும்பின் சுவைநாவல ஊரன் சொன்ன, ஏழிசை இன்றமிழால் இசைந்தேத்திய பத்திவையும், ஆழி கடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே. 10

திருச்சிற்றம்பலம்

வரலாறு: சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவஞ்சைக்களத் திருக்கோயிற்குச் சென்று தரிசித்துப் புறம்போத, சிவபெருமானது ஏவலால் சிவகணங்களும் தேவர்களும் வெள்ளையானை ஒன்றைக் கொணர்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஏற்றிக் கொண்டு கைலாயத்துக்கு அழைத்துச் சென்றனர். அப்போது பாடிய திருப்பதிகம் இது.

ஏழாந் திருமுறை முற்றுப் பெற்றது.

---

10. கடலரையா - வருணனே. அஞ்சையப்பர் - சேரமான் பெருமாள் நாயனார். அறிவிப்பது - அறிவிக்க; வியங்கோள்.

திருச்சிற்றம்பலம்

பாட்டு முதற்குறிப்பகராதி

அகத்தடிமை	23
அங்கங்களு	185
அங்கத்துறு	209
அங்கம்ஆறு	162
அங்கம்ஓதி	85
அங்கம்மொழி	208
அங்கமொ	250
அங்கியல்	255
அங்கையின்	50
அஞ்சாதே	38
அஞ்சினார்க்	123
அஞ்சினை	257
அஞ்சுங்கொண்	45
அட்டன்னமூ	209
அடல்விடை	186
அடிகேள்	6
அடுதலையே	57
அண்டகபா	56
அண்டத்தண்	30
அணிகொள்	170
அந்தணாளன்	140
அந்தம்இல்லா	212
அந்திதிரிந்	111
அந்தியும்நண்	215
அப்போதுவந்	207
அம்மானே	247
அயலவர்பரவ	151
அயனோடன்	70
அரக்கன்ஆற்ற	163
அரக்கன்முடி	53
அரங்காவதெல்	237
அரவோர்அல்	78
அரவொலி	257
அரித்தநம்பி	165
அரித்துநம்மேல்	18
அரியொடுபூ	113
அருத்தம்	190
அருந்தவமா	254
அரும்பார்ந்த	33
அருமணியை	102
அருமலரோன்	22
அருவிபாய்	199
அரைக்குஞ்	158
அரையார்	67
அரைவிரி	254
அல்லல்உள்ள	145
அலையார்தண்	68
அழல்நீர்	241
அழிப்பர்ஐவர்	156
அழுக்குமெய்	136
அளைப்பை	238
அற்றவனார்	49
அறிவினால்	142
அறுபதும்	20
அறையும்	228
அன்றயன்சி	169
அன்றாலின்	69
அன்றில்முட்	244
அன்றுவந்	162
அன்னஞ்சே	90
அன்னம்மன்னு	106
அன்னையே	35
ஆக்கும்அழிவும்	11
ஆசைபலஅறு	191
ஆட்டான்	54
ஆடிஅசைந்	110
ஆடுமின்	56
ஆத்தம்என்	162

ஆதியன் ஆதி 248
ஆயம்பேடை 245
ஆர்த்தவர் 50
ஆர்த்தாய் 59
ஆரூர் அத்தா 120
ஆலந்தான் 158
ஆவியைப்போ 70
ஆழியனாய் 174
ஆழியாற்க 197
ஆறணிநீள் 216
ஆறுகந்தார் 50
ஆனை உரித்த 256
ஆனைக்குலம் 207
இகழுந்தகை 239
இங்ஙனம்வந் 130
இட்டனும் 122
இட்டிதாக 80
இடையறி 230
இண்டைம 41
இத்தனையா 70
இந்திரன் 257
இந்திரனுக்கும் 49
இமையோர் 65
இயக்கர்கின் 141
இரவத்திடு 11
இரவிநீள் 170
இரும்புயர்ந்த 101
இலங்கையர் 43
இலங்கைவே 179
இலவவிதழ் 117
இலைகொள் 91
இலைமலிந்த 97
இலையால் 243
இழித்துகந் 16
இழைக்கும் 10
இழைதழுவு 102
இழைவளர் 110
இளைப்பறியீ 110
இறங்கிச்செ 211
இறந்தார்என் 242
இறைகளோ 20
இறைவனை 112
இன்பம்உண்டே 19
ஈழநாட்டு 31
ஈன்றுகொ 138
உங்கைகளா 57
உதிரநீர் 21
உதையுங்கூ 242
உம்பரார்கோ 46
உம்பரான் 49
உம்பரும்வா 62
உய்த்தாடித் 233
உரமென்னும் 223
உரவம்உள்ள 197
உரைப்பார்உரை 237
உலவும்முகிலிற் 8
உழக்கே 204
உற்றபோத 35
உற்றவர்க்கு 158
உற்றனன் 115
உற்றார்சுற் 55
உற்றான்நமக் 213
உறவிலி ஊன 249
ஊட்டிக்கொண் 48
ஊர்தொறும் 221
ஊர்வதோர் 142
ஊருமாதேச 194
ஊழிதோறா 258
ஊறிவாயின 77
ஊறுநம்பி 165
ஊன்மிசை 20
ஊனங்கத்து 173
ஊனத்துறு 209
ஊனம்ஆல்லா 211
ஊனாய் உயிர் ஆனாய் 2
ஊனாய் உயிர்புக 212
ஊனாருடை 239
ஊனை உற்று 228
ஊனைப்பெருக் 105
எங்கேபோவேன் 200

எங்கேனும்இருக் 58
எங்கேனும்போ 237
எட்டுகந்தார் 51
எண்ணவன் 114
எண்ணார்தங் 133
எண்ணி இரு 28
எத்திசையுந் 111
எந்தம்அடிகள் 12
எந்தைஇருப் 191
எந்தையை 147
எம்பெருமான் 53
எம்மான்எந்தை 134
எம்மான்எம்மனையென்றவ 55
எம்மான்எம்மனை
யென்றனக் 60
எயிலார் 224
எரியார்புன் 69
எல்லையில் 123
எவ்வெவர் 175
எள்கல் இன்றி 160
எள்விழுந்திட 84
எற்றான்மற 236
எற்றேநினை 129
எறிக்குங்கதி 107
எறிந்தசண் 228
என்பினையே 95
என்னதெழி 235
எனக்கினித் 187
ஏசற்றுநீ 128
ஏசின அல்ல 37
ஏடுலாமலர் 89
ஏடுவான் இளந் 123
ஏத்தாதிருந்த 64
ஏதநன்னிலம் 140
ஏரார்முப்பு 62
ஏராரும் 232
ஏரிக்கனக 110
ஏலம்இலவங்க 8
ஏழிசையா 131
ஏழைமாறுட 157
ஏற்றார்புரம் 2
ஏன்ற அந்தண 176
ஏனக்கொம் 48
ஏனத்திரள் 207
ஏனமருப்பி 250
ஐயனை அத்த 115
ஐவகையர் 157
ஐவணமாம் 130
ஐவாய்அர 39
ஒக்கமுப்புரம் 172
ஒட்டிஆட் 155
ஒப்பிலாமு 183
ஒருமேகமு 100
ஒருமையே 37
ஒழிப்பாய் 59
ஒற்றியூரும் 236
ஒற்றியூரெ 78
ஒறுத்தாய் 59
ஒன்றலா உயிர் 168
ஒன்றினீர்க 80
ஓடுடையன்கல 249
ஓதக்கடல் 242
ஓதம்வந்துல 139
ஓர்ந்தனன் 114
ஓரூர்என்று 155
ஓவணமேல் 14
ஓவுநாள் 122
கங்கைதங்கி 137
கங்கைவார் 182
கச்சியணின் 251
கச்சேர்அர 104
கச்சேர்பாம் 38
கச்சையூர் 76
கட்டக்காட்டி 48
கட்டமும்பிணி 152
கட்டனேன்பிற 137
கட்டுமயக்க 27
கடங்களூர் 76
கடமாகளி 108
கடல்சூழ்ந்த 99

கடிக்கும்அர	25	கற்றுனுங்	234
கடிதாய்க்க	77	கற்றிலாதா	84
கடியேன்கா	65	கற்றுளவான்	131
கடுத்தவன்	57	கறிமாமிளகும்	7
கடுவரிமாக்	215	கறைக்கண்ட	99
கண்டமுங்க	144	கறையார்க	210
கண்ணாய்	61	கன்னலைஇன்	220
கண்ணுதலாற்	231	காட்டூர்க்கட	119
கணைசெந்தீ	196	காடில்ஆடிய	144
கதிர்க்கொள்	202	காடும்மலையு	108
கந்தங்கமழ்	32	காபேட்ல்மிக	78
கம்பமருங்	230	காண்டவன்	114
கம்பமால்களி	142	காண்டனன்	113
கமர்பயில்	253	காண்டுகம்பி	166
கரக்கும்கம்பி	166	காணிபேற்	82
கரந்தைகூ	199	காதல்செய்து	106
கரந்தையும்	248	காதலாலே	16
கரியகறைக்	209	காதுபொத்	171
கரியமனச்	113	காமன்பொடி	242
கரியானை உரி	154	காய்சின	113
கரியின் உரி	240	காய்ந்தவன்	114
கருக்ககஞ்சமு	76	காயும்புலியி	135
கருங்கடக்க	187	கார்க்குன்ற	115
கருதுநீமன	127	கார்க்கொள்	201
கருமானின்	233	காரார்கடலி	136
கருமையார்	233	காராரும்	70
கருவரை	253	காருலாவிய	88
கரையுங்கட	189	காரூர்கடலில்	240
கல்லேனல்	38	காரூர்கண்டத்	246
கல்வாய் அகிலும்	6	காரூர்புனல்	3
கலவமயில்	236	காரூர்மழை	25
கலியேன்	39	காரூரும்பொ	66
கலிவலங்கொ	176	காலமும்ஞாயி	51
கலைமலிந்த	75	காலமும்காழி	250
கவ்வைக்கடல்	213	காவிரிபுடை	226
கழியாய்க்கட	245	காளையாகி	148
கழுதைகுங்கு	155	காற்றுனே	247
கள்ளிநீ	86	காற்றுத்தீப்பு	163
களங்கள் ஆர்	199	கீளார்கோவ	60
கற்பகத்தி	178	குடம்எடுத்து	16

குண்டரைக்	255	கைம்மாஉரி	121
குண்டலங்கு	150	கையதுகபாலம்	36
குண்டலந்தி	159	கையார்வெஞ்	55
குண்டாடிச்	39	கையொர்பா	90
குண்டாடியு	186	கொங்கணைசுரும்	187
குண்டிகைப்	188	கொங்கணைவண்	255
குரக்கினங்குதி	226	கொங்கார்ம	109
குரவம்நாறக்கு	92	கொங்கிற்கு	120
குரவம்நாறிய	89	கொங்குநுழை	26
குரவமருங்	53	கொங்கையார்	226
குரவுகொன்றை	17	கொடிகளி	26
குருகுபாய	91	கொடியுடை	23
குருதிசோர	19	கொடுக்ககிற்	157
குரும்பைமு	41	கொடுகுவெ	124
குழலைவென்	31	கொடுமழு	187
குழைத்துவங்	36	கொண்டாடு	214
குளங்கள்பல	107	கொத்தார்	135
குளிர்தருதிங்	252	கொதியினால்	183
குற்றந்தன்	157	கொந்தணவும்	63
குற்றநம்பி	165	கொம்பனநுண்	216
குற்றம்ஒன்	143	கொம்மைப்	204
குற்றொருவ	86	கொய்யாமலர்	33
குறவனார்தம்	48	கொல்லும்மூ	143
குறியில்வழு	240	கொல்லுமால்	193
குறைவிலாநி	183	கொல்லைவளம்	53
குன்றமலைக்	254	கொல்லைவிடை	218
குனிவினிய	102	கொள்ளிவா	129
கூசம்நீக்கிக்	19	கொன்றுசெய்	210
கூசிஅடியா	202	கோட்டங்கொ	46
கூடலர்மன்	49	கோடரம்ப	164
கூடலையாற்	222	கோடுநான்	171
கூடாமன்ன	40	கோடுயர்கோங்	7
கூடிஅடியா	203	கோடுயர்வெங்	253
கூடிக்கூடி	13	கோணல்	80
கூடியஇல	180	கோணியபி	144
கூடிஒய்மலை	139	கோத்திட்டை	3
கூடும்அன்னப்	92	கோதிலாஅ	184
கூடுமாறுள்	192	கோலஅரவு	241
கூதல்இடுஞ்	217	கோலமால்வ	141
கூறுநடைக்	26	கோவலன்	45

கோளாளிய்	5
சக்ரவாளத்தி	91
சங்கலக்குந்	130
சங்கேந்து	74
சங்கைப்பட	185
சங்கையவர்	27
சடசடவிடு	188
சந்தணவும்	221
சந்தம்பல	190
சந்தனவே	180
சந்தார்வெ	67
சந்சாருங்கு	61
சன்னைவெள்	198
சாதலும்பிறத்	149
சாந்தமாக	126
சாரணன்த	124
சாலக்கோ	104
சிகரத்திடை	185
சிகரம்முகத்தில்	8
சிங்கத்துரி	5
சித்தம்நீநினை	127
சிந்தித்தெழு	10
சிந்தித்தென்றும்	160
சிம்மாந்து	72
சிலைத்து	88
சிலையால்முப்	67
சீரின்மிகப்	30
சுடுவார்பொடி	208
சுரும்பார்	59
சுற்றூர்தருநீர்	243
சுற்றுமுற்று	92
சுற்றுமூர்சு	76
சூழ்ஒளிநீர்	216
சூழும்ஓடிச்	91
செங்கண்மேதி	225
செஞ்சேல்	65
செட்டிவின்	111
செடிகொள்ஆக்	18
செடிகொள்நோய்	74
செடித்தவஞ்	35
செடிபடத்	57
செடியேன்தீ	58
செடியேன்நான்	248
செண்டாடும்	64
செத்தபோதினில்	153
செந்தண்பவள	244
செந்தமிழ்த்	89
செந்நெலங்க	200
செப்பரிய	130
செம்பொன்	177
செம்பொனேர்	123
செய்யார்கமல	34
செய்யார்மே	67
செய்வினை	230
செருக்குவா	101
செருந்திசெம்	245
செருமேவு	41
செழுமலர்க்	151
செற்றவர்மு	218
செறிந்தசோ	179
செறிவுண்டே	153
செறுவினிற்	84
சென்றபுரங்க	236
சென்றிலிடை	111
சேந்தர்தாய்	94
சேரும்புகழ்த்	51
சைவத்தசெவ்	214
சொல்லரும்	181
சொல்விடல்	20
சொல்விற்குலா	189
சொல்லுவதென்	52
சொல்லைநம்பி	166
தக்கைதண்	90
தங்கியமாத	254
தஞ்சம்என்று	177
தஞ்சொலார்	22
தட்டெனுங்	112
தடங்கையா	146
தண்கமலப்	44
தண்டமுடைத்	27

தண்டேர்மழு	213
தண்ணார்மதி	2
தண்ணார்மா	223
தண்ணியல்	251
தண்புனலும்	44
தந்தைதாய்	196
தந்தையாரு	19
தம்மானை அறி	93
தம்மையே	82
தயங்குதோ	125
தரிக்குந்தரை	23
தலைக்கலன்	145
தலைக்குத்தலை	9
தலையிடை	51
தழலும்மேனி	31
தளிசாலைகள்	205
தளிர்போல்	66
தன்மையினால்	45
தன்னில்ஆசறு	168
தனியன்என்	189
தாங்கூர்பிணி	121
தாயவளாய்த்	46
தாரமாகிய	196
தாருந்தண்	113
தாழ்வெனுந்	21
தானெனைமுன்	256
திகழும்மாலவ	172
திங்கட்குறுந்	250
திங்கள்தங்கி	159
திங்கள்தங்கு	13
திங்கள்நம்பி	164
திங்களார்திரு	76
திண்டேர்நெடு	8
திரியும்புரம்நீ	207
திரியும்முப்புரஞ்செ	176
திரியும்முப்புரம்தீ	159
திரிவனமும்	57
திருத்திணைநக	150
திருந்தநான்	148
திருந்தாதவா	95
திருநின்ற	97
திருவின்நாயக	147
திருவுடை	28
திருவும்மெய்	179
திருவும்வண்	169
திரையினார்	103
தில்லைவாழ்	96
திணைத்தாள்	244
துஞ்சியும்	87
துணிப்படும்	36
துணிவார்	135
துருத்திஉறை	244
துருத்திச்சுட	121
துளைவெண்	108
துன்னுவார்	143
தூசுடைய	118
தூண்டாவிள	132
தூயநீர்	229
தூயவர்கண்	89
தூர்த்தர்	198
தூவாயா	246
தூறன்றி	112
தெருண்ட	172
தெள்ளிப	29
தென்னாத்	5
தென்னார்	31
தேங்கூருந்	31
தேசனார்வி	77
தேடுவன்	115
தேவியம்பொ	103
தேனலங்கொ	92
தேனெய்புரி	26
தேனை ஆடி	147
தேனை ஆடு	80
தேனைக்கா	121
தையலாருக்	84
தொக்காயம	128
தொடைமலி	252
தொண்டர்அடித்	217
தொண்டர்கள்	110

தொண்டர்தம	219
தொழுவார்க்	108
தொறுவில்	198
தோடுகாதி	143
தோற்றம்	18
நஞ்சியிடை	109
நடையுடை	29
நத்தார்புடை	208
நம்பனே	181
நம்பினார்க்க	227
நமணநந்தி	81
நமர்பிறர்	191
நமைஎலாம்	169
நரம்பினோ	21
நரிதலைகவ்	112
நரிபுரிகாடர	188
நரியார்தங்	233
நரைகள்போ	83
நரைப்புமூப்	156
நரைவிரவிய	185
நல்லநினைப்	215
நல்லாரவர்	208
நல்லிசைஞான	175
நலம்இலாதானை	83
நலம்பெரியன	186
நள்ளாறு	238
நற்றமிழ்வல்ல	140
நறைசேர்	135
நாச்சிலபேசி	35
நாடுடையநாத	234
நாத்தான்	174
நாத்தானும்	237
நாதனுக்கூர்	47
நாதனைநாத	21
நாமாருதுன்	247
நாயேன்பல	1
நாவின்மிசை	206
நாளார்வந்த	61
நாளும்இன்னிசை	163
நாளும்நன்னி	31
நாற்றானத்	49
நாறுசெங்கழு	225
நானுடைமா	217
நானேல்உன்	55
நிணம்படும்	36
நித்தமாகநி	92
நில்லாய்மன	128
நிலனுடை	29
நிலனேநீர்வ	68
நிலைகெடவிண்	257
நிலையாய்நின்	55
நிற்பானும்	42
நிறைக்காட்	120
நிறையனார்	76
நின்றஇம்	254
நின்றவினைக்	215
நினைதருபாவ	151
நீடுபொக்கை	169
நீடுவாழ்பதி	81
நீதியில்ஒன்	190
நீரும்மலரும்	239
நீரூர்தருநி	214
நீரூரும்	9
நீரேற	238
நீலவண்ட	196
நீளநின்று	211
நீளநினைந்தடி	52
நீற்றாரும்மே	73
நீறணிமே	187
நீறார்மேனி	66
நீறுதாங்கிய	167
நீறுநுந்திரு	89
நெடியான் நான்	63
நெடியானொடு	79
நெண்டிக்கொண்	191
நெய்யும்	12
நெற்றிக்கண்	223
நெறியும்அறிவு	190
நெறியேநின்	61
நொந்தா	54

நோக்குவேன்	247
நோயனைத்	83
பசுக்களே	125
பஞ்சேரும்	247
படங்கொள்	15
படப்பாற்றன்	39
படமாடு	46
படவரவு	126
படிசெய்நீர்	81
படுவிப்பாய்	71
படைக்கட்	146
படைகள்	16
படைத்தாய்	59
படையார்மழு	235
படையார்வெண்	65
படையெலா	86
பண்டரீயன	87
பண்டாழின்	75
பண்டேயின்	61
பண்டையமால்	53
பண்டைவி	241
பண்ணற்கரி	249
பண்ணிடை	71
பண்ணின்தமி	205
பண்ணுதலைப்	218
பண்ணுளீரா	16
பண்ணோர்மொ	107
பண்மயத்த	119
பணங்கொள்	235
பணிந்தபார்த்	229
பத்தர்சித்தர்	134
பத்தராய்ப்	99
பத்தாபத்	63
பத்திமையு	129
பத்தூர்புக்	116
பதியுஞ்சுற்	85
பந்தம்வீடிவை	228
பந்தித்த	175
பந்துங்கிளியும்	235
பரசாருங்கர	63
பரந்தபாரிடம்	229
பரவும்பரிசொ	200
பரிந்தசுற்றமு	168
பருத்தாள்வன்	59
பல்லடியார்	174
பல்லில்வெள்	212
பல்லுயிர்	58
பவளக்கனி	235
பழகாநின்று	201
பழிக்கும்	24
பழிசேரில்புக	60
பளிக்குத்தா	241
பற்றிவரை	236
பறக்குமெங்கி	91
பறியேசுமந்	204
பறைக்கண்	24
பறையாதவ	74
பறையுங்குழ	78
பாட்டசுத்தி	162
பாட்டும்பாடி	235
பாடார்ந்தன	33
பாடியநான்ம	251
பாடுமாபாடிப்	175
பாடுவன்பாடு	114
பாடுவார்பசி	70
பாதம்பணி	2
பாதியோர்	52
பார்நிலவு	231
பாரார்விண்	67
பாரூர்பல்லவ	56
பாரூர்பலபுடை	186
பாரூர்மலி	79
பாரூரும்அரவல்	234
பாரூரும்பன	224
பாரோடு	6
பாலனதாரு	254
பாவமேபுரிந்	167
பாறணிமு	188
பாறுதாங்கி	79
பிடிக்குக்க	12

பிடித்தாட்டி	10	பேரும்	132
பிணிகொள்	167	பேரோராயி	145
பிணிவண்ண	5	பேழ்வாய்	133
பித்தரை	49	பேறனூர்	77
பித்தாபிறை	1	பைத்தபட	27
பிலந்தருவாயி	252	பொடியாடு	129
பிழைகள்திரத்	212	பொடியார்	68
பிழைத்தபி	201	பொடியேறு	74
பிழையுளன	230	பொதியேசுமந்	205
பிறவாய்இறவா	105	பொய்த்தன்மை	21
பிறையணி	253	பொய்ம்மை	14
பிறையாருஞ்சடைஎ	64	பொய்யடிமை	98
பிறையாருஞ்சடையாய்	68	பொய்யர்கண்	18
பின்னைநம்பும்	166	பொய்யவன்	65
பீறற்கூறை	125	பொய்யாத	74
புகழுமாசந்த	193	பொய்யாநா	60
புரமவை	187	பொய்யேஉன்	105
புரிசைமூன்	228	பொய்யே செய்து	132
புல்வியிடங்	27	பொரும்பல	43
புலங்களை	194	பொருவனூர்	197
புலியூர்ச்சிற்	121	பொல்லாப்	4
புலைகள்திரத்	211	பொழிந்திழி	193
புற்றுடரவம்	7	பொள்ளல்இவ்	153
புற்றில்வாளர	161	பொறியுமா	193
புறந்திரைந்	86	பொன்செய்த	62
புன்னுனைப்ப	156	பொன்னலங்	180
பூண்பதோ	116	பொன்னவன்பொ	115
பூணூண்	38	பொன்னவிலுங்	231
பூவில்வாசத்	177	பொன்னூர்	60
பூவேந்திய	214	பொன்னானே	246
பூளைபுனை	101	பொன்னானை	95
பெற்றபோ	13	பொன்னிலங்கு	230
பெற்றம்ஏறுகந்	161	பொன்னும்மெய்	152
பெற்றிமை	42	போந்தனை	71
பேணுதொழி	238	போர்த்தநீள்	141
பேணுமுனி	240	போரார்புரம்	240
பேணிநாட	32	போராருங்க	69
பேயோடே	245	போழும்மதியும்	202
பேராதுகாம	233	மகத்திற்புக்	139
பேருமோர்	48		

மங்கைபங்க	178	மழைநுழை	222
மங்கையொர்	63	மழையானுந்	224
மங்கையோர்	195	மற்றுத்தே	138
மஞ்சுண்ட	4	மற்றுநான்	181
மட்டார்பூங்	38	மற்றுப்பற்	122
மட்டார்மலர்	33	மற்றொருதுணை	149
மட்டுலாம்மலர்	181	மறக்கொள் அர	239
மடமுடைய	211	மறவல்நீமன	128
மடித்தாடு	232	மறவனை அன்	178
மண்ணின்மே	182	மறிஏறு	119
மண்ணிணை	216	மறிசேர்கை	65
மண்ணீர்தீ	69	மறிநேர்	133
மண்ணுலகிற்	257	மறைகள் ஆயி	195
மண்ணுலகும்	118	மறைமுதல்	222
மண்ணெலாம்	226	மறையவன்	172
மணம்என	21	மறையிடைத்	151
மணிகெழு	181	மறையோர்	67
மத்தம்மத	32	மன்னிப்புனங்	206
மத்தம்மலி	78	மன்னியசீர்	99
மத்தமாமலர்	90	மன்னேமற	2
மத்தயானை	17	மாடங்காட்டு	17
மந்திகடுவனுக்	238	மாடம்மல்கு	136
மந்திரம்	256	மாடமாளிகை	225
மரங்கள்மேல்	226	மாணுஉரு	9
மருகல்உறை	120	மாதார்மயிற்பீ	33
மருவார்கொ	134	மாதினுக்கு	178
மருவிப்பிரிய	201	மாயமாய	144
மல்கியசெஞ்	249	மாலயனுங்	43
மலக்கில்கின்	71	மாவாய்பிள	34
மலந்தாங்கிய	213	மாவைஉரித்	219
மலமெலாம்	87	மாற்றமே	118
மலைக்கண்மட	202	மாற்றுக்களி	207
மலைக்கும்மகள்	22	மாறுபட்ட	16
மலைச்சாரலு	206	மான்திகழும்	231
மலைமடந்தை	42	மானும்மரை	206
மலையார்அரு	32	மானைநோக்	138
மலையான்மக	213	மிக்கிறையே	29
மழுவாள்வல	3	மிடுக்கிலாதா	82
மழைக்கண்	24	மிடுக்குண்டெ	47
மழைக்கரும்பு	150	மிண்டாடித்	117

மின்னனையா 29
மின்னுமா 192
மின்னெடுஞ் 216
மீளா அடிமை 243
முட்டாதமுச் 234
முட்டாமே 73
முடிப்பதுக 112
முடியேன் இனிப் 2
முண்டந்தரி 4
முத்தாமுத் 132
முத்திமுத்தா 111
முத்துநீற்றுப் 19
முதுவாய்ஓரி 104
முந்திச்செய் 156
முந்திவான 126
முந்தையூர்மு 75
மும்மையால் 97
முல்லைமுறு 52
முழுநீறணி 239
முளைக்கைப் 205
முளைவளரிள 186
முன்றான்க 77
முன்னவன் 56
முன்னெறிவா 131
முன்னேஎம் 93
முன்னைச்செய் 87
முன்னைமுதற் 215
மூடாயமுய 4
மூப்பதும் 47
மூலனூர்முத 30
மூவரென 210
மூவெயில்செ 141
மெய்யன்வெண் 224
மெய்யனை 148
மெய்யென்சொல் 81
மெய்யைமுற் 164
மேலைவிதியே 105
மைகொள்கண்டர் 198
மைகொள்கண்டன் 31
மைம்மானமணி 94
மையார்கண் 69
மையார்தடங்கண்ணு 207
மையார்தடங்கண்ணி 78
மையாரும்மி 63
மொய்த்தசீர் 170
மோறாந்தோ 55
யாழைப்பழி 185
வங்கம்மேவிய 195
வங்கமலிகட 131
வஞ்சங்கொண் 50
வஞ்சநெஞ்ச 83
வஞ்சமற்ற 224
வஞ்சிநுண்ணிடைமங் 227
வஞ்சிநுண்ணிடையா 109
வடிகொள்க 167
வடிவுடைமழு 221
வண்டமரும் 52
வண்டார்குழ 133
வண்டுகாள் 91
வணங்கித் 23
வந்தவாளர 183
வந்துசொல் 81
வந்தொர்இந்தி 170
வம்பறாவரி 98
வரங்கள்பெற் 160
வரிந்தவெஞ் 35
வரியரநாண 255
வருங்கலமு 189
வருங்காலன் 68
வருந்தவன்று 165
வரும்பழி 71
வரும்பெரும் 150
வரைமான் 107
வரையின்மா 194
வல்லதெல்லாம் 13
வலங்கிளர் 251
வலங்கொள் 197
வலையம்வைத் 14
வழித்தலைப் 138
வழிபோவார் 237

வள்வாய	100	விரித்தவேதம்	17
வளங்கனி	72	விருந்தாய	73
வளங்கிளர்	148	விரும்பிநின்	123
வளைக்கைமு	146	விரும்பினேற்	93
வற்கென்றி	128	விரைசெய்	177
வன்சயமாய்	131	விரைதரும	182
வன்னுகம்	130	விரையார்	55
வாசத்திஞர்	50	வில்லைக்காட்	125
வாடாமுலை	136	விற்றுக்கொள்	244
வாயாடி	46	வீடின்பயனென்	10
வாயார்மன	51	வீடுபெறப்பல	28
வார்கொண்ட	98	வீரத்தால்	173
வாரமாகித்	14	வீழக்காலனை	30
வாரிடங்	231	வெண்டலைப்	184
வாரிருங்	13	வெண்பொடி	252
வாழ்வர்கண்	18	வெந்தநீறு	146
வாழ்வாவது	203	வெப்பொடு	71
வாழ்வைஉக	256	வெய்தாயவி	94
வாழையின்	199	வெய்யமாக	184
வாளாநின்று	154	வெய்யவிரி	61
வாளைபாய	225	வெய்யவினை	209
வானோடிய	205	வெல்லும்	159
வானநாடனே	184	வெளிறுதீரத்	211
வானுடையான்	249	வெற்றரைக்	58
விட்டதோர்	117	வெறுத்தேன்	11
விட்டிலசப்	126	வென்றவன்	114
விட்டிலங்கெரி	144	வேகங்கொண்	45
விடக்கையே	154	வேதம்ஓதி	126
விடங்கொள்	227	வேதவேதியர்	229
விடைஅரவக்	102	வேதியர்விண்	221
விடையாருங்	66	வேந்தராய்	168
விடையின்	223	வேம்பினை	116
விடையுங்	104	வேயனதோளி	112
விண்டானே	247	வேலங்காடு	133
விண்ணவர்	160	வேலையின்நஞ்	222
விண்ணூர்ந்த	33	வேழம்உரிப்ப	136
விண்ணின்மா	196	வேறுஉன்ன	69
விண்ணோர்	135	வைத்தனன்	34
விண்பணிந்	180	வையகம்முழுதுண்	221
வித்தகவீணை	221	வையகமுற்றும்	140

உ

செந்திலாண்டவன் துணை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஏற்படுத்தப்பெற்றுள்ள தருமங்களின் விவரம்

எண்	விவரம்	நிதி ரூபாய்
1	சிவஞானசித்தியார் உபன்னியாசக் கட்டளை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்	15,000
2	கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த ...	11,500
3	திருவாங்கூர் மகாராசா தேவாரப் பரிசு ...	5,000
4	சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு	5,000
5	மூவர் தேவாரப் பரிசு, சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள்	10,000
6	ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த போதகாசிரியர் நியமிக்க	60,000
7	அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க	30,000
8	திருப்பனந்தாளில் தமிழ்க்கல்லூரி நிறுவ	1,50,000
9	இசைத் தமிழ்க் கல்விக்கு	1,00,000
10	திருப்பனந்தாளில் கால்நடை வைத்திய சாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளம் அளிக்கவும்	20,000
11	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம்	10,000
12	இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம்	10,000

13	திருநள்ளாற்றில் ஆவணிமூல அன்னதானம்	3,000
14	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம்	17,000
15	திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உணவு நிதி	1,00,000
16	திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை	ஏ. 44 செ. 22 நிலவரும்படி
17	திருப்பனந்தாள் மண்ணியாற்றில் கேதாரக் கட்டம்	2,900
18	திருப்பனந்தாள் மண்ணியாற்றில் அரிச்சந்திரக் கட்டம்	3,000
19	கும்பகோணம் மணிக்கூண்டு	25,000
20	தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை	21,000
21	ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் நினைவுநாள் அன்னதானம்	9,000
22	மைசூர் மகாராசா தேவாரப் பரிசு	5,000
23	மாயூரத்தில் தேவாரப் பரிசு	5,000
24	சென்னை விவேகாநந்தா கல்லூரியில் சைவசித்தாந்தக் கட்டளை	10,000
25	ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தக் கட்டளை	20.000
26	ஸ்ரீ வைகுண்டம் தேவாரப் பரிசு	5,000
27	மதுரைத் திருமலைநாயக்கர் தேவாரப் பரிசு	10,000
28	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம், ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவிகட்கு	1,00,000
29	ஸ்ரீகாசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம்	5,000
30	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு	1,50,000
31	டாக்டர் சுவாமிநாதையர் நினைவுத் திருக்குறள் பரிசு சென்னை	3,500
32	குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு	1,000

33	காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகார நிதி	3,000
34	ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூசை	10,000
35	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம்	4,000
36	விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி	1,000
37	குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு	3,500
38	திருநெல்வேலியில் அபிராமி அந்தாதிப் பரிசு	3,500
39	திருப்பனந்தாளில் தண்ணீர்ப் பந்தல் தருமம்	3,500
40	ஸ்ரீ வைகுண்டத்தில் படிப்பக நிதி	3,500
41	சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி	35,000
42	சிதம்பரத்தில் திருவாதிரை, ஆனி உத்தரம் நாட்களில் அன்னதானம்	12,000
43	இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம்	3,500
44	ஸ்ரீவைகுண்டத்தில் நூல் நிலையக் கட்டிடம்	10,825
45	பஞ்சாப் அகதிகள் நிவாரண நிதி	5,000
46	அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி	3,500
47	ஸ்ரீகாசி கேதாரீசுவரர் கோவிலில் ஏழைகள் அன்னதானம்	5,000
48	ஸ்ரீவில்லிபுத்தூரில் தேவாரப் பரிசு	3,500
49	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோவிலில் மின்சார தீபம்போட	7,500
50	காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு	5,000
51	திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம்	7,000

52	28வது நம்பர் ஸ்ரீசெந்திலாண்டவன் அன்ன தானம் ஸ்ரீ வைகுண்டம் முதல் ஆண்டு உதவி நிதி	5,000
53	30வது நம்பர் ஸ்ரீசெந்திலாண்டவன் உணவு நிதியின் ஸ்ரீ காசிப் பல்கலைக் கழக முதல் இரண்டு ஆண்டு மூலதனம்	14,000
54	28வது நம்பர் ஸ்ரீசெந்திலாண்டவன் நிதியின் திருச்செந்தூர் முதல் ஆண்டு உதவி மூலதனம்	5,000
55	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும்	15,000
56	மாளவியாஜி பெயரால், கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக் கழகங்களில் சைவ சித்தாந்த உபன்னியாசக் கட்டளை	5,000
57	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம், சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர்	60,000
58	பனசை மண்ணியாற்றுச் சோமேசர் துறை கட்ட	1,500
59	ஸ்ரீவைகுண்டம் பெண்கள் உயர்நிலைக் கல்விக் கூடம் நிறுவ ..	45,000
60	ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி	5,000
61	பனசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு	5,000
62	6வது ஸ்ரீ காசி பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்த நிதிக்கு அதிகப்படியாகக் கொடுத்தது	16,000
63	30வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்ன தானம் - (மதுரை முதலாண்டு உதவி மூலதனம்)	7,000